உள்ளே முழு விவரங்களோடு:

ரேதாஜி-மலாயா சிங்கப்பூரில் ஐ.என்.ஏ.இயக்கம்
(1942 முதல் 1946 வரை)

• ம.இ.கா. தோற்றமும் வளர்ச்சியும்



# மலேசிய இந்தியர்களின் சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள்



1894ல் கோலாலம்பூர் சுகாதார வாரிய உறுப்பினர்
• கா. தம்புசாமிப் பிள்ளை

....

1928ல் மலாயா பெடரல் சட்டமன்றத்தில் முதல் இந்தியர்
எஸ்.என்.வீராசாமி •



1952ல் கோலாலம்பூர் நகரசபை பொதுத்தேர்தலில் அம்னோ வேட்பாளராகப் போட்டியிட்ட இந்தியப்பெண்
திருமதி எல்சி சோமசுந்தரம்



- மலேசிய இந்தியர்களின் 200 ஆண்டு கால வரலாறு
- தொடக்க கால இயக்கங்கள்-அன்றைய இந்திய சமூகப் பேராளர்கள்
- 1892ல் பினாங்கில் அமைந்த முதல் இந்தியர் சங்கம்-சில விவரங்கள்
- சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும் நாடாளுமன்றத்தில் மேலவையில் இடம் பெற்ற இந்தியர்கள்-சில குறிப்புகள்
- உயர் விருதுகள் பெற்ற மலேசிய இந்தியர்கள்

- ப.சந்திரகாந்தம்

உள்ளே முழு விவரங்களோடு:

**நேதாஜி-மலாயா சிங்கப்பூரில் ஐ.என்.ஏ.இயக்கம்**

(1942 முதல் 1946 வரை)

ம.இ.கா. தோற்றமும் வளர்ச்சியும்

# மலேசிய இந்தியர்களின் சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள்

- மலேசிய இந்தியர்களின் 200 ஆண்டு கால வரலாறு
- தொடக்க கால இயக்கங்கள்-அன்றைய இந்திய சமூகப் பேராளர்கள்
- 1892ல் பினாங்கில் அமைந்த முதல் இந்தியர் சங்கம்-சில விவரங்கள்
- சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும் நாடாளுமன்றத்தில் மேலவையில் இடம் பெற்ற இந்தியர்கள்-சில குறிப்புகள்
- உயர் விருதுகள் பெற்ற மலேசிய இந்தியர்கள்

-ப.சந்திரகாந்தம்

# மலேசிய இந்தியர்களின் சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள்

ப. சந்திரகாந்தம்

முதற்பதிப்பு : ஆகஸ்ட் 1995

உரிமை ஆசிரியருக்கு

ALL RIGHTS RESERVED. NO PART
OF THIS PUBLICATION MAY BE
REPRODUCED BY ANY PROCESS WITHOUT THE
PRIOR PERMISSION FROM THE AUTHOR

**RM50**

**வெளியீடு :**
**அஸ்வினி கிரியேஷன்ஸ்**
**ASWINI CREATIONS**
கோலாலம்பூர்

*அச்சிட்டோர்:*
**Kuvithiru Enterprise,**
**168, Jalan 3,**
**Taman Sri Langat 2,**
**Kajang, Selangor D. E.**

இது
ஒரு
அஸ்வினி வெளியீடு

# பொருளடக்கம்

## முதலாம் பகுதி :

ம.இ.கா.வின் தோற்றமும் வளர்ச்சியும்
முதல் தலைவர் ஜான் திவி
இரண்டாவது தலைவர் பூத்சிங்கும் அடுத்து வந்த கா. ராமநாதனும்
கூட்டணியில் ம.இ.கா.வை இணைத்த தேவாசர்
மாற்றத்தைக் கொணர்ந்த 1955ம் துன் சம்பந்தனும்
நாட்டின் அரசியல் மாற்றங்கள்
டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் காலகட்டம்
டத்தோஸ்ரீ சாமிவேலுவின் வருகையும் துரித வளர்ச்சியும்
உயர்மட்ட ம.இ.கா. பிரமுகர்கள்
லண்டன் ம.இ.கா. மன்றம்

## இரண்டாம் பகுதி :

நாட்டுச் சுதந்திரத்துக்கு முன்னர் நடைபெற்ற முனிசிபல் - சட்டமன்ற பொதுத் தேர்தல்களும் சுதந்திரத்துக்குப் பின்னர் நடைபெற்ற முதல் நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களும்.
தொடக்ககால மலாயா இந்தியர் பிரதிநிதிகள்
தொடக்ககால மலாயா இந்தியர் இயக்கங்கள்
முதல் இந்தியர் சங்கம்
மலேசிய இந்தியர்கள் : வரலாற்றுக் குறிப்புகள்
உயர்விருதுகள் பெற்ற மலேசிய இந்தியர்கள்
சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள்

## மூன்றாம் பகுதி :

ஐ.என்.ஏ. தலைவர் நேதாஜி - ஜான்திவி
அஞ்சா நெஞ்சர் நேதாஜி
இரண்டாவது உலகப்போர்
மலாயா சிங்கப்பூரில் ஜப்பானியரின் ஆட்சி
இந்திய தேசிய ராணுவம் (ஐ.என்.ஏ.)
அ) தென்கிழக்காசியாவில் அமைந்த இந்திய சுதந்திர இயக்கம்
ஆ) மலாயா சிங்கப்பூர் இந்தியர்களைக் கொண்ட ராணுவப்படையும் யுத்த பிரகடனமும்
இ) மலாயா சிங்கப்பூர் இந்தியப் பெண்களைக் கொண்ட 'ஜான்ஸிராணி' படை
ஈ) 'ஜான்ஸிராணி' படையின் தளபதி டாக்டர் லட்சுமி.
உ) ஐ.என்.ஏ. ஆட்சி புரிந்த அந்தமான் - நிக்கோபார் தீவுகள்.
நேதாஜியின் இறுதி நாட்கள்
மரண ரயில்வே

# உங்களுடன் சில நிமிடங்கள்...

*மலேசிய இந்தியர்களின் சமூக அரசியல் போராட்டங்களை - சரித்திரச் சான்றுகளை முழுமையாக விவரிக்கும் நூல்கள் இங்கு உருவாக வேண்டும் எனும் எனது தணியாத ஆவலின் உந்துதலில் உருவான இலட்சியப் படைப்பு இது.*

*ம.இ.கா.வின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் இதில் விவரிப்பதற்கு முன்னர் நேதாஜி காலகட்டத்தில் இங்கு நிகழ்ந்த வரலாற்றுத் திருப்பங்களை மறக்க - மறுக்க - மறைக்க முடியாத அந்தத் தகவல்களை முழுமையாகத் தெரிவிக்க இந்த நூலில் முயன்றிருக்கிறேன்.*

*அவ்வப்போது நாட்டில் ஏற்பட்ட திருப்பங்களை - அரசியல் மாற்றங்களை இந்த நூலில் காணலாம். இந்த நூலுக்கும் தேவையான குறிப்புகளைத் திரட்ட பலரை நேரில் கண்டும் இதன் தொடர்பான பல கட்டுரைகளை - நூல்களைப் புரட்டிப் பார்த்தும் விவரங்களைத் தொகுத்தேன்.*

*"ஜான் திவி முதல் டத்தோ சாமிவேலு வரை..." எனும் தலைப்பில் ம.இ.கா. தோற்றத்தையும் வளர்ச்சியையும் விவரிக்கும் நூல் ஒன்றை ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கியிருந்தேன். ம.இ.கா. தேசியத் தலைவரும் அமைச்சருமான டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் தலைமையில் நாட்டுத் தலைநகரில் 1988 ஜூன் 14இல் வெளியீடு கண்டது.*

*ம.இ.கா. வரலாற்றோடு மலேசிய இந்தியர்களின் வரலாற்றையும் அவர்கள் புரிந்த சாதனைகளையும் எதிர்கொண்ட பிரச்னைகளையும் விவரமாகச் சொல்ல வேண்டும் என விரும்பினேன்.*

*இந்த நூலைப் புரட்டிப் பார்க்கும்போது அந்த என் எண்ணம் நிறைவேறியிருப்பதை நீங்கள் உணர்வீர்கள்.*

*இந்த நூலைப் பார்ப்பவர்களுக்கு - படிப்பவர்களுக்கு இதனைப் பத்திரப்படுத்தி வைக்கத் தூண்டும் எண்ணத்தை இந்த நூல் உருவாக்கும் எனும் நம்பிக்கை எனக்கிருக்கிறது.*

## வரலாற்றுப் பெட்டகமாக...

இந்த நூல் ஒரு வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ வேண்டுமெனும் எண்ணத்தில் ம.இ.காவைப் பற்றி மட்டுமல்லாது மலேசிய இந்தியர்களைப் பற்றியும் இதில் கூர்ந்து கவனிக்கப் பட்டிருக்கிறது.

● மலேசிய இந்தியர்களின் வரலாற்றுக் குறிப்புகளோடு மலேசிய இந்தியர்களின் சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள் பற்றியும் இதில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

● மலாயாவில் இயங்கிய தொடக்ககால இந்தியர் இயக்கங்கள் - அன்றைய இந்திய சமூகப் பேராளர்கள் பற்றிய பட்டியலும் இதில் தரப்பட்டிருக்கிறது.

● மலாயா சிங்கப்பூரில் நேதாஜி மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் முழுமையாக இதில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

● ம.இ.கா. வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருக்கும் மலேசிய நாட்டு வரலாறும் இதில் காணப்படுகிறது.

*இதோ...*

*நூல் உங்கள் கரங்களில்!*

20.11.1994

கோலாலம்பூர்.

அன்புடன்,

**ப. சந்திரகாந்தம்**

# முதலாம் பாகம்

- ம.இ.கா.வின் தோற்றமும் வளர்ச்சியும்
- முதல் தலைவர் ஜான் திவி
- இரண்டாவது தலைவர் பூத்சிங்கும் அடுத்து வந்த கா. ராமநாதனும்
- கூட்டணியில் ம.இ.கா.வை இணைத்த தேவாசர்
- மாற்றத்தைக் கொணர்ந்த 1955ம் துன் சம்பந்தனும்
- நாட்டின் அரசியல் மாற்றங்கள்
- டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் காலகட்டம்
- டத்தோஸ்ரீ சாமிவேலுவின் வருகையும் துரித வளர்ச்சியும்
- உயர்மட்ட ம.இ.கா. பிரமுகர்கள்
- லண்டன் ம.இ.கா. மன்றம்

# முன்னோட்டம்

மலேசிய இந்தியர்களைப் பிரதிநிதிக்கும் அரசியல் இயக்கமான மலேசிய இந்தியர் காங்கிரஸ் உதயமாகி 48 ஆண்டுகளைத் தொட்டு தொடர்ந்து பல எதிர்பார்ப்புகளோடு துரிதநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

மலேசிய அரசியலிலும், சமூகப் பிரச்னைகளிலும், இன்னும் பிற துறைகளிலும் அக்கறையோடும் பொறுப்போடும் ஈடுபட்டு வரும் ம.இ.கா. கடந்து வந்த பாதை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது.

1946 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் 3,4,5, ஆம் தேதிகளில் கோலாலம்பூரில் நடந்த அகில இந்தியர் மாநாட்டில் "மலாயா இந்தியர் காங்கிரஸ்" அமைக்கப்பட்டது.

ம.இ.கா. அமைக்கப்பட்ட நேரம் நாட்டில் பல மாறுதல்கள் அடுத்தடுத்து நிகழ்ந்து கொண்டிருந்த காலகட்டமாகும்.

உலகை உலுக்கிய இரண்டாவது உலகப்போர் முடிவுக்கு வந்த நேரமும் அதுதான்.

அப்பொழுது இந்தியா, மலாயா, சிங்கப்பூர் பகுதிகளை ஆட்சி புரிந்து கொண்டிருந்த பிரிட்டிஷாருக்கு எதிராக இங்குள்ள இந்தியர்கள் சுதந்திரத் தாகத்தோடு கிளர்ந்தெழுந்திருந்த காலகட்டமும் அதுதான்.

1942 பிப்ரவரி 15 முதல் 1945 ஆகஸ்ட் 15 வரை ஜப்பானியர் மலாயாவையும் சிங்கப்பூரையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த நேரம் அது.

1943 அக்டோபர் 21 இல் சிங்கப்பூரில் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் அமைத்திருப்பதை உலகுக்கு அறிவித்து விட்டு பிரிட்டனுக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்த பரபரப்பு மிகுந்த நேரம் அது.

1945 இல் ஆகஸ்டில் பிரிட்டிஷாரிடம் சிங்கப்பூரிலும், மலாயாவிலும் ஜப்பானியர் சரண் அடைந்தவுடன் பர்மா – இந்தியா எல்லையிலுள்ள இம்பால் போர் முனையில் தம் இந்திய தேசிய ராணுவப்படை வீரர்களோடு இருந்த நேதாஜி சிங்கப்பூருக்குத் திரும்பி வந்து மறுநாள் டோக்கியோ செல்லும் வழியில் விமான விபத்தில் சிக்கி ஆகஸ்ட் 18 இல் மரணமடைந்தார் என்ற தகவல் வெளிவந்தவுடன் இந்திய தேசிய ராணுவம் கலைக்கப்பட வேண்டிய சூழ்நிலை உருவான நேரமும் அதுவே!

மீண்டும் மலாயா சிங்கப்பூரில் பிரிட்டிஷார் ஆட்சி தொடங்கியிருந்தது.

இரண்டாவது உலகப் போரின்போது இங்குள்ளவர்கள் தாங்கள் அடைந்த இன்னல்களை வேதனைகளைச் சிறிது சிறிதாக மறக்க முற்பட்டிருந்த நேரம் அது.

ஒழுங்கும் கட்டுப்பாடும் நாட்டுப்பற்றும் சேவையுணர்வும் நிரம்பிய இந்திய தேசிய ராணுவத் தொண்டர்கள் சிலர் ஒன்றுகூடி தேசிய ரீதியில் ஓர் அரசியல் ஸ்தாபனத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட காலகட்டமும் அப்பொழுதுதான்.

ஜான் ஏ திவியின் பெருமுயற்சியில் அவரது சகாக்களின் துணையோடு ம.இ.கா. தோற்றம் கண்டது.

1946 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 3,4,5 ஆம் தேதிகளில் ம.இ.காவின் அமைப்புக் கூட்டமும் மாநாடும் கோலாலம்பூரிலுள்ள செந்தூல் தண்டாயுதபாணி ஆலய செட்டியார் மண்டபத்தில் துடிப்புமிக்க இளைஞர்களாலும் பெரியவர்களாலும் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

ம.இ.கா. 1946 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 இல் முழுத்தோற்றம் பெறுவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் அதாவது 1946 ஆம் ஆண்டு மே மாதத்தில் மலாய்க்காரர்களைப் பிரதிநிதிக்கும் அம்னோ கட்சி டத்தோ ஓன் பின் ஜபார் தலைமையில் 11.5.46 இல் உருவாகியது. பின்னர் சீனப் பிரமுகர் டான் செங் லோக் தலைமையில் மலாயாவிலுள்ள சீனர்களைப் பிரதிநிதிக்கும் மலாயா சீனர் சங்கம் எனும் ஸ்தாபனம் 1949 பிப்ரவரி 27 இல் அமைக்கப்பட்டது.

மலேசிய இந்தியர்களை ம.இ.காவும், மலாய்க்காரர்களை அம்னோவும், மலேசிய சீனர்களை ம.சீ.சவும் பிரதிநிதிக்கும் அரசியல் இயக்கங்களாக அவை அப்பொழுதும் இயங்கின; இப்பொழுதும் இயங்குகின்றன.

இந்த நெடிய பயணத்தில் ம.இ.கா. பிரமிப்பூட்டும் வகையில் வளர்ச்சி கண்டிருக்கிறது.

ம.இ.கா. இயக்கத்துக்கு தொடக்க காலத்தில் போட்டியாக சிலரால் கருதப்பட்டு வந்த மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் போன்ற தேசிய அமைப்புகள் இப்பொழுது இருக்கும் இடம் தெரியவில்லை.

ம.இ.காவின் முதல் தலைவராகப் பொறுப்பேற்ற வழக்குரைஞர் ஜான் திவி ஓர் ஆண்டு கட்சியின் தலைவராகப் பணியாற்றினார். பின்னர் இந்திய அரசாங்கத்தின் மலாயா சிங்கப்பூர் தூதராகப் பொறுப்பேற்கத் தொடங்கியவுடன் மலாயன் ரயில்வே சிப்பந்தியான சர்தார் பூத் சிங் 1947 இல் கட்சியின் இரண்டாவது தலைவராகத் தேர்வு பெற்றார். தொடர்ந்து 1950 இல் வருமான வரித் துறை நிபுணர் கா. ராமநாதன் ஓர் ஆண்டு காலத்திற்கு ம.இ.காவின் தேசியத் தலைவர் பொறுப்பை ஏற்றிருந்தார். அவருக்குப் பின்னர், வழக்குரைஞர் கே.எல். தேவாசர் தலைமைப் பொறுப்பேற்றார். தொடர்ந்து நான்கு ஆண்டுகள் தலைவராக அவர் நீடித்தார்.

1955 ஆம் ஆண்டு பிறந்தது.

ம.இ.கா.வில் பல துரித மாற்றங்கள் மளமளவென நடந்தன. கட்சி புதிய பாதையை நோக்கி நடைபோட்டது.

1955 இல் கட்சியின் தலைமைத்துவத்தை (துன்) வீ.தி. சம்பந்தன் ஏற்றார். தமிழகப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்ற இவர், மலாயாவிலேயே பிறந்தவர். துன் சம்பந்தனின் தலைமைத்துவத்திற்குப் பின்னர் இயக்கம் பெரும் மாற்றத்தையும் வளர்ச்சியையும் காணத் தொடங்கியது.

1973 ஆம் ஆண்டில் துன் வீ.தி. சம்பந்தன் அரசியலிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் சுமார் பதினைந்து வருடங்கள் கட்சியின் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்த டான்ஸ்ரீ மாணிக்க வாசகம் கட்சியின் தலைவரானார்.

1979 ஆம் ஆண்டு அக்டோபர் 12 இல் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் இயற்கை எய்தியவுடன் அது வரை கட்சியின் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்திருந்த டத்தோஸ்ரீ ச.சாமிவேலு ம.இ.காவின் ஏழாவது தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

டத்தோஸ்ரீ சாமிவேலுவின் தலைமைத்துவத்தில் ம.இ.கா. இப்பொழுது துடிப்போடும் புதுப்பொலிவோடும் பீடுநடை போட்டுத் திகழ்கிறது.

ம.இ.காவின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் இன்னும் சற்று விரிவாகத் தெரிந்து கொள்வோமா?

ம.இ.கா. ஸ்தாபனம் உருவாகக் காரணமாக இருந்தவர்களைப் பற்றியும், அப்போதைய நாட்டுச் சூழல் குறித்தும் விவரமாக இங்கு விளக்கப்பட்டிருக்கிறது.

ம.இ.கா. உருவாக தொடக்க காலத்தில் காரணமாக இருந்தவர்கள் இங்குள்ள இந்திய தேசிய ராணுவ இயக்கத் தொண்டர்களே!

நேதாஜி இயக்கம், - இந்திய தேசிய ராணுவம், - இங்கிருந்த இந்தியர்களின் அப்போதைய நிலைமை ஆகியவற்றையும் நாம் சிறிது நினைவு கூர்ந்து பார்ப்போமே!

# மாற்றம் வந்தது

இரண்டாவது உலகப் போர் ஒரு முடிவுக்கு வந்த பிறகு மலாயாவில் பல மாற்றங்கள் தோன்றத்தொடங்கின.

ஜப்பானியர் சரணடைந்த 1945 ஆகஸ்ட் 15 ஆம் தேதிக்குப் பின்னர் - போர் ஓய்வு செய்தியைச் செவிமடுத்த பின்னர் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர்.

பிரிட்டிஷார் மீண்டும் சிங்கப்பூர் மலாயாவுக்கு வந்த பிறகு - ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு படிப்படியாக நிலைமைகள் மாற்றம் காணத் தொடங்கின.

முற்றாக போர் முடிவடைந்த செய்திகளைப் பத்திரிகை - வானொலி வழியாகத் தெரிந்து கொண்ட பின்னர் பொதுமக்கள் சுதந்திரமாகத் தங்கள் பணிகளில் ஈடுபடத் தொடங்கினர்.

போர் முடிவுக்கு வந்தவுடன் இங்குள்ள பல ஐ.என்.ஏ. வீரர்களையும் அதிகாரிகளையும் கைது செய்து சிறையில் அடைத்திருந்தது பிரிட்டிஷ் ராணுவ நிர்வாகம்.

அந்த விடுதலை இயக்க வீரர்களை விடுதலை செய்ய வேண்டுமெனக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன. வழக்கு மன்றங்களில் வழக்காடப்பட்டது.

மலாயாவிலுள்ள இந்தியர்களைப் பற்றி இந்திய சட்டசபையில் உறுப்பினர்கள் கேள்விகள் எழுப்பியதாக "ஜனநாயகம்" தினசரியில் 1946 பிப்ரவரி 15 ஆம் தேதி இதழில் ஒரு செய்தியும் வெளிவந்திருக்கிறது.

ஐ.என்.ஏ. கைதிகளுக்காக வழக்காட இந்தியாவிலிருந்து மலாயா வந்த வழக்கறிஞர் குழு நீதிமன்றங்களில் வாதாடின.

நேதாஜி அமைத்த சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த ஜான் ஏ.திவியும் சிங்கப்பூர் சாங்கி சிறையில் அடைபட்டுக் கிடந்தார்.

மலாயாவில் நோய்வாய்ப்பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக "காங்கிரஸ் மருத்துவக் குழு" என்ற பெயரில் இந்தியாவிலிருந்து ஐந்து டாக்டர்களைக் கொண்ட மருத்துவக் குழு தேவையான மருந்துகளோடு வந்திருந்தது.




● செந்தூல் இந்தியர் வாலிபர் சங்க கட்டடத்தின் முன்னர் சங்க செயலவையினரும் இந்திய மருத்துவக் குழுவினரும் 1946 ஏப்ரலில் எடுத்துக்கொண்ட குழு படம் இது. படத்தில் நிற்பவர்களில் வலது பக்கத்திலிருந்து மூன்றாவதாகக் காணப்படுகிறவர் அப்போதைய சங்கத்தலைவர் பி.கே.எம். மேனன். முன்வரிசையில் வலது புறமிருந்து மூன்றாவதாக அமர்ந்திருப்பவர் குமாரி ஜானகி. (பின்னர் ஜானகி ஆதிநாகப்பன்.)

(1946 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 முதல் 1946 ஆம் ஆண்டு ஜூலை 31 ஆம் தேதி வரையில் அக்குழு இங்குள்ளவர்களுக்குச் சிகிச்சை அளித்தது. கோலாலம்பூரில் செந்தூல் பகுதியில் அமைந்திருந்த செந்தூல் இந்திய வாலிபர் சங்கக் கூட்டத்தில் அந்த மருத்துவர்குழு தங்கியிருந்து சேவையாற்றியது. ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 800 நோயாளிகளுக்கு அந்த மூன்று மாதக் காலத்தில் மருத்துவம் பார்த்திருக்கின்றனர், அக்குழுவினர். 1946 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 ஆம் தேதியன்று அந்த மருத்துவக் குழு மலாயாவிலிருந்து கப்பல் ஏறி இந்தியா புறப்பட்டுச் சென்றது.

கோலாலம்பூர் ஈப்போ சாலை 2 ஆவது மைலில் (தற்போது ம.இ.கா. தலைமையகம் அமைந்திருக்கும் பகுதி) இந்திய தேசிய ராணுவ முகாம் இருந்தது. பிரிட்டிஷார் மீண்டும் மலாயா வந்தவுடன் அந்த ராணுவ முகாமில் சுமார் 2,000 இந்திய தேசிய ராணுவ வீரர்களை நீண்ட காலமாகவே சிறை வைத்திருந்தனர். பின்னர் அந்த வீரர்கள் கப்பல் மூலம் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாக 1946 மார்ச் 23 இல் வெளிவந்த "ஜனநாயகம்" தினசரியில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

1946 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் தேதியன்று பண்டிட் நேரு மலாயாவுக்கு இரண்டாவது முறையாக வருகை தந்திருந்தார்.

நேரு மலாயாவுக்கு முதல் வருகையை 1937 இல் மேற்கொண்டிருந்தார். அப்போது அவருடன் 19 வயது நிரம்பியிருந்த புதல்வி இந்திராவும் (இந்திரா காந்தி) வந்திருந்தார்.

"ஐக்கியத்துடன் ஒரே ஸ்தாபனத்தின் கீழ் செயல்பட வேண்டும்" என்று முதல் முறையில் வந்திருந்த போது நேரு குறிப்பிட்டிருந்தார்.

(1937 ஆம் ஆண்டில் மலாயாவுக்கு முதல் வருகையை மேற்கொண்டிருந்த அகில இந்திய காங்கிரஸ் தலைவரும் விடுதலை போராட்ட வீரருமான நேருவுக்கு (பின்னர் இந்தியாவின் முதல் பிரதமர்) வட மலாயாவில் ஒரு வரவேற்புக்குழு அமைக்கப்பட்டது.

அக்குழுவில் பிரதம பொறுப்பாளர்களாக பினாங்கைச் சேர்ந்த வழக்குரைஞரான ஜி.எச். கோவும் திருமதி பி.எச். ஊனும் செயல்பட்டனர். துங்கு அப்துல் ரஹ்மானையும் (பின்னர் மலேசியாவின் முதல் பிரதமர்) ஏற்பாட்டுக் குழுவில் இவரை அழைத்தபோது மகிழ்வுடன் ஒப்புக்கொண்டு நிகழ்ச்சி வெற்றி அடைய உறுதுணையாக இருந்தார்.

நேருஜி சிறப்பாக வரவேற்கப்பட்டு இந்தியா திரும்பிய பின்னர் அப்போது மாவட்ட அதிகாரியாக இருந்த துங்குவை பதவி இறக்கம் செய்தது அப்போது இங்கிருந்த பிரிட்டிஷ் அரசாங்கம் நேரு வரவேற்புக் குழுவில் துங்கு இடம் பெற்றிருந்ததற்காகவே இந்தப் பதவி இறக்கம்.

இந்தச் செயல் தமக்கு மேலும் விடுதலை உணர்வைத் தூண்டிவிட்டதாகப் பின்னர் பத்திரிகை பேட்டி ஒன்றில் துங்கு குறிப்பிட்டிருந்தார்).



இந்தியப் பிரதமர் நேருவும்
மலேசியப் பிரதமர் துங்குவும்.

நேருவின் இரண்டாவது வருகை இங்குள்ள இந்தியர்களில் பலருக்கு உற்சாகத்தைத் தந்திருந்தது.

கோலாலம்பூர் குதிரைப் பந்தய திடலில் 1946 மார்ச் 21 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு நேரு பொது மக்கள் முன்னிலையில் உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மறைந்த நேதாஜி தலைமையில் இயங்கிய இந்திய தேசிய ராணுவ வீரர்களும், ஜான்ஸிராணி படையைச் சேர்ந்த மாதர்களும் சீருடை அணிந்து கூட்டத்தில் அணிவகுத்து நின்றனர்.

ஐ.என.ஏ. வீரர்கள் - ஜான்ஸிராணி வீராங்கனைகள் அணிவகுப்பை நேரு பார்வையிட்டார்.

இந்தியாவிலிருந்து இங்கு வந்திருந்த வக்கீல்கள் குழுவைச் சேர்ந்த ஆர்.வெங்கட்ராமன், நரிமன் ஆகியோரும் மருத்துவக் குழுவைச் சேர்ந்த சிவராம சாஸ்திரியும் சிறப்பு வருகையாளர்களாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நேரு ஆற்றிய உரையின் ஒரு பகுதி வருமாறு :

"உலகில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள் மலாயாவையும் விடவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் மலாயா, அரசியல் என்றால் என்ன என்பதை அறியாமலிருந்தது. ஆனால் சென்ற 5 அல்லது 6 வருட காலத்திற்குள் மலாயாவில் 50 வருட காலத்தில் ஏற்படக்கூடிய அரசியல் முன்னேற்றமும் விழிப்பும் ஏற்பட்டுவிட்டன.

நவீன ஏகாதிபத்தியத்திற்கே திலகமாக விளங்கி வரும் இந்தியாவிலும் இன்று அபரிமிதமான மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. இப்போது இந்தியா முன்னேற்றப்பாதையில் பாதி தூரம் சென்றுவிட்டது. போர்ப்படலம் முடிந்து சிருஷ்டி படலம் ஆரம்பமாகிறது. எனவே நாம் வெகுதுரிதமாக புனருத்தாரண வேலைகளில் ஈடுபடவேண்டும்.

கடல் கடந்த இந்தியர்களுக்குத் தன்னாலியன்ற உதவியைச் செய்ய இந்தியா தயாராக இருக்கிறது. எனினும், தனி நபராயினும் சரி; சமூகமாயினும் சரி; தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளும் ஆற்றல் பெற வேண்டும். அவ்விதமின்றி பிறர் உதவி செய்யவில்லையே என்று புலம்பக்கூடாது. எனவே தைரியமாக நீங்கள் கஷ்டங்களைச் சமாளித்து நிற்கும் ஆற்றல் பெற வேண்டும்.

நேரு நிகழ்த்திய அந்த உரை பலரையும் சிந்திக்கத் தூண்டியது.

நேரு நிகழ்த்திய அந்த உரையை இங்கு வந்திருந்த 'வக்கீல்கள் குழு'வைச் சேர்ந்த வழக்குரைஞர் ஆர். வெங்கட்ராமன் தமிழில் மொழிபெயர்த்தார்.

கோலாலம்பூர் குதிரைப்பந்தய திடலில் நேருவுக்குக் கொடுக்கப்பட்ட அந்த வரவேற்பு நிகழ்ச்சியில் செந்தூல் இந்திய வாலிபர் சங்கத்தின் சார்பாக அலகாபாத்தில் அப்போது கட்டப்பட்டு வந்த கமலா நேரு நினைவு மருத்துவமனைக்கு 36 ஆயிரம் ரூபாய் பணமுடிப்பை சங்கத்தின் சார்பாக அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான எம். சஞ்சீவி நேருவிடம் வழங்கினார்.

✷ ✷ ✷

## ஆர். வெங்கட்ராமன்

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவராகத் திகழ்ந்த ஆர். வெங்கட்ராமன் இந்திய அரசியலில் ஈடுபட்டு பல உயர் பதவிகளைப் பெற்றார். இந்தியாவின் துணை அதிபராகப் பணி புரிந்தபின், 1987 ஆம் ஆண்டு இந்திய அதிபராகப் பொறுப்பேற்று 1992 இல் பதவி ஒய்வு பெற்றார்.

தமிழ்நாடு பட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆர். வெங்கட்ராமன் தன் 36 ஆம் வயதில் வழக்கறிஞர் குழுவில் இடம்பெற்று மலாயா வந்து பிரிட்டிஷாரால் சிறையில் அடைக்கப்பட்ட மலாயா இந்தியர்களுக்காக வழக்காடி விடுதலை பெற்றுத் தந்திருக்கிறார். மலாயா இந்தியர்களின் நலனில் அக்கறை காட்டினார். 1946 ஆம் ஆண்டில் கோலாலம்பூரில் நேருவின் உரையை மொழி பெயர்த்துத் தந்த பெருமையையும் பெற்றிருக்கிறார்.





● கோலாலம்பூரில் 1946 மார்ச் 21இல் நேரு நிகழ்த்திய உரையை அப்போது மலாயாவுக்கு வருகை மேற்கொண்டிருந்த வழக்குரைஞர் ஆர். வெங்கட்ராமன் (பின்னர் இந்திய அதிபர்) தமிழில் மொழி பெயர்த்தார்.

● நேரு கோலாலம்பூரில் உரையாற்றிய பொதுக்கூட்டத்தில் (1946 மார்ச் 21) சிறப்பு வருகை புரிந்திருந்த சிவராம சாஸ்திரி (அப்போது இந்தியாவிலிருந்து வருகை தந்த காங்கிரஸ் மருத்துவக் குழுவைச் சேர்ந்தவர்) இந்தியா திரும்பிய பின்னர் காங்கிரஸ் மிஷன் டு மலாயா (CONGRESS MISSION TO MALAYA) எனும் நூலை எழுதி 1947 இல் வெளியிட்டிருந்தார்.

* * *

# மலாயா இந்தியர்களுக்கு ஒரு தேசிய அமைப்பு

இந்திய தேசிய ராணுவத்தில் அதிகாரியாகப் பணி புரிந்தவரும் நேதாஜி அமைத்த தற்காலிக அரசாங்க அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவருமான வழக்குரைஞர் ஜான் திவி சிங்கப்பூர் சிறைச்சாலையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

நேதாஜி தலைமைத்துவத்தில் பணியாற்றிய ஐ.என்.ஏ. தொண்டர்கள் இங்குள்ள சமூக இயக்கங்களில் ஈடுபட்டு சமூகத் தொண்டு புரிய ஆர்வத் துடிப்போடு நிமிர்ந்த நடை போட்டுக் கொண்டிருந்தனர்.

நேதாஜி ஊட்டிவிட்ட தேசப்பற்று, தாய்நாடாகக் கருதி வாழ்ந்து வரும் மலாயா நாட்டின் மீது அதிக அக்கறையைக் காட்டத் தூண்டிவிட்டது.

இங்கு இரண்டாவது உலகப் போர் முடிவடைந்த சமயத்தில் இந்தியாவிலிருந்து மருத்துவக் குழு ஒன்று வந்திருந்தது. தேவைப்பட்டோருக்கு மருத்துவ உதவிகள் புரிந்தது. இக்குழுவுக்கு ஐ.என்.ஏ. தொண்டர்கள் பல வகைகளில் துணையாக இருந்தனர்.

பலவித சிரமங்களுக்கு உள்ளான இங்குள்ள இந்தியர்களுக்கு "உதவி நிவாரணக் குழு" ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டது.

அந்தக் குழுவுக்கு பிரம்மச்சாரி கைலாசம் (பூச்சோங் பகுதியில் இயங்கி வரும் சுத்த சமாஜத்தை நிறுவியவரான சுவாமி சத்யானந்தா) முக்கிய பொறுப்பு வகித்தார். கோலாலம்பூர் மகா மாரியம்மன் தேவஸ்தானத்துக்கு அப்போது தலைவராக இருந்த ராமச்சந்திர நாயுடு மற்றும் கே.உன்னி உட்பட பலர் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

அந்த நிவாரணக்குழுவுக்கு என். ராகவன் தலைவராகவும் ஜான் திவி செயலாளராகவும் பொறுப்பேற்றிருந்தனர்.

அதன் அலுவலகம் கோலாலம்பூர் மகாமாரியம்மன் ஆலயத்திலேயே இயங்கி வந்தது.

மலாயா இந்தியர்களின் நலனுக்காக சில அமைப்புகள் ஆங்காங்கே தோன்றி செயல்பட்டு வந்தன.

ஐ.என்.ஏ. தொண்டர்கள் ஈடுபட்டாலே அது வெற்றிகரமாக செயல்படும் என்கிற கருத்து நிலவியிருந்த நேரம் அது.

நேதாஜியின் மரணச் செய்தி கிடைத்த பிறகு நாட்டின் சூழ்நிலையில் திடீர் மாற்றம் ஏற்பட்ட பின்னர் 1945 ஆகஸ்ட் 27 இல் இந்திய ராணுவம் கலைக்கப்பட்டது. ஆனாலும் ஐ.என்.ஏ. தொண்டர்கள் அதே சீருடையில் பல பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். போர்ப்படை சமூகப் பணிப்படையாக மாறிவிட்டது.

செந்தூல் வாலிபர் சங்கக் கட்டடத்தில் ஐ.என்.ஏ. தொண்டர் எஸ். அமலு தலைமையில் 1945 செப்டம்பரில் சிலாங்கூர் இந்திய ஒற்றுமை சங்க அமைப்புக் கூட்டம் நடைபெற்றிருந்தது. எஸ். அமலு தலைவராகவும், இந்திய தேசிய ராணுவத்தில் செக்கண்ட் லெப்டினன்டாகப் பணி யாற்றிய ஏ. ராமன் (அப்புராமன்) செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

கோலாலம்பூரை அடுத்து கிள்ளானில் அதற்கு ஒரு கிளை அமைக்கப்பட்டது. லட்சுமண செட்டியார் தலைவராகவும், வெ. மாணிக்கவாசகம் செயலாளராகவும் பொறுப்புக்கு வந்தனர்.

சிலாங்கூர் இந்திய ஒற்றுமை சங்கம் இயங்கி வந்த நேரத்தில் ஜான்.ஏ.திவி பிரிட்டிஷாரால் கைது செய்யப்பட்டு சிங்கப்பூர் சிறைச்சாலையில் இருந்த நேரம் அது.

ஜான் திவியிடமிருந்து ஐ.என்.ஏ. சகாவான ஏ. ராமனுக்கு ஒரு தகவல் வந்திருந்தது.

அதனை ஏ. ராமன் இப்படி விவரிக்கிறார் :

"ஐ.என்.ஏ.யில் பணியாற்றிய நண்பர்கள் எஸ். சுபாரத்னமும் ஞான சிகாமணியும் என்னைச் சந்தித்து, சிங்கை சிறையில் இருக்கும் ஜான் திவி விடுதலை பெற்று வெளியில் வந்தவுடன் இந்தியர்களுக்கு ஓர் அரசியல் ஸ்தாபனத்தை அகில மலாயா ரீதியில் அமைக்க இந்திய ஒற்றுமை சங்கத்தின் ஆதரவும் தேவைப்படுவதாக ஜான் திவி தெரிவிக்கச் சொன்னதாகக் குறிப்பிட்டனர்.

"ஜான் திவியும் விடுதலையாகி கோலாலம்பூர் வந்திருந்தார். அரசியல் ஸ்தாபனத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார்.

"சுவாமி ஆத்மராம், பிரம்மச்சாரி கைலாசம் (சுவாமி சத்யானந்தா) கோலாலம்பூர் மகா மாரியம்மன் ஆலயத் தலைவர் ராமச்சந்திர நாயுடு, செந்தூல் இந்திய வாலிபர் சங்கத் தலைவர் சிவசைவம் அய்யர், சிலாங்கூர் இந்தியர் சங்கச் செயலாளர் சுந்தரம், பழனிவேல் பிள்ளை, காசிப்பிள்ளை காத்தியப்பா தேவர், வடிவேல் பிள்ளை, நாராயண அய்யர், டாக்டர் லட்சுமையா, டாக்டர் செல்வம், பூத் சிங், கே.பி.எம். மேனன், அய்யாரு, எஸ். அமலு, குருதயாள் சிங், குருபாதம் ஆகியோர் உட்பட மற்றும் சிலர் தீவிர ஆதரவும் ஒத்துழைப்பும் ஜான் திவிக்கு நல்கினர்.

"இந்த ஸ்தாபன ஏற்பாட்டு வேலைகளைக் கவனிக்க மகாமாரியம்மன் ஆலய மண்டபத்தின் ஒரு பகுதி ஆலய நிர்வாகிகளால் தரப்பட்டிருந்தது. தொடக்க காலத்தில் ம.இ.கா. அலுவலகம் இயங்கிய இடம் மாரியம்மன் ஆலயமே!

"இந்த அரசியல் ஸ்தாபன அமைப்புக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு எல்லா இந்தியர் சங்கங்களுக்கும் தனிப்பட்ட பிரமுகர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. கூட்ட அழைப்புக் கடிதத்தில் ஜான் திவி, சுந்தரம், அப்பு ராமனாகிய நான் ஆகிய மூவருமே கையெழுத்திட்டிருந்தோம்..."

இவ்வாறு அமைப்புக் கூட்டம் குறித்து ஏ. ராமன் நினைவு கூர்ந்தார்.

(1985இல் கல்கத்தாவில் அனைத்துலக நேதாஜி கருத்தரங்கில் கலந்து கொள்ளச் சென்றிருந்த போது ரங்கூனில் ஏ. ராமன் மரணமடைந்தார். அவர் காலமாவதற்கு முன்னர் ம.இ.கா. அமைப்புக் கூட்டம் பற்றி நேரில் நூலாசிரியர் சந்தித்து வினவியபோது தெரிவித்திருந்த விபரம் இது)

கோலாலம்பூரில் செந்தூல் செட்டியார் மண்டபத்தில் அகில மலாயா இந்தியர் மாநாடு நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு அழைப்புகளும் அனுப்பப்பட்டு விட்டன.

நாட்டில் இயங்கி வந்த பல்வேறு சமூக இயக்கங்களுக்கும் சமூகத் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் பிரமுகர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பத்திரிகைகள் வாயிலாகவும் மாநாடு பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3,4,5ஆம் தேதிகளில் அந்த மாநாடு நடத்த ஏற்பாடாகியிருந்தது.

அந்த அகில மலாயா இந்தியர் மாநாட்டில் "மலாயா இந்தியர் காங்கிரஸ்" என்ற பெயரில் ஓர் அமைப்பை தேசிய ரீதியில் நிறுவுவதே அந்த மாநாட்டின் நோக்கமாகும்.

இந்திய சமூகத்திற்காக அரசியல் ரீதியில் பாடுபட தேசிய ரீதியில் ஓர் அமைப்பு இருக்க வேண்டும் என்பதை ஜான் திவி உணர்ந்திருந்தார். அவருடைய அப்போதைய சகாக்களும் அவருக்குத் துணையாக இருந்தனர்.

செயல் திட்டங்களுக்கு வடிவமைக்கும் குழுவில் தொடக்கத்தில் இந்திய தேசிய ராணுவ தொண்டர்களே இடம் பெற்றிருந்தனர்.

புதிய அரசியல் அமைப்புக்கு ஜான் திவியே தலைவராகப் பொறுப்பேற்க வேண்டும் என பலரும் விரும்பினர். ஐ.என்.ஏ. தொண்டர்கள் ஜான் திவி மீது முழு மரியாதையும் நம்பிக்கையும் வைத்திருந்தனர்.

வேறு சிலரும் அந்த அமைப்பின் தலைவர் பதவி மீது குறி வைத்திருந்தனர்.

அந்த நேரத்தில் மலாயாவிலுள்ள இந்திய சமூகத் தலைவர்களில் ஜான் திவிக்கு அமோகமான ஆதரவு இருந்தது.

ம.இ.கா. அமைப்புக் கூட்டம் நடைபெறுவதற்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் 1946ஆம் ஆண்டு ஏப்ரல் 25இல் ஜான் திவிக்கு ஆதரவாக ஜனநாயகம் நாளேட்டில் "இந்தியர்களின் ஏகோபித்த தலைவர் திவி" என்ற தலைப்பில் முழு பக்கக் கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

"திவி ஒரு பிரபல வழக்கறிஞர். நடுத்தர வயது. ஒரு தமிழர், பழுத்த தேசாபிமானி. நேதாஜியின் அந்தரங்க அன்பிற்குப் பாத்திரமானவர். சுதந்திர இந்திய சர்க்காரில் மந்திரியாகவும் பொது காரியதரிசியாகவும் இருந்தவர். நேதாஜியின் லட்சியத்திற்கு இணங்கி தரித்திர வாழ்க்கையைத் தனது சக தேசிகளின் நலன்களைக் கருதி ஏற்றுக் கொண்டிருக்கிறார். அவர் லாயர் தொழிலை ஆரம்பித்தால் மாதமொன்றுக்கு குறைந்த பட்சம் 5,000, 6,000 வெள்ளி வீதம் சம்பாதிக்க முடியும். ஆனால் இந்த சிங்கம், அதையும் தியாகம் செய்தது..." இவ்வாறு ஜனநாயகம் நாளேடு பாராட்டியிருந்தது.

1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ஆம் நாள்.

நாடு முழுவதிலுமிருந்தும் பிரதிநிதிகள் மாநாடு நடைபெறும் செந்தூல் செட்டியார் மண்டபத்தில் காலையில் கூடினர்.

அந்த நேரத்தில் மலாயாவிலுள்ள

இந்திய சமூகத் தலைவர்களில்

ஜான் திவிக்கு

அமோகமான ஆதரவு இருந்தது





ஜான்திவி கதர் குல்லாவுடன்

மாநாட்டு மண்டபம் தோரணங்களாலும், கொடிகளாலும், சுலோகங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

ஐ.என்.ஏ. தொண்டர்கள் மண்டப அலங்கார வேலைகளையும், மாநாட்டிற்கான இதர வேலைகளையும் மும்முரமாகக் கவனித்தனர்.

ஐ.என்.ஏ. தொண்டர்களிடையே ஓர் ஒழுங்கும் கட்டுப்பாடும் இருந்தது.

நாடு தழுவிய ரீதியில் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

சிங்கப்பூரிலிருந்து சமூகத் தலைவரும் வழக்குரைஞருமான எஸ்.சி. கோஹோ, தமிழ் முரசு ஆசிரியர் கோ. சாரங்கபாணி, வழக்குரைஞர் ஏ.என். மித்ரா, வர்த்தக பிரமுகர் ஆர். ஜும்மா பாய் (மாநாட்டுக்குப் பின்னர் சிங்கப்பூர் ம.இ.கா. தலைவராகப் பொறுப்பேற்றவர்) ஆகியோரும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

## ம.இ.கா. அமைப்புக்கூட்டம் – தொடக்க மாநாடு

*அகில மலாயா இந்தியருக்கு ஐக்கிய ஸ்தாபனத்தை – அரசியல் அமைப்பை ஏற்படுத்துவ தற்காகக் கூட்டப்பட்ட அகில மலாயா இந்தியர் மாநாடு திட்டமிட்டபடி 1946 ஆகஸ்ட் 3ஆம் நாள் பிற்பகல் 3 மணிக்கு செந்தூல் செட்டியார் மண்டபத்தில் தொடங்கியது.*

*இந்தியாவிலிருந்து இங்கு வந்திருந்த மருத்துவக் குழு உறுப்பினரும் அகில இந்திய காங்கிரஸ் பிரமுகருமான ஜீவானந்த பட்டாச்சாரியா மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.*

*வரவேற்புக் குழு தலைவர் பகவான் சிங் வரவேற்புரை நிகழ்த்தினார்.*

*மாநாட்டுத் தலைவர் பட்டாச்சாரியா ஆங்கிலத்தில் நிகழ்த்திய உரை வருமாறு :*

*"மலாயா நாட்டில் வாழும் இந்தியர்களுக்காக ஓர் ஐக்கிய ஸ்தாபனத்தை மலாயாவில் அமைப்பதற்காக நீங்கள் இங்கு கூடியிருக்கிறீர்கள். இந்தியர்கள் இனியும் கூலிகளாக இருக்க முடியாது. நீங்கள் அனைவரும் இந்தியரின் முன்னேற்றத்திற்காக, இந்தியரின் புனர் ஜனனத்துக்காக, இந்தியரின் விடுதலைக்காகப் போராடியிருக்கிறீர்கள். இன்னும் இலக்கைப் பூர்த்தி பெறும் வரையில் போராட வேண்டும்.*

*"நீங்கள் முன்பு எழுதிய சரித்திரத்தில் இன்னும் சில அத்தியாயங்களைச் சேர்க்கப் போகிறீர்கள். அகில மலாயா இந்தியர் காங்கிரஸ் ஸ்தாபனத்தை அமைப்பதன் மூலம் அதைச் செய்வீர்கள் என நம்புகிறேன்..."*

*மாநாட்டுத் தலைவர் பட்டாச்சாரியா உரைக்குப் பின்னர் இடைக்கால அமைப்புக்குழு தலைவர் ஜான் திவி உரையாற்றினார் :*

*"மலாயாவிலுள்ள இந்தியர்கள் தங்கள் இரண்டாவது தாய்நாடாகிய இந்நாட்டிற்குச் செய்ய வேண்டிய தொண்டை மறந்துவிட முடியாது. இந்தியர்கள் இந்த நாட்டை தங்கள் தாய்நாடாக ஆக்கிக் கொண்டு இந்நாட்டின் பிரஜைகள் ஆவதற்கும் சந்தர்ப்பம் இருக்கிறது.*

*இப்போது இந்த மாநாடு இந்திய சமூகத்தின் கவனம் பூராவையும் ஈர்த்திருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இந்தியர்களுக்கு நீண்ட காலத் திற்கு நிரந்தரமான பயனளிக்கக்கூடிய திட்டத்தை இம் மாநாடு வகுக்க வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் தீர்மானம் செய்ய வேண்டும். சந்தேகங்களுக்கு இடம் கொடுக்க வேண்டாம். நம்மை நமது சமூகம் மட்டுமின்றி இதர எல்லா சமூகங்களும் கவனித்துக் கொண்டிருக்கின்றன. நாம் ஐக்கியப்பட முடியும். நம்மிடையே ஆக்க சக்தி இருக்கிறது. நமது நன்மைக்காகவும் நம் நாட்டின் நலனுக்காகவும் நமது சொந்த பலத்தைக் கொண்டே வேலை செய்ய உறுதி கொண் டிருக்கிறோமென்று நாம் பெருமையுடன் கூறுவதற்கு இந்த மாநாடே தக்க சான்றுமாகும்".*

*— இவ்வாறு கருத்தாழமிக்க உணர்ச்சிகரமான உரையை ம.இ.கா. அமைப்புக் கூட்டத்தில் ம.இ.கா.வின் முதல் தலைவர் ஜான் திவி நிகழ்த்தினார்.*

*"மலாயா இந்தியர் காங்கிரஸ்" என்ற பெயரை மாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்டனர்.*

*ம.இ.கா.வுக்கு ஜான் திவி தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.*

*அந்த அமைப்புக் கூட்டத்திலும் முதல் மாநாட்டிலும் 561 பேர் கலந்து கொண்டனர்.*

*பலர் புதிய அமைப்பு குறித்து பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர்.*

*ம.இ.கா. தொழிலாளர் நலனுக்காகவும் பாடுபடும் அதில் தொழிலாளர் இலாகா எனும் ஒரு பிரிவும் இயங்கும் எனும் தீர்மானத்தை வாசித்தபோது சிலரின் எதிர்ப்பைப் பெற்றது.*

*பலர் அந்தத் தீர்மானம் தொட்டே விவாதித்தனர்.*

*இதற்கு ஒரு முடிவு காண "கருத்துப் பரிமாற்றக் குழு" ஒன்று அங்கு அமைக்கப்பட்டது. மாநிலம் தோறும் 5 பேர் வீதமாக அக்குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.*

*முதல் நாள் கூட்டம் இரவு 10 மணி அளவில் முடிவடைந்தது.*

*"கருத்துப் பரிமாற்றக் குழு" அன்றிரவு பதினோரு மணிக்குக் கூடியது.*

## இரவு முழுவதும் . . .

*கருத்துப் பரிமாற்றங்கள் - விவாதங்கள் - ஆலோசனைகள் .... இப்படி சூடாகச் சிறப்புக்குழு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.*

*முதல் நாள் இரவு 11 மணிக்குத் தொடங்கிய "கருத்துப் பரிமாற்றக் குழு" கூட்டம் மறுநாள் காலை 8.30க்கு முடிவுற்றது.*

*ம.இ.கா. அமைப்புக் கூட்டத்தின் முதல் நாள் நிகழ்ச்சி விடிய விடிய நடந்திருக்கிறது.*

*இரவெல்லாம் தூங்காமல் கண்விழித்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்து ஒரு முடிவுக்குக் குழுவினர் வந்திருந்தார்கள்.*

இரண்டாம் நாள் நிகழ்ச்சி காலை 11.30 மணிக்குத்தான் தொடங்கியது.

முதல் நாள் இரவு முழுவதும் "கருத்துப் பரிமாற்றக் குழு" பரிசீலனை செய்த தீர்மானங்கள் – ம.இ.கா. திட்டங்கள் இரண்டாம் நாள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

இரண்டாம் நாள் மாநாட்டில் தொழிலாளர் பிரிவு சர்ச்சை குறித்து தலைவர் ஜான் திவி பேசும் போது இப்படித் தெரிவித்தார் :

"மலாயா நாட்டில் உள்ள இந்தியர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்கள். அவர்களின் வாழ்க்கை உயர்வையே பெரிதும் கவனிக்க வேண்டியது இப்பொழுது அவசியமாகிறது. ஏழை மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காகவே இந்த ஐக்கிய ஸ்தாபனத்தில் அமைக்கப்படும் தொழிலாளர் இலாகா வேலை செய்யும்...."

தலைவர் ஜான் திவியின் உரைக்குப் பின், தொழிலாளர் பிரிவு பற்றிய அந்தத் தீர்மானம் மாநாட்டில் வாக்கெடுப்புக்காகக் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது.

தீர்மானம் நிறைவேறிய பின்னரும் ஒருவர் எழுந்து, "தொழிலாளர் சங்கங்கள் பலமடைந்து வரும் இந்த நேரத்தில் மலாயா இந்தியர் காங்கிரஸில் தொழிலாளர் இலாகா என ஒரு பிரிவு இருக்க வேண்டியது அவசியம் இல்லை" என்று கருத்து தெரிவித்தார்.

மாநாட்டில் கலந்து கொண்ட தொழிலாளர் பிரதிநிதிகள் இந்தத் திட்டம் நிறைவேறியது நியாயமல்ல என்று கூறி மாநாட்டிலிருந்து வெளியேறுவதாகத் தெரிவித்து மாநாட்டுத் தலைவரிடம் கூட்டாகக் கடிதம் கொடுத்துவிட்டு மாநாட்டை விட்டு வெளியேறினர்.

மூன்றாம் நாள் மாநாட்டு நிகழ்ச்சி பிற்பகல் 12.30 மணிக்குத் தொடங்கியது.

மாநாட்டில் ம.இ.கா. நிறைவேற்றிய தீர்மானங்களில் சில :

- சுதந்திர மலாயாவை நிர்மாணிப்பதில் மற்ற சமூகங்களோடு ம.இ.கா. ஒத்துழைக்க நோக்கம் கொண்டிருக்கிறது.
- நமது தாய்நாடு விடுதலை அடைய நடைபெறும் போராட்டத்தில் தனது சக்திக்கியன்ற எல்லா உதவிகளையும் இந்தக் காங்கிரஸ் செய்யும்.
- இந்த நாட்டில் பிரஜா உரிமை பெற்ற இந்தியர்களாயினும் சரி, இல்லாவிட்டாலும் சரி, இந்தியர் எல்லோருடைய உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் மலாயா இந்தியர் காங்கிரஸ் பாடுபடும்.
- மலாயாவிலுள்ள இந்திய மக்களிடையே தங்கள் தேசத்தின் மீது அதிக பொறுப்புணர்ச்சி கொள்ள தீவிர அரசியல், கல்வி, சமூக சீர்திருத்தத்தை அபிவிருத்தி செய்யும் ஒரு கொள்கையை ம.இ.கா. வளர்ச்சி செய்யும்.
- மலாயா முழுவதும் தீவிர மதுவிலக்கு இயக்கத்தை ம.இ.கா. நடத்தும்.
- இங்குள்ள இந்தியர்களிடையே ஹிந்தி மொழியைப் பரப்ப ம.இ.கா. தீவிர நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும்.
- ம.இ.கா. தனது ஆக்க வேலைகளுக்கு உதவி புரிய "காங்கிரஸ் தொண்டர் படை" ஒன்றை ஏற்படுத்தி அதற்கென காங்கிரஸில் ஓர் இலாகாவும் அமைக்கப்படும்.
- இந்தியா – மலாயா நாடுகளுக்கு இடையே நெருங்கிய பொருளாதாரப் பரிவர்த்தனை ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ம.இ.கா. துணை நிற்கும்.

## ம.இ.கா. முதல் செயற்குழு

மலாயா இந்தியர்களின் அரசில் ஸ்தாபனமான மலாயா இந்தியர் காங்கிரஸின் முதல் தலைவராக ஜான் ஏ.திவி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எஸ். சபாரத்னமும் ஞான சிகாமணியும் கூட்டுச் செயலாளர்களாகப் பொறுப்பேற்றனர்.

குருபாக்ஸ் சிங் சாம்பி பொருளாளர் பொறுப்புக்கு வந்தார்.

ஆர்.ஜி. சேனம், எஸ்.வி. சீனிக்குட்டி, எஸ். அமலு, கே. உன்னி, உ. அரு. அருணாசலம் செட்டியார், டாக்டர் மூத்ததம்பி, ஆர். ஜும்மாபாய், டாக்டர் என்.கே. மேனன், ஆர். பாலன், வழக்குரைஞர் ஏ.என். மித்ரா, டாக்டர் என். ஆப்ரகாம், ஏ. ராமன், க. குருபாதம், சர்தார் பூத் சிங் ஆகியோர் செயலவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(ம.இ.கா.வின் முதல் செயற்குழுவில் இடம்பெற்ற சிங்கப்பூர் வர்த்தகபிரமுகரான ஆர். ஜும்மாபாய் சிங்கப்பூரில் பின்னர் லிம் இயூ ஹாங் தலைமையில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் (1956–1959) வர்த்தக அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்.)

## நேதாஜி மண்டபம்

இந்தியர்களுக்கு தேச பக்தியும் – தன்னம்பிக்கையும் தந்த நேதாஜி சுபாஷ் போஸின் சேவைகளையும் தியாகத்தையும் பாராட்டி அவரைக் கௌரவப்படுத்தும் வகையில் மலாயாவில் அவர்

பெயரால் ஒரு மண்டபம் எழுப்ப வேண்டும் எனும் ஆலோசனையை ம.இ.கா. தலைவர் ஜான் திவி மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சியின் போது தெரிவித்ததை மகிழ்ச்சியோடு அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

மாநாட்டில் கலந்து கொண்டிருந்த அனைவரும் நீண்ட நேரம் வரையில் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். "நேதாஜிகி – ஜே!" என்று முழக்கமிட்டனர்.

நேதாஜி பெயரால் கட்டி முடிக்கப்படும் அந்த மண்டபத்தில்தான் ம.இ.கா. இயங்கும் எனவும் இந்தியர்களின் உபயோகத்திற்காகவும் அது பயன்பட வேண்டும் என்றும் ஜான் திவி தெரிவித்தார்.

(அதன் பின்னர் தொடர்ந்து நடந்த ம.இ.கா. மாநாடுகளில் நேதாஜி மண்டபம் பற்றி பேராளர்கள் கேள்விகள் எழுப்பி வந்தனர்.)

மாநாட்டு இறுதி நாள் நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக ஆகஸ்ட் 5ஆம் நாள் மாலையில் சிலாங்கூர் இந்தியர் சங்கத் திடலில் மாநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட பொதுக்கூட்டம் நடைபெற்றது.

புதிய அமைப்பான ம.இ.கா. குறித்து பொதுமக்கள் முன்னிலையில் உரையாற்றினர்.

ஜே. பட்டாச்சாரியா தலைமையில் ஆதிநாகப்பன், (தமிழ் நேசனின் அப்போதைய ஆசிரியர்) பிரம்மச்சாரி கைலாசம் (சுவாமி சத்யானந்தா), மலாக்கா அருணாசலம் செட்டியார், பூத்சிங் ஆகியோர் உரையாற்றினர். உடல் நலமில்லாததால் தலைவர் ஜான் திவி பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.



ஜே. பட்டாச்சாரியா



பூத்சிங்

மறக்க முடியாத மாநாடாக அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ம.இ.கா. அமைப்புக் கூட்ட மாநாடு நடந்தேறியது.

## தமிழ் நேசன் முதல் பக்கத் தலையங்கம்:

(1946 ஆகஸ்ட் 5)

## ஆகஸ்ட் 4ஆம் தேதி...

மலாயா இந்தியர் காங்கிரஸ் ஸ்தாபனம் அமைக்கப்பட்டது குறித்து தமிழ் நேசன் நாளேடு 1946 ஆகஸ்ட் 5 இதழில் முதல் பக்கத்தில் தலையங்கம் எழுதி சிறப்பித்திருக்கிறது.

"ஆகஸ்ட் 4ஆம் தேதி இனி என்றென்றும் மலாயா இந்தியர்களின் சரித்திரத்தில் பிரசித்திப் பெற்ற நாளாக இருந்து வரும். ஏனெனில், அன்றுதான் முதன் முதலாக அகில மலாயா இந்தியர் காங்கிரஸ் மகாசபை ஸ்தாபிக்கப்பட்டது.

"அகில மலாயாவுக்கும் சகல இந்தியருக்கும் பிரதிநிதி என்று சொல்லிக் கொள்ள தகுதியான ஸ்தாபனம் இல்லை. இனி அவ்வித ஸ்தாபனத்தை மேற்படுத்த வழி ஏற்பட்டுள்ளது...

"நல்லதொரு ஸ்தாபனத்தைத் தேடிவிட்டோம். அதை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்வது ஒவ்வொரு இந்தியரின் கடமையுமாகும்..."

– இவ்வாறு தமிழ் நேசன் தலையங்கம் தீட்டியிருந்தது.

# ம.இ.காவின்
# தொடக்க காலப் பணிகள்

**ம.** இ.கா. ஸ்தாபனம் அமைக்கப்பட்டு விட்டது. அதனை வழிநடத்திச் செல்ல செயலவையும் தேர்வு செய்யப்பட்டு விட்டது.

ஆர்வமும் உழைப்பும் சேவை உணர்வும் நிரம்பிய தொண்டர்கள் இயக்கப் பொறுப்புகளைச் சுமந்து நின்றனர்.

ஓர் அரசியல் இயக்கத்தை உருவாக்குவதற்கு அதற்கான அடிப்படை வேலைகளைக் கவனிப்பதற்கு பொருளாதாரமும் அலுவலக இடமும் அத்தியாவசியமான தேவைகளாகும்.

இயக்கத்திற்கு அலுவலகம் அமைக்கவும் அதனை நடத்திச் செல்லவும் நிதி பெருமளவில் தேவைப்பட்டது. ஆனால் மலாயாவிலுள்ள பெரும்பாலான இந்தியர்களிடமிருந்து அப்போது ஆதரவு கிடைக்கவில்லை.

அரசியல் கட்சியில் நேரடித் தொடர்பு கொண்டால் அப்போதைய பிரிட்டிஷ் அரசாங்கம் கண்காணிக்கும் என்ற அச்சத்தில் பலர் ஒதுங்கினர். வெகு சிலர் மறைமுகமாக உதவி நல்கினர்.

அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் ஒரு சிலர் ஆர்வத்தோடு இயக்கப் பணிகளுக்காகப் பொருளாதார உதவி புரிந்தனர்.

கட்சி இயங்க முதலில் தேவைப்படுவது அலுவலகமாகும். கட்சிப் பணிகளை மேற்கொள்ளவும், கட்சி சம்பந்தப்பட்ட குறிப்பேடுகளையும் மற்ற சாதனங்களையும் வைத்திருக்கவும், தொடர்பு கொள்ளவும் அலுவலகம் இன்றியமையாததாகும்.

புதிய அரசியல் கட்சி இயங்க கோலாலம்பூர் மகாமாரியம்மன் ஆலய முன்பகுதியில் (இப்போதைய நவக்கிரக மண்டபம் இருக்கும் பகுதியில்) பலகைத் தடுப்பு அறையை மகா மாரியம்மன் ஆலய நிர்வாகம் தந்துதவியிருந்தது.

மகாமாரியம்மன் ஆலயம் இந்துக்கள் வழிபடும் புனித மையமாக மட்டுமின்றி பிற பணிகளும் இடம்பெறும் நிலையமாக அப்பொழுது இயங்கி இருக்கிறது.

"ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில் அன்னை மகாமாரியம்மன் ஆலயம் இந்திய சுதந்திர சங்கத்தின் கிளையாகவும் தேசிய ராணுவத்திற்கு உதவும் நிலையமாகவும் விளங்கியிருக்கிறது. ஆலய நிர்வாகக் குழுவைச் சேர்ந்த எம். வடிவேலுப்பிள்ளை, ஏ. காசிப்பிள்ளை, எஸ். முருகேசம் பிள்ளை, நாராயண அய்யர், சு. பழனிவேல் பிள்ளை ஆகியோர் ஆலயத் தலைவர் எம்.கே. ராமச்சந்திர நாயுடுவுக்குத் துணையாக நின்றனர். இவர்கள் அனைவரும் இந்திய சுதந்திர இயக்கத்தின் பிரசார பகுதியில் ராமச்சந்திர நாயுடுவுடன் பணி புரிந்தனர்" என்று மகா மாரியம்மன் ஆலய நான்காவது குட முழுக்கு விழா சிறப்புமலரில் (24.11.1985) வெளியிடப்பட்டுள்ள கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேதாஜி இங்கு இந்திய தேசிய ராணுவத்தையும் இந்திய சுதந்திரக் கழகத்தையும் அமைத்து வழி நடத்திச் சென்ற போது மகாமாரியம்மன் தேவஸ்தானத் தலைவராக அப்பொழுது இருந்த எம்.கே. ராமச்சந்திர நாயுடு சிலாங்கூர் மாநில இந்திய சுதந்திரக் கழகத்தின் தலைவராகவும் இருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கம் 1928இல் அமைக்கப்பட்டபோதும் முறையான சங்கப் பதிவு 1930இல் மேற்கொள்ளப்பட்டது. அதன் முதல் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தவர் எம்.கே. ராமச்சந்திரன். இவரது தலைமைத்துவத்தின்போது சிறப்புத் தொண்டர் படை அமைக்கப்பட்டது.

ம.இ.கா.வை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் அப்போதைய நிர்வாகக் குழு தீவிரம் காட்டியது.

ம.இ.காவுக்குக் கிளைகள் அமைக்கப்பட்டன. நகரக்கிளையை அடுத்து செந்தூல், கிள்ளான் பகுதிகளில் கிளைகள் தோன்றின. நாட்டின் முக்கிய நகர்களில் பல புதுக்கிளைகள் தோற்றம் கண்டன.

அப்பொழுதுள்ள சூழ்நிலையில் வெவ்வேறு இடங்களுக்குக் கட்சிப் பணிகளுக்காகப் பயணம் மேற்கொள்வது சிரமமானதாகவே இருந்தது. குறிப்பிட்ட சில உறுப்பினர்களிடம் மட்டுமே கார்கள் இருந்தன.

ஜான் திவிக்கு இந்திய சமூகத்தினர் ஒரு காரை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தனர்.

கிளைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், கட்சிப் பணிகளில் ஈடுபடவும் ம.இ.கா. அதிகாரிகள் ரிக்ஷா, சைக்கிள், பஸ், ரயில் ஆகிய வாகனங்களில் பயணம் மேற்கொள்வர்.

பலர் ஆர்வத்தோடு கட்சியில் உறுப்பியம் பெற்று வந்தனர்.

அப்போதைய நாட்டுச் சூழ்நிலை இங்கு வேறு விதமாக இருந்தது. நாடு சுதந்திரம் பெறாத நேரம்.

பிரிட்டிஷ் ராணுவ ஆட்சி இங்கு நேதாஜி தலைமை தாங்கிய விடுதலை ராணுவ வீரர்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்தது.

நேதாஜி வளர்த்து விட்ட இந்திய தேசிய ராணுவத் தொண்டர்கள் தங்கள் பாதையில் துணிச்சலாக நடைபோட்டுக் கொண்டிருந்தனர்.

இந்தியாவில் மகாத்மா காந்தி கள் ஒழிப்புப் போராட்டம் பற்றி அறிவித்தார். நம் தொண்டர்களும் இங்கு அந்தப் பணியில் ஈடுபட்டனர்.

ரப்பர் தோட்டங்கள், நகரங்கள், கிராமங்கள் ஆகிய இடங்களிலெல்லாம் காங்கிரஸ் தொண்டர்கள் சென்று கள் விற்பனையை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டனர். அதில் முழு வெற்றி காண முடியாவிட்டாலும் கள் அருந்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றி எடுத்துரைத்தனர். இந்தக் கள் ஒழிப்பு இயக்கம் 21.10.46 வரை நீடித்திருந்ததாகத் தெரிய வருகிறது.

மலாயா இந்தியர் காங்கிரஸ் உருவானவுடனேயே அது இங்குள்ள எல்லா இந்தியர்களையும் ஈர்க்கும் இயக்கமாக இல்லை. "மலாயா இந்தியர்" என்ற பெயரில் ஏற்கனவே சில அமைப்புகளும் மலாயா ரீதியில் இயங்கி வந்திருந்தன. மலாயா இந்தியர் சங்கம் ஜி.வி. தேவர் தலைமையிலும் மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் வழக்குரைஞர் ஆர். ரமணி தலைமையிலும் இயங்கி வந்தன. (1936 முதல் 1948 வரையில் பிரபலமாக விளங்கிய மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் (சி.ஐ.ஏ.எம்.) செயலிழந்த பின்னர் தேசிய (ஃபெடரல்) இந்தியர் சங்கத்தை அதிலிருந்த சிலர் உருவாக்கினர்.)

வழக்குரைஞர் ஆர். ரமணி போன்ற முக்கிய இந்தியர் தலைவர்கள் ம.இ.கா. மீது தங்கள் கவனத்தைத் திருப்பவில்லை.

(ஆனாலும் கால ஓட்டத்தில் ம.இ.கா. ஆலமரம் போல் விரிந்து படர்ந்தது. மற்ற தேசிய இந்திய சங்கங்களான மலாயா இந்தியர் சங்கமும், மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனமும் பட்டமரம் போல் வாடி வதங்கி உதிர்ந்தன.)

அந்தக் காலகட்டத்தில் பிரஜா உரிமையின் அவசியம் பற்றி தெரிந்திருக்காத இந்தியர்களுக்கு – குறிப்பாகத் தோட்டப்புற இந்தியர்களுக்கு உதவிகள் – ஆலோசனைகள் வழங்குவதிலும் அக்கறை காட்டத் தொடங்கியது ம.இ.கா.

ம.இ.காவுக்கு அப்பொழுது தோட்டப்புறங்களிலும் கிராமங்களிலும் கிளைகள் இல்லை. நகர்ப்புறங்களில் இயங்கி வந்த கிளைகளிலும் குறிப்பிட்ட சில கிளைகளைத் தவிர மற்றவை வலுவிழந்து - செயல் இழந்து காணப்பட்டன.

அப்போது மலாயாவில் இருந்த பிரிட்டிஷ் ராணுவ ஆட்சியாளர்களின் கண்காணிப்பும் அதற்கு ஒரு காரணம் என்று சொல்லப்பட்டது.

அந்த நேரத்தில் மலாய்க்காரர், சீனர், இந்தியர் ஆகியோரை உள்ளடக்கிய மலாயா பிரஜா உரிமைத் திட்டத்தை பிரிட்டிஷ் அரசாங்கம் இங்கு அறிமுகப்படுத்தவிருந்தது. அதில் குறிப்பிட்ட தகுதி நிபந்தனைகள் கடுமையாக இருந்ததைத் தலைவர்கள் உணர்ந்தனர்.

மலாயா இந்தியர் காங்கிரஸ் ஆதரவில் பூத் சிங் தலைமையில் சிலாங்கூர் இந்தியர் சங்க கட்டடத்தில் மலாயா அரசியல் திட்ட இந்தியரின் ஆட்சேபக் கூட்டம் 22.12.46இல் நடைபெற்றது. மலாயா யூனியன் அறிமுகப்படுத்தப்பட்ட நேரம் அது.

(அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அப்பொழுது ம.இ.கா. தலைவர் ஜான் ஏ.திவி சென்றிருந்ததால் பூத் சிங் தலைமையில் கூட்டம் நடைபெற்றது).

○ மலாயா இந்தியர் காங்கிரஸ் ஆதரவில் கூடிய சிலாங்கூர் இந்தியர்களின் கூட்டம் மலாயாவுக்கு ஜனநாயக முறையற்றதும் அதிகாரத்துடனும் புகுத்தப்படவிருக்கும் மலாயன் அரசியல் திட்டத்தை ஆட்சேபிக்கிறது.

○ மலாயா இந்தியர் காங்கிரஸ் ஆதரவில் கூடிய இக்கூட்டம் இந்நாட்டின் அரசியல் திட்டம் ஜனநாயக முறையுடனும் வாக்கு சுதந்திரமுள்ள அரசியல் அமைப்பையே வலியுறுத்துகிறது.

— மேற்காணும் இரு தீர்மானங்களை அக்கூட்டம் நிறைவேற்றியது.

அந்தக் கூட்டத்தில் சிங்கப்பூர் பிரதேச மலாயா இந்தியர் காங்கிரஸ் தலைவர் ஜூம்மாபாய், மலாக்கா மாநில ம.இ.கா. தலைவர் உ.அரு.அருணாசலம் செட்டியார், மலாக்கா சீனர் தலைவர் டான் செங்லோக், மலாயா தேசியக் கட்சித் தலைவர் முசா அமாட் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

பின்னர், அகில மலாயா கூட்டு நடவடிக்கை கவுன்சில் டான் செங்லோக் தலைமையில் அமைக்கப்பட்டது.

அந்தக் கவுன்சில் கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றி அப்போதைய காலனி மந்திரிக்கும் மலாயாவின் அப்போதைய தற்காலிக கவர்னர் ஜெனரலுக்கும் தந்தி மூலம் அனுப்பியிருந்தது.

- சிங்கப்பூருடன் ஒரு ஐக்கிய மலாயா நிறுவுவது.
- மலாயா முழுவதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட மத்திய சர்க்கார் அமைக்கப்பட்டு பொறுப்புள்ள சுதந்திர சர்க்காரை அமைப்பது.
- மலாயாவை தன் சொந்த நாடாக சாஸ்வதமாகக் கொள்ளும் யாவருக்கும் வித்தியாசமில்லாத பிரஜா உரிமை அளிப்பது.
- ஒன்பது மலாயா சமஸ்தானங்களும் பினாங்கு, மலாக்கா ஆகிய தொடுவாய்ப் பிரதேசங்களும் கொண்ட மலாயா ஃபெடரேஷன் (ஃபெடரேஷன் ஆஃப் மலாயா) என்ற ஒரு ஃபெடரேஷனைப் பிரிட்டனின் பாதுகாப்பின் கீழ் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என இக்குழு பரிந்துரைக்கிறது.

இயக்கம் அமைத்தவுடனேயே (1946இல்) மலாயாவுக்கு முழு சுதந்திரம் கோரியது மலாயா இந்தியர் காங்கிரஸ் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரஜா உரிமைத் தகுதி, சிங்கை - மலாயா ஃபெடரேஷன் இணைப்பு, சிங்கையில் சிதைக்கப்பட்ட நேதாஜி நினைவுச் சின்னத்தைத் திரும்பவும் அமைத்தல், கள் ஒழிப்பு, கல்வி முறையில் மாறுதல், முற்றிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை ஆகியவை மலாயா இந்தியர் காங்கிரஸ் தொடக்க காலத்தில் போராடிய - மேற்கொண்ட திட்டங்களாகும்.

ம.இ.கா. உதயமான மறு ஆண்டில் 1947 ஜூன் மாதத்தில் ம.இ.கா.வின் முதல் பேராளர் மாநாடு கோலாலம்பூரில் தலைவர் ஜான் ஏ. திவி தலைமையில் நடைபெற்றது.

1947 ஜூன் மாதத்தில் நேரு இந்தியாவில் கூட்டியிருந்த ஆசிய உறவு மாநாட்டில் ஜான் திவியும் கலந்துகொண்டார்.

விரைவில் சுதந்திரம் பெற்று சுய ஆட்சி புரியவிருந்த இந்திய அரசாங்கத்திடமிருந்து ஜான் திவிக்கு 1947 ஜூலை மாதத்தில் ஓர் அழைப்பு வந்தது.

(1947 ஆகஸ்ட் 15இல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது. நேருவின் தலைமையில் அரசாங்கமும் அமைந்தது.)

மலாயா சிங்கப்பூருக்கான இந்திய அரசாங்கத்தின் முதல் தூதர் பதவியை மேற்கொள்ளுமாறு இந்தியத் தலைநகர் புதுடில்லியிலிருந்து வந்த அழைப்பை ஏற்பதா இல்லையா என்கிற குழப்பத்தில் இருந்தார் ஜான் திவி.

பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அவரது சகாக்களும் நண்பர்களும் ஆலோசனை வழங்கினர்.

மலாயா சிங்கப்பூர் இந்தியர்களுக்கு அரசாங்க ரீதியில் சேவை செய்ய கிடைத்திருக்கும் வாய்ப்பை ஜான் திவி ஏற்றுக் கொண்டார்.

ம.இ.கா. தலைவர் பதவியிலிருந்த ஜான் திவி ஜூலையில் விலகிக் கொண்டவுடன் சர்தார் பூத் சிங் ம.இ.கா.வின் இரண்டாவது தலைவராகப் பொறுப்பேற்றார்.

# ம.இ.கா முதல் தலைவர் ஜான் திவி

**ம**.இ.கா. வரலாற்றில் முக்கிய இடம் பெற்றிருப்பவர் ஜான் ஏ.திவி.

நேதாஜி மலாயாவுக்கு வந்திருந்த போது அவரோடு நெருங்கிப் பழகி அவருடைய அன்பையும் ஆசியையும் பெற்றவர்.

நேதாஜி தலைமை தாங்கிய இந்திய தேசிய ராணுவத்தில் அதிகாரியாகப் பதவி வகித்தவர்.

சிங்கப்பூரில் 1943 அக்டோபர் 21இல் நேதாஜியால் அமைக்கப்பட்ட சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம் பெறும் வாய்ப்பையும் பெற்றிருந்தார்.

நேதாஜியின் நம்பிக்கைக்கும் பாத்திரமாகத் திகழ்ந்தார்.

மலாயா சிங்கப்பூர் இந்தியர்களிடையே அப்போது நேதாஜி - ராஷ்பிகாரிபோஸ் - ஜே. திவி (ஜான் திவி) ஆகிய மூவருக்குமே அதிக செல்வாக்கு இருந்ததாகச் சொல்லப்பட்டது.

1945 ஆகஸ்ட் 15இல் சிங்கப்பூரிலும், மலாயாவிலும் ஜப்பானியர்கள் பிரிட்டிஷாரிடம் சரண் அடைந்ததும் இந்திய தேசிய ராணுவ நடவடிக்கைகள் ஸ்தம்பித்து விட்டன. அதனைத் தொடர்ந்து சிங்கப்பூரிலிருந்து டோக்கியோ செல்லும் வழியில் நிகழ்ந்த விமான விபத்தில் ஆகஸ்ட் 18இல் நேதாஜி மரணமடைந்தவுடன் இந்திய தேசிய ராணுவம், தலைவர் இல்லாத நிலையை அடைந்து செயல்படாமலேயே போய்விட்டது.

அந்த விடுதலை ராணுவத்தில் முக்கிய பொறுப்பு வகித்த அதிகாரிகளைப் பிரிட்டிஷ் ராணுவம் கைது செய்தது.

ஜான் திவியும் கைது செய்யப்பட்டு சிங்கப்பூர் சாங்கி சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருந்தார்.

நேதாஜி வளர்த்துவிட்ட தேசப்பற்று ஜான் திவியின் உள்ளத்தில் கொழுந்து விட்டு எரிந்தது.

மலாயாவில் பிறந்த இந்தியர் அவர்.

பிரிட்டிஷ் ஆட்சியில் அப்பொழுது மலாயா இருந்த நேரம்.

மலாயாவுக்குச் சுதந்திரம் கிடைக்க நண்பர்களுடன் சேர்ந்து போராட வேண்டும் என்கிற உணர்வு அவருக்குத் தோன்றியது.

மலாயா இந்தியர்களுக்கு தேசிய ரீதியில் ஓர் அமைப்பும் இருக்க வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார்.

சிங்கை சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் அவர் உணர்வுகளுக்கு அவருடைய சகாக்கள் - நண்பர்கள் வடிவம் அமைத்துத் தந்தனர்.

1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3,4,5ஆம் தேதிகளில் கோலாலம்பூரில் நடைபெற்ற அகில மலாயா இந்தியர் மாநாட்டில் இரண்டாம் நாள் நிகழ்ச்சியின்போது (ஆகஸ்ட் 4) மலாயா இந்தியர் காங்கிரஸ் மகிழ்ச்சி ஆரவாரங்களுக்கிடையில் தோற்றம் கண்டது.

ம.இ.கா. அமைவதற்கு இந்திய தேசிய ராணுவத் தொண்டர்களே பெரும் பங்கு வகித்தனர் என்பதை மறுக்க முடியாது.

ம.இ.காவின் முதல் நிர்வாகக் குழுவிலும் நேதாஜி தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய இந்திய சுதந்திரக்கழகம் இந்திய தேசிய ராணுவம் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருந்த வர்களே முக்கிய பொறுப்புகள் வகித்தனர்.

ஜான் திவி ம.இ.காவின் முதல் தலைவர் பொறுப்பை ஏற்றவுடன் நேதாஜியை நினைவு கூரும் வகையிலேயே அவருடைய உரையும் அமைந்திருந்தது :

"தென்கிழக்காசியாவில் உள்ள இந்தியர்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்த மகத்தான வேலைகளை யுத்தக் காலத்தில் செய்திருக்கின்றனர். தியாகங்கள் புரிந்திருக்கின்றனர். தங்கள் வீரத்தையும் தீரத்தையும் உலகுக்கு உணர்த்தி இருக்கின்றனர். அவர்களுக்கு அளிக்கப் பட்ட ராணுவப் பயிற்சியும் ஒழுங்கு முறைக் கட்டுப்பாடுகளும் அவர்களைத் தைரியசாலிகளாக வும், நம்பிக்கை பூண்டவர்களாகவும், சுதந்திர அபிலாஷை கொண்டவர்களாகவும் செய்து விட்டன. இவற்றால் கிழக்காசிய இந்தியர்கள் ஒற்றுமை என்ற ஓர் அரிய பொக்கிஷத்தைப் பெற்றார்கள். சுதந்திர உணர்ச்சியில் இது அவர்களுக்குப் பேருதவி புரிந்திருந்தது. இவை எல்லாவற்றையும் இன்னும் கிழக்காசிய இந்தியர்களிடம் காணலாம்..."





● திருமதி ஜான் திவி மலேசியாவுக்கு வருகை தந்திருந்தபோ ம.இ.கா. தலைமையகத்தில் அவருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ சாமிவேலு, அப்போதைய பொதுச் செ லாளர் டத்தோ மகாலிங்கம், ஆகியோரோடு திருமதி ஜான் திவி.

ஜான் திவி வழக்குரைஞராகப் பணியாற்றியவர். நேதாஜியுடன் தொடர்பு ஏற்பட்டவுடன் அந்தத் தொழிலை மேற்கொள்ளாமல் பொதுப்பணிகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டார்.

ஜான் திவியின் முழுப் பெயர் ஜான் அலேசியஸ் திவி. அந்தப் பெயரைச் சுருக்கி ஜான் ஏ.திவி என்று வைத்துக்கொண்டார்.

கோலகங்சார் ஆங்கிலப்பள்ளியில் படித்த பிறகு லண்டன் சென்று பாரிஸ்டர் பட்டம் பெற்றார். 1940ஆம் ஆண்டு வரையில் ஈப்போவில் வழக்குரைஞராகப் பணி புரிந்து வந்தார்.

இரண்டாவது உலகப் போரின்போது பிரிட்டிஷாருக்கு எதிராக இயங்கிய நேதாஜியின் இயக்கத்தில் சேர்ந்தார். நேதாஜியின் நம்பிக்கைக்கு உரியவராகத் திகழ்ந்தார்.

இவருடைய தந்தை லூயிஸ் திவ்வியநாதன் கோலகங்சாரில் வர்த்தகம் செய்து வந்தார். புகையிலை சுருட்டுத் தொழில் இவரது முக்கிய வர்த்தகம்.

ஜான் திவியின் தந்தை லூயிஸ் திவ்விய நாதனும் அந்தக் காலகட்டத்தில் பொதுப் பணிகளில் ஈடுபாடு காட்டி வந்தார்.

பேரா சுல்தான் ஜே.பி. என்ற விருதையும் ஜான் திவியின் தந்தைக்கு வழங்கியிருந்தனர். 1929ஆம் ஆண்டில் பேரா மாநில கவுன்சில் உறுப்பினராகப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டிருந்தார்.

லூயிஸ் திவ்விய நாதனுக்குச் சமூகத்தில் நல்ல செல்வாக்கு அப்பொழுது இருந்தது.

திவ்வியநாதன் எனும் பெயர் சுருங்கி "திவி" என்று அழைக்கப்பட்டார்.

லூயிஸ் திவியின் மூத்த புதல்வரே ஜான் ஏ.திவி.

தந்தையைப் போலவே பொதுப் பணிகளில் ஈடுபடும் ஆர்வம் இளம் வயதிலேயே ஜான் திவிக்கு ஏற்பட்டிருந்தது.

ம.இ.கா. ஸ்தாபனத்தை உருவாக்கும் முயற்சியில் ஐ.என்.ஏ. நண்பர்களோடு சேர்ந்து ஈடுபட்டார்.

ம.இ.கா. தொடங்கப்பட்டவுடன் அதன் முதல் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ம.இ.கா. தோற்றம் கண்ட மறு ஆண்டான 1947இல் ஜூன் மாதத்தில் நடைபெற்ற ம.இ.கா. முதல் பேராளர் மாநாடு ஜான் திவியின் தலைமையிலேயே நடைபெற்றது.

மறு மாதம் ஜான் திவியைத் தேடி புதிய பதவி ஒன்று வந்தது.

மலாயா சிங்கப்பூருக்கான இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதி (ஹை கமிஷனர்) பதவிதான் அது.

அந்தப் பொறுப்பை ஏற்க ஜான் திவி தயங்கினார். அவர் நலனில் நாட்டமுள்ள நண்பர்கள் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கோரினர்.

தூதர் பொறுப்பை ஜான் திவி ஏற்றுக்கொண்டார்.

ம.இ.கா.வின் முதல் தலைவருக்குக் கிடைத்த உயர் பதவி அது.

மலாயா சிங்கப்பூரில் 5 ஆண்டுகளுக்கு அந்தப் பொறுப்பில் இருந்தார் ஜான் திவி. பிறகு மொரிசியஸ் தீவுக்கு இந்தியத் தூதராகப் பொறுப்பேற்றுச் சென்றார். பின் இத்தாலியின் ரோம் போன்ற இடங்களில் இவரது பணி தொடர்ந்தது.

1958ஆம் ஆண்டில் போப்பாண்டவரின் ஸ்தலமான லத்தீனில் ஜான் திவி இயற்கை எய்தினார்.

எளிமையும், கொள்கைப் பிடிப்பும், ஈடுபடும் நடவடிக்கைகளில் தீவிரமும் செலுத்தி வந்த ஜான் திவி –

ம.இ.கா. வரலாற்றில் தனி இடம் பெற்றிருப்பவர்.

* * *



## அப்புராமன்

அப்புராமனைப் பற்றி (ஏ.ராமன்) ம.இ.கா. தேசியத தலைவராகவும் அமைச்சராகவும் இருந்த (டான்ஸ்ரீ) மாணிக்கவாசகம் இப்படி ஒருமுறை தெரிவித்திருந்தார்.

"ஏ. ராமன் 1948 முதல் 1950 வரை ம.இ.கா.வுக்குப் பொதுச் செயலாளராக இருந்தவர். அப்போது நான் கிள்ளான் கிளைச் செயலாளராக மட்டுமே இருந்தேன். நான் இப்போது அமைச்சராக இருக்கிறேன். அவர் என்னிலும் மூத்த அமைச்சராக இருக்க வேண்டியவர். 1946இல் அகில மலாயா இந்தியர் மாநாட்டைக் கூட்டிய மூவரில் இவர் ஒருவர். இம் மாநாடுதான் காங்கிரஸ் ஸ்தாபனம் உருவாகக் காரணமாக இருந்தது..."

நேதாஜி அமைத்த இந்திய தேசிய ராணுவத்தில் லெப்டினன்டாகப் பணியாற்றிய ஏ. ராமன் இங்குள்ள தேசிய ராணுவத்தில் பணியாற்றிய வீரர்களை, இந்திய தேசிய ராணுவ உறுப்பி னர்கள் சங்கமான "மைனா" இயக்கத்தின் வழி ஒன்று திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடு பட்டிருந்தார். அரசியலிலிருந்து ஒதுங்கி பொதுப் பணிகளில் மட்டுமே நாட்டம் செலுத்தி வந்த ஏ. ராமன் ம.இ.கா.வின் தொடக்க கால இளம் தலைவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத் தக்கது.

1946இல் ஆகஸ்ட் 3,4,5ஆம் தேதிகளில் செந்தூல் தண்டாயுதபாணி ஆலயச் செட்டியார் மண்டபத்தில் ம.இ.கா.வின் அமைப்புக் கூட்டமும் மாநாடும் நடைபெற்ற போது ஜான் திவி தலைவராகவும், சபாரத்னமும் ஞானமணியும் கூட்டுச் செயலாளர்களாகவும், குரு பாக்ஸ் சிங் சாம்பி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டபோது ஏ. ராமன் மத்திய செயலவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ஓர் ஆண்டிற்குப் பின்னர் தேசியத் தலைவராகப் பணியாற்றிய ஜான் திவி தலைவர் பதவியிலிருந்து விலகியவுடன் பூத் சிங் தலைவரான போது ஏ. ராமன் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றார். 1947ஆம் ஆண்டு பிற்பகுதியிலிருந்து 50ஆம்ஆண்டு வரையில் ம.இ.காவின் பொதுச் செயலாளராக இவர் பணியாற்றியிருக்கிறார்.

ம.இ.கா.வின் வளர்ச்சிக்குத் தொடக்க காலங்களில் பாடுபட்டவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களில் இவரும் ஒருவர்.

சமூக நலத்துறை அமைச்சின் துணை இயக்குநராகவும், செராஸ் உடல் ஊனமுற்றோர் நிலையத்தின் முதல்வராகவும், அரசாங்க சேவை கமிஷன் (பி.எஸ்.சி.) வாரிய உறுப்பினராகவும் பணியாற்றிய ஏ. ராமன் அரசாங்கப் பணிகளில் ஓய்வு பெற்றவுடன் பொதுப் பணிகளில் தன் வாழ்நாளின் இறுதி நாள் வரை ஓய்வு இல்லாமல் ஈடுபட்டு வந்தார்.

## சுவாமி சத்யானந்தா : ✳ ✳ ✳

**சுவாமி சத்யானந்தா (பிரமச்சாரி கைலாசம்) நேதாஜியின் இயக்கமான இந்திய சுதந்திரக் கழகத்தில் அதிக ஈடுபாடு காட்டி வந்தார். நேதாஜியோடு மிக நெருக்கமாக இருந்தவர்களில் இவரும் ஒருவர். இந்திய சுதந்திரக் கழக சிங்கப்பூர் கிளையில் கல்வி கலாசாரப்பிரிவுக்கு சுவாமி சத்யானந்தா தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.**

**ம.இ.கா. அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட இவர் மாநாட்டு இறுதி நிகழ்ச்சியாக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்த வாய்ப்புப் பெற்றிருந்தார்.**

**தொடக்கத்தில் தபால் இலாகாவில் பணி புரிந்த இவர் முழு நேர சமூகப் பணிக்காக அந்த வேலையைத் துறந்துவிட்டு சிங்கப்பூர் ராமகிருஷ்ணா நிலையத்தில் சேவையைத் தொடங்கினார்.**

**கோலாலம்பூரில் பூச்சோங் பகுதியில் "சுத்த சமாஜம்" நிலையத்தை 1949-ல் ஸ்தாபித்தார். தம் இறுதி மூச்சுவரை அந்த நிலைய வளர்ச்சிக்காகப் பணியாற்றினார். ஆதரவற்ற குழந்தைகளுக்குப் புகலிடமாக அது திகழ்கிறது. சுவாமி சத்யானந்தாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமான அன்னை மங்களம் அதனை நிர்வகித்து வருகிறார்.**

**"மலாயா சரித்திரம்" எனும் தமிழ் நூலையும் எழுதி வெளியிட்டிருக்கிறார் சுவாமி சத்யானந்தா.**

✳ ✳ ✳

# நெருக்கடி மிகுந்த நேரம்

பூத் சிங் தலைமைப் பொறுப்பேற்றிருந்த நேரம் மலாயாவில் நெருக்கடி மிகுந்த நேரமாக இருந்தது.

1947 ஜூலை முதல் 1950 ஏப்ரல் வரையில் சர்தார் பூத் சிங் தேசிய தலைவராக இருந்தார். ஏ.ராமன் பொதுச் செயலாளராகவும் எஸ். அமலு பொருளாளராகவும் தேர்வு பெற்றிருந்தனர்.

பிரிட்டிஷ் அரசாங்கம் குடியுரிமை வழங்குவதிலும், கூட்டரசு ஒப்பந்த சாசன நிபந்தனை களில் சிலவற்றை தளர்த்துவதிலும் பரிசீலிக்குமாறு இந்திய சீன தலைவர்கள் கோரினர்.

இதுகுறித்து கருத்துகளை – ஆலோசனைகளைக் கேட்க அரசாங்கம் ஒன்பது பேர் கொண்ட ஒரு குழுவை அமைத்திருந்தது. அதில் இரண்டு இந்தியர்களும் இரண்டு சீனர்களும் இடம் பெற்றிருந்தனர்.

ம.இ.கா. அந்த ஆலோசனைக் குழுவைப் புறக்கணித்தது. ஆலோசனைகளை வழங்கவும் முன்வரவில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களை மன்ற உறுப்பினர்களாக நியமித்தால் ம.இ.கா. ஏற்கக்கூடாது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருந்தது.

மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் ஆர். ரமணி உட்பட சில சமூகத் தலைவர்களும் வேறு சில இயக்கங்களும் கடுமையான பிரஜா உரிமை நிபந்தனைகளைத் தளர்த்துமாறு கோரினர்.

பிரஜா உரிமை சட்டசபை பிரதிநிதித்துவம் ஆகியவற்றில் சிறு மாற்றங்களோடு 1948 இல் மலாயா கூட்டரசு சர்க்கார் ஒப்பந்தம் சாசன ரீதியில் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் சட்டமாக்கப் பட்டது.

சில தேசியவாதிகள் மலாயா கூட்டாட்சி ஒப்பந்தத்தை எதிர்த்தனர். முழு சுயாட்சிக்கான வழிமுறைகளைக் காணவேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர்.

அகில மலாயா கூட்டு நடவடிக்கை கவுன்சில் என்ற ஓர் அமைப்பை நிறுவியிருந்ததில் சில மலாய்க்கார தேசியவாதக் கட்சிகளும், சீனர் அமைப்புகளும், ம.இ.காவும் இடம்பெற்றிருந்தன.

பிரஜா உரிமை, சட்டசபை, பிரதிநிதித்துவம் ஆகிய பிரச்னைகளில் கருத்து வேறுபாடுகள் தோன்றியதால் மலாய்க்காரர்களைக் கொண்ட அமைப்புகள் அந்த கூட்டு நடவடிக்கை கவுன்சிலிலிருந்து விலகிக் கொண்டன.

கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகளினால் அவசர கால பிரகடனம் செய்யப் பட்டிருந்தது.

1942 பிப்ரவரி 15 இல் ஜப்பானியர் மலாயா சிங்கப்பூரை ஆக்ரமித்து ஆட்சி புரிந்தபோது இங்குள்ள சீனர்களுக்கு அதிகமான தொல்லைகள் தந்து வந்தனர்.

'ஜப்பானிய ராணுவ எதிர்ப்பு அணியை' மலாயாவிலுள்ள ஒரு சீனப்பிரிவு அமைத்திருந்தது. ஜப்பானியரிடம் தோல்வி அடைந்திருந்த பிரிட்டிஷார் ஆயுத உதவிகளை அந்த அணிக்கு வழங்கியிருந்தனர்.

1945 ஆகஸ்ட் 15 இல் ஜப்பானியர் பிரிட்டிஷாரிடம் சரண் அடைந்த பிறகு மீண்டும் மலாயா விலும் சிங்கப்பூரிலும் பிரிட்டிஷ் ஆட்சி மலர்ந்தது. ஜப்பானிய ராணுவ எதிர்ப்பு அணியிடம் தந்திருந்த ஆயுதங்களை ஒப்படைக்குமாறு பிரிட்டிஷ் ராணுவ அரசாங்கம் கோரியிருக்கிறது.

குறிப்பிட்ட சில ஆயுதங்களை மட்டும் ஒப்படைத்துவிட்டு மீதமுள்ளவற்றை அக்குழு பதுக்கி வைத்துக் கொண்டது.

மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் கட்டுப்பாட்டில் அந்தக் குழு இயங்கி வந்தது.

போராட்டங்களை கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகள் தொடர்ந்து மேற்கொண்டனர்.

"ரயில்களைக் கவிழ்ப்பது, ரப்பர் தோட்ட உரிமையாளர்களைப் பயமுறுத்துவது - உயிரைப் பறிப்பது, அரசாங்க - தனியாருக்குச் சொந்தமான நிலையங்களை - நிறுவனங்களை அழிப்பது... இப்படிப்பட்ட நாச வேலைகளில் அவர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

1948 ஜூன் 18 இல் அவசரக் கால பிரகடனத்தை, பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்ததோடு அடையாளக்கார்டு முறையையும் இங்குள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்தியது.

அடையாளக்கார்டு இல்லாமல் வெளியில் நடமாடினால் குற்றமாகக் கருதப்பட்டது. கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகளை அடையாளம் தெரிந்து கொள்வதற்காக இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மலாயா ஹை கமிஷனர் சர் ஹென்றி கர்னி 1951 அக்டோபரில் பிரேசர் மலைக்குப் போகும் வழியில் கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டதைப் பிரிட்டிஷ் அரசாங்கம் மிகக் கடுமையாக எடுத்துக் கொண்டது.



சர் ஹென்றி கர்னி



கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகளைத் துடைத்தொழிக்கும் நடவடிக்கையில் அதிகக் கவனம் செலுத்தியது.

மலாயா சீனர் சங்கத்தை (டத்தோ) ஸர் டான் செங் லாக் தலைமையில் அமைத்து மலாயா சீனர்களை ஒரு ஸ்தாபனத்துக்குள் கொண்டு வரும் ஆலோசனையைப் பிரிட்டிஷ் அரசாங்கமே வழங்கியிருந்தது.

அரசாங்க ஆதரவுடன் ம.சீ.ச. செயல்பட்ட காரணத்தால் தொடக்க காலத்தில் அந்த ஸ்தாபனம் சீன மக்களின் ஆதரவை முழுமையாகப் பெறவில்லை. பின்னர், 1950 ஆம் ஆண்டுகளில் மலாயாவில் சமூக நல அபிவிருத்தி லாட்டரிகளைத் தொடங்கி, அதில் கிடைத்த வருமானத்தைப் புதுக் கிராமங்கள், கல்விக் கூடங்கள் ஆகியவற்றில் செலவிடத் தொடங்கிய வுடன் சீனர்களைப் பெரிதும் கவர்ந்து சீனர் சங்கத்தின்பால் நாட்டம் கொள்ளச் செய்தது. மலாயாவாழ் சீன மக்களின் நலனுக்காகவும், அவர்களின் உரிமைக்காகவும் போராடும் ஸ்தாபனமாகப் பின்னர் பெரும் வளர்ச்சி பெற்று செல்வாக்குடன் திகழத் தொடங்கியது.



● சீனப் பிரமுகர் டான் செங் லோக் தலைமையில் மலாயாவிலுள்ள சீனர்களைப் பிரதிநிதிக்கும் மலாயா சீனர் சங்கம் எனும் ஸ்தாபனம் 1949 பிப்ரவரி 27 இல் அமைக்கப்பட்டது.

ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த அகில மலாயா கூட்டு நடவடிக்கை கவுன்சில் செயல் இழந்து காணப்பட்டது. அதில் முன்பு இணைந்திருந்த மலாய்க்காரர்கள் குழுவும், சீனர்கள் குழுக்களும் ஒதுங்கிவிட்டன. ம.இ.கா. மேல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொண்டது.

அவசரகாலப் பிரகடனம், ஊரடங்கு ஆகியவற்றால் ஆங்காங்கே உள்ள கிளைகளில் பல இயங்காமல் இருந்தன. உறுப்பினர்கள் கூட்டங்களுக்குச் செல்லவும் விருப்பம் காட்டாமல் இருந்தனர். கிளைகளின் ஆண்டுக் கூட்டங்களில் மிகக் குறைந்த உறுப்பினர்களே கலந்து கொண்டனர்.

மக்களிடையே அச்சம் நிலவியிருந்த நேரம்.

கட்சி வளர்ச்சி அடையாமல், தளர்ச்சி கண்டு விடுமோ என்கிற வருத்தத்தில் கட்சியின் நிர்வாகிகள் சோர்வில்லாமல் கிளைகளுக்கு அடிக்கடி சென்று தெம்பூட்டி வந்தனர்.

மலாயன் ரயில்வேயில் அப்போது பணிபுரிந்த ம.இ.கா. தலைவர் பூத் சிங்கிற்கு மேலதிகாரிகளால் பலவித தொல்லைகள் ஏற்பட்டன.

ம.இ.கா. துடிப்புடன் இயங்காமல் இருந்ததைப் பல உறுப்பினர்கள் வெளிப்படையாகவே குறை கூறத் தொடங்கினர்.

அரசாங்கத்தில் தலைவர் பூத் சிங் பணிபுரிவதால் சுதந்திரமாக முழுமையாக கட்சிப்பணி களில் அவரால் ஈடுபட முடியவில்லை என்று தீவிர காங்கிரஸ்வாதிகளால் குற்றம் சாட்டப்பட்டது.

"மலாயா இந்தியர் காங்கிரஸ் தழைக்க வேண்டுமானால் அதன் தலைமைத்துவம் மாற வேண்டும்; மாற்றப்பட வேண்டும். தெளிவான கொள்கையும் செயல் திட்டமும் அதற்கு அவசியம். இருட்டில் அலைவதால் பயனில்லை" என்று அப்போதைய சிலாங்கூர் ம.இ.கா. தலைவரும், தமிழ்நேசன் தினசரியின் ஆசிரியர் பொறுப்பை அப்போது வகித்தவருமான (டத்தோ) ஆதிநாகப்பன் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 22 இல் ம.இ.கா. தாப்பா கிளைக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டிருந்தது பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

"தற்போது காங்கிரஸ் இடதுசாரி கட்சியும் இல்லை. வலதுசாரி கட்சியும் இல்லை. ஒரு சமயத்தில் அது இடதுசாரி இயக்கங்களுடன் சேர்ந்திருந்தது. அவசர காலத்தில் அவற்றில் சில வன ராஜ்யத்துக்குள் புகுந்தன. சில தற்கொலை செய்து கொண்டன. சில உருமாறின. காங்கிரஸ் இருந்தபடியே இருக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டும்.

எப்போதும் சர்க்காருக்கு எதிராக எதிர்ப்பு செய்து கொண்டிருந்தால் பிரயோசனமில்லை. அவசியம் ஏற்படும்போது சர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும். குறைகளை அமைதிமான முறையில் சொல்ல வேண்டும். அழிவு யோசனைக்கு இடமிருக்கலாகாது. மொத்த ஜனத்தொகையில் 12 சதவீதத்தினரே நாம். எனவே மற்ற இரு பெரிய வகுப்பினர்களுடன் நாம் இணைந்து செல்வது மிக அவசியமாகும்..." என்றும் தம் உரையில் குறிப்பிட்டிருந்தார் ஆதிநாகப்பன்.

அப்போதைய ம.இ.கா. நிலைமையை துணிச்சலோடு பகிரங்கமாக ம.இ.கா. கிளைக் கூட்டமொன்றில் சிலாங்கூர் ம.இ.கா. தலைவர் ஆதிநாகப்பன் தெரிவித்திருந்தது பலரையும் சிந்திக்கத் தூண்டியது.

1950 ஆம் ஆண்டில் ம.இ.கா. தலைவர் சர்தார் பூத் சிங் பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.

அடுத்த தலைவராக கா.ராமநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கா.ராமநாதன் தலைவராக இருந்தபோது முப்பது நாட்கள் வரையில் கே.எல். தேவாசர் செயலாளராக இருந்தார். அவரைத் தொடர்ந்து (டத்தோ) எஸ். கோவிந்தராஜ் அந்தப் பொறுப்புக்கு பொதுச் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். பொருளாளராக கே.ஹார் சிங் தேர்வு செய்யப்பட்டிருந்தார்.

கா. ராமநாதன் ஓர் ஆண்டிற்கு மட்டுமே ம.இ.கா. தலைவர் பொறுப்பை வகித்தார்.

ம.இ.கா.வில் கா. ராமநாதன் பதவி வகித்த அந்த ஓர் ஆண்டும் அமைதியாகவே கழிந்தது.

பழைய தலைவர் சர்தார் பூத் சிங் மேற்கொண்டிருந்த முயற்சிகளில் வருமான வரித்துறை நிபுணரும் சட்டம் பயின்றவருமான கா. ராமநாதனும் தன்னால் இயன்றளவு ஈடுபாடு காட்டினர்.



கே.எல். தேவாசர் (டான்ஸ்ரீ) மாணிக்கவாசகம், கா. ராமநாதன், க. குருபாதம் ஆகியோரோடு டெம்ப்ளர் தம்பதியர்.

# இயக்கத்தின் இரண்டாவது தலைவர் சமாதானப் பிரியர் சர்தார் பூத் சிங்



ம.இ.காவின் இரண்டாவது தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்தார் பூத் சிங் ம.இ.காவில் தொடக்க காலம் முதல் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர். அனைவரின் அன்புக்கும் பாத்திரமான பூத் சிங் சமாதானத்தில் அதிக நாட்டம் கொண்டவர். அமைதியான முறையில் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியும் என்று அடிக்கடி குறிப்பிடுவார். அதே நேரத்தில் உரிமைக்குப் போராடத் தயங்கக்கூடாது என்பார்.

மலாயன் ரயில்வேயில் குமாஸ்தாவாகப் பணிபுரிந்த பூச் சிங் அரசாங்க அலுவல் களுக்கிடையில் கட்சிப் பணியிலும் தீவிரம் செலுத்தி வந்தார். காங்கிரஸில் முழுமையாக ஈடுபட்டிருந்ததால் வேலை பார்த்த இடத்தில் பதவி உயர்வுக்கு வழி இல்லாமல் போய்விட்டது. ஆங்கிலேயர் ஆட்சியின் குறைபாடுகளைப் பகிரங்கமாகக் கூறியவர் இவர்.

வெண்ணிற தாடியோடும் தலைப்பாகையோடும் மலர்ந்த முகத்தோடும் சதா காட்சி தரும் சர்தார் பூத் சிங் ம.இ.காவின் முதல் மத்திய செயலவையில் இடம் பெற்றிருந்தார்.

பஞ்சாபியரான இவர் ஆங்கில மொழியில் நன்கு பேசும் திறனும் பெற்றிருந்தார்.

ஜான் திவிக்குப் பின்னர் 1947 ஜூலையில் ம.இ.காவின் தேசிய தலைவராகப் போட்டியின்றி இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1950 ஆம் ஆண்டு வரையில் தேசிய தலைவராகப் பொறுப்பு வகித்திருக்கிறார்.

இயற்கை எய்திவிட்ட சர்தார் பூத் சிங் இயக்க வளர்ச்சிக்குத் தன்னால் இயன்ற அளவு உழைத்திருக்கிறார்.



• 1948ல் கோலாலம்பூர் தண்டாயுதபாணி ஆலய செட்டியார் மண்டபத்தில் சர்தார் பூத்சிங் தலைமையில் நடைபெற்ற ம.இ.கா. இரண்டாவது பேராளர் மாநாட்டில் கலந்து கொண்ட பேராளர்கள்.

# ம.இ.கா.வின் 3 ஆவது தலைவர் சைவப் பெரியார் கா. ராமநாதன்



சர்தார் பூத் சிங்கிற்குப் பிறகு ம.இ.கா்வின் மூன்றாவது தலைவராக கா.ராமநாதன் பொறுப் பேற்றார்.

அமைதியான சுபாவம் கொண்ட கா.ராமநாதன் மற்றவர்கள் புண்படும்படி பேசமாட்டார்.

சைவ சமயத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்த கா.ராமநாதன் சைவசமயம் குறித்து பல உரைகள் நிகழ்த்தியிருக்கிறார். நாட்டின் பல பாகங்களிலும் இவரது சொற்பொழிவுகள் இடம்பெற்றிருக்கின்றன. இந்து சமயம் சம்பந்தப்பட்ட பல இயக்கங்களோடு நெருக்கமான தொடர்பும் கொண்டிருந்தார். 'சைவப் பெரியார்' கா.ராமநாதன் என்றே இவரை அழைத்து வந்தனர்.

சர்தாார் பூத் சிங்கிற்குப் பின்னர் 1950 இல் தலைமைப் பொறுப்பேற்ற கா.ராமநாதன் வரு மான வரித்துறையில் வல்லுநராகத் திகழ்ந்தார். சட்டத் துறையிலும் படித்துப் பட்டம் பெற்றவர்.

அகில மலாயா செட்டியார் வர்த்தக சங்கச் செயலாளராகப் பதவி வகித்தபோது கா.ராமநாதன் பொதுவாழ்க்கையிலும் அரசியலிலும் அதிக ஈடுபாடு காட்டத் தொடங்கினார்.

அம்னோ - ம.சீ.ச. கூட்டணியோடு ம.இ.காவும் சேர்ந்து கொள்ள வேண்டும் என முதலில் குரல் கொடுத்தவர் கா.ராமநாதன்தான்.

1951 ஏப்ரலில் அமைச்சர் அந்தஸ்துள்ள அங்கத்தினர் முறை அமல்படுத்தப்பட்டபோது இந்தியர் பிரதிநிதித்துவம் வேண்டுமென ம.இ.கா. தொடர்ந்து கோரிக்கை எழுப்பி வந்தபோது அப்போதைய பிரிட்டிஷ் அரசு அதற்கு இணங்கி இந்தியர் பிரதிநிதியின் பெயரைச் சமர்ப்பிக்கு மாறு ம.இ.கா.விடம் கேட்டிருந்தது. ம.இ.கா. தலைமையகம் 1953 இல் மூவரின் பெயர்களைத் தந்திருந்தது. அவர்களில் ஒருவர் முன்னாள் தேசியத்தலைவர் கா.ராமநாதன். பிரிட்டிஷ் அரசு கா.ராமநாதனை அப்பொறுப்புக்குத் தேர்ந்தெடுத்துவிட்டு இறுதி நேரத்தில் ம.இ.கா.வோடு தொடர்பில்லாத ஆர். ரமணியைத் தலைவராகக் கொண்ட "பெடரல் இந்தியர் சங்க" உறுப்பினரும் தேசிய சட்டமன்ற உறுப்பினருமான வி.எம்.என். மேனனைத் தேர்வு செய்து தபால் தந்தித் துறை இலாகா பொறுப்பாளராக நியமித்துவிட்டது. (வழக்குரைஞரும் பெடரல் சட்ட மன்ற உறுப்பினருமான ஆர்.ரமணிக்கு முதலில் 1951 இல் அந்த அமைச்சர் அந்தஸ்து அங்கத்தினர் பொறுப்பு தரப்பட்டபோது ஏதோ காரணத்தினால் ஆர்.ரமணி ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை).

போராட்டமும் எதிர்நீச்சலும் போடவேண்டிய அரசியல் களத்தில் தொடர்ந்து பெயர் போட முடியாது என்பதனை உணர்ந்து ஓர் ஆண்டுக்கு மட்டுமே ம.இ.கா. தலைவராகப் பதவி வகித்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார்.

தேசியத் தலைவர் பதவியிலிருந்து விலகிக் கொண்டாலும் பெடரல் சட்ட மன்ற உறுப்பினராகவும் ம.இ.கா. தலைமையகம் அமைத்த துணைக் குழுக்களில் முக்கிய பொறுப்புகள் வகித்தும் வந்தார் கா. ராமநாதன்.

நடப்புத்தலைவர் தேவாசரோடு இணைந்து ம.இ.கா.வை கூட்டணியில் இணைத்துவிடுவதில் அதிக ஆர்வம் செலுத்தி வந்தார் இவர்.

கோலாலம்பூரிலிருந்து 1952 இல் வெளிவந்த "சோலை" எனும் தமிழ் சஞ்சிகைக்குக் கா.ராமநாதன் ஆசிரியர் பொறுப்பேற்றிருந்தார். பின்னர் அந்த ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டவுடன் தி.சு. சண்முகம் அதன் ஆசிரியர் பொறுப்புக்கு வந்தார்.

அமரராகிவிட்ட கா.ராமநாதன் பி.ஏ.பி.எல். மலேசிய இந்தியர்களிடையே நிலைத்துவிட்ட சமூகத் தலைவர்களில் ஒருவர்.

* * *

# மலாயா அரசியல்வானில் துரித மாற்றங்கள்...

**ம**.இ.காவின் 5 ஆவது பேராளர் மாநாடு 1951 ஆம் ஆண்டில் முதல் முறையாகக் கோலாலம்பூருக்கு வெளியில் ஜோகூர்பாருவில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் வழக்குரைஞர் கே.எல்.தேவாசர் ம.இ.கா.வின் நான்காவது தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

க.குருபாதம் பொதுச் செயலாளராகவும், ஏ.பி. டிங்ஸ் பொருளாளராகவும் பொறுப்புக்கு வந்தனர்.

கே.எல். தேவாசர் - க.குருபாதம் இருவரும் நல்ல புரிந்துணர்வுடன் இயங்கினர்.

கே.எல்.தேவாசரும், க.குருபாதமும் ம.இ.காவின் முக்கிய பொறுப்புகளை மேற்கொண்டிருந்தபோது மலாயா அரசியல் வானில் துரித மாற்றங்கள் பல நிகழ்ந்து கொண்டிருந்தன.

ம.இ.கா. ஸ்தாபனத்துக்கும் மிக முக்கியமான காலகட்டமாகும்.

கட்சியின் எதிர்காலத்தை எண்ணி, மலாயா இந்தியர்களின் நலனையும் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு, நன்கு சிந்தித்து அப்போதைய ம.இ.கா. தலைமையகம் மேற்கொண்ட தீர்க்கமான நடவடிக்கைகள் பல வகைகளில் பின்னர் பலன் தந்திருக்கிறது.

மலாய்க்காரர்களின் தேசிய கட்சியான ஐக்கிய மலாய்க்காரர் தேசிய ஸ்தாபனத்தை (அம்னோ) 1946 மே 11 இல் தொடக்கி அதன் தலைவராக இருந்துவந்த (டத்தோ) ஓன் பின் ஜபார் கருத்து வேறுபாடுகள் காரணமாக 2.8.1951 இல் அம்னோவை விட்டு விலகியிருந்தார்.

அப்போதைய கெடா சுல்தானின் சகோதரரும் அரசாங்கத்தரப்பு வழக்குரைஞருமான துங்கு அப்துல் ரஹ்மான் அம்னோவின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டார்.

பலவீனப்பட்டிருந்த "அம்னோ"வை சக்திமிக்க இயக்கமாக அதனை மாற்றி அமைத்தார் துங்கு.

அம்னோவிலிருந்து விலகிய டத்தோ ஓன் பின் ஜபார் மலாயா சுதந்திரக் கட்சியை அமைத்திருந்தார்.

அந்த நேரத்தில் டத்தோ ஓன் பின் ஜபாருக்கு மலாய்க்காரர்களிடையே நல்ல செல்வாக்கு இருந்தது.

டத்தோ ஓன் பல ஆண்டுகள் ஜோகூர் மந்திரி புசாராகப் பணியாற்றியிருக்கிறார்.

1951 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில் மலாயாவிலுள்ள எல்லா சமூகத்தினரும் உறுப்பியம் பெறும் வகையில் மலாயா சுதந்திரக் கட்சியை டத்தோ ஓன் நிறுவியிருந்தார்.

டத்தோ ஓன் அமைத்திருந்த மலாயா சுதந்திரக் கட்சிக்கு (I.M.P.) மலாயா சீன சங்கத் தலைவர் டான்செங்லாக், இந்திய சமூகத் தலைவர் வழக்குரைஞர் ஆர்.ரமணி, மலாயா தொழிற்சங்க சம்மேளன தலைவர் பி.பி. நாராயணன், வழக்குரைஞரும் இந்திய சமூகப் பிரமுகருமான டத்தோ கிளவ் துரை சிங்கம் ஆகியோர் முழு ஆதரவு நல்கினர்.




மலாயா சீன சங்கத்தலைவர் டான் செங்லாக் உரையாற்றுகிறார். வழக்குரைஞர் ஆர். ரமணி, மலாயா சுதந்திரக்கட்சி (I.M.P) தலைவர் டத்தோ ஓன் பின் ஜபார், டத்தோ கிளவ் துரைசிங்கம் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர்.

# பொதுத்தேர்தல்

**வா**க்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உறுப்பினர்களாக கொண்டு நிர்வகிக்கும் நோக்கத்துடன் கோலாலம்பூர் முனிசிபல் சபைக்கு முதலாவது தேர்தல் 1952 பிப்ரவரி 16 இல் நடைபெற்றது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இங்கு அறிமுகப்படுத்திய அந்த பொதுத் தேர்தலில் துங்கு தலைமையில் இயங்கிய அம்னோவுக்கும் டத்தோ ஓன் பின் ஜபார் தலைமையில் இயங்கிய மலாயா சுதந்திரக் கட்சிக்கும் கௌரவப் போராட்டமாகவே அமைந்திருந்தது.

டத்தோ ஓன் தலைமையில் உள்ள மலாயா சுதந்திரக் கட்சிக்கு பெரும் ஆதரவு இருந்ததாக அரசியல் பார்வையாளர்கள் அப்போது கருத்து தெரிவித்திருந்தனர்.

ம.இ.கா. அந்தத் தேர்தலில் டத்தோ ஓன் கட்சியான மலாயா சுதந்திரக் கட்சிக்கு குழு ஆதரவு தந்தது.

மொத்தம் 12 இடங்களுக்கு தேர்தல் நடந்தது.

அம்னோ – ம.சீ.ச. கூட்டணிக்கு 9 இடங்களும், மலாயா சுதந்திரக் கட்சிக்கு 2 இடங்களும் சுயேட்சை வேட்பாளருக்கு (இலங்கைத் தமிழர்) ஓர் இடமும் கிடைத்தன.

மலாயா சுதந்திரக் கட்சிக்குக் கிடைத்த அந்த இரண்டு இடங்களும் ம.இ.கா. உறுப்பினர்கள் போட்டியிட்ட இடங்களாகும்

ம.இ.காவின் அப்போதைய தலைவர் கே.எல். தேவாசரும், திருமதி தேவகி கிருஷ்ணனும் அதில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தனர்.

கோலாலம்பூர் முனிசிபல் சபை தேர்தலைத் தொடர்ந்து ஜோகூர்பாரு, ஈப்போ, சிரம்பான், மலாக்கா ஆகிய நகர சபைகளுக்கும் நடைபெற்ற தேர்தல்களில் அம்னோ - ம.சீ.ச. கூட்டணி வெற்றிகளைக் குவித்தது.

மலாயா சுதந்திரக் கட்சியோடு ம.இ.கா. இணைந்திருந்ததை சில ம.இ.கா. கிளைகள் எதிர்த்தன. வேறு சில கிளைகள் ஆதரித்தன.

ம.இ.க.வில் கருத்து மோதல்கள் உருவாகியிருந்தன.

அம்னோ - ம.சீ.ச. கூட்டணியோடு ம.இ.கா. இணைய வேண்டும் என பல கிளைகள் கருத்து தெரிவித்தன.

அந்த நேரத்தில் அம்னோ - ம.சீ.ச. கூட்டணி மாநாட்டைக் கூட்டியிருந்தது. ம.இ.கா. அதனைப் புறக்கணித்தது.



அம்னோ - ம.சீ.ச. கூட்டணி

மலாயா சுதந்திரக் கட்சியைக் கலைத்துவிட்டு 1954 பிப்ரவரியில் "பார்ட்டி நேகரா" என்ற பெயரில் ஆரம்பித்த டத்தோ ஓன் பின் ஜபார் ஒரு மாநாட்டைக் கூட்டினார். அம்னோவும் ம.சீ.ச.வும் அதைப் புறக்கணித்தன.

ஆனால், ம.இ.கா. அந்த மாநாட்டில் கலந்து கொண்டது.

அந்த மாநாடு ம.இ.கா.வைச் சிந்திக்கத் தூண்டி விட்டது.

1952 ஆம் ஆண்டில் ம.இ.கா. ஆறாவது பேராளர் மாநாடு குளுவாங்கிலும் அடுத்த ஆண்டான 1953 இல் ஏழாவது பேராளர் மாநாடு ஈப்போவிலும் தலைவர் கே.எல். தேவாசர் தலைமையிலேயே நடந்திருந்தது.

1954 ஆம் ஆண்டு இறுதியில் பெடரல் சட்டசபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் 1953 மே மாதத்தில் ஈப்போவில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருந்தது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே அங்கம் வகிக்கும் பெடரல் சட்ட சபை வேண்டுமென காங்கிரஸ் கோரிக்கை விடுத்திருந்தது. அம்னோ - ம.சீ.ச. கூட்டணியும், மலாயா தொழிற்கட்சியும் அதே போல கோரியிருந்தன.

டத்தோ ஓன் கூட்டியிருந்த கட்சி மாநாட்டில், மலாயா சுதந்திரக் கட்சி தேர்தலை ஆட்சேபித்ததோடு மீண்டும் நியமன முறை வேண்டுமென கோரியதைக் கேட்டவுடன் அந்தக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய மாநாட்டிலிருந்து ம.இ.கா. வெளியேறியது.

1954 ஆம் ஆண்டில் ஏப்ரலில் பிறையில் நடைபெற்ற ம.இ.கா. ஆண்டு மாநாட்டில் எதிர்வரும் தேர்தல்களில் ம.இ.கா. தனித்துப் போட்டியிடுவது என்கிற தீர்மானத்தை நிறைவேற்றினர்.

1954 இல் ஈப்போ நகரக் கவுன்சில் தேர்தலில் ம.இ.கா. முதன் முதலாக தனித்துப் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிக் கொண்டது.

கூட்டணியோடு ம.இ.கா. இணைவது குறித்து ம.இ.கா. தலைவர்கள் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினர்.

தேவாசர் - குருபாதம் குழு இதற்கான அடிப்படை வேலைகளைக் கவனிப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

1954 ஆம் ஆண்டு செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் கோலாலம்பூரில் நடைபெற்ற ம.இ.கா. மத்திய செயலவை கூட்டத்தில் பிற அரசியல் கட்சிகளுடன் ம.இ.கா. இணைப்பு பெறுவதன் மூலமாகவே ம.இ.கா.வின் எதிர்காலமும் இந்தியர்களின் எதிர்காலமும் பாதுகாக்கப்படும் என்ற நல்ல முடிவு காணப்பட்டது.

கே.எல். தேவாசர், வெ. மாணிக்கவாசகம், கா.ராமநாதன், எஸ்.ஓ.கே. உபைதுல்லா ஆகிய நால்வரைக் கொண்ட குழுவும் அமைத்து இதுபற்றி முடிவு எடுக்க கேட்டுக் கொள்ளப் பட்டிருந்தது.

பல எதிர்ப்புகள் இணைப்புக்கு ஏற்பட்டன. இயக்கத்தை அடகு வைத்துவிட்டதாகவும், பதவி சுகத்திற்காகவும், நாற்காலிகளைப் பிடிப்பதற்காகவும் கூட்டணியில் இணைய முடிவு எடுத்திருப்பதாக எதிர்ப்புக் குரல்கள் பல இடங்களிலிருந்து ஒலித்தன.

அப்போதைய தலைவர் கே.எல். தேவாசர் தொலைநோக்கோடு செயல்பட்டார். கூட்டணியில் இணைவதில் தீவிரமாகவே இருந்தார்.

1953 ஆகஸ்ட் 24 இல் அம்னோ – ம.சீ.ச. கூட்டணி கோலாலம்பூரில் கூட்டிய ஒரு மாநாட்டில் பல இன உறவுக்கும், ஒற்றுமைக்கும் பங்கம் ஏற்படாமலும் பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்குள் இயங்கும் ஒரு சுதந்திர அரசை அமைக்க பாடுபடப்போவதாக அறிவித்திருந்தது.

அந்த மாநாட்டில் ம.இ.கா. கலந்து கொள்ளாமல் இருந்தாலும் அந்த மாநாட்டு நடவடிக்கைகளை கூர்ந்து நோக்கியது.

கூட்டணியில் இணைவதன் பலன் குறித்து ஆராயப்பட்டது.

அரசியல் பேரம் அடிப்படையிலேயே அந்த கூட்டணியில் சேர ம.இ.கா. திட்டமிட்டது. "மைனாரிட்டி" அடிப்படையில் புதிய அரசியல் அமைப்பில் பெடரல் மாநில சட்டசபைகளில் ம.இ.காவுக்கு இட ஒதுக்கீடு நிர்ணயிக்கப்பட வேண்டும் என ம.இ.கா. விரும்பியது. இதுகுறித்து சர்க்காருக்கு கோரிக்கை மனு தந்தது. அரசாங்கம் இந்த வேண்டுகோளை ஏற்கவில்லை.

இதற்கிடையே இட ஒதுக்கீடு கேட்பது இந்திய சமூகத்திற்கு மரியாதைக் குறைவு என்று சில ம.இ.கா. தோழர்கள் முழங்கினர்.

ஆனாலும் 1954 அக்டோபரில் அம்னோ – ம.சீ.ச. கூட்டணியில் சேருவது என ம.இ.கா. முடிவு செய்துவிட்டது.

அம்னோ தலைவரும் கூட்டணித் தலைவருமான துங்குவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டன.

துங்குவும் இணைப்பை விரும்பினார்; வாழ்த்தினார்.

அம்னோ – ம.சீ.ச. – ம.இ.கா. கூட்டணி முதன் முதலாக கோலாலம்பூர் முனிசிபல் சபை தேர்தலில் 1954 இறுதியில் போட்டியிட்டது. முழு வெற்றியையும் பெற்றது. அந்தக் கூட்டணி நீடித்தது.

1955 இல் நாட்டில் நடைபெற்ற முதல் நாடாளுமன்றத் தேர்தலில் டத்தோ ஓன் தலைமை யிலான 'பார்ட்டி நெகரா' 30 இடங்களில் போட்டியிட்டு அனைத்திலும் தோல்வியைத் தழுவியது. 52 தொகுதிகளுக்கு நடைபெற்ற அந்த முதல் பொதுத்தேர்தலில் கூட்டணிக் கட்சி 51 இடங்களில் வாகை சூடியது. 1959இல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் போட்டியிட்ட பார்ட்டி நெகராவுக்கு ஓர் இடம் மட்டுமே கிடைத்தது. டத்தோ ஓன் மட்டுமே வெற்றி பெற்றிருந் தார் 1962 ஜூன் 19 இல் டத்தோ ஓன் மறைந்தவுடன் பார்ட்டி நெகரா வும் மறைந்தது.



கூட்டணித் தலைவர் துங்கு உரையாற்றுகிறார். அருகில் அப்போதைய துணைப் பிரதமர் துன் ரசாக், துன் வீ.தி. சம்பந்தன், க. குருபாதம்.



புதல்வர்

(துன்) ஹீசேன் ஒன்



தந்தை டத்தோ ஜபார்
(ஜோகூர் மாநிலத்தில் 1919 வரையில் மந்திரி புசாராக இருந்தவர்)





● ஸர் டத்தோ ஒன் பின் ஜபார்

○ மலாய்க்காரர்களிடையே தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்த டத்தோ ஒன் பின் ஜாபார் நாடாளுமன்றத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் மனமுடைந்து போனார். ஜோகூர்பாருவில் 1875இல் பிறந்த (டத்தோ) ஒன் 1948இல் ஜோகூர் மந்தரி புசாராகப் பதவி வகித்திருக்கிறார்.

1949ஆம் ஆண்டில் டத்தோ விருதுபெற்றார். 1947 மே 11இல் அம்னோ உதயமாகியபோது அதன் தேசியத் தலைவர் பொறுப்பை ஏற்றவர் இவர். 1951இல் அம்னோவிலிருந்து விலகி தனியாக மலாயா சுதந்திரக் கட்சியைத் தோற்றுவித்தார். 1951ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசு அறிமுகப்படுத்திய அமைச்சர் ஆட்சி முறையில் இவர் உள்துறை அமைச்சராக நியமிக்கப் பட்டிருந்தார். 1952இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் முனிசிபல் தேர்தலில் போட்டியிட்ட டத்தோ ஒனின் மலாயா சுதந்திரக் கட்சிக்கு இரண்டு இடங்களே கிடைத்தன. 1954இல் "பார்ட்டி நெகாரா" "எனும் புதிய கட்சியைத் தொடக்கி 1955ஆம் ஆண்டில் முதல் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு படுதோல்வியைச் சந்திக்க நேரிட்டது. முன்பு செல்வாக்கோடு திகழ்ந்த டத்தோ ஒன் 1962இல் இயற்கை எய்தினார். நாட்டுக்குத் தலைவராக வரவேண்டும் எனும் கனவு கைகூடவில்லை. ஆனால் பின்னர் இவரது புதல்வர் (துன்) ஹசேன் ஒன் நாட்டுப்பிரதமர் பொறுப்பை ஏற்று இவரது கனவை நனவாக்கினார்.

✶ ✶ ✶



## அமைச்சர் அந்தஸ்து அங்கத்துவ முறை

1951 இல் அமைச்சர் அந்தஸ்துள்ள "அங்கத்துவ முறை ஆட்சி"யை (அமைச்சர் என்பதற்குப் பதிலாக குறிப்பிட்ட இலாகாவுக்கான அங்கத்துவம் பெற்ற உறுப்பினர்கள் நியமன முறையை) பிரிட்டிஷ் அரசு மலாயாவில் அப்பொழுது அறிமுகப்படுத்தியது. மலாயாவில் ஸர் ஜெரால்ட் டெம்பளர் ஹைகமிஷனராகப் பதவி வகித்து வந்தார்.

அந்த அங்கத்துவ முறை ஆட்சி பற்றி முன்னாள் பத்திரிகையாளர் கா.அண்ணாமலை இப்படி விவரிக்கிறார்.

"மறைந்த மாபெரும் அரசியல் மேதை ஸர் டத்தோ ஓன் பின் ஜபார் அம்னோவின் தலைமைப் பதவியிலிருந்து விலகி இனசார்பற்ற மலாயா சுதந்திர கட்சியின் தலைவராக இருந்து வந்தார். சுதேசிகளின் தலைவராக அவரையே பிரிட்டிஷ் அரசு அப்பொழுது ஏற்றுக் கொண்டது. டத்தோ ஸர் ஓன் பின் ஜபார், டத்தோ நிக் கமீல், டத்தோ ஸர் துரை சிங்கம், சுல்பக்ரி போன்றவர்கள் அங்கத்துவ ஆடசிமுறையில் முதலில் நியமனம் செய்யப் பெற்றனர்.

பின்னர், சமூகவாரி நியமனங்களுக்கு என பிரதிநிதித்துவம் கொடுக்க பிரிட்டிஷ் அரசு முன்வந்தது. இப்படி நியமனம் செய்யப்பட்டவர்கள் அனைவருமே அப்போது இயங்கி வந்த பெடரல் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாவர். மலாயா தொழிற்சங்க கவுன்சில் சார்பாக (டாக்டர்) பி.பி. நாராயணன், வி.எம்.என். மேனன், ராஜகோபால் ஆகியோரும் வர்த்தகர்கள் முதலாளிகள் சார்பில் (டான்ஸ்ரீ) எஸ்.ஓ.கே. உபைதுல்லாவும், சமூகப் பிரதிநிதியாக வழக்கறிஞர் ஆர்.ரமணியும் பெடரல் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்தனர்.

அம்னோ சார்பில் அம்னோவின் உதவித் தலைவர் டாக்டர் (துன்) இஸ்மாயில், ம.சீ.ச. சார்பில் அதன் உதவித் தலைவர் கர்னல் எச்.எஸ்.லீ. ஆகிய இருவரும் அங்கத்துவ ஆட்சி முறைக்கான இரு சமூகப் பேராளர்களாக நியமனம் செய்யப்பெற்றனர். இந்தியர்கள் அலட்சியப்படுத்தப்பட்டு பிரதிநிதித்துவம் ஏதும் இல்லாது போயிற்று.

பிரிட்டிஷ் அரசின் பாரபட்ச போக்கினைக் கண்டு தமிழ்நேசன் ஆசிரியர் வேங்கடராஜுலு நாயுடு வெகுண்டெழுந்தார். இந்தியர்களின் வரலாறு இந்நாட்டுக்கு இந்தியர்கள் செய்த சேவை ஆகியவைகளை எடுத்துக் கட்சி அங்கத்துவ ஆட்சி முறைக்கு களங்கம் ஏற்படாமலிருக்க இந்தியப் பிரதிநிதித்துவத்திற்கு வாதாடினார்.

"நேசன்" ஆசிரியர் வேங்கடராஜுலு நாயுடு ம.இ.கா. தலைவர் கே.எல். தேவாசர், மலாயா இந்தியர் சங்கத் தலைவர் ஜி.வி. தேவர், சுவாமி சத்யானந்தா, பெடரல் சட்டமன்ற உறுப்பினர்களான ஆர்.ரமணி, பி.பி. நாராயணன், ராஜகோபால், உபைதுல்லா, வி.எம்.என்.மேனன் ஆகியோர் சந்தித்து விவாதித்தனர்.

தமிழ் நேசனில் செய்திகளும் தலையங்கங்களும் உணர்ச்சி கொப்புளிக்கும் அளவில் தொடர்ந்து பிரசுரமாயின.

நகர மண்டபத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் சுமார் 2000 பேர் திரண்டிருந்தனர்.

பிரிட்டிஷ் ஆட்சியின் பாராபட்ச போக்குக்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் பெடரல் சட்டமன்றத்தில் இடம்பெற்ற இந்தியர் ஐவரும் பதவி விலகுவது என முடிவு செய்யப்பட்டு விலகல் கடிதங்களும் ஆட்சித் தலைவரான ஹைகமிஷனருக்கு அனுப்பப்பட்டன.

இந்தியர் ஒருவருக்கு அங்கத்துவ ரீதியிலான அமைச்சரவையில் இடம்தர அரசாங்கம் முன்வந்தது.

மலாயா தோட்ட சிப்பந்திகள் சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்த காரணத்தால் ம.தோ.சி.ச. மூலம் பெடரல் சட்டமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த வி.எம்.என். மேனன் அந்த வாய்ப்பைப் பெற்றார்.

ஆட்சி பீடத்தில் இந்தியருக்கு இடம் வேண்டுமென்று அன்று தமிழ்நேசன் எழுப்பிய குரல்தான் பின்னர் கூட்டணி தலைவர்களிடமும் விழிப்பினை ஏற்படுத்தியது. அம்னோ - ம.சீ.ச. - ம.இ.கா. கூட்டணி அமையவும், அந்த அடிப்படையில் முதலாவது அமைச்சரவையிலேயே இந்திய சமுதாய பிரதிநிதியாக (துன்) வீ.தி. சம்பந்தன் நியமனம் பெறவும் வழி கோலியது.

ம.இ.கா.வைக் கூட்டணியில் இணைத்ததற்காக அப்போதைய தலைவர் கே.எல். தேவாசர் மீது சிலர் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

சிங்கப்பூரிலிருந்து வெளிவந்த தமிழ் முரசு கே.எல். தேவாசரையும் குருபாதத்தையும் சாடி செய்திகள் வெளியிட்டு வந்தது.

அந்தச் சூழ்நிலையில்தான் ம.இ.கா.வின் 9 ஆவது பேராளர் மாநாடு நெருங்கிக் கொண்டிருந்தது.

சிலாங்கூர் மாநில ம.இ.காவின் அப்போதைய தலைவரும் கிள்ளானில் வசித்தவருமான வெ.மாணிக்கவாசகம் தலைவர் பதவிக்குப் போட்டியிட விரும்பினார்.

பினாங்கு ம.இ.கா. தலைவர் ஏ. பாலகிருஷ்ணனும் தலைவருக்கான தேர்தல் களத்தில் குதிக்க ஏற்பாடுகள் செய்யத் தொடங்கிவிட்டார்.

நடப்புத் தலைவர் கே.எஸ். தேவாசர் போட்டியிட விரும்பவில்லை. போட்டியிட்டால் தோல்வியைத் தழுவ நேரிடலாம் எனும் எண்ணமும் அவரிடம் இருந்தது.

யார் அடுத்த தலைவர் எனும் கேள்வியே ம.இ.கா. வட்டாரத்தில் அப்பொழுது எழுப்பப் பட்டது!

அம்னோ - ம.சீ.ச. கூட்டணியில் ம.இ.கா.வையும் இணைக்கும் முயற்சியில் தீவிரமாக இருந்த நடப்புத்தலைவர் தேவாசர், முன்னாள் தலைவர் கா.ராமநாதன், பொதுச் செயலாளர் குருபாதம்

ஆகியோருக்கும் "தமிழ் நேசன்" பக்கபலமாக இருந்தது. கூட்டணியில் இணைவதன் மூலம்தான் ம.இ.காவுக்கு நன்மை கிடைக்கும் என வலியுறுத்தி தமிழ் நேசன் தொடர்ந்து செய்திகளை வெளியிட்டு வந்தது.

கோ.சாரங்கபாணியை ஆசிரியராகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளிவந்த "தமிழ் முரசு" கூட்டணியில் ம.இ.கா. இணையக்கூடாதென வலியுறுத்தும் செய்திகளைத் தொடர்ந்து அந்தக்கால கட்டத்தில் பிரசுரித்து வந்தது.

இணைப்பு ஏற்பட்ட பிறகும் ஒரு பிரிவினர் தேவாசர் குருபாதம் குழுவினரைக் குறை கூறி வந்தனர்.

# ம.இ.கா.வை கூட்டணியில் இணைத்த கே.எல். தேவாசர்

ம.இ.கா.வின் நான்காவது தலைவராக வழக்குரைஞர் கே.எல். தேவாசர் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் ம.இ.கா.தேசியத் தலைவராகப் பொறுப்பு வகித்தார்.



அவருக்கு வலதுகரமாக விளங்கிய குருபாதம் பொதுச் செயலாளராகப் பொறுப் பேற்றிருந்தார்.

டத்தோ ஒன் பின் ஜபார் "அம்னோ" தலைவர் பொறுப்பிலிருந்து விலகி மலாயா சுதந்திரக் கட்சியை அமைத்தபோது ம.இ.கா. அதனுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டு தோல் வியைத் தழுவியது. பின் தனித்து நின்று ஈப்போவில் போட்டியிட்டு படுதோல்வி அடைந்தது.

அதன் பிறகே, அம்னோ - ம.சீ.ச. கூட்டணியில் இணைந்து தேர்தலின்போது நிம்மதிப் பெருமூச்சு விட்டது.

ம.இ.காவைப் பல எதிர்ப்புகளுக்கிடையே - பல எதிர்பார்ப்புகளோடு கூட்டணியில் இணைத்த பெருமை அப்போதைய தலைவர் கே.எல். தேவாசரையே சேரும்.

1951 ஆம் ஆண்டில் ஜோகூர் பாரு மாநாட்டில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எல். தேவாசர் 1955 ஆம் ஆண்டில் தெலுக்கான்சனில் (தெலுக் இந்தான்) நடைபெற்ற ம.இ.கா. மாநாடு வரையில் தலைவர் பொறுப்பில் இருந்து பொறுப்பான பல பணிகளில் ஈடுபட்டு ம.இ.கா.வுக்குக் கௌரவத்தைத் தேடித் தந்திருக்கிறார்.

அவசர காலத்தின்போது தஞ்சோங் மாலிமில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை அடுத்து அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியில் ஹைகமிஷனராகப் பதவி வகித்த ஸர் ஜெரால்ட் டெம்பளர் அந்நகரில் 48 மணிநேர ஊரடங்கை அமல்படுத்தியிருந்தார். அதனை தேவாசர் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். இதன் காரணமாக வேறு ஒரு விதமான குற்றச்சாட்டின் அடிப் படையில் வழக்குரைஞராக தொழில் நடத்த முடியாதவாறு தேவாசருக்கு 6 மாத கால தடை விதிக்கப்பட்டிருந்தது. அப்போதுதான் தேவாசர் வழக்குரைஞர் தொழில் துவங்கிய நேரம். அதற்கு முன்னர் அவர் ஈப்போவில் ஆங்கிலப்பள்ளி ஆசிரியராக இருந்தவர். பொது வாழ்க்கை யில் பலவித எதிர்ப்புகளையும் எதிர்நோக்க வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர் அவர்.

ம.இ.காவின் நான்காவது தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த கே.எல். தேவாசர் தன் மன உணர்வுகளை இப்படி விவரிக்கிறார்.

"காங்கிரஸுடன் எனக்கு 1951 முல் 1959 வரை அணுக்கமான தொடர்பிருந்தது. அதற்கு முன்னர் கட்சியில் நான் ஒரு சாதாரண உறுப்பினன் மட்டும்தான். சட்டம் பயில்வதில் தீவிரமாக இருந்ததால் காங்கிரசின் நடவடிக்கைகளில் என்னை நான் அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ளவில்லை. 1949 ஆம் ஆண்டில் இங்கிலாந்திலிருந்து திரும்பிய என்னை காங்கிரசில் சேரும்படி கே. நாராயணன், வி.ஜே. சோமசுந்தரம், ஆதிநாகப்பன் ஆகியோர் கேட்டுக் கொண்டார்கள். அந்த அழைப்பை நானும் ஏற்றுக் கொண்டேன். காங்கிரசில் சேர்ந்த குறுகிய காலத்திலேயே கோலாலம்பூர் கிளையின் தலைவராகவும் பின்னர் 1951 இல் காங்கிரசின் தேசியத் தலைவராகவும் என்னைத் தேர்ந்தெடுத்தார்கள்.

"ஜப்பானியர் காலத்தின்போது இந்திய சுதந்திர சங்கத்திலும் 1942 இல் பாங்காக்கில் நடைபெற்ற தென்கிழக்காசிய இந்திய சுதந்திர மாநாட்டிலும் கலந்து கொண்டிருந்த என்னை காங்கிரசின் கொள்கைகள் கவர்ந்திழுத்தன.

"அன்றைய நிலையில் அம்னோவுடனும், ம.சீ.ச.வுடனும் ஒப்பிடுகையில் ம.இ.கா. ஒரு சிறிய அமைப்புதான் என்றாலும் தேசிய விவகாரங்களில் தனது எண்ணத்தை எடுத்துச் சொல்ல அது ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை.

"1952 இல் காலனிகள் விவகாரங்களுக்கான அமைச்சருடன் நடத்திய பேச்சுகளில் பிரிட்டன் ஆட்சிப் பொறுப்பை நாட்டின் தேசியத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அப்போதுதான் நாட்டில் அவசரக் காலத்தை முடித்து அமைதியை ஏற்படுத்த முடியும் என ம.இ.கா. தனது கருத்தை வெளிப்படுத்தியது.

"1959 இல் ம.இ.கா.விலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் ம.இ.காவை ஆதரித்தோ எதிர்த்தோ எந்தக் கருத்தையும் நான் வெளியிட்டதில்லை..."

நகரசபை உறுப்பினராகவும், மாநில சட்டமன்ற உறுப்பினராகவும், 1955 இல் பெடரல் சட்ட மன்ற உறுப்பினராகவும் கே.எல். தேவாசர் பொறுப்பு வகித்திருக்கிறார்.

கூட்டணியில் ம.இ.கா.வை இணைத்த குண்டல்லால் தேவாசர் இப்பொழுது அமரராகி விட்டார்.



## க. குருபாதம்

ம.இ.காவை உருவாக்குவதில் ஜான் ஏ.திவிக்கு உறுதுணையாக இருந்தவர்களில் க. குருபாதமும் ஒருவர்.

நேதாஜி தலைமை தாங்கிய இந்திய தேசிய ராணுவத்தில் குருபாதம் இணைந்திருந்தார். நேதாஜியின் நினைவோடேயே கடைசி வரையில் வாழ்ந்திருந்தார். கே.எல். தேவாசர் ம.இ.கா.வின் தலைவராக இருந்தபோது க. குருபாதம் பொதுச் செயலாளராக இருந்தார். இருவரும் இணைந்து பல சமூகப் போராட்டங்களை நிகழ்த்தியிருக்கின்றனர். பலவீனப் பட்டிருந்த இயக்கத்துக்கு உயிரூட்டினர்.

ம.இ.கா. வேட்பாளராக கோலாலம்பூர் நகர சபையிலும் மாநில சட்டமன்றத்திலும் போட்டியிட்டு, வெற்றி பெற்று சேவையாற்றியிருக்கிறார். காங்கிரஸை அடுத்து குருபாதம் ஈடுபாடு காட்டிய இயக்கம் இந்து சங்கம்.

1984 மார்ச் 2 இல் க.குருபாதம் மறைவை ஒட்டி மறுநாள் (3.3.1984) தமிழ்நேசன் நாளிதழ் தலையங்கம் எழுதியிருந்தது. அவரின் மறைவை ஒட்டி அனுதாபம் தெரிவிக்கும் வகையில் தமிழ்நேசன் முகப்புத் தலைப்பு அன்று கறுப்பாக வெளியிடப்பட்டது.

"தமிழ்நேசன்" எழுதியிருந்த தலையங்கத்தில் ஒரு பகுதி வருமாறு :

"இந்திய தேசிய ராணுவத்தில் ஒரு முக்கிய புள்ளியாக விளங்கிய அவர் ம.இ.காவை அமைத்தவர்களில் ஒருவர் என்ற முறையில் மலேசிய இந்திய வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றுள்ளார்.

"ஆரம்ப காலத்தில் ம.இ.காவை நிலை நிறுத்தவும் வளர்க்கவும் அரும்பாடுபட்டவர்களில் குருபாதமும் ஒருவர்.

"பின்னர், தீவிர அரசியலிலிருந்து விலகிக் கொண்ட போதிலும் பொதுப்பணியிலிருந்து அவர் ஒதுங்கிவிடவில்லை.

"மலேசிய இந்து சங்கத்தை நிறுவி அதன் முதலாவது செயலாளராகப் பணியாற்றினார். நேதாஜியின் மீது ஆழ்ந்த பற்று கொண்ட அவர், இந்திய தேசிய ராணுவத்தில் பணியாற்றியவர்களின் சேவை அங்கீகரிக்கப்படுவதற்குப் பாடுபட்டார்".

அமரர் துன் சம்பந்தன் அரசியலில் ஈடுபடுவதற்குக் காரணமானவர்களில் இவரும் ஒருவர். பின்னர் இருவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் ம.இ.காவிலிருந்து விலகி இருக்க வேண்டிய சூழ்நிலையும் இவருக்கு உருவாகியது.

நேதாஜி நிலையத்தை கோலாலம்பூரில் ஸ்தாபித்து நேதாஜிக்கு நினைவுச் சின்னம் அமைக்கவும் அவரது அஸ்தியை ஜப்பான் ரங்கோஜி ஆலயத்திலிருந்து சென்னைக்குக் கொண்டு வரவும் தமிழக அரசுடன் தொடர்பு கொண்டிருந்தார். தம் 65 ஆம் வயதில் மறைந்தார்.





● நேருவின் சகோதரி விஜயலட்சுமிபண்டிட் இங்கு வருகை தந்திருந்தபோது அவரைவரவேற்கக் காத்திருக்கும் பிரமுகர்கள். படத்தில் முதலாவதாக நிற்பவர் க. குருபாதம். (டான் ஸ்ரீ) மாணிக்கவாசகம் படத்தில் காணப்படுகிறார்.

## தேவகி கிருஷ்ணன்

ம.இ.காவில் நீண்டகாலமாகத் தொடர்ந்து அங்கம் பெற்று வரும் பெண்மணி இவர் ஒருவர்தான்.

தொடக்கம் முதல் சோர்வில்லாமல் துடிப்புடன் பொதுப் பணிகளில் கட்சிப் பணிகளில் திருமதி தேவகி கிருஷ்ணன் ஈடுபட்டு வருகிறார்.

1952 பிப்ரவரி 16 இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் முனிசிபல் சபை (நகராண்மைக் கழகம்) தேர்தலில் ம.இ.கா. வேட்பாளராக மலாயா சுதந்திரக்கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றியடைந்தவர் இவர்.

1952 ஆம் ஆண்டில் நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராக இடம் பெற்ற முதல் மலேசியப் பெண்மணியும் இவர்தான்.

1959 ஆம் ஆண்டில் சிலாங்கூர் சட்டமன்றத்திற்கு செந்தூல் தொகுதியில் ம.இ.கா. வேட்பாளராகக் கூட்டணி சின்னத்தில் போட்டியிட்ட திருமதி தேவகி கிருஷ்ணன் குறைந்த வாக்குகளில் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

ம.இ.கா. மத்திய செயலவையில் 1952-53 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்றிருந்த தேவகி கிருஷ்ணன் ம.இ.கா. மாதர் பகுதியில் தேசிய உதவித் தலைவர் பொறுப்பேற்றிருக்கிறார்.

முன்பு கோலாலம்பூரிலுள்ள ஆங்கிலப் பள்ளி ஒன்றில் பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்திருக்கும் இவர் போர்ட்டிக்சனில் பிறந்தவர். வர்த்தகத் துறையில் நீண்ட காலமாக ஈடுபட்டுவருகிறார்.

சமூகப் பணிகளுக்குப் பல விருதுகள் பெற்றிருக்கும் திருமதி தேவகி கிருஷ்ணனுக்கு 1984 இல் 'தோக்கோ வனிதா' எனும் விருது கிடைத்திருக்கிறது. மலேசிய மாதர் குல மாணிக்கங்களுக்குக் கிடைக்கும் மிக உயரிய விருதான 'துன்பத்திமா' விருதும் இவருக்குக் கிடைத்திருக்கிறது.

ஏற்கனவே ஏ.எம்.என். விருது பெற்றிருக்கும் தேவகி கிருஷ்ணனுக்கு 1990 ஆம் ஆண்டில் பேரரசர் பிறந்த நாளன்று ஜே.எம்.என். விருது கிடைத்திருக்கிறது.





ம.இ.கா. தேசிய துணைத் தலைவர் தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகளுடன் (1977) வேட்பாளர் டத்தோ சாமிவேலு, டத்தோ பொன்னுசாமிப் பிள்ளை வி. கோவிந்தராஜ் ஆகியயோரோடு திருமதி தேவ்கி கிருஷ்ணன்.

# மாற்றத்தைக் கொணர்ந்த 1955ம் துன் சம்பந்தனும்

ம. இ.கா.வின் 9ஆவது பேராளர் மாநாடு தெலுக்கான்சன் நகரில் நடத்த ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

அதற்கு முன்னர் ம.இ.கா. தேசியத்தலைவர் தேர்தல் நடத்த நாள் குறிக்கப்பட்டது.

1955ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி.

ம.இ.கா. தொடக்க நிலை மாநாடுகள் இத்தனை பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டதில்லை. மாநாடுகளிலேயே கட்சித்தலைவரும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்.

முன்பு நடந்த மாநாடுகளில் பெரும்பாலும் ஏகமனதாகவே தலைவர்கள் தேர்வு செய்யப்பட்டு வந்தனர்.

அதுவரையில் அமைதியாகவே பரபரப்பில்லாமலேயே ம.இ.கா. பேராளர் மாநாடுகள் நடந்து வந்தன. ஆனால், அந்த 9. வது பேர்ாளர் மாநாடு பற்றியும் – தலைவர் பதவிக்கான கடும் போட்டி குறித்தும் பல நாட்களுக்கு முன்பிருந்தே ம.இ.கா. பேராளர்களாலும் உறுப்பினர் களாலும் ஆதரவாளர்களாலும் பேசப்பட்டு – சர்ச்சை செய்யப்பட்டு வந்தது.

அதற்கு முக்கிய காரணம் தலைவர் பதவிக்கு முதல் முறையாக எழுந்த கடுமையான போட்டி தான்.

ம.இ.கா. பலர் கவனத்தையும் ஈர்த்து விட்டதற்கு மற்றொரு காரணம் எதிர்பார்க்கப்படும் பொதுத் தேர்தல், அதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்கள், அம்னோ – ம.சீ.ச. கூட்டணியோடு இணைந்து தேர்தல் களத்தில் கைகோர்த்து நின்றுவிட்ட அரசியல் கவர்ச்சியும், ம.இ.கா.வை வசீகரப்படுத்தியிருந்தது.

நடப்புத் தலைவர் கே.எல். தேவாசருக்கு எதிராகச் சிலர் கிளம்பியிருந்ததால் – தமிழ் முரசு பத்திரிகையில் பாதகமான அறிக்கைகள் தொடர்ந்து வந்ததால் குருபாதமும் மற்ற சில நண்பர்களும் ஒன்று கூடி பொருத்தமான தலைவர் ஒருவரை காங்கிரசுக்குத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

கங்கை சிப்புட்டில் செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்த வீ.தி. சம்பந்தன் பொதுப்பணிகளில் ஈடுபாடு காட்டி வந்தார். கங்கை சிப்புட் மகாத்மா காந்தி பாடசாலையின் ஸ்தாபகர்களில் ஒருவ ராகவும் இருந்தார். தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்று மலாயாவுக்குத் திரும்பியிருந்தார். 36 வயது நிரம்பியிருந்த வீ.தி. சம்பந்தன் பேரா மாநில ம.இ.கா. தலைவராகவும் அப்பொழுது பொறுப்பேற்றிருந்தார். எந்த நேரமும் வேட்டி சட்டை யோடு காட்சி தருவார்.





• லண்டனில் சுதந்திரப் பேச்சுவார்த்தைக்குச் சென்று வெற்றியுடன் நாடு திரும்பும் நாட்டுத்தலைவர்கள் துங்கு, துன் அப்துல் ரசாக் ஆகியோரோடு (துன்) சம்பந்தன்

அவரே ம.இ.கா.வுக்குப் பொருத்தமான தலைவர் என குருபாதம் குழுவினர் முடிவு செய்த னர். சம்மதம் பெற கங்கை சிப்புட்டுக்கு குருபாதம் நேரில் சென்று வீ.தி. சம்பந்தனிடம் சம்மத மும் பெற்றார்.

தலைவர் போட்டிக்கான வேட்பாளர்கள் பற்றிய அறிவிப்புகள் பத்திரிகைகளில் வெளி வந்தன.

சிலாங்கூர் மாநில ம.இ.கா. தலைவர் வெ. மாணிக்கவாசகம் பினாங்கு ம.இ.கா. தலைவர் ஏ. பாலகிருஷ்ணன் – நெகிரி மாநிலத் தலைவர் கேஹார் சிங் பேரா மாநில ம.இ.கா. தலைவர் வீ.தி. சம்பந்தன் ஆகிய நால்வரும் போட்டியிட்டனர்.

வி.தி. சம்பந்தனுக்கு ஆதரவாகப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அவரைப்பற்றிய செய்தி கள் – உரைகள் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

கோலாலம்பூர் பங்சார் கிளைக்கு அப்போது குருபாதம் தலைவராக இருந்தார். தலைவர் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் வீ.தி. சம்பந்தனை கிளை சார்பில் தலைநகருக்கு வரவழைத்து உரையாற்றச் செய்து, அந்தச் செய்தியை உடனுக்குடன் பத்திரிகையில் வெளி வரவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

வீ.தி. சம்பந்தன் அந்தக் கிளைக் கூட்டத்தில் நிகழ்த்திய உரை வருமாறு :

"இந்தியர்களின் ஒற்றுமையையும் கட்டுக்கோப்பையும் குலைக்க பிறர் முயற்சி செய்கிறார்கள் என்று கூறுவதால் மட்டும் பயனில்லை. மதிப்பிற்குரிய மாபெரும் தலைவர் நேதாஜியின் தலைமையில் இந்தியர்கள் ஒற்றுமையுடன் விளங்கிய காலத்தை நீங்கள் நினைவுபடுத்திக் கொள் ளுங்கள்.

"தேசிய உணர்ச்சி, ஒற்றுமை, தியாக உணர்ச்சி, கட்டுக்கோப்பு ஆகியவற்றை அந்த மாவீரன் நேதாஜி நமக்குப் போதித்தார். சுதந்திர பாதையில் முன்னேறிச் செல்லும் மலாயாவில் இந்தியர் களாகிய நாம் நமது கடமையைச் செய்து இந்நாட்டு நலனிலும் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு இந்நாட்டுக்கு என்றென்றும் விசுவாசமாக இருக்க வேண்டும்..."

தமிழ்ப் பண்பாடோடு உடை உடுத்தும் வீ.தி. சம்பந்தன் பாணியும் பழகும் விதமும் உரையாற்றும் தன்மையும் பலரையும் கவர்ந்தது.

## தலைவர் தேர்தல் முடிவுகள்

கோலாலம்பூர் அம்பாங் சாலையில் உள்ள அகில மலாயா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் வர்த்தக சங்க மண்டபத்தில் வாக்குச் சீட்டுகள் எண்ணப்பட்டன.

ம.இ.கா.வின் முன்னாள் தலைவரும், ஃபெடரல் சட்டசபை அங்கத்தினரும் வாக்கு எண் ணிக்கை கண்காணிப்பு அதிகாரியுமான கா. ராமநாதன் வாக்கு விபரங்களை அறிவித்தார்.

வீ.தி. சம்பந்தனுக்கு 1338 வாக்குகளும், ஏ. பாலகிருஷ்ணனுக்கு 961 வாக்குகளும் வி. மாணிக்க வாசகத்துக்கு 673 வாக்குகளும், கேஹார் சிங்குக்கு 40 வாக்குகளும் கிடைத்திருந்தன. செல்லாத வாக்குகள் 185.

வாக்கெடுப்பில் அப்போதிருந்த 35 கிளைகள் பங்கெடுத்தன. 3197 பேர் வாக்களித் திருந்தனர்.

கங்கை சிப்புட் வீ.தி. சம்பந்தன் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

முன்னாள் தலைவர் தேவாசர் வீ.தி. சம்பந்தனுக்கு வெற்றி மாலையை அணிவித்து தன் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். (மறு ஆண்டில் 1956இல் நடப்புத் தலைவர் சம்பந் தனை முன்னாள் தலைவர் தேவாசர் எதிர்த்து போட்டியிட்டுத் தோல்வி அடைந்தார். சம்பந்த னுக்கு 7654 வாக்குகளும், தேவாசருக்கு 1383 வாக்குகளும் கிடைத்திருந்தன.)

மறுநாள் (1.5.55) "நேசன்" ஞாயிறு இதழில் முதல் பக்கத்தில் "ம.இ.காவின் புதிய தலைவர் சம்பந்தன்" என்று தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

"நெருக்கடியான கட்டத்தில் இந்நாட்டில் தற்பொழுது இருக்கும் நமது சமூகத்தின் நலனுக்கு என்னால் இயன்ற அளவில் சிறந்த சேவையாற்றுவேன்" என்று வெற்றி பெற்றவுடன் வீ.தி. சம்பந்தன் நிகழ்த்திய உரை தமிழ் நேசனில் வெளியிடப்பட்டது.

'சிங்கையிலிருந்து வெளிவந்த தமிழ் முரசு தினசரி 2.5.55, ல் வீ.தி. சம்பந்தன் வெற்றிச் செய்தியை இப்படி வெளியிட்டிருந்தது.

"மலாயா இந்தியர் காங்கிரஸ் புரையோடி செல்வாக்கிழந்து "டானிக்" தேவைப்படும் வேளையில் வீ.தி. சம்பந்தன் தலைவராக வந்திருப்பதானது அவர் அதனை நல்ல முறையில் இட்டுச் செல்ல வழிவகுக்கும் என்று இந்தியர் தலைவர்களிடையே அபிப்பிராயம் நிலவுகிறது...

"வீ.தி. சம்பந்தன் அண்ணாமலை பல்கலைக்கழக பட்டதாரி. 36 வயதினர். பெரும்பாலான இந்தியர்களிடையே நல்ல செல்வாக்கும் மதிப்பும் பெற்றவர். அடக்க ஒடுக்கமானவர். இந்திய

சமுதாயத்தைப் பொறுத்த பிரச்னைகளில் சுதந்திரமான தீர்க்கம் செய்யக்கூடியவர். பிரச்னையை அதன் சொந்தத் தகுதி மீது தீர்மானிக்கக்கூடியவர்..."

1955ல் ஏப்ரல் 30இல் நடந்த ம.இ.கா. தேசியத் தலைவர் போட்டிக்குப் பின்னர் கட்சி அடுத்தடுத்த பணிகளில் தீவிரம் காட்டியது.

புதிய தலைவர் வீ.தி. சம்பந்தன் தலைமையில் ம.இ.கா.வின் 9ஆவது பேராளர் மாநாட்டை தெலுக்கான்சனில் மே 21, 22,23ஆம் தேதிகளில் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மாநாட்டிற்கு முன்னர் சிலாங்கூர் மாநில ம.இ.கா.வின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 1955 மே 13இல் நடந்தது.

கோலாலம்பூர் அகில மலாயா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்க கட்டடத்தில் மாநில மாநாடு நடைபெற்றது.

நடப்புத் தலைவர் வி. மாணிக்கவாசகம் மாநிலத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு குருபாதத்திடம் தோல்வி அடைந்தார். தேசியத் தலைவர் தேர்தலிலும் போட்டியிட்டு தோல்வி அடைந்திருந்த மாணிக்கவாசகத்திற்கு இது ஒரு மெல்லிய அதிர்ச்சியைத் தந்திருந்தது.

அந்த ஆண்டு சிலாங்கூர் ம.இ.கா.விற்கு குருபாதம் தலைவராகவும் அ. தர்மலிங்கம் செயலாளராகவும் குருதயாள் சிங் பொருளாளராகவும் தேர்வு பெற்றிருந்தனர்.

புதிய தேசியத் தலைவர் வீ.தி. சம்பந்தன் தலைவர் பொறுப்பை ஏற்றிருந்தபோது பொதுச் செயலாளர் பதவியை குருபாதமே வகித்திருந்தார்.

ம.இ.கா.வின் 9ஆவது பேராளர் மாநாடு தெலுக்கான்சன் தண்டாயுதபாணி ஆலய மண்டபத்தில் மே 21,22,23ஆம் தேதிகளில் சிறப்பான முறையில் நடந்தேறியது.

மாநாட்டில் 35 கிளைகளிலிருந்து 102 பேராளர்கள் கலந்து கொண்டனர்.

புதிய தலைவர் வீ.தி. சம்பந்தன் தமிழ்ப்பண்பாட்டு உடையான வேட்டி சட்டையோடு தமிழில் தலைமையுரையை நிகழ்த்தினார்.

புதிய தலைவர் வெகு விரைவாக உறுப்பினர்களின் அன்பைப் பெற்றார்.

"மலாயா இந்தியர் காங்கிரஸ் தலைமைக் காரியாலய கட்டடத்திற்கு நேதாஜி நினைவு மண்டபம் என்று பெயரிடப்படவேண்டும்" என தலைவர் வீ.தி. சம்பந்தன் மாநாட்டில் குறிப்பிட்டார்.

"ம.இ.கா. ஸ்தாபகரான ஜான் . ஏ. திவி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் கைவிடப் பட்டாலும்கூட இத்திட்டத்தையே மீண்டும் அமல்படுத்த வேண்டும்; நேதாஜிக்கு நினைவுச்சின்னம் அமைப்பதை மேலும் தாமதப்படுத்தாது உடனே நடவடிக்கை எடுக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்" என்று தம் தலைமையுரையில் வீ.தி. சம்பந்தன் தெரிவித்தார்.

கூட்டணியின் தேசிய மன்றத்தில் (கவுன்சில்) அங்கம் வகிக்க மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட ம.இ.கா.பேராளர்கள்:

பேரா மாநில ம.இ.கா. தலைவரும் புதிய தேசியத் தலைவருமான வீ.தி. சம்பந்தன், - சிலாங்கூர் மாநிலத் தலைவரும், தேசிய பொதுச் செயலாளருமான க. குருபாதம் - முன்னாள் ம.இ.கா. தலைவர் கே.எல். தேவாசர், - தேர்தல் குழுத் தலைவரும் பெடரல் சட்டசபை உறுப்பினரும் முன்னாள் தலைவருமான கா. ராமநாதன், - பினாங்கு ம.இ.கா. தலைவர் ஏ. பாலகிருஷ்ணன், - நெகிரி மாநில ம.இ.கா. தலைவர் கேஹார் சிங்.

கூட்டணி தேசிய கவுன்சிலில் இருந்த பழைய ம.இ.கா. பிரதிநிதிகள் :

கே.எல். தேவாசர், குருபாதம், கேஹார் சிங், மாணிக்கவாசகம், குருதயாள் சிங்.

வீ.தி. சம்பந்தன் ம.இ.கா.வின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் நாட்டில் பல அரசியல் மாற்றங்கள் அடுத்தடுத்து நிகழ்ந்தன.

தெலுக்கான்சன் மாநாடு முடிந்த இரண்டாவது மாதத்தில் நாட்டின் முதலாவது தேசியப் பொதுத் தேர்தல் நடைபெறும் அறிவிப்பு வெளிவந்தது.

பகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட ஃபெடரல் சட்டமன்ற அமைப்பு முறை பரீட்சார்த்தமாக 1955 ஜூலையில் நடத்தப்பட்டது.

மொத்தம் 104 தொகுதிகளுக்கு 52 பேர் தேர்ந்தெடுக்கப்படுவது என்றும் மீதம் 52 பேர் நியமனம் செய்யப்படுவர் எனவும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

பேரா மாநிலத்தைச் சேர்ந்த கிந்தா உத்தாரா தொகுதி ம.இ.கா. தலைவர் வீ.தி. சம்பந்தனுக்குத் தரப்பட்டிருந்தது.

தேர்ந்தெடுக்கப்படும் தொகுதிகளில் இரண்டை ம.இ.கா.வுக்கு கூட்டணி வழங்கியிருந்தது. இந்தியரில் இருவரை நியமன உறுப்பினர்களாக நியமிக்க வேண்டுமென அன்றைய சட்டமன்றத் தலைவர் துங்கு அப்துல் ரஹ்மானிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. கூட்டணித் தலைவர் துங்குவும் சம்மதித்திருந்தார்.

நாட்டின் முதலாவது பொதுத் தேர்தல் 1955 ஜூலை 27 புதன்கிழமையன்று நடைபெற்றது.

அன்று வெளிவந்திருந்த தமிழ்நேசன் தினசரியில் முதல் பக்கத்தில் பொதுத்தேர்தல் பற்றி செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

"மலாயா ஃபெடரேஷனின் சரித்திரத்தில் மிக முக்கியத்துவம் நிறைந்ததான ஃபெடரேஷனின் முதலாவது பொதுத்தேர்தல் இன்று (27.7.55) ஃபெடரேஷன் முழுவதும் நடைபெறுகிறது.

"எதிர்கால மலாயாவின் அரசியல் அபிவிருத்திக்கு அஸ்திவாரமிடும் இத்தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தங்களின் வாக்குரிமையை பயன்படுத்துவது அவசியம் என்பதுடன் கடமையுமாகும்".

## தேர்தல் முடிவுகள்

தேர்தல் நடந்த 52 இடங்களில் கூட்டணி 51 இடங்களில் வென்றது. ஓர் இடம் மலாயா இஸ்லாமியக் கட்சிக்கு (பாஸ்) கிடைத்தது.

கிந்தா உத்தாரா தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்ட ம.இ.கா. தலைவர் வீ.தி. சம்பந்தன் பெரும் வெற்றி பெற்றார்.

இந்தியருக்காக ஒதுக்கப்பட்ட இரண்டாவது தொகுதியான பத்துபகாட்டில் இலங்கையரான செல்வசிங்கம் மெக்கன்டையர் போட்டியிட்டு வென்றார். (நேதாஜி தலைமையில் இயங்கிய இந்திய சுதந்திரக் கழக பத்துபகாட் கிளைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த தொண்டர் இவர்).

டத்தோ ஓன் தலைமையில் இயங்கிய நெகாரா கட்சி அத்தேர்தலில் படுதோல்வி அடைந்திருந்தது. 30 இடங்களில் பார்ட்டி நெகாரா போட்டியிட்டிருந்தது.

"எங்கள் தோல்வி நெகாரா கட்சியின் முடிவாகி விடாது. இதுதான் ஆரம்பம்" என்று அறிவித்தார் டத்தோ ஓன் பின் ஜபார்.

"கூட்டணிக்கு மாபெரும் வெற்றி கிடைத்திருப்பது மக்களின் சுதந்திர ஆர்வத்தைக் காட்டுகிறது. ஆகவே சுதந்திரம் பெறும் அலுவல்களை விரைவில் கவனிப்போம்..." என்று கூட்டணித் தலைவர் துங்கு அப்துல் ரஹ்மான் முழங்கினார்.

புதிதாக அமைக்கப்படவிருக்கும் பெடரல் சட்டமன்றத்தில் ம.இ.கா. பிரதிநிதிகளாக அங்கம் வகிக்க வேண்டிய (நியமன முறையில்) இருவரைத் தேர்ந்தெடுக்கும் சிறப்புக்கூட்டத்தில் கலந்து கொள்ள கோலாலம்பூர் அம்பாங் சாலை செட்டியார்கள் வர்த்தக சபை அலுவலகத்தில் 1955 ஜூலை 31இல் நாடெங்கிலுமிருந்தும் பேராளர்கள் வந்து குழுமினர்.

நால்வரின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து கூட்டணி தலைமையகத்துக்கு அனுப்புவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கே.எல். தேவாசர், க. குருபாதம், வி. மாணிக்கவாசகம், ஏ. பாலகிருஷ்ணன், ஏ. ராமன், தேவகி கிருஷ்ணன் உட்பட 11 பேர் போட்டியிட்டனர்.

கே.எல். தேவாசர், க. குருபாதம், வி. மாணிக்கவாசகம், ஏ. பாலகிருஷ்ணன் ஆகிய நால்வரின் பெயர்கள் கூட்டணி தலைமையகத்துக்கு அனுப்பப்பட்டன.

கே.எல். தேவாசரும் குருபாதமும் நியமன உறுப்பினர்களாக முதல் ஃபெடரல் சட்டமன்றத்தில் இடம் பெறுவர் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தேவாசரும் ம.இ.கா.வுக்கு சம்பந்தமில்லாத வழக்குரைஞர் குமாரசாமி என்பவரும் நியமன உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். வழக்கரைஞர் எம்.என். குமாரசாமி கூட்டணித் தலைவர் துங்குவின் நண்பர் என்று சொல்லப்பட்டது.

ஃபெடரல் சட்டமன்றத்தில் வர்த்தகப் பிரதிநிதியாக எஸ்.ஒ.கே. உபைதுல்லா, தொழிற் சங்கப் பிரதிநிதியாக பி.பி. நாராயணன், இலங்கையர் பிரதிநிதியாக டத்தோ சர் கிளவ் துரை சிங்கம் ஆகியோரும் நியமனட் பெற்றிருந்தனர்.

அம்னோ தலைவரும் கூட்டணித் தலைவருமான துங்கு அப்துல் ரஹ்மான் தலைமையில் முதல் அமைச்சரவை அமைக்கப்பட்டது.

வழக்குரைஞராகப் பணியாற்றியவரும் கெடா அரச குடும்பத்தைச் சேர்ந்தவருமான துங்கு அப்துல் ரஹ்மான் 52ஆவது வயதில் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

அவரது முதல் அமைச்சரவையில் ம.இ.கா. தலைவர் வீ.தி. சம்பந்தன் (36 வயது) தொழிலாளர் அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

மொத்தம் 10 அமைச்சர்களும் 2 துணை அமைச்சர்களும் அந்த முதல் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்தனர்.

1955 ஆகஸ்ட் 9இல் துங்கு தலைமையில் அமைந்த அந்த அமைச்சரவை பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டது.



1957ல் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் அமைக்கப்பட்ட முதலாவது அமைச்சரவை. மத்தியில் முதலாவது பேரரசர் துவாங்கு அப்துல் ஏஹ்மானும் அருகில் முதலாவது பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானும். முன்வரிசையில் தமிழ்பாரம்பரிய உடையான வேஷ்டியோடு அமைச்சர் (துன்) சம்பந்தன்.

தொடர்ந்து நடந்த சிலாங்கூர் சட்டமன்றத் தேர்தலில் ம.இ.கா.வுக்கு இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டன.

இரண்டு இடங்களுக்கான ம.இ.கா. வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க ம.இ.கா. சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது சிலாங்கூர் ம.இ.கா.வுக்குத் தலைவராக இருந்த குருபாதம், காஜாங்கைச் சேர்ந்த அமார் சிங், கிள்ளானைச் சேர்ந்த மாணிக்கவாசகம் பந்திங் ஜெயரத்னம், ஏற்கனவே முனிசிபல் சபை உறுப்பினராக இருந்த திருமதி தேவகி கிருஷ்ணன் (கோலாலம்பூர்) ஆகியோர் போட்டியிட்டனர்.

அதிக வாக்குகள் பெற்று குருபாதமும் அமார் சிங்கும் வெற்றி பெற்றனர். பின்னர், அமார் சிங் மாணிக்கவாசகத்திற்கு ஆதரவாக ஒதுங்கிக் கொண்டவுடன் குருபாதமும் மாணிக்க வாசகமும் ம.இ.கா. வேட்பாளர்களாக சிலாங்கூர் சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிலாங்கூரில் மொத்தம் 13 தொகுதிகள் அப்போது இருந்தன. எல்லா தொகுதிகளிலும் கூட்டணியே வென்றது.

குருபாதமும் மாணிக்கவாசகமும் சட்டமன்றத்தில் இடம்பெற்றனர்.

மாணிக்கவாசகம் ஆட்சிக்குழு உறுப்பினராக சிலாங்கூர் சட்டமன்றத்தில் நியமிக்கப்பட்டார்.

தொடர்ந்து தோல்விகளைத் தழுவி வந்த மாணிக்கவாசகம் அதன் பின்னர் வெற்றிப் படிகளில் ஏறத் தொடங்கினார்.

மறு ஆண்டு தேர்தலில் சிலாங்கூர் மாநில ம.இ.கா. தலைவர் பதவியை குருபாதத்திடமிருந்து கைப்பற்றி மீண்டும் மாநிலத் தலைவரானார். பதவிகள் அடுத்தடுத்து வரத் தொடங்கின.

ம.இ.கா. புதுப்பொலிவோடு திகழத் தொடங்கியது.

ஏராளமான பேர் ம.இ.கா.வில் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். கிளைகளும் நிறைய தோன்றின.

கூட்டணித் தலைவர் துங்கு மலாயாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதிலேயே கவனமாக இருந்தார்.

அவருடைய பேச்சு, எண்ணம், செயல் அனைத்துமே 'மெர்தேகா'வைப் பற்றியதே!

லண்டனில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் சுதந்திரம் குறித்துப் பேச ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன.

அதற்கு முன்னர், மலாயாவில் அமல்படுத்தப்பட்டிருந்த அவசர காலத்திற்கு ஒரு முடிவு காண விரும்பினார். துங்கு கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகளைச் சரணடையுமாறு வேண்டுகோள் விடுத்தார். அவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தவும் முன்வந்தார்.

# சின்பெங் சந்திப்பு

கெடாவிலுள்ள பாலிங்கில் மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கிய தலைவர் என கருதப் பட்ட சின்பெங்குடன் 1955 டிசம்பர் 28-29ஆம் தேதிகளில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

பாலிங்கில் உள்ள ஆங்கிலப் பள்ளிக்கூட மண்டபத்தில் இந்தச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

சின்பெங்கைச் சந்தித்து அவரை பாலிங் சந்திப்புக் கூட்டத்துக்கு அழைத்துவரும் பொறுப்பை, பிரிட்டிஷ் ராணுவ அதிகாரியான ஜான் எல்.எச். டேவிஸ் ஏற்றுக் கொண்டார். சின்பெங்கை ஏற்கனவே நன்கு தெரிந்து வைத்திருந்தவர் அவர்.

சின் பெங்குடன் அப்துல் ரஷீட் பின் மைடீன், அப்துல்லா சிடி ஆகியோர் சந்திப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.



■ கெடாவில் உள்ள பாலிங் நகரில் 1955 டிசம்பர் 28-29ஆம தேதிகளில் நடைபெற்ற அமைதி ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் சி.பி.எம். பேராளர்களாகக் கலந்து கொண்ட சின் பெங், அப்துல்லா சிடி, ரஷீட் மைடீன் ஆகிய மூவரையும் இங்கு காணலாம். அந்தப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது.



துங்கு

துங்கு தரப்பில் சிங்கப்பூரின் அப்போதைய முதல் அமைச்சர் டேவிட் மார்ஷல், மலாயா சீனர் சங்கத் தலைவர் டத்தோ ஸர் செங்லோக் டான் ஆகியோர் இருந்தனர்.



டேவிட் மார்ஷல்,



டத்தோ ஸர் செங்லோக் டான்

கம்யூனிஸ்ட் கட்சி மலாயாவில் அங்கீகரிக்கப்பட வேண்டும். சரணடைவோரைக் காவலில் வைக்கக்கூடாது. சரணடைந்த பின்னர் அவர்களின் நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடு விதிக்கக் கூடாது.. ஆகிய நிபந்தனைகளை சின்பெங் விதித்தார்.

கம்யூனிஸத்தைக் கைவிட்டு அரசாங்கத்துக்கு விசுவாசமாக இருக்க வேண்டும். பொது மன்னிப்பு வழங்கி சரணடைவோருக்கு 'மறுவாழ்வு கிடைக்க உதவி செய்யப்படும்' என்று துங்கு கருத்து தெரிவித்தார்.

'மலாயா கம்யூனிஸ்ட் கட்சிக்கு சட்டபூர்வ அங்கீகாரம் வேண்டும்' என்பதில் பிடிவாதமாக இருந்தார் சின்பெங்.

'கம்யூனிஸ்டுகள் சரணடைய வேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட வேண்டும்' என துங்கு வலியுறுத்தினார்.

இரண்டு நாட்கள் நடைபெற்ற அந்தப் பேச்சு வார்த்தை சந்திப்புக் கூட்டம் வெற்றி தரவில்லை.

கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகளைத் துடைத்தொழிக்கும் பணி அதன் பின்னர் மேலும் தீவிர மாக்கப்பட்டது.




## முடிவுக்கு வந்த ஆயுதப் போராட்டம்

பாலிங் பேச்சுவார்த்தை முறிவுக்குப் பின் 34 வருடங்களுக்குப் பிறகு மலாயா கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எம்) தனது ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் ஓர் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட முன்வந்தது மலேசிய அரசாங்கத்துக்குக் கிடைத்த பெரும் வெற்றி யாகும்.

கம்யூனிஸ்டுகளின் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக 1989 டிசம்பர் 2ஆம் தேதியன்று தாய்லாந்தின் ஹட்ஜாய் நகரில் மலேசிய அரசாங்கத்தோடு அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது சி.பி.எம்.

மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் சின்பெங், கட்சியின் தலைவர் அப்துல்லா சிடி, மத்திய செயலவை உறுப்பினர் அப்துல் ரஷீட் மைடீன் ஆகிய மூவரும் கையெழுத்திட்டனர்.

மலேசிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக உள்துறை அமைச்சரின் தலைமைச் செயலாளர் டத்தோ வான் சிடேக் அப்துல் ரஹ்மான், ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் டான்ஸ்ரீ முகமது ஹாஷீம் அலி, போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் டான்ஸ்ரீ ஹனீப் ஓமார் ஆகிய மூவரும் அந்த அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

சி.பி.எம். தலைவர்களை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதில் முக்கிய பங்காற்றிய வர் தாய்லாந்தின் ராணுவ படைத் தளபதியாவார். ஆயுதப் போராட்டங்களைக் கைவிடுமாறு 1989ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து தாய்லாந்து நடத்திய பல்வேறு பேச்சுவார்த்தைகள் ஆண்டின் இறுதியில் வெற்றியைத் தந்திருக்கிறது.

அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பின்னர் மலேசிய நாட்டிற்கும் பேரரசருக்கும் விசுவாசம் தெரிவித்துக் கொண்ட சித்தியவான் நகரில் பிறந்த 67 வயதான சின் பெங், சி.பி.எம். தனது எல்லா ஆயுதப் பிரிவுகளையும் கலைப்பதுடன் ஆயுதக் குவியல்களையும் அழித்து விடும் என்றும் அறிவித்தார்.

1948ஆம் ஆண்டு முதல் தலைமறைவுப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மலாயா கம்யூனிஸ்ட் கட்சியினர் 41 ஆண்டுகளுக்குப் பின்னர் அமைதிப் பாதையை நோக்கி நடைபோட முன் வந்திருக் கின்றனர். எஞ்சியுள்ள 1188 கம்யூனிஸ்ட்டுகள் நாடு திரும்ப இந்த அமைதி ஒப்பந்தம் உதவி யிருக்கிறது.

# நாட்டுக்குச் சுதந்திரம்

மலாயாவுக்குச் சுதந்திரம் பெறும் முயற்சிகளில் முழுமையாக முதல் அமைச்சர் துங்கு ஈடுபட்டார்.

நாட்டின் முதல் பொதுத்தேர்தல் கூட்டணிக்குப் பெரும் வெற்றியைத் தந்திருந்தது. மக்கள் ஆதரவு முழுமையாக இருப்பதும் தெரிந்தது.

மலாய்க்காரர்களைப் பிரதிநிதிக்கும் அம்னோ, சீனர்களைப் பிரதிநிதிக்கும் ம.சீ.ச., இந்தியர்களைப் பிரதிநிதிக்கும் ம.இ.கா. ஆகிய மூன்று கட்சிகளும் விரிவான கொள்கை அறிக்கை ஒன்றைத் தயாரித்து மக்களை அணுகியிருந்தன.

மக்களுக்கு ஏற்ற தேசிய மாதிரிப் பள்ளிகளை அமைக்கவும், ஒரு ஐக்கியப்பட்ட நாடாக சமூக கலாசார, பொருளாதார, மேம்பாடுகளை ஊக்குவிக்க கூட்டணி திட்டமிட்டிருப்பதாக மக்கள் முன் தெரிவித்திருந்தது.

பொதுத் தேர்தலில் அமோக வெற்றி கண்ட கூட்டணி சுதந்திரம் பெற்றுத் தருவோம் என வாக்குறுதியும் வழங்கியது.

மெர்தேகா பேச்சு வார்த்தை 1956ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் பிப்ரவரி 3 வரையில் தொடர்ந்து 16 நாட்களுக்கு லண்டனில் நடந்தது.

மலாயா கூட்டரசின் பிரதிநிதியாக முதலமைச்சர் துங்கு (துன்) அப்துல் ரசாக், டத்தோ நிக்குமில், கர்னல் எச்.எஸ்.லி., டாக்டர் (துன்) இஸ்மாயில், டத்தோ பங்லிமா, புக்கிட் காந்தாங், டத்தோ முகமது சேத் தி எச் தான் அப்துல் அஜிஸ், ஏ. காதீர், அப்போதைய சிலாங்கூர் மந்திரி புசார் ஆகியோர் அக்குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

(ம.இ.கா. தலைவர் வீ.தி. சம்பந்தன் அக்குழுவில் முதலில் இடம்பெறவில்லை. அக்குழுவில் இடம்பெற வேண்டுமென தேவாசர், குருபாதம் மற்றும் நண்பர்கள் வீ.தி. சம்பந்தனிடம் கருத்து தெரிவித்தனர். முதல்வர் துங்குவை கே.எல். தேவாசர் சந்தித்துப் பேசியவுடன் துங்கு ம.இ.கா. தலைவர் சம்பந்தனையும் குழுவில் இடம்பெறச் செய்ய சம்மதித்து விட்டார். "சம்பந்தன் லண்டன் செல்வார். உரிமையை நிலைநாட்டினார் தேவாசர்" என்ற தலைப்பில் அப்போது வெளிவந்த பத்திரிகைச் செய்தி வீ.தி. சம்பந்தனுக்குப் பிடிக்கவில்லை. மற்றவர்கள் பெற்றுதந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள மனம் விரும்பாது அக்குழுவில் இடம்பெற மறுத்துவிட்டார். ஆனாலும் இரண்டாவது முறையாகச் சென்ற மெர்தேகா குழுவில் வீ.தி. சம்பந்தன் இடம் பெற்றிருந்தார்.)

மெர்தேகா பேச்சு வார்த்தைகளை வெற்றிகரமாக நடத்திய குழுவினர் 1956 பிப்ரவரி 19ஆம் தேதியன்று நாட்டுக்குத் திரும்பினர்.

அந்த மெர்தேகா குழுவினருக்கு மாபெரும் வரவேற்பு நடத்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரான மலாக்காவில் ஏற்பாடுகள் நடந்தன.

லண்டனிலிருந்து சிங்கை வந்த குழுவினர் அங்கிருந்து மலாக்காவிற்கு விமானம் மூலம் வந்தனர்.

முதல்வர் துங்கு தலைமையில் சென்றிருந்த தூதுக் குழுவினர் மலாக்கா பத்து பெரெண்டாம் விமான நிலையம் வந்தடைந்தவுடன் அங்கு குழுமியிருந்த கூட்டம் "மெர்தேகா" என்று பன்முறை முழங்கி உணர்ச்சி பொங்க வரவேற்றனர்.

மலாக்காவில் பலவான் பண்டார் ஹிலிர் திடலில் 1956 பிப்ரவரி 19இல் மாபெரும் வரவேற்பு நல்கப்பட்டது.

இரண்டாவது முறையாக லண்டனுக்குத் தூதுக் குழுவினர் சென்றனர்.

1957 பிப்ரவரி 8ஆம் தேதியன்று துங்கு பிறந்த நாள் அன்று மலாயா சுதந்திரப் பிரகடனம் கையெழுத்தாகியது.

மலாயா நாட்டில் மூன்று முக்கிய சமூகங்களாக விளங்கும் மலாய்க்காரர், சீனர், இந்தியர் ஆகியோரிடையே அரசியல் ஒத்துழைப்பு நிலவ வேண்டுமென சுதந்திரத்தை வழங்கும் போது முக்கிய நிபந்தனையாக பிரிட்டிஷ் அரசாங்கம் வலியுறுத்தியிருந்தது.

1957 ஆகஸ்ட் 31இல் மலாயாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது.

முதல் நாள் இரவு 12 மணிக்கு (30.8.57) கோலாலம்பூரின் மத்தியப் பகுதியிலுள்ள சிலாங்கூர் திடலில் அதுவரை பறந்த பிரிட்டிஷாரின் யூனியன் ஜேக் கொடியை இறக்கி, மலாயாவின் தேசியக் கொடியை சுதந்திரத் தந்தை துங்கு ஏற்றினார்.

காலைப் பொழுது சுதந்திர நாளாகப் புலர்ந்தது.

காலை முதல் மழை பெய்து கொண்டிருந்தது.

மலாயா சுதந்திர மண்ணில் விழும் மகிழ்ச்சி நீர் அது!

புதிதாகக் கட்டப்பட்டிருந்த "மெர்தேகா அரங்கத்தில் மாநில சுல்தான்களும் தலைவர்களும், பிரமுகர்களும் பொது மக்களும் கூடியிருந்தனர்.

சரியாக பிற்பகல் 12 மணிக்கு அங்கு குழுமியிருந்த அனைவரும் "மெர்தேகா, மெர்தேகா" என்று முழங்கினர்.



அந்தக் குரல் எங்கும் எதிரொலித்தது. எங்கும் மகிழ்ச்சிப் பெருக்கு!

1963ஆம் ஆண்டு செப்டம்பர் 16ஆம் நாள் சபா, சரவாக், சிங்கப்பூர், மலாயா ஆகிய நாடுகள் மலேசியாவாக உருபெற்றன. ஆனால் 1965ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9ஆம் தேதியன்று சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து சென்றது. மலாயாவை மலேசியாவாக உருவாக்கிய பெருமையும் சுதந்திரத் தந்தை துங்குவையே சேரும்.



1963 செப்டம்பர் 16ல் மலேசியா உருவானபோது பிரதமரும் 'மலேசியா' உருவாகக் காரணமாக இருந்தவருமான துங்கு உற்சாகத் தோடும் உணர்ச்சியோடும் மெர்தேகா அரங்கில் உரையாற்றும் இனியகாட்சி.

நாட்டு அரசியலிலும் சில மாற்றங்கள் நிகழ்ந்தன.

1969 மே 10இல் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு மே 13இல் நிகழ்ந்த இனக் கலவரங்களால் - கசப்பான சம்பவங்களால் 1969 மே முதல் அவசர காலம் பிரகடனம் செய்யப்பட்டது. 1971 பிப்ரவரி வரை அது நீடித்தது. துணைப் பிரதமர் துன் அப்துல் ரசாக் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய நடவடிக்கை மன்றத்தின் பார்வையில் அரசாங்கப் பணிகள் நடந்தன.

1955ஆம் ஆண்டு ஆகஸ்ட் 9 முதல் நாட்டின் முதல் முதல்வராகவும் 1957 ஆகஸ்ட் 31 முதல் நாட்டின் முதல் பிரதமராகவும் பொறுப்புகளைச் சுமந்து சாதனைகளைப் புரிந்த துங்கு 1971ஆம் ஆண்டு செப்டம்பர் 16இல் பதவி விலகினார்.

அது வரை துணைப்பிரதமராகவும் அம்னோவின் துணைத்தலைவராகவும் இருந்த துன் அப்துல் ரசாக் ஆட்சிப் பொறுப்பையும் கட்சிப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

ம.இ.கா. தலைமைத்துவத்திலும் மாற்றம் ஏற்படுவதற்கான சூழ்நிலை உருவாகியது.

1955ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதியன்று ம.இ.கா.வின் தலைவர் பொறுப்பை ஏற்ற துன் வீ.தி. சம்பந்தன் தொடர்ந்து தேசியத் தலைவராக இருந்து வந்தார்.

தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டும் என்ற கருத்து பரவத் தொடங்கியது.

1959ஆம் ஆண்டு முதல் ம.இ.கா.வுக்கு தேசியத் துணைத்தலைவராகப் பொறுப்பு வகித்து வந்த (டான்ஸ்ரீ) மாணிக்கவாசகம் தேசியத் தலைவர் போட்டிக்கு 1971ஆம் ஆண்டு மே 28இல் வேட்பு மனுத்தாக்கல் செய்திருந்தார். தலைவர் பதவிக்குப் போட்டி போடப் போவதாக அறிவித் திருந்த டத்தோ ஆதிநாகப்பன் துணைத்தலைவர் மாணிக்கவாசகத்திற்கு ஆதரவாக 1971 மே 31இல் விலகிக்கொண்டார்.

கோலாலம்பூர் நகர மண்டபத்தில் 1971 ஆகஸ்ட் 9இல் டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்திற்கு ஆதரவாக நடந்த கூட்டத்தில் டத்தோ ஆதிநாகப்பன், (டத்தோ) சாமிவேலு, (டத்தோ) எஸ். கோவிந்தராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அமைச்சர் பொறுப்பையும் வகித்து வந்தார்.

இருபெரும் தலைவர்களுக்கிடையே நடைபெற்ற அந்தப் போராட்டம் ம.இ.கா. உறுப்பினர் களிடையே இரு அணிகளை உருவாக்கும் நிலையையும் ஏற்படுத்தியது.

இருவருக்கும் இடையே உள்ள போட்டியைத் தவிர்க்க சிலர் முயற்சிகள் மேற்கொண்டனர்.

அந்தப் பிரச்னையில் கூட்டணித் தலைவரும் பிரதமருமான துன் அப்துல் ரசாக் தலையிட வேண்டுமென கோரப்பட்டது.

1972 மார்ச் 15இல் ம.இ.கா. மத்திய செயலவை பிரதமர் துன் ரசாக்கைச் சந்தித்தது.

1973ஆம் ஆண்டு ஜூன் 30இல் ம.இ.கா. தலைவர் துன் வீ.தி.சம்பந்தன் பதவி விலக விருப்பம் தெரிவித்திருப்பதாக துன் அப்துல் ரசாக் குறிப்பிட்டார்.

போட்டியும் தவிர்க்கப்பட்டது.

ம.இ.கா.வில் நீண்ட காலமாக - தொடர்ந்து 18 ஆண்டுகளாக தேசியத் தலைவர் பதவி வகித்த துன் சம்பந்தன் குறிப்பிட்டபடி 1973 ஜூன் 30இல் தலைவர் பதவியிலிருந்து ஒதுங்கிக்கொண்டார்.

மலேசியாவிலுள்ள தோட்டப் பாட்டாளிகளின் எதிர்கால நலனைக் கருதி தேசிய நிலநிதி கூட்டுறவு சங்கத்தை 1960ஆம் ஆண்டு மே 14இல் துன் சம்பந்தன் துவக்கி இருந்தார். பத்துப் பத்து வெள்ளியாக பங்கு சேர்த்து - உறுப்பினர்களைச் சேர்த்து 1961 ஆகஸ்ட் 24இல் முதல் தோட்டமான புக்கிட் சீடிம் தோட்டத்தை வாங்கினார். சாதனை புரிந்தார். இப்பொழுது அந்தக் கூட்டுறவு சங்கத்திற்கு 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களும் 20 தோட்டங்களும் இருப்ப தாக அறிவிக்கப்படுகிறது.

ம.இ.கா. தலைமைப் பதவியிலிருந்து விலகியவுடன் அமைச்சர் பதவியையும் விட நேர்ந்தது. இவர் பொறுப்பிலிருந்த ஒற்றுமைத்துறை அமைச்சு பின்னர் ஒற்றுமைத் துறை வாரியமாக மாற்றப்பட்டு அதன் வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டார் துன் சம்பந்தன்.

கூட்டுறவு சங்கத்தில் முழுக் கவனம் செலுத்தி வந்த துன் வீ.தி. சம்பந்தன், வாழ்நாளில் இறுதி நாள் வரை சமுதாய நலனையே எண்ணி வந்தார்.

உ. த. தி.
எண் 99275
நூலகம்

# சமுதாயத்தூண் துன் சம்பந்தன்

மலேசிய இந்திய சமுதாயத்தின் தனிப் பெரும் தலைவராகத் திகழ்ந்தவர் துன். வீ. தி. சம்பந்தன்.

1955ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் தேதி முதல் 1973ஆம் ஆண்டு ஜூன் 30 வரையில் ம.இ.கா.வின் தேசியத் தலைவராகத் தொடர்ந்து 18 வருடங்களுக்கு இருந்திருக்கிறார். அரிய செயல்கள் புரிந்து வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறார்.



"ம.இ.கா. தொடங்கப்பட்டு 9 ஆண்டுகளே ஆகியிருந்த சமயத்தில் 1955இல் நான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அப்பொழுது சுமார் 35 கிளைகளே ம.இ.காவுக்கு இருந்தன. 18ஆண்டுகளுக்குப் பிறகு நான் பதவி விலகும் சமயத்தில் 300 கிளைகள். 1955இல் நான் பதவி ஏற்ற வேளையில் பல அமைப்புகள் ஒன்றுகூடி இந்தியரைப் பிரதிநிதிக்க ம.இ.கா.வுக்குத் தகுதி இல்லை என்று எதிர்ப்புக் குரல் எழுப்பி நின்றன. ஆனால் அழுக்குப் படியாத வேலை செய்வோரை உறுப்பினராகக் கொண்டு நகர்ப்புறங்களில் இயங்கும் கட்சி என்ற நிலைமாறி அதிகத் தொழிலாளர்களைக் கொண்ட கட்சியாக ம.இ.கா. அடிப்படை மாற்றம் பெற்றிருப்பதை உணர்ந்ததும் அந்த அமைப்புகள் விரைவிலேயே எதிர்ப்பைக் கைவிட்டன" என்று துன் சம்பந்தன் குறிப்பிட்டிருக்கிறார்.

"ஜனநாயகப் பண்புதான் அதன் பலம். நல்லெண்ணத்திலும் சகோதரத்துவ உணர்விலும் பல இனக் கூட்டுறவிலும் அதற்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கைதான் அதன் அடித்தளம்" எனவும் தெரிவித்திருக்கிறார் துன் சம்பந்தன்.

துங்குவின் அன்புக்குப் பாத்திரமானவர். மலேசியாவில் அமைந்த முதல் அமைச்சரவையில் தொழிலாளர் அமைச்சராக இடம் பெற்றவர்.

தோட்டத் துண்டாடலினால் வேலை இழந்து தவித்த தோட்டப் பாட்டாளிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என எண்ணினார். தோட்டத் தொழிலாளர்கள் நலனைக் கருதி எதிர்கால இந்திய சமுதாயத்தின் வளர்ச்சியை எண்ணி தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தை 1960ஆம் ஆண்டு மே 14இல் தொடக்கி அந்த வாரியத்தின் தலைவராக இருந்தார்.

1979ஆம் ஆண்டு மே 18இல் துன் சம்பந்தன் இயற்கை எய்தினார்.

இந்திய சமுதாயத்திற்கு துன் சம்பந்தன் ஆற்றியிருக்கும் தொண்டு மகத்தானது.

துன் சம்பந்தன் மரணமடைந்த மறுநாள் (19.5.79) "தமிழ் நேசனில்" இடம் பெற்ற தலையங்கத்தின் ஒரு பகுதி

"தமக்குச் சரி என்று பட்டதை உறுதியுடன் கூறி அதைக் கட்டுப்பாடுடன் நடத்திக் காட்டியவர் துன் அவர்கள். அவர் அரசியல் எதிரிகள் கூட அவரின் நேர்மைக்குத் தலை வணங்கினர் எனில் மிகையாகாது.

"இந்திய வம்சாவளியினர் ஏழைகளாக இருக்கலாம். ஆனால், கோழைகளாக வாழக்கூடாது என்பது அவர் வழங்கிய தாரக மந்திரம்.

"அவரது நினைவுச் சின்னமாகத் திகழும் கூட்டுறவுச் சங்கத்தை ஒற்றுமையோடு தொடர்ந்து மேன்மேலும் லாபகரமான முறையில் நடத்தி, அதனை நம்பியுள்ள பாட்டாளி மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதே நாம் துன் அவர்களுக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்..." இவ்வாறு தமிழ் நேசன் தலையங்கம் தீட்டியிருந்தது.

"துன் சம்பந்தன் மறைவு பரம்பரை பரம்பரையாக இந்த நாட்டிலே பாடுபட்டு உழைத்து பல இன்னல்களுக்குள்ளாகி வாழ்க்கை ஒளியை எதிர்பார்த்துக் காத்திருக்கும் இந்திய சமுதாயத்திற்கு மிகப் பெரிய ஏமாற்றத்தையும் வருத்தத்தினையும் அளித்துள்ளது. இந்த இழப்பு அனைவருமே ஏற்கத் தயங்குகிற ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்" என்று ம.இ.கா.வின் அப்போதைய தேசிய துணைத் தலைவரும் ஊராட்சி வீடமைப்புத் துறை துணை அமைச்சருமான டத்தோ சாமி வேலு குறிப்பிட்டிருந்தார்.

"நாட்டின் சுதந்திரத்துக்கான பிரகடனத்தில் கையொப்பமிட்டவர்களில் ஒருவரான வீர புருஷரை இழந்து விட்டோம்" என்று ம.இ.காவின் அப்போதைய தேசியத் தலைவரும் தொடர்புத் துறை அமைச்சருமான டான்ஸ்ரீ மாணிக்க வாசகம் குறிப்பிட்டிருந்தார்.

"பணக்காரராக அரசியலில் நுழைந்த துன் சம்பந்தன் தனது குடும்பச் சொத்துகளை தமது பொது வாழ்வில் கரைத்தார். நல்ல கருமங்களை செய்து முடித்து அவர் நம்மிடமிருந்து விடை பெற்றுள்ளார். அவை காலத்தால் அழிக்க முடியாதவை" என்று டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லா தெரிவித்தார்.

"நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்த பழம் பெரும் தலைவர்களில் துன் சம்பந்தன் ஒருவர். அமைச்சரவையிலும் பொதுவாகவும், நட்பு முறையிலும் துன் சம்பந்தனும் நானும் மிகவும் நெருக்கமானவர்கள்..." என்று "சுதந்திரத் தந்தை" துங்கு நினைவு கூர்ந்தார்.

"துன் சம்பந்தன் ஒரு மூத்த அரசியல்வாதி. இந்நாடு சுதந்திரமும் மேம்பாடும் அடைவதற்கு மூளை உழைப்பையும், உடல் உழைப்பையும் வழங்கியவர்" என்று அப்போதைய பிரதமர் துன் ஹூசேன் ஒன் கூறியிருந்தார்.

"துன் சம்பந்தன் எனது முன்னாள் சகா மட்டுமன்றி அருமையான நண்பராகவும் விளங்கி வந்தார். அமைச்சரவையில் நாங்கள் இருந்தபோது குறிப்பாக துங்கு அப்துல் ரஹ்மான் பிரதமராக இருந்த காலத்தில் அமைச்சரவை என்பதை விட ஒரு குடும்பமாகப் பின்னிப் பிணைந்திருந்தோம்" என்று ம.சீ.ச.வின் முன்னாள் தலைவரும் நிதி அமைச்சராக இருந்தவருமான துன் டான் சியு சின் கூறியிருந்தார்.

அரசாங்க மரியாதையோடு துன் சம்பந்தன் இறுதிச் சடங்கு அவர் பிறந்த சுங்கை சிப்புட்டிலேயே நிகழ்ந்தது.

கோலாலம்பூரிலுள்ள பிரதான சாலைகளில் ஒன்றான "ஜாலான் பிரிக்பீல்ட்ஸ்" "ஜாலான் துன் சம்பந்தன்" என்கிற பெயர் மாற்றம் பெற்றிருப்பது அரசாங்கம் அவருக்குத் தந்திருக்கும் கௌரவமாகும்.

(துன்)வீ. திருஞான சம்பந்தன் 1919 ஜூன் 16இல் சுங்கை சிப்புட்டில் பிறந்தவர்.

கோலகங்சார் ஆங்கில இடைநிலைப்பள்ளியில் பயின்றார். பின், தமிழ் நாட்டில் உள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்று பி.ஏ. பட்டம் பெற்றவர்.

நாடு திரும்பியவுடன் சொந்தத் தொழிலில் ஈடுபட்டார்.

மலாயாவில் தமிழ்ப்பள்ளிகளில் தமிழ், மலாய், ஆங்கில போதனைகள் நவீனமயமாக்கப்படுவதற்காக அவர் 1952-53ஆம் ஆண்டுகளில் தீவிரமாக ஈடுபட்டதன் மூலம் பொதுப்பணிகளில் தன்னைப் பிணைத்துக் கொண்டார். பேராவிலுள்ள எல்லா பொது நிறுவனங்களையும் ஒன்று படுத்தும் நோக்கத்துடன் பேரா ஐக்கிய இந்திய அமைப்பை 1953இல் ஏற்படுத்தினார்.

1955ஆம் ஆண்டில் 5ஆவது தேசியத் தலைவராக ம.இ.கா.வுக்கு இவர் தேர்ந்தெடுக்கப் பட்டவுடன் நாட்டில் அதே ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலிலும் நின்று வெற்றி பெற்று அமைச்சரவையிலும் இடம் பெற்றார். முதல் கூட்டரசுப் பொதுத் தேர்தல் 1955இல் நடந்த போது கிந்தா உத்தாரா தொகுதி உறுப்பினராகத் தேர்வு பெற்றிருந்த இவர் தொழிலாளர்

அமைச்சராகப் பொறுப்பேற்றார். 1957இல் சுகாதார அமைச்சரானார். 1959இல் சுங்கை சிப்புட் தொகுதியில் வென்று பொதுப்பணி, அஞ்சல், தந்தித்துறை அமைச்சரானார். 1964, 1969 பொதுத் தேர்தல்களிலும் வென்று தொடர்ந்து அத்துறை அமைச்சராகப் பணியாற்றினார். 1972இல் தேசிய ஒற்றுமைத்துறை அமைச்சராகி 1974 வரை பணியாற்றினார். 1974 செப். 5 முதல் துன் சம்பந்தன் தேசிய ஒற்றுமைத் துறை வாரியத் தலைவராக நியமனமானார்.

லண்டனில் சுதந்திர இறுதிப் பேச்சுவார்த்தைகள் நடத்த 1957இல் "தேசத் தந்தை" துங்குவின் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் துன் சம்பந்தனும் இடம் பெற்றிருந்தார். மலேசியா உருவாக்கப்படுவதற்காக 1963இல் லண்டனுக்குச் சென்ற மலேசியக் குழுவிலும் துன் இடம் பெற்றிருந்தார். அந்த ஒப்பந்த சாசனத்தில் துன் சம்பந்தனும் கையெழுத்திட்டிருந்தார்.

அரசாங்க சார்பில் பல நாடுகளுக்குச் சென்று வந்திருக்கிறார்.

1967இல் டான்ஸ்ரீ விருதும் மறு ஆண்டில் உயரிய விருதான "துன்" பட்டமும் பேரரசரால் வழங்கி சிறப்பிக்கப்பட்டிருக்கிறார்.

மலாயா பல்கலைக்கழகம் டாக்டர் பட்டத்தை 1971இல் துன் சம்பந்தனுக்கு வழங்கி கௌரவித்திருக்கிறது.

மலை நாடு தினசரி பத்திரிகையையும், மலாயன் டைம்ஸ் ஆங்கில தினசரி பத்திரிகையையும் தொடங்கி நடத்தி குடும்பச் சொத்தில் பெரும் பகுதியை இழந்தார். மலாயாவிலுள்ள இந்திய சமூகத்தினரைப் பற்றிய செய்திகளும். ம.இ.கா. பற்றிய தகவல்களும் ஆங்கிலப் பத்திரிகைகளில் அதிக அளவில் இடம் பெற வேண்டும் எனும் நோக்கத்தோடேயே பெரிய அளவில் மலாயன் டைம்ஸ் பத்திரிகையை நடத்தினார். பொருள் இழந்தாலும் குறிப்பிட்ட சில ஆண்டுகள் வரையில் அந்த ஆங்கில ஏடு வெளிவந்து துன் சம்பந்தனின் ஆவலைப் பூர்த்தி செய்தது.





மலேசியாவின் இரண்டாவது பிரதமர் துன் அ்டூல் ரசாகோடு துன் சம்பந்தன்.

ம.இ.கா.வின் 20ம் ஆண்டு நிறைவு விழா கொண்டாட்டம் நெகரா அரங்கில் நடைபெற்றபோது நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த அப்போதைய பிரதமர் துங்குவோடு ம.இ.கா. தலைவர் துன் சம்பந்தனும் தேசிய பொருளாளர் வி. ஜே. பாலசுந்தரமும்.



## 'கூட்டுறவு அன்னை' தோபுவான் உமா சுந்தரி

'கூட்டுறவுத் தந்தை' துன்சம்பந்தனின் துணைவி உமா சுந்தரி சம்பந்தன் பொதுவாழ்வில் இளமைப் பருவத்திலேயே ஈடுபடத் தொடங்கி விட்டார். துன்சம்பந்தன் மறைவுக்குப் பின்னர் தோபுவான் உமா சுந்தரி தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் அக்ராசனர் பொறுப்பேற்று கூட்டுறவு சங்கம் வெற்றிகரமாகச் செயல் பட துணையாக இருந்து வருகிறார்.

பல சமூக சமய இயக்கங்களோடு நெருக்கமான தொடர்பு வைத்துள்ளார். கோலாலம்பூர் ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சங்கத்தின் செயலாளராகவும் பொறுப்பேற்றுள்ளார் இவர். எளிமையும் இனிய அனுகுமுறையும் இவரது தனிச்சிறப்புக்கள்.



துன் சம்பந்தன் மறைவை ஒட்டி டத்தோஸ்ரீ சாமிவேலு தொடுத்த கவிதைப்பூமாலை

# வளம் காணும் பாதைக்கு வழிகாட்டியே!

கூட்டுறவுத் தந்தையே,
குலநல வழிகாட்டியே!
மறைந்தும் மறையாது
மனத்தில் இடம்கொண்ட
மாணிக்கமே!

குருவிக்கும் கூடு உண்டு
இக்குலத்திற்கு
என்ன உண்டு என
மாசற்ற உன்மனத்தில்
மாண்புறத் தோன்றிய
மகத்தான திட்டத்தின் வழி
பத்துப் பத்தாக
சொத்துச் சொத்தாகத்
தொகுத்தீர்!

பாரோர் திகைத்துப்
பார்க்கும அளவிற்கு
பணக்காரச் சமுதாயம்
ஆவதற்கு ஒரு பாதை
வகுத்தீர்!

ஆண்டு அனுபவமிக்க நீவிர்
என்றும் நினைத்ததில்லை!
ஏழைச் சமுதாயம்
கோழையாகாமல்
ஏற்றம் காணத்துடித்தீர்!

வாழ்வு முழுவதும் எளிமை
வடிவம் கொண்டீர்!
உம்மைக் குருவென்று ஏற்றேன்!
உள்ளத்தை உம்மிடம்
சேர்த்தேன்!

பண்பின் பாவலரே!
பாட்டாளியின் காவலரே!

நீர் வாங்கிய தோட்டங்கள்
நீரூற்றாக நிலை கொண்டன!
பார்க்கும் இடங்களிலெல்லாம்
பால்மரக் காட்டினிலே
உன் பால்முகம் தோன்றுதையா!

தலைவர் ஆனீர்!
தலையாய இவ்வியக்கத்திற்கு!
தமிழ்த்தாய் உயிர்பெற்றாள்
உம் தயவால்!

அடுக்கடுக்காக
அழகுத் தமிழில் நீர்
அள்ளித் தெளித்த
அறிவுரைகளை
அனுதினமும் மறவா
அடியார்கள் நாங்கள்!

— டத்தோஸ்ரீ ச. சாமிவேலு

# மாணிக்கவாசகமும் 32 ஆண்டுகளும்

அபூர்வமான 'மாணிக்கக் கல்' போல் ம.இ.கா.வில் திகழ விரும்பினார் மாணிக்கவாசகம். தனிப்பெரும் தலைவராக உருவாக வேண்டுமெனும் ஆவலோடு தொடக்க முதல் ஈடுபட்டார், பாடுபட்டார்.

1946 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3,4,5 ஆம் தேதிகளில் நடந்த ம.இ.காவின் அந்த முதல் அமைப்புக் கூட்டத்திலேயே மாணிக்கவாசகம் கலந்து கொண்டிருந்தார்.

கோலாலம்பூரில் முதல் நகரக் கிளை அமைக்கப்பட்டவுடன், இரண்டாவது கிளையாக செந்தூலில் அமைக்கப்பட்டது. தொடர்ந்து, அதே நேரத்தில் கிள்ளானிலும் ம.இ.கா கிளை அமைக்கப்பட்டது. அப்போது இருபது வயதே நிரம்பியிருந்த இளைஞர் வி. மாணிக்கவாசகம் அந்த கிள்ளான் கிளைக்கு செயலாளராகப் பொறுப்பேற்றிருந்தார்.

ம.இ.கா. தொடங்கப்பட்ட நாளிலிருந்து ஏதாவது ஒரு முக்கிய பொறுப்பில் இருந்து கொண்டே வந்திருக்கிறார் (டான்ஸ்ரீ) மாணிக்கவாசகம்.



கட்சிப் பதவிகளில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கட்சிக்காகப் பணியாற்றுவதில் முனைப்பாகவே இருந்திருக்கிறார்.

கிள்ளான் ம.இ.காவின் செயலாளராக 1946 இல் பொறுப்பேற்ற மாணிக்கவாசகம் 1979 அக்டோபர் 12 இல் மரணமடையும் வரை ம.இ.காவின் தேசியத் தலைவராகவும் மூத்த அமைச்சராகவும் இருந்திருக்கிறார். கட்சியிலும் கட்சி மூலம் கிடைத்த அரசாங்கப் பதவிகளிலும் தொடர்ந்து 32 ஆண்டுகள் வரை டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் சேவையாற்றினார்.

1973 ஆம் ஆண்டு ஜூன் 30 இல் துன் சம்பந்தன் தலைமைப் பதவியை விட்டு விலகியவுடன், அதுவரை தேசியத் துணைத் தலைவராகப் பொறுப்பு வகித்திருந்த டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் தலைமைப் பொறுப்புக்கு வந்தார்.

"காங்கிரஸிலுள்ள எனது ஈடுபாடு 1946 ஆம் ஆண்டில் காங்கிரஸ் உருவானபோதே தொடங்கிவிட்டது. காங்கிரஸில் தொடக்க கால நிலையில் கிள்ளான் கிளைக் காங்கிரஸை நிறுவுவதில் தீவிரமாக ஈடுபட்டேன். அதன்பின் காங்கிரசின் நடவடிக்கைகள், வளர்ச்சி, பிரதிநிதித்துவம் ஆகியவற்றின் அனைத்திலும் பங்கு கொண்டு அதனுடன் அணுக்கமாக இருந்து சேவையாற்றி வந்துள்ளேன். உறுப்பினர்களில் பலர் எனக்கு தொடர்ந்து வழங்கிய பேராதரவால் சமுதாயத்திற்கும் காங்கிரசிற்கும் நம் தேசத்திற்கும் பல ஆண்டுகளாகப் பணியாற்றும் வாய்ப்பு கிட்டியுள்ளது. நமது சமுதாய நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் என்னாலானதை செய்துள்ளேன் என்ற பூரண திருப்தி எனக்குண்டு" என்று டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் மனநிறைவோடு குறிப்பிட்டிருக்கிறார்.

1926 ஆம் ஆண்டு அக்டோபர் 4 இல் கோலாசிலாங்கூரில் பிறந்த மாணிக்கவாசகம் 1979 அக்டோபர் 12 இல் மரணமடைந்தார். அவர் வாழ்நாளில் பெரும் பகுதி ம.இ.கா.விலேயே கழிந்திருக்கிறது.

1973 ஜூன் 30 இல் தலைமைப் பதவியை ஏற்பதற்கு முன்னர் கட்சியின் துணைத் தலைவராக 1959 ஆம் ஆண்டு முதல் இருந்து வந்தவர் இவர்.

1955 ஆம் ஆண்டில் சிலாங்கூர் மாநில சட்டமன்றத்துக்குப் போட்டியிட ம.இ.கா. வேட்பாளராகத் தேர்வு பெற்றவர் இவர். சிலாங்கூர் சட்டமன்ற ஆட்சிக் குழுவிலும் இடம்பெற்றிருந்தார்.

1959 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது கிள்ளான் தொகுதியில் நாடாளு மன்றத்துக்குப் போட்டியிடும் வாய்ப்பு கிடைத்தது. வாகையும் சூடினார்.

அதே ஆண்டில் தொழிலாளர் துணை அமைச்சராகும் வாய்ப்பையும் 33 ஆவது வயதிலேயே பெற்றார் மாணிக்கவாசகம்.

துன் சம்பந்தன் தலைவராக இருந்தபோது ஓர் ஆண்டு வரையில் குருபாதமும், பின்னர் தாஸ் என்பவரும் தொடர்ந்து எஸ்.எஸ்.முருகேசு, வி.அய்யப்பன் ஆகியோரும் பொதுச் செயலாளர்களாக இருந்திருக்கின்றனர். பொருளாளராக வி.ஜே. பாலசுந்தரம் நீண்ட காலம் பதவி வகித்தார்.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் தலைமைப் பொறுப்பேற்றவுடன் நிர்வாகச் செயலாளராக அப்பொழுது தலைமையகத்தில் பணியாற்றி வந்த சி.சுப்பிரமணியத்தை பொதுச் செயலாளராக நியமித்தார்.

1974 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் வந்தபோது பொதுச் செயலாளர் (டத்தோ) சி. சுப்பிர மணியத்துக்கும், (டத்தோ) பத்மநாபனுக்கும், (டத்தோ) சாமிவேலுவுக்கும் நாடாளு மன்றத்துக்குப் போட்டியிட வாய்ப்புகள் தந்தார்.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தால் டத்தோ சுப்ராவும் டத்தோ பத்மாவும் கட்சியில் உயர் வாய்ப்புகள் பெற்று வந்தனர். கிடைத்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளும் திறனும் இருந்ததால் இருவரும் முக்கிய தலைவர்களாக ம.இ.கா.விலும் இந்திய சமூகத்திலும் விளங்கி வருகிறார்கள்.





டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்துடன் (டத்தோஸ்ரீ) சாமிவேலு.

'சுதந்திரத் தந்தை' துங்குவுக்குப் பின் பிரதமர் பொறுப்பை ஏற்றிருந்த துன் அப்துல் ரசாக் மேலும். சில கட்சிகளை உள்ளடக்கி தேசிய முன்னணியை (பாரிசான் நேஷனல்) 1972 இல் வெற்றிகரமாக அமைத்திருந்தார்.

துங்கு காலத்தில் அம்னோ - ம.சீ.ச. - ம.இ.கா. ஆகிய மூன்று கட்சிகள் மட்டுமே இணைந்து கூட்டணியை அமைத்திருந்தன. கூட்டணியின் தேர்தல் சின்னம் படகு.

துன் ரசாக் அறிமுகப்படுத்திய தேசிய முன்னணியின் தேர்தல் சின்னம் துலாக் கோல்.

1974 இல் தேசிய முன்னணி பொதுத் தேர்தலில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடர்ந்து தேசிய முன்னணியே தேர்தல்களைச் சந்தித்து வருகிறது.

1976 ஜனவரி 14 இல் பிரதமர் துன் ரசாக் காலமானவுடன் அம்னோவை ஸ்தாபித்து அதன் முதல் தலைவராக இருந்த டத்தோ ஒன் பின் ஜபாரின் புதல்வர் டத்தோ (துன்) உசேன் ஒன் ஜனவரி 15 இல் பிரதமர் பொறுப்பேற்றிருந்தார்.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் தலைவராக இருந்தபோது நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் இவை.

ம.இ.கா. கட்டடப் பொறுப்பை தலைவர் துன் சம்பந்தன் துணைத்தலைவராக டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் பணியாற்றியபோது வழங்கியிருந்தார்.

ம.இ.கா. தொடங்கப்பட்ட காலத்திலிருந்து சொந்தக் கட்டடம் பற்றி மாநாடு தோறும் பேசி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வந்தன.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் அந்தப் பொறுப்பை மேற்கொண்டு வெற்றிகரமாக முழுமைப் படுத்தினார்.

ம.இ.காவுக்கு தேசியத் தலைவர் பொறுப்பு ஏற்ற இரண்டாவது மாதத்தில் 1973 ஆகஸ்ட் 24 இல் ம.இ.கா. தலைமையகக் கட்டடம் திறப்பு விழா கண்டது.

ஆறு ஆண்டுகள் தலைவர் பொறுப்பில் இருந்த மாணிக்கவாசகம் தம் 53 ஆவது வயதில் மாரடைப்பால் மரணமடைந்த பிறகு, ம.இ.காவுக்குத் தலைவராகப் பொறுப்பேற்ற டத்தோ சாமிவேலு அந்த ம.இ.கா. தலைமையகக் கட்டடத்துக்கு 'டான்ஸ்ரீ மாணிக்கவாசகம்' பெயரையே சூட்டினார்.

மாணிக்கவாசகம் ம.இ.காவுக்கு ஆற்றிய தொண்டுகளுக்கு அங்கீகாரம் தரும் வகையில் - கௌரவப்படுத்தும் வகையில் அது அமைந்தது.

1973 ஆகஸ்ட் 24இல் ம.இ.கா. தலைமையகக் கட்டடத் திறப்பு விழா அப்போதைய பிரதமர் துன் அப்துல் ரசாக் தலைமையில் நடைபெற்றது.

திறப்பு விழா நிகழ்ச்சியில் அப்போதைய துணைப்பிரதமரும் பின்னர் பிரதமர் பொறுப்பேற்றிருந்தவருமான (துன்) உசேன் ஒனும் கலந்து கொண்டார்.



## ஆதி நாகப்பன்

ம.இ.கா.ஸ்தாபனம் துவக்கப்பட்ட நாளிலிருந்து ம.இ.கா. வட்டாரத்தில் செல்வாக்கோடு திகழ்ந்து வந்தவர் (டத்தோ) ஆதி நாகப்பன்.

ஜான் திவியினாலும் அவரது சகாக்களினாலும் ம.இ.கா. உருவாக்கப்பட்டபோது அது இயங்கிய மாரியம்மன் ஆலயத்தில் ஆதிநாகப்பனும் நெருக்கமான தொடர்பு வைத்திருந் திருக்கிறார்.

நேதாஜி அமைத்த சுதந்திர இயக்கத்தில் ஆதிநாகப்பனும் பங்கு பற்றியிருக்கிறார். இந்திய சுதந்திரக் கழகத்தில் பிரசாரப் பிரிவில் இவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

அந்த இளம் வயதிலேயே நன்கு மேடைகளில் பேசும் திறன் பெற்றவராகத் திகழ்ந்திருக்கிறார் ஆதிநாகப்பன்.

அந்த இளம் வயதிலேயே பத்திரிகைத்துறையிலும் ஈடுபட்டிருந்ததால் ஆதிநாகப்பனுக்குப் பல இடங்களிலும் நல்ல அறிமுகமும் ஏற்பட்டிருந்தது.

ம.இ.கா. அமைக்கப்பட்ட நாளின் இறுதிக்கட்ட நிகழ்ச்சியாக பேராளர்களும் பொதுமக்களும் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம் ஒன்றை 1946 ஆகஸ்ட் 5 இல் சிலாங்கூர் இந்தியர் சங்க திடலில் ம.இ.கா. ஏற்பாடு செய்திருந்தது. அந்தப் பொதுக் கூட்டத்தில் இளைஞர் ஆதிநாகப்ப னுக்கு உரையாற்ற வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது.

பேராளர்கள் மத்தியில் அப்போதே ஆதிநாகப்பன் இடம் பிடித்துவிட்டார்.

1947 முதல் 1952 வரை தமிழ் நேசனில் ஆசிரியர் பொறுப்பை வகித்த சமயத்தில் ம.இ.காவைப் பற்றி விரிவாக எழுதி - கருத்துகள் தெரிவிக்க இவருக்கு நல்ல வாய்ப்பும் கிட்டியிருந்தது.

தமது தொடக்கக் கால அனுபவங்களை - தொடர்புகளை ஆதி நாகப்பன் விளக்குகிறார்.

“பினாங்கில் யுத்தம் முடிந்து வெள்ளையர்கள் மீண்டும் வந்ததும் ஒரு கம்பெனியை அமைத்து “சேவிகா” என்ற தினத்தாளை 1945 இல் தொடங்கி அதற்கு கூட்டு ஆசிரியராகப் பணியாற்றி, பிறகு அதிலிருந்து விலகி சொந்தமாக “ஜெய்ஹிந்த்” என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்து கட்டுப்பாட்டு விலையில் பத்திரிகையை பிரசுரிப்பதற்கு தாள் கிடைக்காததால் நஷ்டமுற்று, பிறகு சிங்கப்பூர் சென்று அங்கு அதைப் பிரசுரிக்கலாம் என்று முயற்சித்தும் பலிதமாகாமல் பத்திரிகையை நிறுத்திவிட்டு கோலாலம்பூர் மகாமாரியம்மன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்த காலம் அது.

“மாரியம்மன் கோயிலில் அப்போது ம.இ.கா.வின் தலைமைக் காரியாலயமும் இயங்கியது. அப்போது நான் ஆலயத்தின் நிர்வாக டிரஸ்டியான ராமச்சந்திர நாயுடுவுடன் ஒன்று சேர்ந்து ஆலயத்தின் ஆதரவில் ஒரு கல்விக்குழு அமைத்து அதற்கு நாயுடு தலைவராகவும், நான்





டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்துக்கு டத்தோ ஆதி நாகப்பன் மாலை அணிவிக்கிறார்.

காரியதரிசியாகவும் பணியாற்றி மகாத்மா காந்தி உயர் நிலைப்பள்ளியை அமைத்தோம். இது நடந்தது 1946 இறுதியில்".

பின்னர் ஆதி நாகப்பன் 1947 முதல் 1952 வரையில் தமிழ் நேசன் ஆசிரியராகப் பணியைத் துவக்கினார். பணியாற்றிய காலத்திலேயே 1950 இல் லண்டனில் பத்திரிகைத் துறை பற்றிய டிப்ளோமா பட்டம் பெறும் பயிற்சிக்காக ஓர் ஆண்டு வரையில் தங்கியிருந்தார்.

1953 இல் சட்டத் தொழில் படிக்க விரும்பி லண்டனுக்குச் சென்று விட்டார். 1958 இல் பாரிஸ்டராக மலாயாவுக்குத் திரும்பி வந்தார்.

(நேதாஜி அமைத்த ஜான்ஸிராணி படையில் துடிப்புடன் காணப்பட்ட குமாரி ஜானகி பின்னர் திருமதி ஜானகி ஆதிநாகப்பன் ஆனார். கணவரின் வளர்ச்சியில் பல வழிகளில் துணையாக இருந்திருக்கிறார். சாரண இயக்கத்தில் அதிக ஈடுபாடு காட்டி வந்திருக்கிறார். பின்னர் டத்தோ சாமிவேலு தலைமைத்துவத்தில் ம.இ.கா. மாதர் பகுதி பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு செனட்டர் பதவியை வகிக்கவும் வாய்ப்பு தரப்பட்டிருந்தது திருமதி ஜானகி ஆதி நாகப்பனுக்கு)

ஆதி நாகப்பன் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்டவுடன் பொதுப் பணிகளில் ஈடுபடவும் ம.இ.காவில் அதிக நாட்டம் செலுத்தவும் வாய்ப்புகள் ஏற்படத் தொடங்கின.

சிலாங்கூர் மாநில ம.இ.கா. தலைவராகவும், பின்னர் ம.இ.கா.வின் தேசியத் துணைத் தலைவராகவும் பதவிகள் வகித்தார்.

செனட்டராகப் பதவி வகித்துவந்த (டத்தோ) ஆதிநாகப்பன் 1974 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் திருத்தி அமைக்கப்பட்ட அமைச்சரவையில் சட்டத்துறை துணை அமைச்சராக நியமனம் பெற்றார்.

டத்தோ (துன்) உசேன் ஒன் 1976 ஜனவரி 15 இல் பிரதமர் பொறுப்பேற்றவுடன் மார்ச் 5 இல் ஆதிநாகப்பனை பிரதமர் துறை அமைச்சராக நியமித்தார்.

முழு அமைச்சர் பதவி கிடைத்ததை ஒட்டி ம.இ.கா. தலைமையகம் டத்தோ ஆதி நாகப்பனுக்கு ஒரு சிறப்பு பாராட்டு விருந்து ஏற்பாடு செய்திருந்தது.

தலைநகர் பெடரல் ஒட்டலில் 1976 மே 9 இல் அந்தப் பாராட்டு விருந்து நடைபெற்றது.

ம.இ.கா. பிரமுகர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள் முன்னிலையில் உற்சாகமாக உரையாற்றிக் கொண்டிருந்த போதே மயங்கி விழுந்தார். பின் உயிருடன் எழவே இல்லை.

ம.இ.கா. அமைக்கப்பட்ட முதல் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புப் பொதுக் கூட்டத்தில் (1946 ஆகஸ்ட் 5) ம.இ.கா. பிரமுகர்கள் தொண்டர்கள் முன்னிலையில் உரையாற்றியவாறு ம.இ.கா. வட்டாரத்துக்கு அறிமுகமான டத்தோ ஆதிநாகப்பன், இறுதி உரையையும் ம.இ.கா. வட்டாரம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியிலேயே நிகழ்த்தியிருக்கிறார்.

நாட்டிற்கு அவர் ஆற்றிய தொண்டுகளுக்காக மரணமடைந்த பிறகும் பேரரசரால் டான்ஸ்ரீ விருது வழங்கி கௌரவப்படுத்தப்பட்டிருக்கிறார்



(டான்ஸ்ரீ) ஆதிநாகப்பன்



(புவான்ஸ்ரீ) ஜானகி ஆதிநாகப்பன்

## எஸ்.ஓ.கே. உபைதுல்லா

மலேசிய இந்தியர்களில் மூத்த அரசியல் சமூகத் தலைவர்களில் டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லாவும் ஒருவர்.

பெடரல் சட்டமன்றத்தில் 1948 ஆம் ஆண்டில் உறுப்பினராக நியமனம் பெற்ற இவர் தொடர்ந்து 1959 ஆம் ஆண்டு வரையில் அப்பதவியில் நீடித்தார். பின்னர் செனட் சபை (நாடாளுமன்ற மேலவை) உறுப்பினராக நியமனம் பெற்றார். 1971 முதல் 1980 ஆம் ஆண்டு வரையில் மேலவைத் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

இந்திய வம்சாவளி முஸ்லிம்களின் சமூக இயக்கமான பெர்மிமை தோற்றுவித்து அதன் ஸ்தாபகத் தலைவராக 1969 முதல் 1979 வரையில் பணிபுரிந்திருக்கிறார்.

பெர்கிம் எனும் இஸ்லாமிய சமய அமைப்பிற்கும் முதல் தலைவராக 1960 முதல் 1964 வரையில் டான்ஸ்ரீ உபைதுல்லா பொறுப்பேற்றிருந்தார். அதன் பின்னர் மலேசியாவின் முதல் பிரதமர் துங்கு "பெர்கிம்" அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

1918 ஜூன் 18 இல் தமிழ் நாட்டில் பிறந்த உபைதுல்லா தன் 21 ஆவது வயதில் பி.ஏ. பட்டத்தோடு மலாயாவுக்கு வந்தவர்.

1938 ஆம் ஆண்டு 'முதல் இவரது பொதுப்பணிகள் தொடங்கின. ம.இ.கா.வில் பல பொறுப்புகள் வகித்திருக்கிறார். ம.இ.கா. மாநாடுகளில் சபாநாயகராகப் பொறுப்பேற்று வருகிறார்.

கண்ணியத்திற்கும் சிறப்பிற்கும் உரிய மா அல்ஹிஜ்ரா எனும் விருது 1989 ஆண்டில் அப்போதைய பேரரசரால் டான்ஸ்ரீ (டத்தோ) உபைதுல்லாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த விருதைப் பெறும் முதல் மலேசிய இந்திய முஸ்லிம் இவர்தான். இந்த விருதோடு 30 ஆயிரம் மலேசிய வெள்ளியும் இவருக்கு வழங்கப்பட்டது. அந்தத் தொகையை அப்படியே இஸ்லாமிய சமயப் பணிகளுக்காக வழங்கிவிட்டார்.

'உபைதி' அறக்கட்டளையை நிறுவியுள்ள டான்ஸ்ரீ உபைதுல்லா இதன் மூலம் பல பொதுப்பணிகளுக்கு உதவி வருகிறார்.



● ம.இ.கா.வில் நீண்டகால சேவையை வழங்கியவர்களில் ஒருவ
ரான வீ.ஜெ. பாலசுந்தரம் தேசியத் தலைவரின் தங்கப் பதக்க விருதை டத்தோஸ்ரீ (டத்தோ) சாமிவேலு 1985இல் ம.இ.கா. மாநாட்டில் வழங்கிய போது, எடுத்தப் படம்.. அருகில் காணப் படுபவர் ம.இ.கா. மாநாட்டு சபாநாயகர் டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லா.






# சாமிவேலுவின் வருகையும் துரித வளர்ச்சியும்

**ம.** இ.கா. இயக்கத்தை தொடக்க நாள் முதல் கூர்ந்து நோக்கி வருகிறவர்களுக்கு டத்தோஸ்ரீ சாமிவேலுவின் கால கட்டம் வியப்பை மலைப்பை மகிழ்வை அளிப்பதை உணரலாம்.

கட்சியில் அவருடைய வளர்ச்சி...

அவரால் கட்சி பெற்ற வளர்ச்சி...

சாதனைகள் புரியவேண்டும் - சமுதாயத்திற்கு செயல் வடிவில் திட்டங்கள் வகுத்துத் தரவேண்டும் எனும் முனைப்போடு இலட்சிய வெறியோடு நடமாடிக் கொண்டிருப்பவர் அவர்.

சாதாரண தொண்டனாக இருந்து தலைவன் ஆனவர். அடிமட்ட உணர்வுகளைப் புரிந் திருப்பவர்.

சாதாரண - எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். ஏழைகளின் - தொழிலாளர்களின் உணர்ச்சிகளை வாழ்க்கைப் போராட்டங்களை உணர்ந்திருப்பவர்.

தமது 23 ஆவது வயதில் ம.இ.கா. பத்துகேவ்ஸ் கிளையில் உறுப்பினராகி கிளைச் செயலாளர் ஆனவர். 1964 இல் சிலாங்கூர் ம.இ.கா.வில் செயலவை உறுப்பினர் ஆனவர். பின்னர் அதே ஆண்டில் ம.இ.கா. மத்திய செயற் குழுவுக்கும் தேர்வு பெற்றவர். 1964 இல் அப்போதைய தேசிய தலைவா துன் சம்பந்தன் அன்பைப் பெற்று தேசிய கலாசாரப் பிரிவு தலைவராக நியமனம் பெற்றவர். 1967 இல் சிலாங்கூர் மாநில செயலாளராக வெற்றி பெற்றவர். பிறகு, சிலாங்கூர் மாநில தலைவரானவர். 1975 இல் தேசிய உதவித் தலைவராகவும், 1977 ஆம் ஆண்டில் தேசிய துணைத் தலைவராகவும் வாகை சூடியவர்.

இப்படி படிப்படியாகக் கட்சியில் தம்மை வளர்த்துக் கொண்டவர்.





18 வயதில் சாமிவேலு



மலேசிய தொலைக்காட்சியில் தொடர்ந்து ஏழுவருடங்கள். செய்திகள் வாசித்து வந்திருக்கிறார் டத்தோ ஸ்ரீ சாமிவேலு. நாடாளுமன்ற உறுப்பினர் ஆனவுடன் 1974ல் செய்திகள் வாசிப்பதை நிறுத்திக் கொண்டார். கட்டுரைகள் கவிதைகள் எழுதுவதிலும் நாட்டம் கொண்டவர்.

ம.இ.காவின் ஆறாவது தேசியத் தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஆறாவது ஆண்டிலேயே 1979 அக்டோபர் 12 இல் மறைவை எய்தியவுடன்...

துணைத் தலைவர் டத்தோ சாமிவேலு தலைவர் பொறுப்பை ஏற்றார்.

தன் செயல் திட்டங்களை நிறைவேற்ற ஒரு களம் அவருக்குத் தேவைப்பட்டது.

அந்த "களம்" தலைமைப் பதவி மூலம் கிடைத்தது.

டத்தோஸ்ரீ சாமிவேலுவின் திட்டங்கள் ஒவ்வொன்றாக அமல் படுத்தப்பட்டன.

ஒவ்வொரு திட்டத்தையும் டத்தோஸ்ரீ சாமிவேலு அறிவித்தபோது செயலுரு பெறுமா என ஐயத்தோடு நோக்கியவர்கள் விழிகள் விரியும் வகையில் வரிசையாக அவை முழுமை பெற்று வந்தன.

அவர் அறிவித்த - ஈடுபட்ட பொருளாதாரத் திட்டங்கள் வியக்கத்தக்க வகையில் வெற்றி பெற்றிருக்கின்றன.

இந்திய சமுதாயத்தின் சொத்தாக்க, வாண்டோ கல்லூரிக்காக 1983 ஆம் ஆண்டில் மட்டும் 12 லட்சம் வெள்ளியை கிளைகள் மூலமாக - ஆதரவாளர்கள் மூலமாக திரட்டித் தந்திருக்கிறார்.

தொழிலாளர்கள் சொந்த வீடுகளைப் பெற்றிருக்க வேண்டும் எனும் தமது லட்சியத்தை நிறைவேற்ற தொழிலாளர் மேம்பாட்டு கூட்டுறவுக் கழகத்தை நிறுவினார்.

பொருளாதாரத் துறையில் இந்திய சமூகம் பின் தங்கிவிடக் கூடாது எனும் வேட்கையில் தொலைநோக்கோடு "மைக்கா ஹோல்டிங்ஸ்" எனும் மூலதன முதலீட்டு நிதி நிறுவனத்தை அமைத்தார். மூன்றே மாதங்களில் நாடு முழுவதும் வலம் வந்து பங்குதாரர்களைச் சேர்த்து திட்டமிட்டதுபோல பத்து கோடி வெள்ளியைத் திரட்டித் தந்தது மிகப் பெரிய சாதனை.

தனி ஒரு மனிதன் இந்தக் குறுகிய காலத்தில் இத்தனை பெரிய தொகையைத் திரட்ட முடியும் என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒரு செயலாகும்.

"இந்திய சமூகத்தில் இருக்கின்ற கல்விமான்களும், செல்வந்தர்களும், அரசியல்வாதிகளும் இணைந்து செயல்பட்டால் நமது நிலைமையே வேறு நிலையில் இருக்கும்.

"கடந்த பத்தாண்டு காலமாக சமுதாயத்தின் மீது படித்தவர்கள் காட்டுகின்ற அக்கறையைப் போன்று கடந்த காலத்திலும் காட்டப்பட்டிருந்தால் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை இந்திய சமூகம் எட்டிப் பிடித்திருக்க முடியும்.

"50 ஆண்டுகளுக்கு முன்பு படித்துப் பட்டம் பெற்று உயர்ந்த நிலையில் இருந்தவர்கள் கீழ்நிலையில் உள்ளவர்களைப் பற்றி நினைத்துப் பார்த்ததில்லை.

ஆனால் இன்றைய கல்விமான்கள் சமுதாயத்தின் நாடி நரம்புகளைப் பிடித்துப் பார்க்கிறார்கள். இந்திய சமுதாயத்தின் வளர்ச்சிக்கானத் திட்டங்களை வகுத்துக் கொடுக்கிறார்கள். அரசியல்வாதிகளுக்கு இருக்கும் ஆற்றலும், கல்விமான்களுக்கு இருக்கும் அறிவும், செல்வந்தர்களின் பணமும் ஒன்றிணைந்தால் சமுதாயத்தின் தலையெழுத்தையே மாற்றி அமைத்துவிட முடியும்"




**டேஃப் கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா**

டேஃப் கல்லூரியின் வரலாற்று சிறப்புமிக்க முதலாவது பட்டமளிப்பு வைபவம் 20.11.1994ல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரியின் நிறுவனரும் ம.இ.கா. தேசியத் தலைவருமான டத்தோஸ்ரீ டாக்டர் சாமிவேலுவிடமிருந்து மாணவி ஒருவர் டிப்ளோமா பெற்றுக் கொள்ளும் இனிய காட்சி

டத்தோ ஸ்ரீசாமிவேலு முன்பு நிகழ்த்திய இந்த உரை அவரின் மன உணர்வைப் பிரதிபலிக்கிறது.

1936 ஆம் ஆண்டில் மார்ச் 8 இல் குளுவாங்கில் பிறந்து பத்து ஆராங்கில் வளர்ந்த ச.சாமிவேலு வாழ்க்கையின் அடிமட்டத்திலிருந்து உயர்ந்தவர்.

பகலில் வேலைபார்த்துக் கொண்டு மாலை நேர வகுப்புகளில் சேர்ந்து படித்து தன் திறனை வளர்த்துக் கொண்டவர்.

கட்டடக் கலைத்துறை நிறுவனத்தில் பணியாற்றியபோது அந்தத் தொழில் சம்பந்தப்பட்ட விபரங்களை - நுணுக்கங்களைக் கற்றார். 1970-71 ஆம் ஆண்டுகளில் லண்டன் சென்று கட்டடக் கலைத் துறையில் பட்டம் பெற்றுத் திரும்பும் அளவுக்கு தன்னை வளர்த்துக் கொண்டார்.

பொது வாழ்க்கையிலும் இளமைப் பருவத்திலேயே ஆர்வம் காட்டினார். நாடக மன்றங்கள் கலை, இலக்கிய, சமூக அமைப்புகள்... இப்படி பல அமைப்புகளோடு நெருக்கமானத் தொடர்பும் பொறுப்பும் வகித்து வந்திருக்கிறார்.



பூச்சோங் சுத்தசமாஜ வளர்ச்சி நிதிக்காக 1964ம் ஆண்டில் கோலாலம்பூர் நகரமண்டபத்தில் அரங்கேறிய தந்தையின் குரல் மேடை நாடகத்தில் தற்போதைய அமைச்சர் (டத்தோ ஸ்ரீ ) சாமிவேலு மன்னன் மகேந்திரனாக நடித்தபோது எடுக்கபடம் இது



மலேசியாவுக்கு அறிஞர் அண்ணா 1965ல் வருகை தந்திருந்தபோது கோலாலம்பூர் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவினர் மெர்தேகா அரங்கத்திற்கு அறிஞர் அண்ணாவை அழைத்து வரும் காட்சி இது. வரவேற்புக் குழுவின் தலைவரும் அப்போதைய தமிழ்நேசன் பிரதம ஆசிரியருமான முருகு. சுப்பிரமணியன், வரவேற்புக் குழுவின் விளம் பரப்பகுதி செயலாளர் ச. சாமிவேலு, வரவேற்புக் குழுவைச் சேர்ந்த வி. கோவிந்தராஜு, கே. கே. சாமி ஆகியோரையும் படத்தில் காணலாம்.



கோலாலம்பூர் வளரும் கலைஞர் கலைக்குழுவின் தலைவராகப் பொறுப் பேற்றிருந்த (டத்தோ ஸ்ரீ) சாமிவேலு 1966ம் ஆண்டில் இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது அக்குழுவினர் [illegible]லிருந்து நடித்தபோது பிடித்தபடம். படத்தில் மாலையுடன் (டத்தோ ஸ்ரீ) சாமிவேலு. முன்வரிசையில் நான்காவதாக அமர்ந்திருப்பவர் நூலாசிரியர் ப. சந்திரகாந்தம்.

ம.இ.கா.வில் முழுமையாக ஈடுபட்டார்.

1960இல் பத்துகேவ்ஸ் கிளையில் உறுப்பியம் பெற்ற பிறகு 1962 இல் கிள்ளான் லட்சுமணா மண்டபத்தில் நடைபெற்ற ம.இ.கா. பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டு மனதில் பட்ட கருத்துகளைப் பேராளர்கள் முன்னிலையில் துணிச்சலாகத் தெரிவித்தார்.

அவருடைய பேச்சும் மன உறுதியும் வேட்கையும் அப்போதைய தேசியத் தலைவர் துன் சம்பந்தனைக் கவர்ந்தது.

இருவரின் சந்திப்பும் தொடர்ந்தது.

“மலேசியா” அமைப்பு கண்டபோது அண்டை நாடான இந்தோனேசியா எதிர்ப்பு கொடுத்த நேரம் அது. அந்த எதிர்ப்பு கடுமையாகப் போவதை உணர்ந்த இங்குள்ள அம்னோ ம.இ.கா., ம.சீ.ச. இளைஞர்கள் ஒன்றுகூடி இந்தோனேசிய தூதரகம் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அந்த இளைஞர் குழுவில் சாமிவேலுவும் ஒருவர்.

தூதரக கம்பத்தில் பறந்து கொண்டிருநத இந்தோனேசியக் கொடியை கம்பத்தில் ஏறி இறக்கினார் சாமிவேலு

பின்னர் அங்குள்ளவர்களால் அது தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

மறுநாள் எல்லா மொழிப் பத்திரிகைகளிலும் அந்தச் செய்தி வெளிவந்திருந்தது.

அந்தச் செயல் ம.இ.கா. வட்டாரத்தில் சாமிவேலுவுக்கு நல்ல அறிமுகத்தைத் தந்திருந்தது.

அதற்கும் அடுத்த ஆண்டான 1964 இல் மத்திய செயலவைக்கு ச.சாமிவேலு தேர்ந் தெடுக்கப்பட்டார்..

(1966 ஆகஸ்ட் 11 இல் ஜாக்கர்த்தாவில் அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திடப்பட்டவுடன் இரு நாடுகளுக்கிடையில் நல்லுறவு முகிழ்க்கத் தொடங்கியது).

1964 ஆம் ஆண்டில் செந்தூல் சட்டமன்ற தொகுதிக்குப் போட்டியிடும் வாய்ப்பு கடைசி நேரத்தில் இவரை விட்டு நழுவிச் சென்றது. பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் சுங்கை சிப்புட் நாடாளுமன்றத் தொகுதியில் நின்று வெற்றி பெற்றிருக்கிறார்.

1974 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐந்து முறையும் அதே தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் தகுதியைப் பெற்று வந்திருக்கிறார்.

1974 ஆம் ஆண்டில் கட்சியில் புதிதாகச் செயலாளர் பொறுப்பை மேற்கொண்ட (டத்தோ) சி.சுப்ரமணியம் (எம்.ஏ.பட்டதாரி) டாமன்சாரா நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட அப்போதைய தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தால் வாய்ப்பு தரப்பட்டிருந்தது.

கட்சிக்குப் புதிதாக வந்த பொருளாதார நிபுணர் (டத்தோ) பத்மநாபனுக்கு நாடாளுமன்றத்தில் போட்டியிட வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தது.

1974 பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அறிவிக்கப்பட்ட அமைச்சரவையில் செனட்டரும் கட்சியின் துணைத் தலைவருமான டத்தோ ஆதிநாகப்பன் சட்டத்துறை துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். சி. சுப்ரமணியம் தொழிலாளர் ஆள்பல அமைச்சின் நாடாளுமன்ற செயலாளராகப் பொறுப்பு வகிக்க வாய்ப்பு தரப்பட்டது.



டத்தோ சுப்ரா



டத்தோ பத்மா



**(டான்ஸ்ரீ) டத்தோ ஆதிநாகப்பன்**

1976 ஜனவரி 15 இல் பிரதமராக டத்தோ உசேன் ஒன் பொறுப்பேற்றவுடன் டத்தோ ஆதிநாகப்பனை முழு அமைச்சராக்கினார்.

தேசியத் துணைத்தலைவர் டத்தோ ஆதி நாகப்பன் 1976 மே 9 இல் காலமானவுடன்...

ம.இ.கா.வில் டத்தோ சாமிவேலுவின் நிலை பற்றிப் பேசப்பட்டது.

அதற்கும் முதல் ஆண்டில் 1975 இல் நடைபெற்ற ம.இ.கா. பேராளர் மாநாட்டில் டத்தோ சாமிவேலு மூன்று உதவித் தலைவர்களில் ஒருவராகத் தேர்வுபெற்று முதலிடம் வகித்து வந்தார்.

டத்தோ ஆதி நாகப்பன் மறைவுக்குப் பின் செயலாளர் சி.சுப்பிரமணியன் துணை அமைச்சராகவும், நாடாளுமன்ற உறுப்பினர் கு.பத்மநாபன் நாடாளுமன்ற செயலாளராகவும் பணிபுரிய அரசாங்கப் பொறுப்புகள் தரப்பட்டன.

(1974 ஆம் ஆண்டில் நெகிரி மாநில தெலுக் கெமாங் தொகுதியில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்ட டத்தோ பத்மா தொடர்ந்து அதே தொகுதியில் போட்டியிட்டு 16 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக சேவையாற்றினார். 1976 ஆம் ஆண்டு முதல் துணை அமைச்சராகப் பொறுப்பேற்ற டத்தோ பத்மநாபன் ம.இ.கா.வின் தேசிய உதவித் தலைவராகவும் பதவி வகித்தார்).

சுங்கை சிப்புட் நாடாளுமன்ற உறுப்பினரும் ம.இ.கா. தேசிய உதவித் தலைவருமான டத்தோ சாமிவேலுவுக்கு எந்த அரசாங்கப் பதவியும் அப்பொழுது தரப்படவில்லை.

1977 ஆம் ஆண்டில் கட்சியின் துணைத் தலைவர் போட்டிக்கு டத்தோ சாமிவேலு தன்னைத் தயார்படுத்திக் கொண்டார்.

தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் ஆசியோடு பொதுச் செயலாளரும் துணை அமைச்சரு மான (டத்தோ) சுப்ரமணியம் கட்சியின் இரண்டாவது பெரிய பதவியான துணைத்தலைவர் போட்டியில் இறங்கினார்.

டத்தோ சாமிவேலு அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே!

ம.இ.கா.வின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் போட்டியாக அது கருதப்பட்டது.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் முழு ஆதரவோடு துணை அமைச்சர் சுப்ரா போட்டியிட்டார்.

டத்தோ சாமிவேலுவுக்கு 553 வாக்குகளும், டத்தோ சுப்ராவுக்கு 527 வாக்குகளும் கிடைத்தன. 26 வாக்குகள் வித்தியாசத்தில் டத்தோ சாமிவேலு வாகை சூடினார்.

அதற்கும் அடுத்த ஆண்டு 1978 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் டாமன்சாரா நாடாளுமன்றத் தொகுதியை சுப்ரா எதிர்க்கட்சியிடம் இழக்க நேரிட்டது.

சுப்ராவைப் பொறுத்தமட்டில் அது ஒரு துரதிருஷ்ட ஆண்டாக அமைந்தது. நாடாளுமன்றப் பதவியோடு துணை அமைச்சர் பதவியும் சுப்ராவை விட்டு அகன்றது.

சுப்ராவின் சேவைகளுக்காக அர்ப்பண உணர்வுகளுக்காக அதிர்ஷ்ட தேவதை மீண்டும் அவரைத் தேடி வந்தாள்.

செனட்டர் ஆனார். பின் சிகாமட் தொகுதியில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட வாய்ப்பும் கிடைத்தது. வெற்றியும் பெற்றார். மீண்டும் டத்தோ சுப்ரா துணை அமைச்சர் ஆனார். 1990 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் டத்தோ சுப்ராவுக்கு நாடாளுமன்றத்தில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை. துணை அமைச்சராக இருந்த டத்தோ பத்மாவுக்குப் நாடாளுமன்றத் துக்குப் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஆனாலும் டத்தோ சுப்ரா செனட்டராக நியமிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு துணை அமைச்சராகப் பொறுப்பேற்றார். 1994 ஆம் ஆண்டு தொடக்கத்தில் அவரது செனட் பதவி காலம் முற்றுப் பெற்றதால் துணை அமைச்சர் பொறுப்பையும் இழக்க நேர்ந்துள்ளது.



* பிரதமர் டாக்டர் மகாதீர் - டத்தோஸ்ரீ சாமிவேலு

(1990 இல் பொதுத் தேர்தலில் காப்பார் தொகுதியில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வென்ற டத்தோ மகாலிங்கம் துணை அமைச்சரானார். 1990 இல் தெலுங் கெமாங் தொகுதியில் போட்டியிட்டு வென்ற பேராசிரியர் மாரிமுத்து 1994 இல் விவசாயத்துறை துணை அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார்).



டத்தோ மகாலிங்கம்



பேராசிரியர் (டாக்டர்) டி. மாரிமுத்து

டத்தோ சாமிவேலு 1978 இல் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரானவுடன், ஊராட்சி வீடமைப்புத்துறை துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அதற்கும் அடுத்த ஆண்டில் 1979 அக்டோபர் 12 இல் தேசியத் தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகம் மறைவு எய்தியவுடன் டத்தோ சாமிவேலு தேசியத் தலைவர் பொறுப்பை ஏற்றார். மற்றொரு அரசாங்கப் பதவியும் அவரை நாடி வந்தது.

பொதுப்பணி அமைச்சராக 1979 அக்டோபர் 21 இல் தம் 43 ஆவது வயதில் பொறுப்பேற்றார்.

டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் மரணத்துக்குப் பின் கட்சியின் இடைக்காலத் தலைவராக இருந்தவர் 1981 மார்ச் 26 இல் தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசாங்கத் தூதுக் குழுவில் இடம்பெற்று உலகின் பல பகுதிகளுக்குச் சென்றிருக்கிறார் டத்தோஸ்ரீ சாமிவேலு.

1979 ஆம் ஆண்டில் சிலாங்கூர் சுல்தான் இவருக்கு "டத்தோ" விருதை வழங்கியிருக்கிறார். 1980 இல் ஜோகூர் சுல்தானும் "டத்தோ" விருதை இவருக்குத் தந்து சிறப்பித்திருக்கிறார்.

1982 இல் கொரிய குடியரசு அரசாங்கம் டத்தோஸ்ரீ சாமிவேலுவுக்கு அரச சேவை விருதை வழங்கியிருக்கிறது. 1985 இல் இத்தாலிய அரசாங்கம் உயரிய சேவை விருதை வழங்கி கௌரவித்திருக்கிறது.

1987 ஆம் ஆண்டின் உலக மாமனிதர் எனும் கௌரவம் அமெரிக்காவில் இவருக்குக் கிடைத்திருக்கிறது.

இவை இவரது தன்னலமற்ற சேவைகளுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாகும்.

தற்போதைய பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் மகாதீர் தலைமையில் உள்ள அமைச்சரவையின் முழு ஆதரவோடு பொதுப்பணி அமைச்சர் டத்தோ சாமிவேலு பொறுப்பில் கட்டி முடிக்கப்பட்ட 13.4 கிலோ மீட்டர் தூரமுள்ள பினாங்கு பாலம் கம்பீரமாகக் காட்சி தந்து கொண்டிருக்கிறது.

நெடுஞ்சாலை அமைப்புத் திட்டப்பணிகள் மளமளவென நடந்திருக்கின்றன.

மலேசிய மேம்பாட்டிற்கு டத்தோஸ்ரீ சாமிவேலு வழங்கியிருக்கும் சேவைகளையும் அர்ப்பணிப்பையும் அங்கீகரிக்கும் வகையில் சி.ஐ.ஓ.பி. எனப்படும் பிரிட்டிஷ் நிர்மாணிப்புக் கழகம் மலேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சாமிவேலுவுக்கு கௌரவ ஃபெலொஷிப் விருதை 1989 ஜூ 9 இல் வழங்கி கௌரவித்திருக்கிறது.

## "டத்தோஸ்ரீ"

பேரா சுல்தான் தமது 61 ஆவது பிறந்த நாளில் (19.4.1989) ம.இ.கா. தேசியத் தலைவரும் பொதுப் பணி அமைச்சருமான டத்தோ சாமிவேலுவுக்கு "டத்தோஸ்ரீ" எனும் விருது வழங்கி சிறப்பித்துள்ளார். மேன்மை தங்கிய பேரா சுல்தான் 1989 ஏப்ரல் 26 முதல் மலேசியாவின் பேரரசராக அரியணையில் அமர்ந்துள்ளார்.

## டாக்டர் பட்டம்

அமைச்சரவை மாற்றத்தில் எரிசக்தி, தொலைத் தொடர்பு, அஞ்சல்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் டத்தோஸ்ரீ சாமிவேலுவுக்கு இந்தியாவின் புகழ்பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வைர விழாக் கொண்டாட்டத்தின்போது (1989 டிசம்பர் 14இல்) டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டிருக்கிறார்.

பேச்சாற்றலும், எழுத்தாற்றலும், செயலாற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற சாதனைத் தலைவர் சமுதாயக்காவலர் டத்தோஸ்ரீ சாமிவேலுவின் காலகட்டத்தில் இங்குள்ள இந்திய சமுதாயம் பீடுநடை போடவேண்டும்.



* டத்தோஸ்ரீயும் டத்தின்ஸ்ரீயும்

## 'மகளிர் மாமணி'

## டத்தின்ஸ்ரீ இந்திராணி



டத்தோ ஸ்ரீ சாமிவேலுவின் துணைவி டத்தின் ஸ்ரீ இந்திராணி சாமிவேலு மலேசிய இந்திய மாதர்களின் மாமணியாகத் திகழ்கிறார். 'மகளிர் மாமணி' என்று சிறப்பித்துக் கூறப்படும் இவருக்கு 'மங்கையர் திலகம்' என்ற விருதும் கிடைத்திருக்கிறது இவரது சமூக இலக்கியப் பணிகளுக்காக 'டாக்டர்' பட்டமும் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நேசன் தினசரியின் இயக்குநர் வாரியத்தலைவராகப் பொறுப்பேற்றுள்ள டத்தின் ஸ்ரீ இந்திராணி பொது நிகழ்ச்சிகளில் உற்சாகத்துடன் பங்கேற்று உரையாற்றி வருகிறார்.

இலக்கிய அமைப்பான பாரதிதாசன் குழு சார்பாக பல இலக்கிய நிகழ்ச்சிகளையும் சமூகப் பணிகளுக்காக அமைக்கப்பட்ட ஸ்ரீ சுருதி மகளிர் நல மன்றத்தின் மூலம் சமுதாய விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் பொறுப்பேற்று நடத்தி வருகிறார்.

✷ ஆண்டுதோறும் எழுத்தாளர் தினத்தை' கோலாகல மாகக் கொண்டாட முடிவெடுத்து முதல் நிகழ்ச்சியாக 1994 மே. 25ல் எழுத்தாளர் தின நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திக் காட்டி யிருக்கிறார் டத்தின் ஸ்ரீ இந்திராணி சாமிவேலு.

## நேதாஜி மண்டபம்

ம.இ.கா. அமைப்புக்கூட்ட முதல், தொடர்ந்து நடைபெற்ற ம.இ.கா. மாநாடுகளில் நேதாஜி மண்டபம் பற்றி பேராளர்கள் எழுப்பி வந்த கேள்விக்கு சரியாக 44 ஆண்டுகளுக்குப் பின்னர் 1990 இல் மனநிறைவான பதில் கிடைத்திருக்கிறது. ம.இ.காவின் ஏழாவது தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ சாமிவேலுவின் தீவிர முயற்சியில் ம.இ.கா. தலைமையகக் கட்டடத்தின் அடித்தளத்தில் நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம் ஒன்று உருவாகியுள்ளது. அந்த மண்டபத்திற்கு "நேதாஜி மண்டபம்" எனும் பெயர் சூட்டி ம.இ.கா.வின் தொடக்கக்காலத் தலைவர்களின் லட்சியக் கனவுகளை நனவாக்கியிருக்கிறார் டத்தோ ஸ்ரீ சாமிவேலு.

சுமார் இரண்டு லட்சம் வெள்ளி செலவில் ம.இ.கா. தலைமையகக் கட்டடத்தின் அடித்தளப் பகுதியில் (முன்பு கார் நிறுத்த பயன்படுத்தப்பட்ட இடம்) உருவாகியுள்ள இந்த "தேவான் நேதாஜி" மண்டபத்தில் சுமார் 500 பேர் அமரலாம்.

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் இந்த நேதாஜி மண்டபம் செயல்பட்டு வருகிறது. பொது நிகழ்ச்சிகள் பல அடுத்தடுத்து இந்த மண்டபத்தில் நடைபெற்றும் வருகிறது.

"நேதாஜி மண்டபத்தில்தான் ம.இ.கா. தலைமையகம் இயங்கும்" என்று ம.இ.கா. அமைப்புக் கூட்டத்தில் அதன் முதல் தலைவர் ஜான் திவி 1946 ஆகஸ்ட் 4 ஆம் தேதி அறிவித்திருந்தார்.

1955 இல் தலைமைப் பொறுப்பேற்ற (துன்) வீ.தி. சம்பந்தன், "நேதாஜி மண்டபம் காண்பது நமது லட்சியக் கனவு" என்று உரையாற்றியிருந்தார்.

1990 இல் தான் ம.இ.கா. தலைமையகக் கட்டடத்தில் நேதாஜி மண்டபம் இயங்கத் தொடங்கியிருக்கிறது.

✷ ✷ ✷

# ராஜ ராஜன் சிலையை தமிழகத்தில் டத்தோஸ்ரீ சாமிவேலு திறந்து வைத்தார்





1995 ஜனவரி 1 முதல் 5 வரை தமிழகத்தின் தஞ்சாவூரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் முதல் நாளன்று அங்கு அமைக்கப்பட்டிருந்த ராஜ ராஜ சோழன் சிலையை மலேசிய இந்தியர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான டத்தோஸ்ரீ சாமிவேலு அவர்கள் அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்.

டத்தோஸ்ரீ சாமிவேலு மின் விசையை இயக்கி ராஜ ராஜ சோழன் சிலையைத் திறந்து வைப்பதையும், அருகில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவையும் படத்தில் காணலாம்.

1984 செப்டம்பர் 17ல் ராஜ ராஜ சோழ மன்னனின் 1000 ஆவது நினைவு முடிசூட்டும் விழா தமிழகத்தின் தஞ்சாவூரில் கொண்டாடப்பட்டபோது அவ்விழாவை அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி துவக்கி வைத்ததோடு, ராஜ ராஜ சோழன் சிலைக்குப் பொன் கிரீடத்தையும் அன்றைய தினம் அணிவித்தார் பாரதப் பிரதமர்.

ராஜ ராஜ சோழன் கி.பி. 1014ல் மறைவெய்தியவுடன் அவரது புதல்வர் ராஜேந்திர சோழன் அரியணை அமர்ந்தார். கி.பி. 1025-ல் ராஜேந்திர சோழனின் வலிமைமிக்க கடற்படை கடாரத்தையும் (வட மலாயாவில் உள்ள கெடா மாநிலப் பகுதி) தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்து புலிக்கொடியை பறக்க விட்டிருக்கிறது.

சோழப் பேரரசுக்கும் அன்றைய வட மலாயாவுக்கும் (மலேசியா) சரியாக 970 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்டிருந்த உறவு இன்னும் மறக்கப்படவில்லை. வரலாற்று ஏடுகளில் மறைக்கப்படவும் இல்லை.

✷ ✷ ✷



# மேலவை சபாநாயகர் பொறுப்பேற்றுள்ள முதல் மலேசிய இந்தியர் டான்ஸ்ரீ ஜி. வடிவேலு

மலேசிய இந்தியர் காங்கிரஸ் கட்சியின் தேசியப் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள டான்ஸ்ரீ ஜி. வடிவேலு அவர்கள் செனட் (மேலவை) சபையின் சபாநாயகராக 1991ல் பொறுப்பேற்கும் வாய்ப்பையும் பெற்றிருக்கிறார். மேலவையில் சபாநாயகர் பொறுப்பேற்கும் முதல் மலேசிய இந்தியராகவும் திகழ்கிறார் டான்ஸ்ரீ ஜி. வடிவேலு.

ம.இ.கா.வோடு நீண்ட காலமாகத் தொடர்பு கொண்டுள்ள டான்ஸ்ரீ ஜி. வடிவேலு 1974ல் சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினரானார். தொடர்ந்து இரு தவணைகள் சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த டான்ஸ்ரீ ஜி. வடிவேலு 1991ல் மேலவை உறுப்பினராக நியமனம் பெற்றதோடு மேலவையின் சபாநாயகர் பொறுப்பையும் ஏற்றார்.

கோலாலம்பூர் செந்தூல் பகுதியில் பிறந்து வளர்ந்த ஜி. வடிவேலு லண்டனில் ஆசிரியர் துறை பயிற்சி பெற்றுத் திரும்பி ஆங்கிலப் பள்ளி ஆசிரியராக தம் வாழ்க்கைத் தொழிலை தொடக்கத்தில் மேற்கொண்டார். பின்னர் சட்டம் பயின்று வழக்குரைஞர் ஆனார். பொதுப்பணிகளில் தொடக்க கால முதல் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார் டான்ஸ்ரீ ஜி. வடிவேலு.

குறிப்பு: 1995 ஜூன் 12 வரையில் மேலவை தலைவர் பொறுப்பை இவர் வகித்து வந்தார்.



1966 ஏப்ரல் 16இல் கோலாலம்பூர் நகரின் மையத்தில் அமைந்துள்ள துங்கு அப்துல் ரஹ்மான் மண்டபத்தில் முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை முதலாவது மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் துவக்கி வைத்தார்.

* * *

# லண்டனில் ம.இ.கா. மன்றம்

மலேசியாவுக்கு வெளியே மலேசிய இந்தியர்களில் சிலர் ஒன்று கூடி அமைத்திருக்கும் முதல் மன்றம் லண்டன் ம.இ.கா. மன்றமே!

லண்டனுக்குப் படிக்கச் சென்ற மாணவர்களில் சிலர் அமைத்த அந்த லண்டன் ம.இ.கா. மன்றம் 1984ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது.

பொதுப்பணிகளில் மலேசியாவில் ஈடுபட்டிருந்த சில துடிப்பான இளைஞர்கள் லண்டனில் உயர் கல்வி கற்ற நேரத்தில் அமைத்த மன்றமே லண்டன் ம.இ.கா. மன்றம்.

இந்த மன்றத்தின் அமைப்புக் கூட்டம் 1984 மார்ச் 4ஆம் தேதியன்று லண்டன் இல்லம் (லண்டன் ஹவுஸ்) வில்லியம் குடினாப் மண்டபத்தில் நடைபெற்றது.

"இங்கிலாந்தில் உள்ள மலேசிய இந்தியர்களை லண்டன் ம.இ.கா. மன்றம் ஒன்று சேர்க்கும். உயர் கல்வி பயில்வதற்காக லண்டன் வருகிற இந்திய மாணவர்களை வரவேற்கவும், அவர்களுக்காக தற்காலிக தங்கும் வசதியையும், மற்றும் தேவைப்படும் பயண ஏற்பாடுகளையும் கவனிப்பதிலும் லண்டன் ம.இ.கா. மன்றம் துணையாக இருக்கும்" என்று அமைப்புக் குழு தலைவர் வி. நடராஜா உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

அதன் பின்னர் லண்டன் ம.இ.கா. மன்றத்தின் சட்ட திட்டம் பரிசீலிக்கப்பட்டு உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

லண்டன் ம.இ.கா. மன்றத்தின் முதல் நிர்வாகக் குழு வருமாறு:

தலைவர் வி. நடராஜா, துணைத் தலைவர் டி. ராஜகோபால், செயலாளர் இராம. வீரசிங்கம், துணைச் செயலாளர் ஆர். லட்சுமியா, பொருளாளர் வீஜி. லிங்கம், செயலவை உறுப்பினர்கள்: எஸ். பன்னீர் செல்வம், கே. அய்யாசாமி, கே. பத்மநாபன், குமாரி, எஸ். சாந்தி, குமாரி எஸ். பாமா, உட்கணக்காய்வாளர்கள்: செல்வராஜா – எஸ். இளங்கோவன்.

லண்டன் ம.இ.கா. மன்றச் செயலாளர் இராம வீரசிங்கம் உரை நிகழ்த்துகையில் வெளி நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு இருக்க வேண்டிய ஈடுபாடு குறித்தும் பேசினார்.

சுமார் 50 பேர் அந்த அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

# இரண்டாம் பாகம்

- நாட்டுச் சுதந்திரத்துக்கு முன்னர் நடைபெற்ற முனிசிபல் – சட்டமன்ற பொதுத் தேர்தல்களும் சுதந்திரத்துக்குப் பின்னர் நடைபெற்ற முதல் நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களும்.
- தொடக்ககால மலாயா இந்தியர் பிரதிநிதிகள்
- தொடக்ககால மலாயா இந்தியர் இயக்கங்கள்
- முதல் இந்தியர் சங்கம்
- மலேசிய இந்தியர்கள் : வரலாற்றுக் குறிப்புகள்
- உயர்விருதுகள் பெற்ற மலேசிய இந்தியர்கள்
- சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள்

99275

**1995 ஏப்ரல் 25-ல் நடைபெற்ற நாட்டின் 9-வது பொதுத்தேர்தலில் 100 விழுக்காடு வென்று சாதனை படைத்த ம.இ.கா. வேட்பாளர்கள்.**

**நாடாளுமன்ற வேட்பாளர்கள்:**

1. டத்தோஸ்ரீ ச. சாமிவேலு (சுங்கை சிப்புட்)
2. டத்தோ சி. சுப்ரமணியம் (சிகாமட்)
3. டத்தோ க. குமரன் (தாப்பா)
4. டத்தோ எம். மகாலிங்கம் (சுபாங்)
5. திரு. ஜி. பழனிவேலு (உலுசிலாங்கூர்)
6. டாக்டர் எல். கிருஷ்ணன் (தெலுக் கெமாங்)
7. டாக்டர் லீலா ராமா (காப்பார்)

**சட்டமன்ற வேட்பாளர்கள்:**

1. எஸ்.எஸ். ராஜகோபால் (சிலாங்கூர் - கோத்தாராஜா)
2. க. சிவலிங்கம் (சிலாங்கூர் - ஈஜோக்)
3. எஸ். கோபாலகிருஷ்ணன் (சிலாங்கூர் - சுங்கை துவா)
4. ஜி. ராஜு (பேராக் - ஊத்தான் மெலிந்தாங்)
5. எஸ். வீரசிங்கம் (பேராக் - சுங்கை)
6. எம். முத்தையா (பேராக் - பாசீர்பாஞ்சாங்)
7. கே.எஸ். பாலகிருஷ்ணன் (ஜோகூர் பாசிர்கூடாங்)
8. எஸ். கிருஷ்ணசாமி (ஜோகூர் - தெங்காரோ)
9. எம். சுந்தரம் (நெகிரி செம்பிலான் - ஜெரம் பாடாங்)
10. செல்ல கிருஷ்ணன் (நெகிரி - சிருசா)
11. வி. சரவணன் (கெடா - புக்கிட் செலம்பாங்)
12. டாக்டர் ஜோ பெர்ணான்டஸ் (கெடா - லூனாஸ்)
13. டத்தோ என். அருணாசலம் (மலாக்கா - புக்கிட் அசகான்)
14. ஆர். சின்னத்தம்பி (பகாங் - சபாய்)
15. டாக்டர் ஜே. ரஜபதி (பினாங்கு - பிறை)

## நாடாளுமன்ற உறுப்பினர்கள்:

### * டத்தோ ஸ்ரீ சாமிவேலு (சுங்கை சிப்புட்)



*1974-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுங்கை சிப்புட் தொகுதியில் போட்டியிட்டு வென்று, நாடாளுமன்ற உறுப்பினரானவர். தொடர்ந்து ஆறாவது தவணையாக அதே சுங்கை சிப்புட் தொகுதியில் போட்டியிட்டு வாகை சூடி அமைச்சராகவும் ம.இ.கா. தேசியத் தலைவராகவும் திகழ்கிறவர். ஆறு ஆண்டுகள் எரிசக்தி தொலைத்தொடர்பு அஞ்சல் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்னர் புதிய அமைச்சரவையில் பொதுப்பணித்துறை அமைச்சராக மீண்டும் நியமனம் பெற்றுள்ளார்.*

### * டத்தோ சி. சுப்ரமணியம் (சிகாமட்)



*1974-ம் ஆண்டில் முதன்முறையாக டமன்சாரா நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்றவர். 1978-ல் நடைபெற்ற தேர்தலில் தோல்வியைத் தழுவியவர். 1982-ல் சிகாமட் தொகுதியில் போட்டியிட வாய்ப்புப் பெற்று வெற்றி பெற்றவர். அதே தொகுதியில் 1986-லும் போட்டியிட்டு வாகை சூடியவர். 1990-ல் போட்டியிடாமல் 1995-ல் நாட்டின் ஒன்பதாவது பொதுத்தேர்தலில் அதே சிகாமட் தொகுதியில் போட்டியிட்டு வென்று, உள்நாட்டு வாணிப - பயனீட்டாளர் அமைச்சின் துணை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார்.*

### * டத்தோ க. குமரன் (தாப்பா)



*பினாங்கில் பிறந்து பேராவில் தமிழாசிரியராக வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டவர். சமூக இயக்கங்களிலும் அரசியலிலும் அதிக ஈடுபாடு காட்டியவர். பேராக் ம.இ.கா. தொடர்புக்குழுத் தலைவராக உயர்ந்தவர். செனட்டராக நியமனம் பெற்றவர். 1986-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சுங்கை சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்றவர். 1990-ம் ஆண்டில் நடைபெற்ற நாட்டின் எட்டாவது பொதுத்தேர்தலில் தாப்பா நாடாளுமன்றத் தொகுதியில் தேர்வு பெற்று, சுகாதார அமைச்சின் நாடாளுமன்ற செயலாளராகவும் பொறுப்பேற்றார். 1995 ஏப்ரல் 25-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தாப்பா தொகுதியிலேயே போட்டியிட்டு வென்று கிராமப்புற மேம்பாட்டு அமைச்சின் துணை அமைச்சராக தன் 56 வயதில் நியமனம் பெற்றுள்ளார்.*

## * டத்தோ எம். மகாலிங்கம் (சுபாங்)



1995 ஏப்ரல் 25-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் சுபாங் தொகுதியில் போட்டியிட்டு வென்றவர். இம்முறை சுகாதார அமைச்சின் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பெற்றுள்ளார். கடந்த 1990-ம் ஆண்டு பொதுத்தேர்தலில் காப்பார் தொகுதியில் போட்டியிட்டு வாகை சூடி மனிதவள அமைச்சின் துணை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார்.

சிலாங்கூர் பூச்சோங் தோட்டத்தில் 18-11-1935-ல் பிறந்த இவர் 1956-ல் சீனியர் கேம்ப்ரிட்ஜ் தேர்வில் தேர்வு பெற்ற பின்னர் 1958-ல் சுகாதார அமைச்சில் ஒரு குமாஸ்தாவாக தன் வாழ்க்கைத் தொழிலைத் தொடக்கத்தில் மேற்கொண்ட பின்னர், லண்டன் சென்று சட்டம் பயின்று 1965-ல் வழக்குரைஞரானார். அரசியலிலும் ஈடுபாடு காட்டினார்.

1977-ல் செனட்டரானார். 1979-ல் ம.இ.கா.வின் பொதுச்செயலாளரானார். 1982-ல் சட்டமன்ற உறுப்பினரானார். ஆட்சிக்குழுவிலும் இடம்பெற்றார். 1986-ல் ஸ்ரீ சகாயா தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்றத்தில் மீண்டும் இடம்பெற்றார். கடந்த 1990-ம் ஆண்டிலும், 1995-லும் நாடாளுமன்றத்திற்குப் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றார். ம.இ.கா. உதவித் தலைவர்களில் ஒருவர் இவர்.

## * ஜி. பழனிவேல் (உலுசிலாங்கூர்)



1990-ம் ஆண்டில் முதன்முறையாக உலுசிலாங்கூர் நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றவர். 1995-ல் அதே உலுசிலாங்கூர் தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு வென்று தேசிய ஒற்றுமைத்துறை - சமூக மேம்பாட்டு அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

1949 மார்ச் 1-ல் பிறந்த இவர் 1972-ல் மலாயா பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தார். 1977 முதல் 1987 வரையில் தேசிய செய்தி நிறுவனமான பெர்னாமாவில் பணியாற்றிய பின்னர் 1987 முதல் 1990 வரையில் டத்தோஸ்ரீ ச. சாமிவேலுவின் பத்திரிகைச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்தார்.

ம.இ.கா.வின் தேசிய உதவித் தலைவர்களில் ஒருவராகத் திகழும் இவர், 1991 முதல் 1994 வரையில் ம.இ.கா.வின் பொருளாளராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

## * டாக்டர் எல். கிருஷ்ணன் (தெலுக் கெமாங்)



1995 ஏப்ரல் 25-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதன்முறையாக தெலுக் கெமாங் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் இவர்.

போர்ட்டிக்சன் வட்டாரத்தைச் சேர்ந்த சுவா பெத்தோங் தோட்டத்தின் சுங்கை ஊஜோங் பிரிவில் 1948 மே 15-ல் பிறந்த இவர், போர்ட்டிக்சன் தமிழ்ப்பள்ளியில் தன் தொடக்கக் கல்வியைக் கற்ற பின்னர் 1966-ஆம் ஆண்டில் எஸ்.பி.எம். தேர்வில் தேர்வு பெற்றார். 1976-ஆம் ஆண்டில் இந்தியாவில் மருத்துவக் கல்வியை முடித்த பின்னர் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று டாக்டராக மலேசியாவுக்குத் திரும்பி வந்தார். 1985-ல் சொந்தமாக மருத்துவ சிகிச்சை நிலையத்தை அமைத்தார்.

பொதுப்பணியிலும் அரசியலிலும் ஈடுபட்டார். ஜெம்புல் தொகுதி காங்கிரஸ் தலைவராகத் தேர்வு பெற்றுள்ள இவர், பகாவ் பகுதி மக்களுக்குத் தன் சேவைகள் மூலம் ஏற்கனவே அறிமுகமானவர்.

## * டாக்டர் லீலா ராமா (காப்பார்)



நாடாளுமன்றத்தில் இடம்பெறும் முதல் இந்தியப் பெண் எனும் சிறப்பைப் பெற்றுத் திகழ்கிறவர் டாக்டர் லீலா ராமா. நாட்டின் ஒன்பதாவது பொதுத் தேர்தலில் காப்பார் தொகுதியில் போட்டியிட்டு வென்றுள்ளார் இவர்.

ம.இ.கா. மகளிர் பிரிவின் தேசிய துணைத் தலைவியாகத் திகழும் இவர், 1994 டிசம்பரில் நடைபெற்ற ம.இ.கா.வின் 41-வது பொதுப்பேரவையில் போட்டியிட்டு மத்திய செயலவை உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார். மத்திய செயலவைக்கு தேர்வுபெற்ற ஒரே பெண்மணியாகவும் இவர் திகழ்கிறார். கூட்டரசுப்பிரதேச ம.இ.கா. மகளிர் பிரிவின் தலைவியாக 1987-ஆம் ஆண்டிலிருந்து பொறுப்பேற்றும் வருகிறார்.

கோலாலம்பூரில் 1947-ஆம் ஆண்டில் பிறந்த இவர், இங்கே தொடக்க இடைநிலைப் படிப்பை முடித்த பின்னர், மதுரை பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பினார். 1976 முதல் 1984 வரையில் கோலாலம்பூர் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றிய பின்னர், 1984-ல் கோலாலம்பூரில் சொந்தமாக மருத்துவ சிகிச்சை நிலையத்தை நிறுவி மருத்துவத் தொழிலை மேற்கொண்டார்.

டாக்டர் ஜி. லீலாவதியின் பொதுப்பணிகளுக்கும் அரசியல் ஈடுபாட்டிற்கும் தொடக்க முதல் ஆதரவுக்கரம் நீட்டி வருகிறார் இவரது கணவர் ராமசாமி.

மலேசிய நாடாளுமன்றத்தில் இனி தொடர்ந்து தமிழ்ப் பெண்ணின் குரலும் ஒலிக்கும்!

# முதல் நகராண்மைக் கழக பொதுத்தேர்தல்

மலாயாவில் முதல் முறையாக 1951 டிசம்பர் முதல் தேதியன்று பினாங்குத் தீவில் பினாங்கு முனிசிபல் சபைக்கான (நகராண்மைக் கழக) பொதுத் தேர்தலை அப்போதைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அறிமுகப்படுத்தினர்.

சீனர்களை அதிகமாகக் கொண்டிருக்கும் பினாங்கின் நகராண்மைக் கழகத் தேர்தலில் மொத்தம் ஒன்பது தொகுதிகளுக்கு மூன்று கட்சிகள் தனித்தனியே போட்டியிட்டன.

ராடிகல் கட்சி (PARTI RADIKAL PULAU PINANG), தொழிற்கட்சி (PARTI BUROH PULAU PINANG) அம்னோ, (U.M.N.O.) ஆகிய அந்த மூன்று கட்சிகளும் போட்டியிட்டதில் தீவிரவாத (ராடிகல்) கட்சிக்கு 6 தொகுதிகளும் தொழிற்கட்சிக்கு ஒரு தொகுதியும் அம்னோ கட்சிக்கு ஒரு தொகுதியும் சுயேட்சை வேட்பாளருக்கு ஒரு தொகுதியும் கிடைத்தன.

தொழிற்கட்சி சார்பில் போட்டியிட்டு வென்ற என். பொன்னுதுரையும், ராடிகல் கட்சி சார்பில் வென்ற டாக்டர் எல்.கே. மேனனும் அந்த முதல் நகராண்மைக் கழகத் தேர்தலில் வெற்றி பெற்ற இந்தியர்கள் ஆவர்.

பினாங்கு முனிசிபல் தேர்தல் நடைபெற்ற அதே நாளான 1951 டிசம்பர் முதல் தேதியில் சிங்கப்பூர் நகராண்மைக் கழகத் தேர்தலையும் அப்போதைய பிரிட்டிஷ் அரசு நடத்தியது.

(சிங்கப்பூருக்கு நகர அந்தஸ்து கிடைத்த பிறகு நடைபெற்ற அந்த முதல் முனிசிபல் தேர்தலில் மொத்தம் 6 தொகுதிகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. தொழிற்கட்சி 3 தொகுதி களிலும் முன்னேற்ற கட்சி 2 தொகுதிகளிலும் வென்றன. சுயேட்சை வேட்பாளர் ஓர் இடத்தைப் பிடித்தார். முன்னேற்றக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு ஏ.பி. ராஜா எனும் இந்தியர் வெற்றி பெற்றார்.)

## கோலாலம்பூரில் முதல் நகராண்மைக் கழகத் தேர்தல்

மலாயாவின் தலைநகரான கோலாலம்பூரில் முதல் முனிசிபல் சபை (நகராண்மைக் கழக) தேர்தலை 1952 பிப்ரவரி 16இல் பிரிட்டிஷ் மலாயா அரசு அறிமுகப்படுத்தியது.

பொதுத்தேர்தல் மூலம் உறுப்பினர்கள் தேர்வு முறை அப்பொழுதுதான் நடப்புக்கு வரத் தொடங்கியது.

1952 பிப்ரவரி 16இல் கோலாலம்பூரில் நடைபெற்ற முதல் முனிசிபல் சபைத் தேர்தலில் 1946இல் தோற்றம் கண்ட அம்னோவும் 1949இல் அமைக்கப்பட்ட மலாயா சீனர் சங்கமும் கூட்டணி அமைத்துக் கொண்டு போட்டியிட்டன.

அம்னோவிலிருந்து விலகி மலாயா சுதந்திரக் கட்சியைத் துவக்கியிருந்த டத்தோ ஓன் பின் ஜபாருடன் ம.இ.கா. இணைந்துகொண்டு மலாயா சுதந்திரக்கட்சி சின்னத்தில் அந்தத் தேர்தலில் போட்டியிட்டது.

அந்த முதல் நகராண்மைக் கழகத் தேர்தல் மிகவும் பரபரப்புடன் நடந்தது.

பத்திரிகைகள் விரிவான செய்திகளைத் தொடர்ச்சியாக வெளியிட்டிருந்தன. தேர்தல் பிரசாரக் கூட்டங்களும் சுவரொட்டிகளும் பொதுமக்களின் கவனத்தை ஈர்த்தன.

மொத்தம் 12 தொகுதிகளுக்கு 32 பேர் போட்டியிட்டனர்.

அம்னோ – ம.சீ.ச. கூட்டணி 9 தொகுதிகளிலும் மலாயா சுதந்திரக் கட்சி 2 தொகுதிகளிலும் வென்றன. சுயேட்சை வேட்பாளர் ஒரு தொகுதியைக் கைப்பற்றினார்.

மலாயா சுதந்திரக் கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வென்ற அந்த இருவரும் ம.இ.கா. வேட்பாளர்களாவர்.

ம.இ.கா.வின் அப்போதைய தேசியத் தலைவர் கே.எல். தேவாசரும் அப்போதைய ம.இ.கா மத்திய செயலவை உறுப்பினரான திருமதி தேவகி கிருஷ்ணனும் போட்டியிட்டு அந்தத் தேர்தலில் வாகை சூடியிருந்தனர்.

அந்த முதல் முனிசிபல் சபை தேர்தலில் போட்டியிட்டு வென்ற ஒரே சுயேட்சை வேட்பாளர் எஸ்.சி.இ. சிங்கம் எனும் இந்தியர் ஆவார். சாமுவேல் சார்லஸ் இ. சிங்கம் எனும் முழுப் பெயர் கொண்ட அவர் பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்தவர். அப்போதைய சிலாங்கூர் மாநில காற்பந் தாட்டச் சங்கத் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தவர்.



தேர்தலில் போட்டியிட்டு வென்ற

ஒரே சுயேட்சை வேட்பாளர்

எஸ்.சி.இ. சிங்கம்



ஏ. தர்மலிங்கம் (தொழிற்கட்சி)

## போட்டியிட்ட இந்தியர்கள்

அந்த முதல் நகராண்மைக் கழகத் தேர்தலில் போட்டியிட்ட இந்தியர்கள் பின்வருமாறு :

1. திருமதி தேவகி கிருஷ்ணன் (ம.சு. கட்சி - ம.இ.கா) 2. தேவாசர் (ம.சு. கட்சி - ம.இ.கா) 3. எஸ்.சி.இ. சிங்கம் (சுயேட்சை) 4. காராள சிங்கம் சீனிவாசகம் (தொழிற்கட்சி) 5. வழக்குரைஞர் ராஜேந்திரா தம்பாப்பிள்ளை (ம.சு. கட்சி) 6. திருமதி எலிசி சோமசுந்தரம் (அம்னோ - ம.சீ.ச. கூட்டணி) 7. வீ.ஜி.டி. சிங்கம் (சுயேட்சை) 8. ஏ. தர்மலிங்கம் (தொழிற்கட்சி) 9. கே.வி. தேவர் (ம.சு. கட்சி) 10. சமூக சேவகி திருமதி ஈ. இராமச்சந்திரன் (ம.சு. கட்சி)

## மூன்று இந்தியப் பெண்கள்

கோலாலம்பூரில் 1952இல் நடைபெற்ற அந்த முதல் முனிசிபல் சபைத் தேர்தலில் மூன்று இந்தியப் பெண்கள் போட்டியிட வாய்ப்புப் பெற்று தேர்தலில் போட்டியிட்டிருப்பது குறிப்பிடத் தக்க ஓர் அம்சமாகும். தேர்தலில் போட்டியிட்ட திருமதி தேவகி கிருஷ்ணன், திருமதி இ. இராமச்சந்திரன், திருமதி எலிசி சோமசுந்தரம் ஆகிய மூவரில் திருமதி தேவகி கிருஷ்ணன் வெற்றி பெற்று வரலாறு படைத்திருக்கிறார்.

அந்த முதல் முனிசிபல் சபைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு நகராண்மைக் கழக உறுப்பினர்களாகப் பதவி வகித்தனர்.

1951 முதல் 1953 செப்டம்பர் வரை ம.இ.கா. டத்தோ ஓனின் மலாயா சுதந்திரக் கட்சியோடு (ஐ.எம்.பி.) கூட்டணி வைத்திருந்தது. பின்னர் அதிலிருந்து விலகிக் கொண்டது.

1953இல் ஈப்போவில் நடைபெற்ற நகர சபைத் தேர்தலில் ம.இ.கா. தனித்துப் போட்டியிட்டது. அதில் போட்டியிட்ட 3 ம.இ.கா. வேட்பாளர்களும் வைப்புத் தொகையை இழந்து படுதோல்வி அடைந்தனர்.

1954இல் அம்னோ - ம.சீ.ச. கூட்டணியோடு ம.இ.கா.வும் இணைந்து கொண்டது.

1955ஆம் ஆண்டு முதல் ஃபெடரல் (மத்திய) சட்டமன்றத்துக்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் மட்டுமே வாக்களிப்பு மூலமே உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

முனிசிபல் சபைக்கு (நகராண்மைக் கழகம்) தேர்தல் முறை ரத்து செய்யப்பட்டது. பின்னர் நகராண்மைக் கழகத்துக்கு கௌரவ உறுப்பினர்களை நியமிக்கும் முறை அமல்படுத்தப்பட்டது.

## அம்னோ வேட்பாளராக இந்தியப் பெண்

1952 பிப்ரவரி 16இல் கோலாலம்பூரில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்த முதல் நகராண்மைக் கழகத் தேர்தலில் அம்னோ கட்சியின் வேட்பாளராகத் திருமதி எலிசி சோமசுந்தரம் எனும் இந்திய மாது பங்சார் தொகுதியில் போட்டியிட்டார். தேர்தலில் திருமதி சோமசுந்தரம் தோல்வி அடைந்திருந்தாலும் அம்னோ வேட்பாளராகப் போட்டியிடும் வாய்ப்பு பெற்று பெரும் சாதனை புரிந்திருக்கிறார்.

பொதுப் பணிகளில் அதிக ஈடுபாடு காட்டிவந்த திருமதி எலிசி சோமசுந்தரத்தின் கணவர் வி.ஜே. சோமசுந்தரம், ம.இ.கா.வில் 1952களில் மத்திய செயலவை உறுப்பினராகவும் சிலாங்கூர் மாநில ம.இ.கா. தலைவராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார். அம்னோவில் அப்போது சில இந்தியர்கள் இணை உறுப்பினர்களாகச் சேர்ந்திருந்தனர்.



● அம்னோ வேட்ப்பாளராக திருமதி எலிசி சோமசுந்தரம்



● 1952இல் போட்டியிட்டு வென்ற திருமதி தேவகி கிருஷ்ணன்



● சமூக சேவகி திருமதி ஈ. இராமச்சந்திரன் (ம.சு. கட்சி)

# ஃபெடரல் சட்டமன்ற முதல் பொதுத் தேர்தல்

ஃபெடரல் சட்டமன்றத்துக்கான முதல் பொதுத் தேர்தலை அப்போதிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் 1955 ஜூலை 27இல் அறிமுகப்படுத்தினர்.

மொத்தம் 104 உறுப்பினர்களில் 52 இடங்களுக்குத் தேர்தல் நடத்துவதெனவும் மீதம் 52 இடங்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டிருந்தது.

தேர்தலில் போட்டியிட இந்தியர்களுக்காக இலங்கையரையும் சேர்த்து 2 இடங்கள் ஒதுக்கப் பட்டிருந்தன. மேலும் 2 இந்தியர் நியமன உறுப்பினர்களாக இடம் பெறுவர் எனவும் முடிவெடுக் கப்பட்டிருந்தது.

மலாய்க்காரர்களைப் பிரதிநிதித்து அம்னோவும், சீனர்களைப் பிரதிநிதித்து ம.சீ.ச.வும் இந்தியர்களைப் பிரதிநிதித்து ம.இ.கா.வும் கூட்டணி அமைத்துக்கொண்டு தேர்தலில் போட்டி யிட்டு மாபெரும் வெற்றி பெற்றன.

பேரா கிந்தா உத்தாராவில் அப்போதைய புதிய ம.இ.கா. தலைவர் வீ.தி. சம்பந்தன் போட்டி யிட்டு வென்றார். பத்து பகாட் தொகுதியில் இலங்கையரான செல்வசிங்கம் மெக்கன்டையர் போட்டியிட்டு வென்றார்.

முன்னாள் ம.இ.கா. தலைவர் வழக்குரைஞர் தேவாசரும் வழக்குரைஞர் குமாரசாமியும் ஃபெடரல் சட்டமன்றத்தில் நியமன உறுப்பினர்களாக இடம் பெற்றனர்.

தொடர்ந்து அதே ஆண்டில் (1955) நடைபெற்ற சிலாங்கூர் சட்டமன்றத்துக்கு 2 இடங்கள் ம.இ.கா.வுக்கு வழங்கப்பட்டிருந்தது. கிள்ளான் தொகுதியில் வி. மாணிக்கவாசகமும் கோலா லம்பூர் பங்சார் தொகுதியில் க. குருபாதமும் போட்டியிட்டு வென்றனர்.

1948ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஃபெடரல் சட்டமன்றத்திற்கு நியமன உறுப்பினர்களாக வர்த்தக பிரதிநிதியாக எஸ்.ஓ.கே. உபைதுல்லா, தொழிற்சங்க, பிரதிநிதிகளாக பி.பி. நாராயணன், வி.எம்.என். மேனன், எம்.பி. ராஜகோபால் ஆகியோரும் சமூகப் பிரதிநிதிகளாக ஆர். ரமணி, கா. ராமநாதன் கிளவ் துரைசிங்கம் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

## சுதந்திரத்துக்குப்பின் நடைபெற்ற முதல் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்

1957 ஆகஸ்ட் 31இல் மலாயாவுக்கு சுதந்திரம் கிடைத்த இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1959ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்கும் எல்லா மாநில சட்ட மன்றங்களுக்கும் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

இந்தியர்களைப் பிரதிநிதிக்கும் ம.இ.கா.வுக்கு 4 நாடாளுமன்றத் தொகுதிகளும் 13 சட்ட மன்றத் தொகுதிகளும் தரப்பட்டிருந்தன.

சுங்கை சிப்புட்டில் வீ.தி. சம்பந்தனும் கிள்ளானில் வி. மாணிக்கவாசகமும், போர்ட்டிக் சனில் மகிமாசிங்கும் போட்டியிட்டு வென்றனர். சிரம்பானில் (மேற்கு) போட்டியிட்ட வர்த்தகர் ஏ.எஸ். தாவுது தோல்வி அடைந்தார்.

## சட்டமன்றத் தேர்தல்

பீடோர் (பேரா) வி. பொன்னுசாமிபிள்ளை அலோர்ஸ்டார் லுவார் (கெடா) கே.கே. நாயர், புக்கிட் ராஜா (சிலாங்கூர்) எஸ்.எஸ். முருகேசுபத்து அன்னம் (ஜோகூர்) எம்.பி. குமரன் ஜிம்மா (நெகிரி) வி. லெட்சுமணன் பாசிர் பாஞ்சாங் (நெகிரி) எம். முத்துகுமாரு பட்டர்வொர்த் (பினாங்கு) எம்.பி.எல். யோகப்பன் ஆகிய 7 பேர் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றனர்.

சிம்மோர் (பேரா) வி. மணிக்குட்டி செந்தூல் (சிலாங்கூர்) திருமதி தேவகி கிருஷ்ணன் சிராண்டா (சிலாங்கூர்) ஜி. ஃபீயோ சுங்கை ரவாங் (சிலாங்கூர்) ஜெயரத்னம் சுங்கை பினாங் (பினாங்கு) டபள்யு டேவிட் கேமரன்மலை (பகாங்) சுப்பராயன் ஆகிய 6 பேர் தேர்தலில் தோல்வி அடைந்தனர்.

1959இல் நடைபெற்ற முதல் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் கூட்டணிக் கட்சி மாபெரும் வெற்றி பெற்று ஆட்சியை அமைத்தது. தொடர்ந்து கூட்டணியே (பின்னர் பாரிசான் நேஷனல்) தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி புரிந்து வருகிறது.

# தொடக்க காலமலாயா இந்தியர் பிரதிநிதிகள்

## (50 வருடங்களுக்கு முன்னர் சட்ட மன்றங்களில் இடம் பெற்றவர்கள்)

### கா. தம்புசாமிப்பிள்ளை

*(1894இல் முதல் சுகாதார வாரிய உறுப்பினர்)*

மலாயாவை பிரிட்டிஷார் ஆட்சி புரிந்தபோது முதல் முறையாக கோலாலம்பூரில் 1890ஆம் ஆண்டில் சுகாதார போர்டு துவக்கப்பட்டது. (பின்னர் இந்த வாரியம் முனிசிபாலிடியாக - நகராண்மைக் கழகமாக மாறியது.)

அந்தச் சுகாதார வாரியத்துக்கு ஏ.ஆர். வென்னிங் எனும் ஐரோப்பியர் தலைவராகப் பொறுப் பேற்றிருந்தார்.

அந்தச் சுகாதார வாரிய உறுப்பினர்கள் பதினோரு பேரில் ஒருவராக 1894இல் நியமிக்கப் பட்ட முதல் தமிழர் கா. தம்புசாமிப்பிள்ளை.

1850இல் பிறந்த கா. தம்புசாமிப்பிள்ளை அரசாங்கத்தில் சிலாங்கூர் மாநில கருவூல அதிகாரியாகப் பணிபுரிந்த பின்னர் ஈயச் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு செல்வந்தர் ஆனார். சமூக நலனுக்கும் இந்து சமய வளர்ச்சிக்கும் உழைத்தார். தனிப பெரும் இந்தியத் தலைவராக அந்தக் கால கட்டத்தில் திகழ்ந்தார். 1902இல் சிங்கப்பூருக்குப் போயிருந்த போது காலமானார்.

"கோலாலம்பூர் வளர்ச்சியில் பங்கு கொண்டவர் இவர்" என்று கா. தம்புசாமிப்பிள்ளையை மியூசியம் நெகாராவின் வரலாறு சிறப்பித்துக் கூறுகிறது.

இவர் நினைவாக கோலாலம்பூர் செந்தூல் பகுதியில் 1905இல் துவக்கப்பட்ட தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப்பள்ளி தொடர்ந்து இயங்கி வருகிறது.



## எஸ். என். வீராசாமி

*(1928இல் முதல் ஃபெடரல் சட்டமன்ற உறுப்பினர்)*

மலாயாவில் 1909இல் முதல் முறையாக ஃபெடரல் சட்ட சபை நிறுவப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் குறிப்பிட்ட சில சமூகப் பிரமுகர்களை கௌரவ சட்டசபை உறுப்பினர்களாக நியமித்தனர்.

இந்தியர்களின் பிரதிநிதியாக 1928ஆம் ஆண்டில் வழக்குரைஞர் எஸ்.என். வீராசாமி ஃபெடரல் சட்டமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

ஃபெடரல் சட்டமன்ற உறுப்பினராக நியமனம் பெற்ற முதல் மலேசிய இந்தியர் இவர்தான்.

பினாங்கில் பிறந்து இங்கிலாந்தில் சட்டம் பயின்று கோலாலம்பூரில் வழக்குரைஞராகத் தொழில் புரிந்தார் இவர்.

இந்திய சமூக நலனுக்காகப் பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர். பேச்சுத்திறனும், செயல் திறனும் பெற்றிருந்த எஸ்.என். வீராசாமி தொழிலாளர் நலனுக்காகவும் பாதுகாப்புக்காகவும் வாதாடி ஓரளவு வெற்றியும் பெற்றிருந்தார்.

மலாயாவில் இயங்கிய 12 இந்தியர் சங்கங்களும் 4 இந்தியர் வர்த்தகச் சங்கங்களும் இணைந்து 1936ஆம் ஆண்டு அக்டோபரில் "மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம்" எனும் அமைப்பு அமைக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராக எஸ்.என். வீராசாமி பொறுப் பேற்றிருந்தார்.

செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்தை 1930இல் திறந்து வைத்தவர் இவர்தான்.





● படத்தில் இடமிருந்து முதலாவதாக
அமர்ந்திருப்பவர் வழக்குரைஞர்

**எஸ். என். வீராசாமி**

## பி.கே. நம்பியார்

*(1923இல் பினாங்கு மாநில சட்டமன்றத்தில் முதல் இந்தியர் உறுப்பினர்.)*

பினாங்கில் வழக்குரைஞராகப் பணிபுரிந்த பி.கே. நம்பியார் கேரளாவில் பிறந்து சென்னையில் சட்டம் பயின்று வழக்குரைஞராகப் பணியாற்றியபின் 1904இல் பினாங்குக்கு வந்தவர். அதே ஆண்டில் 'ஸ்ட்ரெயிட்ஸ் செட்டில்மெண்ட்ஸ் ஃபெடரேட்டர் மலாய் ஸ்டேட்ஸ்' உச்ச நீதிமன்ற வழக்கறிஞரானார். அவரின் புகழ் பரவியது. இந்திய சமுதாயத்தின் தகுதி வாய்ந்த பிரதிநிதி என்று பிரிட்டிஷ் நிர்வாகம் ஏற்றுக்கொண்டது. ஸ்ட்ரெய்ட்ஸ் சட்டமன்றத்துக்கு (பினாங்குக்கு) 1923இல் முதலாவது இந்திய உறுப்பினராக நியமிக்கப்பட்டார். மலாயா, இந்தியர் சுதந்திரக் கழகத்தின் தலைவராக இருந்த வழக்குரைஞர் என். ராகவன் இவரது மருமகனாவார்.

தொழிலாளர்களாகப் பணி புரிய மலாயாவுக்கு வருகை தந்த இந்தியர்களின் நலனைக் கவனிக்கவும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளைக் கண்டறியவும் "இந்தியர் இமிகிரேஷன் குழு" ஒன்றை மலாயா அரசாங்கம் அப்போது அமைத்திருந்தது. அதில் ஓர் உறுப்பினராக பி.கே. நம்பியார் இடம் பெற்றிருந்தார். பினாங்கு இந்தியர் சங்கம் 1906 ஏப்ரல் 9இல் மீண்டும் அமைப்பு காண இவர் காரணமாக விளங்கினார்.

## எச்.ஏ. அப்துல் காதர்

*(1930இல் பினாங்கு சட்டமன்ற உறுப்பினர்)*

பினாங்கில் வழக்குரைஞராகப் பணி புரிந்த எச்.ஏ. அப்துல் காதரும் தொடக்க கால சட்டமன்ற உறுப்பினராக 1930இல் நியமனம் பெற்ற இந்தியர்களில் ஒருவர்.

இந்தியாவிலுள்ள பம்பாய் பகுதியைச் சேர்ந்த சூரத் நகரில் 21.9.1890இல் பிறந்த எச்.ஏ. அப்துல் காதர் மலாயாவிலேயே நீண்ட காலம் வாழ்ந்தவர்.

1935ஆம் ஆண்டில் இவரது பொதுப் பணிகளுக்காக பிரிட்டிஷ் மன்னரின் வெள்ளி விழா பதக்கமும் 1937இல் முடி சூட்டு விழா பதக்கமும் 1938இல் சி.பி.இ. பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

## லூயிஸ் திவி

*(1929இல் பேரா மாநில சட்ட மன்றத்தின் முதல் இந்தியர்)*

பேரா மாநில சட்டமன்றத்தில் 1929ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதல் இந்தியர் லூயிஸ் திவி.

மலேசிய இந்தியர் காங்கிரஸ் இயக்கத்தின் முதல் தலைவரும் மலாயா சிங்கப்பூருக்கான முதல் இந்தியத் தூதருமான ஜான் திவியின் தந்தையே லூயிஸ் திவி.

லூயிஸ் திவியின் முழுப்பெயர் லூயிஸ் திவ்வியநாதன் ஆகும். கோலகங்சாரில் வர்த்தகம் செய்து வந்த லூயிஸ் திவி பொதுப்பணிகளிலும் அதிக ஈடுபாடு காட்டி வந்தார். புகையிலை சுருட்டுத் தொழில் இவரது முக்கிய வர்த்தகமாகும்.

பேரா சுல்தான் ஜே.பி. விருதை வழங்கி இவரைக் கௌரவித்திருக்கிறார்.

## டாக்டர் எஸ். ஆர். கிருஷ்ணன்

1932ஆம் ஆண்டில் நெகிரி சட்டமன்றத்துக்கு நியமனம் செய்யப்பட்ட முதல் இந்தியர் டாக்டர் எஸ்.ஆர். கிருஷ்ணன்.

பொதுப் பணிகளில் ஆர்வத்தோடு தொடக்க காலத்தில் ஈடுபட்டவர் இவர்.

சிரம்பானிலுள்ள ஒரு சாலைக்கு டாக்டர் கிருஷ்ணன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றத்திலும் மேலவையிலும் மலேசிய இந்தியர்கள்

மலாயாவில் 1909ஆம் ஆண்டில் ஃபெடரல் சட்டசபை நிறுவப்பட்டது.

1928இல் ஃபெடரல் சட்டசபையில் இந்தியர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. ஃபெடரல் சட்டமன்றத்தின் முதல் இந்தியர் பிரதிநிதி வழக்குரைஞர் எஸ்.என். வீராசாமி. அதன் பின்னர் பல இந்தியர்கள் ஃபெடரல் சட்ட மன்றத்தில் - நாடாளுமன்றத்தில் இடம்பெற்றனர்.

மலேசிய இந்தியர்களைப் பிரதிநிதிக்கும் ம.இ.கா. மூலமாகவும் மற்ற சில அரசியல் இயக்கங்களின் மூலமாகவும் இந்தியர்களில் சிலர் அங்கம் பெற்றனர்.

அவர்களின் பெயர்ப் பட்டியல் வருமாறு :

தொடக்க காலத்தில் (1928) ஃபெடரல் சட்டமன்றத்தில் அங்கம் வகித்தவர்கள் :

**வழக்குரைஞர் எஸ்.என். வீராசாமி**

(ஃபெடரல் சட்டமன்றத்தில் 1928ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற முதல் மலேசிய இந்தியர் இவர். 1936ஆம் ஆண்டில் மலாயாவில் அமைக்கப்பட்ட 'மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் (சி.ஐ.ஏ.எம்.) எனும் அமைப்பின் முதல் தலைவர் இவர்தான். செந்தூல் இந்திய வாலிபர் சங்கம் முறையாகப் பதிவு செய்யப்பட்ட பின்னர் 1930இல் வழக்குரைஞர் எஸ்.என். வீராசாமி தலைமையில்தான் திறப்பு விழா கண்டது.)

**டாக்டர் எஸ். ஆர். கிருஷ்ணன்**

(ஃபெடரல் சட்டமன்றத்துக்கு நியமனம் பெற்ற டாக்டர் கிருஷ்ணன் சிரம்பான் பகுதியில் மருத்துவராகத் தொழில் புரிந்து சமூக சேவைகளிலும் ஈடுபட்டவர். சிரம்பான் நகரிலுள்ள ஒரு தெருவுக்கு டாக்டர் கிருஷ்ணன் பெயர் சூட்டப் பட்டுள்ளது.)

✷ ✷ ✷

## 1948 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம் பெற்றோர்

**வழக்குரைஞர் ஆர். ரமணி**

(கோலாலம்பூரில் பிரபலமாக விளங்கிய வழக்குரைஞர் ஆர் ரமணி 1945களில் மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனத்துக்கு (சி.ஐ.ஏ.எம்.) தலைமைப் பொறுப்பேற்றிருந்தார். 1936இல் அமைக்கப்பட்ட மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் 1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் செயலிழக்கத் தொடங்கியவுடன் அதில் முக்கிய பொறுப்புகள் வகித்த சிலர் இணைந்து 1950 ஜூலையில் ஃபெடரல் இந்தியர் சங்கம் (FEDERAL INDIAN ASSOCIATION) எனும் தேசிய அமைப்பை வழக்குரைஞர் ஆர். ரமணி தலைமையில் அமைத்திருந்தனர்.

ஃபெடரல் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆர். ரமணி நியமனம் பெற்றிருந்தார்.

ம.இ.கா.வில் இணையாமல் தனிப் பெரும் இந்தியர் தலைவராக மலாயாவில் திகழ்ந்தவர் ஆர். ரமணி.

1951 ஏப்ரலில் அப்போதைய பிரிட்டிஷ் மலாயா அரசு அமைச்சர் அந்தஸ்துள்ள உறுப்பினர் பதவியை இந்தியர் பிரதிநிதியான ஆர். ரமணிக்கு வழங்க முன்வந்தபோது அதை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அப்போது சொல்லப்பட்டது.

சுதந்திரத்துக்குப் பின்னர் மலாயா அரசாங்கம் ஆர். ரமணியின் திறமைக்கு மதிப்பளித்து ஐக்கிய நாட்டுப் பிரதிநிதியாக நியமித்திருந்தது.)

### (டான்ஸ்ரீ) எஸ்.ஓ.கே. உபைதுல்லா

(ம.இ.கா.வின் நீண்ட கால உறுப்பினர். ஃபெடரல் சட்டமன்றத்தில் வர்த்தக சங்க சார்பில் உறுப்பினராக நியமனம் பெற்றவர். பின்னர் செனட்டராகவும் நியமிக்கப்பட்ட டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லா, மேலவை துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார். ம.இ.கா. மாநாடுகளில் கௌரவ சபாநாயகராகப் பொறுப்பேற்கும் டான்ஸ்ரீ எஸ்.ஓ.கே. உபைதுல்லா வர்த்தகப் பிரமுகராகவும் சமுதாயப் பணிகளில் ஈடுபாடு கொண்டவராகவும் திகழ்கிறார்.)

### (டாக்டர்) பி.பி. நாராயணன்



(பிரபல தொழிற்சங்கவாதியாக அனைத்துலக ரீதியில் புகழ்பெற்ற (டாக்டர்) பி.பி. நாராயணன் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் உருவாகக் காரணமாக விளங்கியவர். மலேசிய தொழிற்சங்க சம்மேளனத் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார். 1954 நவம்பர் 2இல் தோற்றம் கண்ட தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்திற்கு தொடக்கமுதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்த பி.பி. நாராயணன் 1993இல் 40 வருட சேவைக்குப் பின்னர் ஓய்வு பெற்றுள்ளார். தொழிற்சங்க பிரதிநிதியாகத் தொடக்கத்தில் ஃபெடரல் சட்டமன்றத்தில் இடம்பெற்றிருந்தார் டாக்டர் பி.பி. நாராயணன்.)

### வி.எம்.என். மேனன்

(மலாயா தோட்டச் சிப்பந்திகள் சங்கச் செயலாளராகப் பணியாற்றியபோது தொழிற்சங்க பிரதிநிதியாக ஃபெடரல் சட்டமன்றத்தில் உறுப்பினராக நியமனம் பெற்றார் வி.எம்.என். மேனன். 1951இல் அமைச்சர் அந்தஸ்துள்ள உறுப்பினர் (மெம்பர்) முறையை அப்போதைய மலாயா பிரிட்டிஷ் அரசு அறிமுகப்படுத்திய போது வி.எம்.என். மேனன் தபால் தந்தித்துறை இலாகாவுக்குப் பொறுப்பாளராக நியமனம் பெற்றார்.)

### எம்.பி. ராஜகோபால்

(தொழிற்சங்கப் பொது அமைப்புகள் வழியே பொதுப்பணிகளில் ஈடுபட்டவர் இவர். தொழிற்சங்கப் பிரதிநிதியாக ஃபெடரல் சட்டமன்றத்தில் இடம் பெற்றவர்.)

### (சைவப்பெரியார்) கா. ராமநாதன்

(சமயப்பணிகளில் முழுமையாக ஈடுபடுவதற்கு முன்னர் ம.இ.கா.வில் அங்கம் வகித்து ஓர் ஆண்டிற்கு தேசியத் தலைவராகவும் பொறுப்பேற்று சமுதாய நலனுக்கு உழைத்தவர். சட்டம் பயின்ற இவர் வருமானவரித்துறை நிபுணராகவும் கணக்காய்வாளராகவும் திகழ்ந்தவர். இந்திய சமுதாய பிரதிநிதியாக ஃபெடரல் சட்டமன்றத்தில் இடம்பெற்றிருந்தார் 'சைவப்பெரியார்' கா.ராமநாதன்.)

### (டத்தோ) சர். கிளவ் துரைசிங்கம்



(மலேசிய இலங்கையர் சங்கத் தலைவர்ராக இருந்த (டத்தோ) சர். கிளவ் துரைசிங்கம் மலேசிய இலங்கையர் பிரதிநிதியாக ஃபெடரல் சட்டமன்றத்தில் இடம்பெற்றிருந்தார். 1951இல் அமைச்சர் அந்தஸ்துள்ள உறுப்பினர் முறையை அப்போதைய மலாயா அரசு அமல்படுத்தியபோது கிளவ் துரைசிங்கம் கல்வி இலாகாவிற்கு நியமிக்கப்பட்டார். டத்தோ ஓன்பின் ஜபார் அம்னோவிலிருந்து விலகி மலாயா சுதந்திரக் கட்சியை (ஐ.எம்.பி) அமைத்தபோது (டத்தோ) கிளவ் துரைசிங்கம் அக்கட்சியில் முக்கிய பொறுப்பு வகித்தார். புகழ்பெற்ற வழக்குரைஞராகத் திகழ்ந்த டத்தோ சர் கிளவ் துரைசிங்கம் சமூகப் பணிகளில் அதிக தீவிரம் காட்டி வந்திருக்கிறார். செனட்டராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார் டத்தோ கிளவ் துரைசிங்கம்.)

**வழக்குரைஞர் கே.எல். தேவாசர்**



(தலைவர் கா. ராமநாதனுக்குப் பின்னர் ம.இ.கா. தலைமைப் பொறுப்புக்கு வந்தவர் கே.எல். தேவாசர். இவர் காலகட்டத்தில் ம.இ.கா. பலரையும் ஈர்க்கும் இயக்கமாகத் தென்படத் தொடங்கியது. ம.இ.கா. சார்பாக ஃபெடரல் சட்ட மன்றத்தில் உறுப்பினராக நியமனம் பெற்றிருந்தார் கே.எல். தேவாசர். (துன்) சம்பந்தன் 1955இல் ம.இ.கா.வின் தலைமைப் பொறுப்பை ஏற்றவுடன் கே.எல். தேவாசர் .ம.இ.கா.வில் தமது ஈடுபாட்டைக் குறைத்துக் கொண்டு அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.)

**வழக்குரைஞர் எம்.என். குமாரசாமி**

(1955ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்துக்கு முதல் முறையாகப் பொதுத் தேர்தல் நடைபெற்றபோது குறிப்பிட்ட சிலருக்கு போட்டியிடாமல் நாடாளு மன்றத்தில் இடம்பெற வழி அமைத்திருந்தார் கூட்டணித் தலைவர் துங்கு அப்துல் ரஹ்மான். துங்குவின் நண்பர் என்று வர்ணிக்கப்பட்ட வழக்குரைஞர் எம்.என். குமாரசாமி ம.இ.கா. பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் நியமனம் பெற்றார். அடுத்து வந்த பொதுத்தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு போட்டி யிட்டு வென்றவர்களே இடம்பெற்றனர்.)



**(துன்)வீ.தி. சம்பந்தன்**

(ம.இ.கா.வின் தேசியத் தலைவராக 1955இல் தேர்வுபெற்று அதே ஆண்டில் நாட்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்று முதல் இந்திய அமைச்சராகவும் பொறுப்பேற்று வரலாறு படைத்தவர்.)

**எஸ். மெக்கன்டையர்**

(பத்துபகாட் பகுதியில் வாழ்ந்த இவரின் முழுப்பெயர் செல்வசிங்கம் மெக் கன்டையர். 1955ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் கூட்டணிக் கட்சி சார்பில் போட்டியிட கூட்டணித் தலைவர் துங்குவினால் தேர்ந்தெடுக் கப்பட்ட இலங்கையர் இவர். நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்த எஸ். மெக்கன்டையர் நேதாஜி தலைமையில் இயங்கிய இந்திய சுதந்திரக் கழகத்தில் ஈடுபட்டு தொண்டாற்றியவர்

## சுதந்திரத்துக்குப்பின் (1957) நாடாளுமன்றத்தில் இடம் பெற்றவர்கள்



**(துன்)வீ.தி. சம்பந்தன்**

அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த இவர் ம.இ.கா.வின் தேசியத் தலைவராகவும் திகழ்ந்தவர்.

**(டான்ஸ்ரீ) வி. மாணிக்கவாசகம்**

(ம.இ.கா.வின் துணைத் தலைவராகவும் பின்னர் தேசியத் தலைவராகவும் திகழ்ந்தவர். அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த இவர் ம.இ.கா.வின் தொடக்ககால உறுப்பினர்.)



**(டத்தோஸ்ரீ) ச. சாமிவேலு**

(சுங்கை சிப்புட் தொகுதியில் 1974இல் போட்டியிட்டு வென்று தொடர்ந்து அதே தொகுதியில் ஐந்துமுறை வெற்றி வாகை சூடியவர். அமைச்சராகவும் தேசியத் தலைவராகவும் பொறுப்பேற்ற டத்தோஸ்ரீ ச. சாமிவேலு தொண்டராக இருந்து தலைவர் ஆனவர். சோர்வில்லாமல் சமூகத்திற்கு உழைக்கும் சாதனை யாளர்.)

## * டத்தோ சி. சுப்ரமணியம்



ம.இ.கா. தேசிய துணைத்தலைவராக 1981 முதல் தொடர்ந்து பொறுப்பேற்று வருகிறார் டத்தோ சி. சுப்ரமணியம்.

மலாயா பல்கலைக்கழகத்தில் பி.ஏ. பட்டம் பெற்ற பின்னர் 1969-ல் ம.இ.கா. தலைமையகத்தில் முழுநேர நிர்வாகச் செயலாளராக நியமனம் பெற்றிருந்த (டத்தோ) சுப்ரா, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அப்பொறுப்பிலிருந்து விலகி 1972-ல் மாஸ் விமான நிறுவனத்தில் நிர்வாகப் பிரிவில் ஓர் அதிகாரியாகப் பணிபுரியத் தொடங்கினார். இடையில் எம்.ஏ. பட்டத் தேர்விலும் வாகை சூடியிருந்தார். ம.இ.கா.வின் அப்போதைய தேசியத் தலைவர் டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தினால் தேசிய பொதுச்செயலாளராக நியமனமும் அப்போது பெற்றிருந்தார்.

1974 ஆகஸ்ட் 24-ல் நடைபெற்ற நாட்டின் நான்காவது பொதுத்தேர்தலில் கோலாலம்பூர் டமன்சாரா தொகுதியில் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார். தொடர்ந்து தொழிலாளர் மனித ஆற்றல் அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளராகவும் தன் 30-வது வயதில் நியமனம் பெற்றிருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 1976 ஜூலை 2-ல் துணை அமைச்சராக தன் 32-வது வயதில் பொறுப்பேற்கும் வாய்ப்பையும் பெற்றார் டத்தோ சுப்ரா. தொடக்கத்தில் பிரதமர் இலாகாவிலும், ஓராண்டுக்குப் பின்னர் ஊராட்சி வீடமைப்புத் துறையின் துணை அமைச்சராக நியமனம் பெற்றார்.

1978 ஜூலை 8-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் டமன்சாரா தொகுதியில் போட்டியிட்ட டத்தோ சுப்ரா எதிர்க்கட்சி வேட்பாளர் வி. டேவிட்டிடம் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து துணை அமைச்சர் பதவியையும் இழக்க நேரிட்டது.

ம.இ.கா.வின் பொதுச்செயலாளராக அப்போது பதவி வகித்திருந்த டத்தோ சுப்ரா பின்னர் செனட்டராக நியமனம் பெற்றார். 1979-ல் நடைபெற்ற ம.இ.கா. பொதுப் பேரவையில் மூன்று உதவித் தலைவர்களில் ஒருவராக தேர்வு பெற்றிருந்தார்.

டத்தோஸ்ரீ சாமிவேலு ம.இ.கா.வின் தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் 1981-ம் ஆண்டில் கட்சியின் துணைத்தலைவராகப் போட்டியின்றி டத்தோ சுப்ரா தேர்வு பெற்றார்.

1982 ஏப்ரல் 22-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஜோகூர் சிகாமட் தொகுதியில் போட்டியிட்டு வென்ற பின்னர், முன்னர் இழந்த துணை அமைச்சர் பதவியை மீண்டும் பெற்றார். 1986 ஆகஸ்ட் 3-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அதே சிகாமட் தொகுதியிலேயே போட்டியிட்டு வென்று துணை அமைச்சராக தொடர்ந்து பொறுப்பெற்றார்.

1989-ல் ம.இ.கா. தேசியத் தலைவர் தேர்தலில் நடப்புத் தலைவர் டத்தோஸ்ரீ சாமிவேலுவை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார்.

1990 அக்டோபர் 20-ல் நிகழ்ந்த நாட்டின் எட்டாவது பொதுத்தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இவர் இழந்தார். ஆனாலும் செனட்டராக நியமனம் பெற்று ஏற்கனவே வகித்த சுகாதாரத்துறை துணை அமைச்சர் பதவியையும் வகிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. செனட் தவணைக்காலம் முடிவுற்றவுடன் துணை அமைச்சர் பொறுப்பையும் விட நேரிட்டது.

1995 மே 25-ல் நடைபெற்ற நாட்டின் ஒன்பதாவது பொதுத்தேர்தலில் மீண்டும் சிகாமட் தொகுதியில் போட்டியிட்டு வென்று துணை அமைச்சராக நியமனமும் பெற்றுள்ளார் டத்தோ சுப்ரா. இம்முறை உள்நாட்டு வாணிப பயனீட்டாளர் அமைச்சின் துணை அமைச்சராக பொறுப்பேற்றுள்ளார்.

சிலாங்கூர் மாநிலத்தின் சிலிம் ரிவர் லீமா பிளாஸ் தோட்டத்தில் 26-10-1944-ல் பிறந்து தோட்டத் தமிழ்ப்பள்ளியில் ஆரம்பக் கல்வியைக் கற்று மலாயாப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டமும் பெற்று படிப்படியாக வளர்ச்சிக் கண்டவர் டத்தோ சுப்ரா.

கூட்டரசுப் பிரதேச ம.இ.கா.வின் தலைவராக 1979 முதல் பொறுப்பேற்றிருந்த டத்தோ சுப்ரா, தற்போது கூட்டரசுப் பிரதேச சீ பூத்தே தொகுதி தலைவராகத் திகழ்வதோடு, சிலாங்கூர் இந்தியர் சங்கத்தின் தலைவராகவும் பொறுப் பேற்றுள்ளார்.

தொடர்ந்து 14 ஆண்டுகளாக ம.இ.கா.வின் தேசிய துணைத் தலைவராக திகழ்ந்து வருகிறார் டத்தோ சி. சுப்ரமணியம்.

### (டத்தோ) கு. பத்மநாபன்



(நெகிரி மாநில தெலுங்கெமாங் தொகுதியில் 1974இல் போட்டியிட வாய்ப்பு பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானவர். தொடர்ந்து நான்குமுறை அதே தொகுதியில் போட்டியிட்டு வென்று பதினாறு ஆண்டுகளாகத் தொடர்ந்து துணை அமைச்சராகவும் சேவையாற்றியவர். 1990இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட டத்தோ பத்மாவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. பட்டதாரியும் பொருளாதார நிபுணருமான டத்தோ பத்மா பல சமூக இயக்கங்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருக்கிறார். 1976ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டு வரையில் துணை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த டத்தோ பத்மா ம.இ.கா.வில் தேசிய உதவித் தலைவராக நீண்ட காலம் பொறுப்பேற்றிருந்தவர். மலேசிய இந்தியர் விளையாட்டு மன்றத்தின் தலைவர் பொறுப்பையும் வகித்து வருகிறார் டத்தோ பத்மா.)

### வி. டேவிட்



(பிரபல தொழிற்சங்கவாதியாகவும் அரசியல்வாதியாகவும் திகழ்பவர் டாக்டர் வி. டேவிட். நாட்டின் பொதுத் தேர்தல் அறிமுகமானதிலிருந்து நகர சபையிலும் - சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டு வென்று வந்தவர். சில தேர்தல்களில் தோல்வியையும் தழுவியவர். 1990இல் பூச்சோங் தொகுதியில் ஜ.செ.க. வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தவர் பல சமூக அமைப்புகளில் முக்கிய பொறுப்புகள் வகித்து சோர்வில்லாமல் பிரதிபலன் எதிர்பாராது உழைக்கும் தன்மை கொண்டவர் 'மக்கள் தொண்டன்' வி. டேவிட்.)

1995-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துவிட்டு சமூகப் பணிகளில் நாட்டம் செலுத்துகிறார் டாக்டர் வி. டேவிட்.

### டி.ஆர். சீனிவாசகம் (ம.மு. கட்சியின் ஸ்தாபகர்)



ஈப்போவில் 1952-ல் வழக்குரைஞர் தொழில் மேற்கொண்ட டி.ஆர். சீனிவாசகம், 1925-ம் ஆண்டு செப்டம்பர் 20-ல் ஈப்போவிலேயே பிறந்தவர்.

1953 ஜனவரியில் பேரா முற்போக்குக் கட்சியை (பி.பி.பி.) உருவாக்கி 1995-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தொல்வி அடைந்தார். அத்தேர்தலில் கட்சி போட்டியிட்ட இரண்டு தொகுதிகளிலும் வெற்றி காண முடியவில்லை. 1956 மார்ச்சில் பேரா முற்போக்குக் கட்சியை மக்கள் முற்போக்குக் கட்சி (பி.பி.பி. - தமிழில் ம.மு.க.) என பெயர் மாற்றம் செய்தார். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 1959-ம் ஆண்டில் நடைபெற்ற அந்த முதலாவது பொதுத்தேர்தலில் போட்டியிட்ட ம.மு.க. பேராக் மாநிலத்தில் நான்கு நாடாளுமன்ற தொகுதிகளிலும், எட்டு சட்டமன்ற தொகுதிகளிலும் வாகை சூடி சரித்திரம் படைத்தது. ஈப்போ நகராண்மைக் கழகத்தையும் கைப்பற்றியது ம.மு.க. 1969-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பேரா மாநிலத்தில் உள்ள மொத்தம் 24 சட்டமன்ற தொகுதிகளில் 12 தொகுதிகளைக் கைப்பற்றியதோடு 4 நாடாளுமன்ற தொகுதிகளிலும் வாகை சூடியது.

ஈப்போ நகரமன்றம் ம.மு.க. பொறுப்பில் இருந்தபோது அறிஞர் அண்ணாவின் மலேசிய வருகையின் நினைவாக ஈப்போ புந்தோங்கில் உள்ள ஓர் ஆற்றுப் பாலத்துக்கு "அண்ணாதுரை பாலம்" என்று பெயரிட்டிருந்தார் டி.ஆர். சீனிவாசகம்.

பேரா மாநிலத்தில் செல்வாக்கோடு திகழ்ந்த ம.மு.க. தலைவர் டி. ஆர். சீனிவாசகம் 1969 மார்ச் 15-ல் மறைவெய்தினார். இவர் நினைவாக ஈப்போ பூங்கா ஒன்றுக்கு "டி.ஆர். சீனிவாசகம் பார்க்" என பெயரிடப்பட்டுள்ளது.

### டத்தோ எஸ். பி. சீனிவாசகம்



மக்கள் முற்போக்குக் கட்சியை (ம.மு.க.) உருவாக்கி தலைமைப் பொறுப்பையும் ஏற்றிருந்த டி. ஆர். சீனிவாசகத்தின் மூத்த சகோதரர் இவர். இவரும் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டிருந்தார். ம.மு.க. சார்பில் போட்டியிட்டு 1959 முதல் தொடர்ச்சியாக மூன்று தவணைகள் நாடாளுமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தவர். டி.ஆர். மறைவுக்குப் பின்னர் ம.மு.க. தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த எஸ்.பி. சீனிவாசகம் ஆளும் தேசிய முன்னணியில் ம.மு.க.வை 1973-ல் இணைத்தார். பின்னர் 1974-ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தேசிய முன்னணி வேட்பாளராக ம.மு.க. சார்பில் "மெங்களம்பு" நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்ட இவர் தோல்வியைத் தழுவினார். பேரா சட்டமன்றத் தொகுதியிலும் வெற்றி வாய்ப்பை இழந்தார். ஈப்போ நகரமன்ற தலைவர் பொறுப்பை இவர் மரணமடையும் வரையில் (1975 ஜுன் 4) வகித்திருந்தார்.

டி.ஆர். சீனிவாசகம் - டத்தோ எஸ்.பி. சீனிவாசகம் சகோதரர்கள் மறைவுக்குப் பின்னர் ம.மு.க. தன் மிடுக்கை, செல்வாக்கை படிப்படியாக இழக்க நேரிட்டது.

### சி.வி. தேவன் நாயர்

(கோலாலம்பூர் பங்கார் தொகுதியில் 1964இல் மக்கள் செயல்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றவர். மலேசியாவில் அப்போது சிங்கப்பூர் இணைந்திருந்தது. பொதுத் தேர்தலில் சிங்கப்பூரின் ஆளும் கட்சியான மக்கள் செயல் கட்சியும் போட்டியிட்டது. பின்னர் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்தவுடன் மக்கள் செயல்கட்சி ஜனநாயக செயல்கட்சி எனும் பெயரில் மலேசிய அரசியல் கட்சியாக இயங்கத் தொடங்கியது. பதவிக்காலம் முடிந்து சிங்கப்பூருக்குத் திரும்பிய சி.வி. தேவன் நாயர் பின்னர் சிங்கப்பூர் அதிபராகவும் பொறுப் பேற்றிருந்தார்.)



### வி. கோவிந்தராஜ்

(ம.இ.கா. சிலாங்கூர் மாநிலத் தலைவராகப் பொறுப்பு வகித்திருந்த வி. கோவிந்தராஜ் ம.இ.கா.வில் நீண்ட கால உறுப்பினர். கலைத்துறையில் அதிக நாட்டம் கொண்டவர். டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் மறைவுக்குப் பின்னர் அவரது தொகுதியில் (கிள்ளான்) நடைபெற்ற இடைத்தேர்தலில் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட்டு வாகை சூடியவர். நாடாளுமன்றச் செயலாளராகவும் பதவி வகித்தவர். கருத்து வேறுபாடுகள் காரணமாக ம.இ.கா.விலிருந்து விலகும் சூழ்நிலை உருவான பின்னர் ஐக்கிய மலேசிய இந்தியர் கட்சியை (ஐ.ம.இ.க.) உருவாக்கி அதன் தலைவராகத் திகழ்ந்து வருகிறார். எதிர் அணியில் இணையாமல் ஆளும் தேசிய முன்னணிக்கு ஆதரவாக தமது கட்சியை வழிநடத்தி வருகிறார் வி. கோவிந்தராஜ்.)



### டி.பி. விஜேந்திரன்

(ம.இ.கா.வின் முன்னாள் பொதுச் செயலாளர். முன்னாள் செனட்டர். காப்பார் தொகுதியில் 1986இல் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனவர். மக்களவைத் துணை சபாநாயகர் பொறுப்பேற்றிருந்தவர். மைக்கா ஹோல்டிங்ஸ் தலைவராகவும் திகழ்ந்தவர்.)



### (டத்தோ) எஸ். எஸ். சுப்ரமணியம்

ம. இ. கா. தேசிய உதவித் தலைவர்களில் ஒருவராக இருந்தவர். சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வுபெற்று பின்னர் நாடாளுமன்றத்துக்கும் போட்டியிட வாய்ப்பு பெற்றவர். 1986இல் உலுசிலாங்கூர் தொகுதியிலும் 1990இல் சிகாமட் தொகுதியிலும் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட டத்தோ எஸ்.எஸ். சுப்ரமணியம் வர்த்தக தொழில் அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளராகவும் பொறுப்பேற்றிருந்தார்.



### பேராசிரியர் டத்தோ (டாக்டர்) டி. மாரிமுத்து

(ம.இ.கா. கல்விக்குழுவின் தலைவரான பேராசிரியர் (டாக்டர்) டி. மாரிமுத்து முதல் முறையாக 1990இல் தெலுங்கெமாங் தொகுதியில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட வாய்ப்பு பெற்றார். 1994 மார்ச் மாதத்தில் விவசாயத்துறைத் துணை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்தார். மலாயா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற பின்னர் அரசியலில் ஈடுபட்டு சமுதாயப்பணி புரிய முன்வந்துள்ளார் பேராசிரியர் டி. மாரிமுத்து. இலக்கிய சமூகப் பணிகளில் தம்மை நீண்ட காலமாகப் பிணைத்துக் கொண்டுள்ள பேராசிரியர் இங்கு 1987இல் நிகழ்ந்த ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டின் ஏற்பாட்டுக் குழுவில் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று அதன் வெற்றிக்குத் துணை புரிந்தவர் "டத்தோ" எனும் விருதும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.



### பீட்டர் பால்தாசன்

(எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர்.)

### கேப்பிரியல்

(எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றவர்.)

### டத்தோ டோமினிக் புதுச்சேரி

பிரபல வழக்குரைஞராகத் திகழும் டத்தோ டோமினிக் புதுச்சேரி 1990-ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கெராக்கான் கட்சி சார்பாக ஆளும் தேசிய முன்னணி வேட்பாளராக வாகை சூடினார். இரண்டாம் தவணையாக 1995 ஏப்ரல் 25ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட கெராக்கான் கட்சி இவருக்கு வாய்ப்பு வழங்கவில்லை. கெராக்கான் கட்சியில் இவர் நீண்டகாலமாக வகித்த தேசிய உதவித் தலைவர் பதவியை பொதுத் தேர்தலுக்குப் பின்னர் துறந்துவிட்டார்.

**(டத்தோ) மகிமா சிங்**

(போர்ட்டிக்கன் தொகுதியில் 1959ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் 1964ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1969ஆம் ஆண்டு தேர்தலில் மூன்றாவது முறையாகப் போட்டியிட்டபோது தோல்வியைத் தழுவினார். தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கிய டத்தோ மகிமா சிங் சிரம்பானில் வர்த்தக பிரமுகராகத் திகழ்கிறார்.)

**கே. கரம் சிங்**

(வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். 1959ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் கோலாலம்பூர் டமன்சாரா தொகுதியில் சோஷலிச முன்னணிக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றவர். 1950ஆம் ஆண்டில் ம.இ.கா.தேசியப் பொருளாளராகவும் 1955ஆம் ஆண்டுகளில் நெகிரி மாநில ம.இ.கா. தலைவராகவும் இருந்த கேஹார் சிங் இவரது தந்தை. தந்தை ஆளும் கட்சிக்கு ஆதரவாக இருந்தபோது இவர் எதிரணியில் செயல்பட்டவர்.)



**ஆர்.சி. எம். ராயன்**

(பேரா மாநில ம.மு.க. சார்பில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வென்றவர்.)

**பி. பட்டு**

ஜனநாயக செயல் கட்சியின் துணைப் பொதுச் செயலாளராக நீண்டகாலம் பதவி வகித்து வந்த பி. பட்டு நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் போட்டியிட்டு வென்றவர். சில தேர்தல்களில் தோல்வியைத் தழுவியவர். 1995 ஏப்ரல் 25ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பினாங்கு மாநிலத்தில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வென்ற பி. பட்டு 12-7-1995ல் மறைவெய்தினார். தமிழ், மலாய் ஆங்கிலம், சீன மொழிகளில் சிறப்பாகப் பேசும் திறன் பெற்றுத் திகழ்ந்தவர் இவர்.

**என். வீரப்பன்**

(தொழிற்சங்கவாதியான என். வீரப்பன் வழக்குரைஞர் தொழிலுக்குப் படித்துத் தேறியவர். எதிரணி வேட்பாளராகப் போட்டியிட்டு 1969இல் நாடாளுமன்ற உறுப்பினரானவர்.)

**வழக்குரைஞர் ராஜசிங்கம்**

(கெரக்கான் கட்சி வேட்பாளராக பினாங்கில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வென்றவர். தற்போது தீவிர அரசியலிலிருந்து ஒதுங்கிவிட்டார்.)

**டாக்டர் சூரியன்**

(சிரம்பான் நகரில் மருத்துவ சிகிச்சை நிலையம் வைத்திருந்த டாக்டர் சூரியன் 1969இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் போர்ட்டிக்சன் தொகுதியில் ஜ.செ.க. வேட்பாளராகப் போட்டியிட்டு வென்றார்.)



**எம்.ஜி. பண்டிதன்**

(ம.இ.கா.வின் தேசிய உதவித் தலைவராகவும் கலாசாரப் பகுதி தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தவர். தரப்பா தொகுதியில் 1986இல் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட்டு வென்று நாடாளுமன்ற உறுப்பினரானவர். வாணிபத் தொழில் அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளராகவும் பொறுப்பேற்றிருந்தார் இந்த முன்னாள் பத்திரிகையாளர். நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு முன்னர் செனட்டர் பதவி வகித்தவர். கருத்து வேறுபாடுகள் காரணமாக ம.இ.கா.விலிருந்து விலகும் சூழ்நிலை இவருக்கு உருவாகியது. இந்திய முற்போக்கு முன்னணி (ஐ.பி.எஃப்) கட்சியை அமைத்து அதன் தலைவராகத் திகழும் எம்.ஜி. பண்டிதன் 1990இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அப்புதிய கட்சியின் சார்பில் எதிர் அணியோடு இணைந்து தெலுக்கிந்தான் தொகுதியில் நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவினார். தொடர்ந்து ஐ.பி.எஃப் கட்சிக்குத் தலைமைப் பொறுப்பேற்று அதனை வழிநடத்தி வருகிறார் எம்.ஜி. பண்டிதன்.)

**டாக்டர் எஸ். சீவரத்னம்**

(சிரம்பானில் மருத்துவத் தொழில் மேற்கொண்ட டாக்டர் எஸ். சீவரத்னம் ஜ.செ.க. வேட்பாளராகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்தில் இடம்பெற்றவர்.

**கர்ப்பால் சிங்**

(வழக்குரைஞராக வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டவர். பினாங்கு சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் இடம் பெற்றிருப்பவர். ஜனநாயக செயல்கட்சியின் முக்கிய பொறுப்புகளை நீண்டகாலமாக வகித்து வருகிறவர் கர்ப்பால் சிங்.)

## மேலவை உறுப்பினர்கள் (செனட்டர்கள்)

### (டான்ஸ்ரீ) ஆதிநாகப்பன்



('தமிழ் நேசன்' தினசரி பத்திரிகையின் ஆசிரியராக 1947 முதல் 1952 வரையில் பணியாற்றிய பின் லண்டன் சென்று சட்டம் பயின்று வழக்குரைஞராகத் தொழிலை மேற்கொண்டவுடன் அரசியலில் அதிக தீவிரம் காட்டி ம.இ.கா. வின் தேசியத் துணைத் தலைவராக வளர்ந்தார். செனட்டராக நியமனம் பெற்ற பின்னர் 1974இல் சட்டத்துறை துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார். அப்போதைய பிரதமர் (துன்) உசேன் ஒன் ஆதி நாகப்பனை 1976 மார்ச் 5இல் பிரதமர் துறை, அமைச்சராக நியமித்தார். அமைச்சர் பதவி கிடைத்ததை முனனிட்டு 1976 மே 9இல் ம.இ.கா.பிரமுகர்கள் தொண்டர்கள் முன்னிலையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் மயங்கி விழுந்து உயிரிழந்தார். 1946 ஆகஸ்டில் முதல் ம.இ.கா. அமைப்புக் கூட்டம் நடைபெற்ற போது, தன்னுடைய இறுதி நாளான ஆகஸ்ட் 5இல் ம.இ.கா. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திலும் உரையாற்றும் வாய்ப்பை ஆதிநாகப்பன் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.)

### டான்ஸ்ரீ க. பாசமாணிக்கம்



கடந்த 26 ஆண்டுகளாகத் தொடர்ந்து ம.இ.கா. ஜோகூர் மாநில தலைவராகப் பொறுப்பேற்று வருகிறவர் டான்ஸ்ரீ டத்தோ க. பாசமாணிக்கம். நீண்ட காலமாக தலைமைப் பொறுப்பை வகிக்கும் ம.இ.கா. தலைவர் எனும் சிறப்பும் இவருக்குண்டு.

ஜோகூர் மாநில ம.இ.கா.வின் பொருளாளராகப் பணியாற்றிய பின்னர் 1969-ல் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் டான்ஸ்ரீ க. பாசமாணிக்கம். ம.இ.கா. வின் தேசிய உதவித் தலைவர்களில் ஒருவராகவும் முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டு கட்சிப் பணிகளில் தீவிரம் காட்டியவர்.

1969-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஜோகூர் மாநில சட்டமன்றத்துக்குப் போட்டியிட்டு வென்று மாநில ஆட்சிக்குழுவிலும் இடம் பிடித்தார்.

மறுதவணை சட்டமன்றத்திற்குப் போட்டியிடும் வாய்ப்பை கடைசி நேரத்தில் இழக்க நேரிட்டது. ஆனாலும் பின்னர் செனட்டராக நியமனம் பெற்று மேலவை உறுப்பினரானார். தொடர்ந்து இரண்டு தவணைகள் செனட்டராகப் பொறுப்பேற்றார்.

"மைக்கா ஹோல்டிங்ஸ்" எனும் மூலதன முதலீட்டு நிதி நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பை டான்ஸ்ரீ க. பாசமாணிக்கம் 1995 மே 19 வரையில் வகித்திருந்தார்.

1994 டிசம்பரில் நடைபெற்ற ம.இ.கா. பொதுப்பேரவையில் தேசிய பொருளாளராக டான்ஸ்ரீ க. பாசமாணிக்கம் நியமனம் பெற்றுள்ளார்.

ஜோகூர் மாநில மூவார் தொகுதி காங்கிரஸ் தலைவருமான டான்ஸ்ரீ க. பாசமாணிக்கம் அரசியலோடு பல பொது அமைப்புக்களிலும் அதிக ஈடுபாடு காட்டி வருகிறார்.

### டத்தோ முத்து பழனியப்பன்



நெகிரி மாநில ம.இ.கா. தலைவராக நீண்டகாலம் பொறுப்பு வகித்த டத்தோ எம். முத்துபழனியப்பன் 1982-ல் சிருசா தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினரானார். மாநில ஆட்சிக்குழுவிலும் இடம் பெற்றார். தொடர்ந்து 1986-ல் ரந்தாவ் தொகுதியிலும், 1990-ல் மீண்டும் ரந்தாவ் தொகுதியிலும் போட்டியிட்டு வென்றவர். 1995 பொதுத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்தவர். சட்டமன்ற உறுப்பினராவதற்கு முன்னர் செனட்டராக நியமனம் பெற்றிருந்தார் வழக்குரைஞர் டத்தோ எம். முத்துபழனியப்பன்.

### ந. மாரிமுத்து



பேரா மாநில கோப்பெங் தொகுதி காங்கிரஸ் தலைவரும் செங்காட் தோட்ட ம.இ.கா. கிளையின் தலைவருமான ந. மாரிமுத்து செனட்டராக நியமனம் பெற்றுள்ளார்.

### (டத்தோ) கே. ஆர். சோமசுந்தரம்



(தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தை துன் சம்பந்தன் அமைத்தபோது அவருக்குத் துணை புரிந்து வளர்த்தவர். துன் சம்பந்தன் மறைவுக்குப் பின்னர் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தை வெற்றிப்பாதையில் வழி நடத்திச் செல்கிறவர். தேசிய நிலநிதி கூட்டுறவு சங்கத்துக்கு தலைமை நிர்வாகியாகவும் 1994 ஜூன் முதல் நிர்வாக இயக்குநராகவும் பொறுப்பேற்றிருக்கும் டத்தோ கே.ஆர். சோமசுந்தரம் ம.இ.கா.வின் தொடக்ககால உறுப்பினர். ம.இ.கா.வின் இரண்டாவது பேராளர் மாநாட்டில் பேராளராகக் கலந்து கொண்டவர். செனட்டராக நியமனம் பெற்று மேலவையில் குரல் எழுப்பிய டத்தோ கே.ஆர். சோமா நேதாஜி தலைமையில் இங்கு இயங்கிய இந்திய தேசிய ராணுவத்தில் (ஐ.என்.ஏ.) தொண்டராகச் செயல்பட்டவர். தேசிய நிலநிதி கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் (விஸ்மா துன் சம்பந்தன்) கீழ்த்தளத்தில் உள்ள அரங்கத்திற்கு 'டத்தோ கே.ஆர். சோமா ஆடிட்டோரியம்' என பெயரிடப் பட்டுள்ளது.)

### (டத்தோ) எஸ். கோவிந்தராஜ்



(ம.இ.கா. தோற்றம் கண்டதிலிருந்து அதில் ஈடுபாடு காட்டிடும் தொண்டர்களில் (டத்தோ) எஸ். கோவிந்தராஜூம் ஒருவர். தொடக்க காலத்தில் கா. ராமநாதன் தலைவராக இருந்தபோது தேசிய பொதுச் செயலாளராகப் பணியாற்றியிருக்கிறார். பின்னர் ம.இ.கா.வில் கலாசாரப் பிரிவிலும் மற்ற சில பிரிவுகளிலும் முக்கிய பொறுப்புகள் வகித்திருக்கிறார். டத்தோஸ்ரீ சாமிவேலுவின் தலைமைத்துவத்தில் ம.இ.கா. நிர்வாகச் செயலாளராகவும் பின்னர் செனட்டராகவும் நியமனம் பெற்றிருந்தார் (டத்தோ) எஸ். கோவிந்தராஜ். பல பொது அமைப்புகளிலும் அங்கம் பெற்றிருக்கும் (டத்தோ) எஸ். கோவிந்தராஜ் மலேசிய இந்து சங்கத்தின் தேசியத் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தார்.)

### (புவான்ஸ்ரீ) ஜானகி ஆதிநாகப்பன்



(டான்ஸ்ரீ) ஆதி நாகப்பனின் துணைவியாரான (புவான்ஸ்ரீ) ஜானகி ஆதி நாகப்பன் ம.இ.கா. மாதர் பகுதியின் தேசியத் தலைவியாக பொறுப்பு வகித்திருந்தார். செனட்டராகவும் நியமனம் பெற்றிருந்தார். சாரணியர் இயக்கத்தில் முக்கிய பொறுப்பு வகித்திருந்தார். நேதாஜி தலைமையில் 40 வருடங்களுக்கு முன்னர் இங்கு இயங்கிய இந்திய தேசிய ராணுவத்தில் மாதர் பகுதியான ஜான்ஸிராணி படையில் சேர்ந்து பணியாற்றியவர் ஜானகி ஆதிநாகப்பன்.)

### டத்தோ (டாக்டர்) கே.எஸ். நிஜார்



(பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரான டத்தோ (டாக்டர்) கே.எஸ். நிஜார் ம.இ.கா.வில் பல பொறுப்புகள் வகித்திருக்கிறார். ம.இ.கா. மத்திய செயலவை உறுப்பினரான இவர் ம.இ.கா.வின் தேசியப் பொருளாளராகவும் பொறுப்பேற்றிருந்தார். செனட்டராக நியமனம் பெற்றிருந்தபோது வாணிபத் தொழில் அமைச்சின் நாடாளுமன்றச் செயலாளராகவும் பொறுப்பு வகிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றார். வர்த்தகத்துறையில் நாட்டம் செலுத்திவரும் டத்தோ (டாக்டர்) கே.எஸ். நிஜார் அரசியலிலும் தீவிரம் செலுத்தி வருகிறார்.)

### (டத்தோ) வி.வி. அபு

(பகாங் மாநில ம.இ.கா. தலைவராகப் பொறுப்பேற்றுள்ள (டத்தோ) வி.வி. அபு செனட்டராகவும் பகாங் மாநில சட்டமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்தவர்.)

### டத்தோ எஸ். பொன்னுசாமிப்பிள்ளை



(பேரா மாநில ம.இ.காவின் தலைவராக நீண்டகாலம் பொறுப்பேற்றிருந்தவர். பேரா மாநில சட்டமன்றத்தில் இடம்பெற்றிருந்தார். 1969இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் தோல்வியைத் தழுவினார். பின்னர் செனட்டராக நியமனம் பெற்றார். சமுதாயப் பணிகளில் முன்நின்று ஆர்வத்துடன் உழைக்கும் தன்மை கொண்டவர். துன் சம்பந்தன் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கத்தை சமுதாய நலனுக்காக அமைத்தபோது அதன் வெற்றிக்கு பேரா மாநிலத்தில் துணைநின்ற தொண்டர் இவர்.)

### டத்தோ வி. கே. கே. தியாகராஜன்



1994 ஆகஸ்டில் செனட்டராக நியமனம் பெற்றிருக்கும் டத்தோ வி. கே. கே. தியாகராஜன் ம.இ.கா. கூட்டரசுப் பிரதேச தொடர்புக்குழு தலைவராகப் பொறுப் பேற்றிருக்கிறார். ம.இ.கா. ஜாலான் ராஜா லாவுட் கிளையின் தலைவராகத்திகழும் இந்த வர்த்தகப் பிரமுகர் பொதுப்பணிகளில் அதிக தீவிரம் காட்டி வருகிறார். இந்து இளைஞர் இயக்கத்தின் தேசியத் தலைவராக முன்பு பொறுப் பேற்றிருந்த இவர் தற்போது மலேசிய இந்திய வர்த்தகர்கள் சம்மேளனத் தலைவராகவும் மலேசிய தேசிய வர்த்தகர்கள் சங்கத் துணைத் தலைவராகவும் மாநகர் ஆலோசனை மன்ற உறுப்பினராகவும் திகழ்கிறார்.

### மு. சண்முகம்



ம.இ.கா. சிம்பாங் துஜோ கிளையின் தலைவரும் கிள்ளான் தொகுதி காங்கிரஸ் தலைவரும் கிள்ளான் நகராண்மைக்கழக உறுப்பினருமான மு. சண்முகம் செனட்டராக 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நியமனம் பெற்றுள்ளார்.

### (டத்தோ) எஸ். எம். வெள்ளையப்பா

(கெடா மாநில ம.இ.கா.முன்னாள் தலைவர். செனட்டராகவும் நியமனம் பெற்றவர்.)

### ஜி . லூயிஸ்



(பேரா மாநில ம.இ.கா. பிரமுகரான ஜி. லூயிஸ் செனட்டராக நியமனம் பெற்றிருந்தார்.)

### எஸ். ஐ. ராஜா

(மக்கள் முற்போக்குக் கட்சியின் தேசிய தலைவராகப் பொறுப்பேற்றிருந்த போது அக்கட்சியின் சார்பாக செனட்டராக நியமனம் பெற்றிருந்தார். கோலா லம்பூரைச் சேர்ந்த எஸ்.ஐ. ராஜா (எஸ். இந்திரராஜா) வழக்குரைஞராக தொழில் புரிந்து வருகிறார்.)

### அ. அருணாசலம்



(தலைவர் துன் சம்பந்தனின் அன்பிற்குப் பாத்திரமானவர். பெந்தோங் பகுதியில் 1960களில் நடைபெற்ற பல பொது நிகழ்ச்சிகளுக்கு இவரே காரண மாக விளங்கியவர். துன் சம்பந்தனின் ஆசியோடு செனட்டராக நியமனம் பெற்ற ம.இ.கா.தொண்டர் இவர்.)

### டி. எஸ். துரைராஜ்

(பேரா மாநில ம.இ.கா. பிரமுகரான டி.எஸ். துரைராஜ் செனட்டராக நிய மனம் பெற்ற பின்னர் பொதுப்பணிகளில் அதிக ஆர்வம் செலுத்தி வந்தார்.)

### எஸ். டி. மணி

(பேரா மாநில ம.இ.கா. பிரமுகர். செனட்டராகப் பொறுப்பேற்ற பின்னர் பல பொது அமைப்புகளோடு தொடர்பு கொண்டிருந்தார்.)

### எஸ். பி. எஸ். நாதன்

(தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தை அதன் அப்போதைய பொதுச் செயலாளர் பி.பி. நாராயணனோடு இணைந்து வலுவான இயக்கமாக உரு வாக்கினார் எஸ்.பி. எஸ். நாதன். நீண்ட காலம் வரை தேசிய தோட்டத் தொழி லாளர் சங்கத்தின் தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். தொழிற்சங்க பிரதிநிதியாக செனட் சபையிலும் இடம்பெற்றிருந்தார். பயண நூல் ஒன்றும் (நாதன் கண்ட நாடுகள்) எழுதியுள்ளார்.)

**எம்.கே. முத்துசாமி**



(ஜோகூர் மாநில ம.இ.கா.வின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்த போது 1974இல் ஜோகூர் மாநில சட்டமன்றத்துக்குப் போட்டியிட வாய்ப்பு பெற்று வெற்றி பெற்றவர். அடுத்தமுறை செனட்டராக நியமனம் பெற்றிருந்தார்.)

**(டான்ஸ்ரீ) சின்னதுரை**

(மலேசிய இலங்கையர் சங்கத்தின் முன்னாள் தலைவரான (டான்ஸ்ரீ) சின்ன துரை செனட்டராக பொறுப்பேற்றிருந்தார்.)



**சி. கிருஷ்ணன்**

(சிலாங்கூர் தகவல் இலாகாவில் பிரசாரப் பகுதி அதிகாரியாக முன்பு பணியாற்றி வந்த சி. கிருஷ்ணன் ம.இ.கா. மத்திய செயலவை உறுப்பினர். இரு தவணைகள் தொடர்ந்து செனட்டராக நியமனம் பெற்ற சி. கிருஷ்ணன் பொதுப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறவர். தேசிய நிலநிதி கூட்டுறவு சங்க இயக்குநர்களில் ஒருவர். பல பொது அமைப்புகளில் அங்கம் வகிக்கிறவர்.)



**கே. சிவலிங்கம்**

(செனட்டராக முன்பு திகழ்ந்த கே. சிவலிங்கம் சிலாங்கூர் மாநில ஸ்ரீசகாயா சட்டமன்ற தொகுதியில் 1990இல் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு பெற்று வெற்றி வாகை சூடியவர். ம.இ.கா. உட்பட பல இயக்கங்களில் முக்கிய பொறுப்புகள் வகித்துவரும் எஸ். சிவலிங்கம் முன்பு இங்கு வெளியிடப்பட்ட 'தமிழ் ஓசை' தினசரியின் உரிமையாளராகவும் திகழ்ந்தவர். ஷா ஆலம் தொகுதி காங்கிரஸ் தலைவர் இவர்.)

**ஜி. ராஜு**

(பேரா மாநில ம.இ.கா.வின் செயலாளராகப் பொறுப்பேற்றுள்ள ஜி. ராஜு செனட்டராக நியமனம் பெற்றிருந்தார். 1990இல் ஊத்தான் மெலிந்தாங் தொகுதியில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட்டு சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். முன்னாள் தமிழாசிரியரான இவர் கட்சிப் பணிகளிலும் சமூகப் பணிகளிலும் ஆர்வத்துடன் உழைப்பவர்.)



**பி. பலராமன்**

(கெடா மாநில ம.இ.கா. பிரமுகரான பலராமன் செனட்டராக பொறுப் பேற்றிருந்தார்).



**கே. முனுசாமி**

(பேரா மாநில ம.இ.கா.வின் பொருளாளரான கே. முனுசாமி செனட்டராக நியமனம் பெற்ற பின்னர் இந்தியர் பிரச்னைகள் குறித்து மேலவையில் குரல் எழுப்பி வருகிறார். பத்துகாகா தொகுதி காங்கிரஸ் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார்).

**(டத்தோ) கே. விஜயநாதன்**

(பினாங்கு மாநில ம.இ.கா.வின் பொதுச் செயலாளராகவும் பின்னர் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ள வழக்குரைஞர் (டத்தோ) கே.விஜய நாதன் செனட்டராக நியமிக்கப்பட்டுள்ளார். ம.இ.கா. மத்திய செயலவை உறுப்பினராகவும் திகழ்கிறார்).

### திருமதி வள்ளி முத்துசாமி



(ம.இ.கா. மாதர் பகுதியின் தேசிய தலைவியாகப் பொறுப்பேற்றிருக்கும் திருமதி வள்ளி முத்துசாமி பல பொது அமைப்புகள் மூலம் பொதுப்பணிகளில் ஈடுபட்டு அரசியலில் வளர்ந்தவர். செனட்டராக நியமனம் பெற்ற வள்ளி முத்துசாமிக்கு 1990 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ம.இ.கா. வேட்பாளராக மாதர் பகுதியின் சார்பாக பிறை தொகுதியில் சட்டமன்றத்துக்குப் போட்டியிட தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ சாமிவேலுவினால் வாய்ப்பு பெற்றார். (1959 இல் செந்தூல் தொகுதி சட்டமன்றத்துக்குப் போட்டியிட திருமதி தேவகி கிருஷ்ணனுக்கு ம.இ.கா. சார்பில் வாய்ப்பு நல்கப்பட்டது. அதன் பிறகு 1990 இல்தான் ம.இ.கா. மாதர் பகுதிக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது) ஜ.செ.க. வேட்பாளர் வழக்குரைஞர் அசுமலையிடம் தொகுதியைப் பறிகொடுத்தார் வள்ளி முத்துசாமி. பின்னர் தனிப்பட்ட காரணங்களினால் வழக்குரைஞர் அசுமலை தமது பிறை தொகுதி சட்டமன்ற பதவியை ராஜினாமா செய்ததால் அங்கு நடந்த இடைத்தேர்தலில் ம.இ.கா. வேட்பாளராக வள்ளி முத்துசாமியின் கணவரும் பினாங்கு ம.இ.கா. தலைவருமான வழக்குரைஞர் முத்துசாமி போட்டியிட்டு இழந்த அதே தொகுதியை வென்றார்).

### டத்தின் சரசா பாசமாணிக்கம்



(ஜோகூர் மாநில ம.இ.கா. மாதர் பகுதியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் திருமதி சரசா பாசமாணிக்கம் ம.இ.கா. மாதர் பகுதியின் தேசிய உதவித் தலைவியாகவும் திகழ்கிறார். 1992 நவம்பரில் செனட்டராகப் பொறுப் பேற்றிருக்கும் திருமதி சரசா பாசமாணிக்கம் ஜோகூர் மாநில ம.இ.கா. தலைவர் (டான்ஸ்ரீ) க. பாசமாணிக்கத்தின் துணைவியார். முன்னாள் பள்ளி ஆசிரியையான திருமதி சரசா பாசமாணிக்கம் பொதுப்பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகிறவர்).

### வி.கே. செல்லப்பன்



(ம.இ.கா. மத்திய செயலவை உறுப்பினரான வி.கே. செல்லப்பன் இரு தவணைகள் தொடர்ந்து செனட்டராக சேவையாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந் தார். முன்னாள் தமிழாசிரியரான வி.கே.செல்லப்பன் அரசியலிலும் பொதுப் பணிகளிலும் அதிக தீவிரம் காட்டி வருகிறவர். கிப்பாங் தொகுதி காங்கிரஸ் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார் இவர்).

### (டான்ஸ்ரீ) சி. செல்வராஜா



(மலாயன் ரயில்வே (கே.டி.எம்.) வாரிய நிர்வாகத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் (டான்ஸ்ரீ) சி. செல்வராஜா பல பொது அமைப்புகளில் முக்கிய பொறுப்புகள் வகித்து வருகிறார். மைக்கா ஹோல்டிங்ஸ் நிறுவனத் தின் தலைவராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார். செனட்டராகவும் நியமனம் பெற்றிருக்கிறார் டான்ஸ்ரீ சி. செல்வராஜா).

### பரம்ஜிட் சிங்

(மக்கள் முற்போக்குக் கட்சியின் தேசியத் தலைவராகப் பொறுப்பு வகித்த வழக்குரைஞர் பரம்ஜிட் சிங் அக்கட்சியின் சார்பில் செனட்டராக மேலவையில் இடம் பெற்றிருந்தார்).

### ஷேக் தாவுது

(பினாங்கு ம.இ.கா. பிரமுகரான ஷேக் தாவுது செனட்டராக நியமனம் பெற்றிருந்தார்).

### வி. சரவணன்



(கெடா மாநில ம.இ.கா.வின் பொதுச் செயலாளராக நீண்ட காலம் பொறுப்பேற்றிருந்த வி. சரவணன் அண்மையில் நடப்புத் தலைவர் டத்தோ டாக்டர் சுப்ரமணியத்தை எதிர்த்துப் போட்டியிட்டு மாநிலத்தலைவர் பதவியைக் கைப்பற்றியுள்ளார். ம.இ.கா. மத்திய செயலவை உறுப்பினருமான வி. சரணவன் செனட்டராக 1994 இல் நியமனம் பெற்றுள்ளார். பள்ளி ஆசிரியராக வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்ட வி. சரவணன் பல பொது அமைப்பு களில் முக்கிய பொறுப்புகள் வகிக்கிறார். சமூகப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுகிறார்).

## 1995 ஏப்ரல் 25-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தேர்வுபெற்ற ம.இ.கா. சட்டமன்ற உறுப்பினர்கள்:

### * எஸ்.எஸ். ராஜகோபால் (கோத்தா ராஜா - சிலாங்கூர்)



சிலாங்கூர் மாநில கோத்தா ராஜா தொகுதியில் போட்டியிட்டு வென்று, சட்டமன்ற உறுப்பினராகவும், சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்றிருக்கிறார் எஸ்.எஸ். ராஜகோபால்.

கடந்த 1990-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஷா பணடாராயா மதாகுதி சட்டமன்றுத்துக்குப் போட்டியிட்டு வென்று, மாநில ஆட்சிக் குழுவிலும் இடம்பெற்றிருந்த டத்தோ த. ம. துரை 1994 மார்ச்சில் மரணமடைந்தவுடன், அத்தொகுதியில் 1994 மே 8-ல் நடைபெற்ற இடைத்தேர்தலில் ம.இ.கா. வேட்பாளராக தேசிய முன்னணி சின்னத்தில் எஸ்.எஸ். ராஜகோபால் போட்டியிட்டு வென்றார். தொடர்ந்து மாநில ஆட்சிக்குழுவிலும் இடம்பெற்றிருந்தார். ம.இ.கா. பத்துகேவ்ஸ் கிளையின் தலைவராக நீண்டகாலம் சேவையாற்றிவரும் எஸ்.எஸ். ராஜகோபாலுக்கு தேசியத் தலைவர் டத்தோஸ்ரீ ச. சாமிவேலுவின் ஆதரவினால் ம.இ.கா. நிர்வாகச் செயலாளராகப் பொறுப்பேற்கும் வாய்ப்புக் கிடைத்தது. அதற்கு முன்னர் கே.பி.ஜே. கூட்டுறவுக் கழகத்தில் பணிபுரிந்து வந்தார். பின்னர் சட்டமன்றத்திற்குப் போட்டியிடவும் தேர்ந்தெடுக்கப்பட்டார் சேவையாளர் எஸ்.எஸ். ராஜகோபால். ம.இ.கா. தேசிய இளைஞர் பகுதித் தலைவராகவும் திகழ்கிறார் எஸ்.எஸ். ராஜகோபால்.

### * வி. சரவணன் (புக்கிட் செலம்பாங் - கெடா)



கெடா மாநில ம.இ.கா. தொடர்புக்குழு தலைவர் வி. சரவணனுக்கு புக்கிட் செலம்பாங் (கெடா) சட்டமன்றத் தொகுதியில் முதன்முறையாகப் போட்டியிடும் வாய்ப்புக் கிடைத்தது. வாகை சூடிய வி. சரவணனுக்கு கெடா மாநில ஆட்சிக்குழுவிலும் இடம் கிடைத்திருக்கிறது.

சிலாங்கூர் மாநில கோலசிலாங்கூர் பகுதியைச் சேர்ந்த வி. சரவணன் வேலை காரணமாக கெடா மாநிலத்துக்குச் சென்றவர். 1965-ல் கெடா, கம்போங் ராஜா ம.இ.கா. கிளையில் சேர்ந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டார். மாநிலத் துணைச்செயலாளராகவும், பின்னர் மாநிலச் செயலாளராகவும், 1990-ல் அப்போதைய மாநிலத் தலைவர் டத்தோ டாக்டர் சுப்பிரமணியத்துடன் போட்டியிட்டு மாநிலத் தலைவர் பதவியையும் தன்வசப்படுத்திக்கொண்டார்.

பள்ளி ஆசிரியராக வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டிருந்த வி. சரவணன் 1994-ம் ஆண்டில் செனட்டராக நியமனம் செய்யப்பட்டார். 1994 டிசம்பரில் நடந்த ம.இ.கா. பொதுப்பேரவையில் மத்திய செயலவை உறுப்பினராகவும் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ள வி. சரவணன் (வயது 51) தற்போது ஆட்சிக்குழுவிலும் இடம்பெற்றுள்ளார்.

### * எம். சுந்தரம் (ஜெரம் பாடாங் - நெகிரி)



நெகிரி மாநில ராசா தொகுதி காங்கிரஸ் தலைவரான எம். சுந்தரம் ஜெராம் பாடாங் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்று நெகிரி மாநில ஆட்சிக்குழுவிலும் முதன்முறையாக இடம்பெற்றுள்ளார்.

நெகிரி செம்பிலானைச் சேர்ந்த ரந்தாவ் பகுதியில் 1944-ல் பிறந்த எம். சுந்தரம் 1965-ல் ரந்தாவ் ம.இ.கா. கிகைளயில் உறுப்பினராகச் சேர்ந்து 1968-ம் ஆண்டில் அக்கிளையின் துணைத்தலைவராக உயர்ந்தார். 1972-ம் ஆண்டில் ரந்தாவ் கிளையின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். 1988 முதல் 1992 வரை மாநிலத் துணைத்தலைவராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பைப் பெற்றார். 1984 முதல் மாவட்ட மன்ற உறுப்பினராகத் திகழ்ந்த எம். சுந்தரம் 1982-ல் ஜே.பி. விருது பெற்றவர்.

### * டாக்டர் கே. ரஜபதி (பிறை - பினாங்கு)



பினாங்கு மாநில பிறை சட்டமன்றத் தொகுதியில் ஜ.செ.கா.வின் பட்டுவைத் தோற்கடித்து வாகை சூடியவர். மாநில ஆட்சிக்குழுவிலும் இடம்பெற்றிருப்பவர்.

பினாங்கு மாநில நிபோங் திபால் வட்டாரத்தில உளள கலடோனயா தோட்டத்தில் 10-6-1946-ல் பிறந்த கே. ரஜபதி நிபோங் மெதடிஸ்ட் பள்ளியில் தொடக்கக் கல்வியை முடித்த பின்னர், சென்னை பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் படித்து டாக்டராக மலேசியா திரும்பியவர்.

நிபோங் திபாலில் சொந்தமாக மருத்துவ சிகிச்சை நிலையம் நடத்தி வரும இவர், அரசியலிலும் தீவிர ஈடுபாடு காட்டிவருகிறார். நிபோங் திபால் தொகுதி காங்கிரஸ் தலைவராகவும் மாநில ம.இ.கா. பொருளாளராகவும் பொறுப்பேற்றுள்ளார். பல பொது அமைப்புகளிலும் ஈடுபாடு காட்டிவரும் டாக்டர் கே. ரஜபதி முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராகியுள்ளார்.

## * கே. எஸ். பாலகிருஷ்ணன் (பாசீர்கூடாங் - ஜோகூர்)



ஜோகூர் மாநில ம.இ.கா. துணைத் தலைவர் திரு. கே. எஸ். பாலகிருஷ்ணன் மூன்றாவது தவணையாக பாசீர்கூடாங் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றுள்ளார்.

1944 ஏப்ரல் 5-ல் ஜோகூர்பாருவில் பிறந்த கே. எஸ். பாலகிருஷ்ணன், 1964-ல் ஸ்கூடாய் ம.இ.கா. கிளையில் உறுப்பினராகச் சேர்ந்தார். பின்னர் கிளையின் செயலாளராகவும், 1974 முதல் கிளையின் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார். தற்போது கேலாங் பாத்தா தொகுதி காங்கிரஸ் தலைவராகவும் திகழ்கிறார்.

1986 முதல் 1991 வரை ம.இ.கா. தேசிய இளைஞர் பகுதித் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார் இவர்.

1979 முதல் ம.இ.கா. மத்திய செயலவையில் இடம் பிடித்துள்ள கே. எஸ். பாலகிருஷ்ணன் 1976 முதல் 1978 வரை செனாய் மாவட்ட மன்ற உறுப்பினராகவும், 1979 முதல் 1981 வரை ஜோகூர்பாரு மத்திய மாவட்ட மன்ற உறுப்பினராகவும் பதவி வகித்தார். 1982 முதல் 1986 வரையில் ஜோகூர்பாரு நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராக நியமனம் பெற்றிருந்த இவர் 1986-ல் முதன்முறையாக பாசிர்கூடாங் சட்டமன்றத் தொகுதியில் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

## * கே. ராஜூ, (ஊத்தான் மெலிந்தாங், பேராக்)



பேராக் மாநில ம.இ.கா. தொடர்புக்குழுச் செயலாளர் கோ. ராஜூ ஊத்தான் மெலிந்தாங் சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது தவணையும் போட்டியிட வாய்ப்புப் பெற்று வாகையும் சூடினார்.

1938 ஜனவரி 11-ல் பிறந்த இவர் தமிழாசிரியராகத் தன் வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டவர்.

1960 முதல் 1979 வரை சுங்கை ம.இ.கா. கிளையின் செயலாளராகவும், 1980 முதல் கோலபாரி ம.இ.கா. கிளையின் தலைவராகவும் பொறுப்பேற்றார். 1970-ல் ம.இ.கா. பேரா மாநில இளைஞர் பகுதித் தலைவராகவும், 1975-ல் மாநில பொருளாளராகவும், 1981 முதல் மாநிலச் செயலாளராகவும் தேர்வு பெற்ற இவர் 1986 முதல் ம.இ.கா. மத்திய செயலவையிலும் இடம் பெற்றார். 1986 முதல் 1990 வரையில் செனட்டராக நியமனம் பெற்ற கோ. ராஜூ 1990-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முதன்முறையாக ஊத்தான் மெலிந்தாங் தொகுதியில் போட்டியிட்டு வென்றார்.

## * க. சிவலிங்கம் (ஈஜோக் சிலாங்கூர்)



சிலாங்கூர் மாநில ஷா ஆலம் தொகுதி காங்கிரஸ் தலைவரான க. சிவலிங்கம், ஈஜோக் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வென்றுள்ளார். கடந்த 1990-ல் நிகழ்ந்த நாட்டின் எட்டாவது பொதுத் தேர்தலில் ஸ்ரீ சகாயா சட்டமன்ற தொகுதியில் முதன்முறையாகப் போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றிருந்தார்; வாகையும் சூடியிருந்தார். அதற்கு முன்னர் 1989-ம் ஆண்டில் செனட்டராக நியமனம் பெற்றிருந்த இவர் ஓர் ஆண்டுக்குப் பின்னர் சட்டமன்ற உறுப்பினரானார்.

1948-ல் பிறந்த இவர் 1970-ல் அரசியலில் ஈடுபட்டார். தஞ்சோங் சிப்பாட் ம.இ.கா. கிளையின் துணைச் செயலாளராகவும் 1980-ல் பாடாங் ஜாவா கிளையின் செயலாளராகவும் பின்னர் கிளைத் தலைவராகவும் தற்போது ஷா ஆலம் தொகுதி காங்கிரஸ் தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார் க. சிவலிங்கம்.

## 1955 முதல் 1995 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற பொதுத் தேர்தல் விபரங்கள்

| வருடம் | தேர்தல் அறிவிப்பு நாள் | | வேட்புமனு தாக்கல் நாள் | | வாக்களிப்பு நாள் | |
|---|---|---|---|---|---|---|
| 1955 | மார்ச் | 1 | ஜூன் | 15 | ஜூலை | 27 |
| 1959 | ஜூலை | 1 | ஜூலை | 15 | ஆகஸ்ட் | 19 |
| 1964 | மார்ச் | 4 | மார்ச் | 21 | ஏப்ரல் | 25 |
| 1969 | மார்ச் | 24 | ஏப்ரல் | 5 | மே | 10 |
| 1974 | ஆகஸ்ட் | 1 | ஆகஸ்ட் | 8 | ஆகஸ்ட் | 24 |
| 1978 | ஜூன் | 13 | ஜூன் | 21 | ஜூலை | 8 |
| 1982 | மார்ச் | 30 | ஏப்ரல் | 7 | ஏப்ரல் | 22 |
| 1986 | ஜூலை | 19 | ஜூலை | 24 | ஆகஸ்ட் | 3 |
| 1990 | அக்டோபர் | 6 | அக்டோபர் | 11 | அக்டோபர் | 20 |
| 1995 | ஏப்ரல் | 5 | ஏப்ரல் | 15 | ஏப்ரல் | 25 |

## * டத்தோ என். அருணாசலம் (புக்கிட் அசகான் - மலாக்கா)



மலாக்கா மாநில ம.இ.கா. தொடர்புக்குழுத் தலைவரான டத்தோ என். அருணாசலம் புக்கிட் அசகான் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளார்.

1986-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தெபோங் தொகுதியில் முதன்முறையாக போட்டியிடும் வாய்ப்பைப் பெற்றார். மலாக்கா மாநில சட்டமன்றத்தில் இடம்பெற்ற முதல் ம.இ.கா. தலைவர் எனும் சிறப்பையும் இவர் பெற்றிருக்கின்றார்.

சிரம்பானில் 1943 டிசம்பர் 25-ல் பிறந்த இவர், 1962-ல் நெகிரி மாநிலத்திலுள்ள பாஜம் ம.இ.கா. கிளையில் உறுப்பினராகச் சேர்ந்த பின்னர் அதே கிளையில் செயலாளராகவும் துணைத்தலைவராகவும் பொறுப்பேற்றார். தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்க வெளியுறவு அதிகாரியாகப் பணியாற்றிய இவர், 1970-ல் மலாக்காவுக்கு இடம்மாறி வந்தார். லெண்டு ம.இ.கா. கிளையில் சேர்ந்து நிர்வாகக்குழுவில் இடம்பெற்றார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அக்கிளையின் தலைமைப் பொறுப்புக்கு வந்தார். மாநிலத்தில் இளைஞர் பகுதி தலைவராகவும், மாநில துணைச்செயலாளராகவும் நியமனம் பெற்றார். 1984-ல் அப்போதைய மலாக்கா மாநிலத் தலைவர் டத்தோ சிவபுண்ணியம் தன் உடல்நிலை காரணமாக பதவி விலகியதைத் தொடர்ந்து (டத்தோ) அருணாசலம் மாநிலத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

மூன்றாவது தவணையாக சட்டமன்ற உறுப்பினராகியுள்ள என். அருணாசலத்துக்கு 1994-ல் டத்தோ விருது வழங்கப்பட்டிருக்கிறது.

## * ஆர். சின்னத்தம்பி (சபாய் - பகாங்)



பகாங் ம.இ.கா. தொடர்புக்குழு துணைத்தலைவரும் பெந்தோங் தொகுதி காங்கிரஸ் தலைவருமான ஆர். சின்னத்தம்பி சபாய் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றுள்ளார்.

1990-ல் நடைபெற்ற நாட்டின் எட்டாவது பொதுத்தேர்தலில் முதன்முறையாக சங்காட் தொகுதியில் போட்டியிட்டு வென்ற இவர், பள்ளி ஆசிரியராக தன் வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டவர்.

1938 பிப்ரவரி 24-ல் புக்கிட் டிண்டிங் தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவர் இவர். தோட்டப்பள்ளியில் ஆரம்பக் கல்வியைக் கற்றவர். 1960-ல் தமிழ்ப்பள்ளி ஆசிரியராகத் தன் பணியைத் தொடந்தார். அரசியலிலும் அதிக ஈடுபாடு காட்டி வந்தார். 1976-ல் ம.இ.கா. காராக் கிளையின் தலைவரானார். 1976-ல் மாநில செயலாளராகவும் 1986-ல் மாநில துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

## * எஸ். வீரசிங்கம் (சுங்கை - பேராக்)



பேராக் மாநில சுங்கை சட்டமன்ற தொகுதியில் இரண்டாவது தவணையாகப் போட்டியிட்டு வென்றவர்.

நிபோங் திபாலில் 13-10-1941 ல் பிறந்த எஸ். வீரசிங்கம் கோலாலம்பூர், பத்து ரோடு ஆங்கிலப்பள்ளியில் கல்வி கற்றவர். 1962-ல் கோலகெட்டிலில் (கெடா) ஆங்கிலப்பள்ளி ஆசிரியராகப் பணியைத் தொடங்கியவர். 1965-ல் கம்பார் பள்ளிக்கு மாற்றலாகி வந்தவர். 1990 வரை பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். அரசியலிலும் தீவிரம் காட்டினார். 1967-ல் கம்பார் ம.இ.கா. கிளையின் துணைத் தலைவராகவும், 1978-க்குப் பின்னர் கம்பார் ம.இ.கா. கிளையின் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

கம்பார் தொகுதி காங்கிரஸ் தலைவராகவும் திகழும் எஸ். வீரசிங்கம் 1994 டிசம்பரில் நடைபெற்ற ம.இ.கா. பொதுப்பேரவையில் மத்திய செயலவைக்குப் போட்டியிட்டு முதலாவது இடத்தைப் பிடித்தார்.

## * எம். முத்தையா (பாசீர் பாஞ்சாங் - பேராக்)



பேராக் மாநில ம.இ.கா. தொடர்புக்குழுவின் துணைச்செயலாளர் (இன்ஜினியர்) எம். முத்தையா பாசிர் பாஞ்சாங் தொகுதியில் முதன்முறையாகப் போட்டியிட்டு வெற்றி அடைந்துள்ளார்.

1948 ஏப்ரல் 11-ல் தெலுக் இந்தானில் பிறந்த இவர், பொறியியல் துறையில் இங்கும், பின்னர் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்றார். 1973 முதல் 1989 வரையில் இவர் இன்ஜினியராக அரசாங்கப் பணியில் ஈடுபட்டிருந்தார். தற்போது ஈப்போவில் இவர், மும்மூர்த்தி கார்ப்பரேஷன், ஜுப்ரா கான்சல்டன் ஆகிய நிறுவனங்களை நிர்வகித்து வருகிறார்.

1975-ல் ஈப்போ ம.இ.கா. கிளையில் உறுப்பினராகச் சேர்ந்த எம். முத்தையா 1980 முதல் 1986 வரை ஈப்போ கார்டன் ம.இ.கா. கிளையின் நிர்வாக உறுப்பினராகவும், தொடர்ந்து 1986 முதல் 1989 வரையில் அக்கிளையின் துணைத்தலைவராகவும் பொறுப்பேற்றார். பின்னர் 1990 முதல் பெக்கான் ஈப்போ ம.இ.கா. கிளையின் தலைவர் பொறுப்புக்கு வந்தார்.

1987-ல் ஈப்போ நகராண்மைக் கழகத்தில் உறுப்பினராகவும் நியமிக்கப் பட்டிருந்தார் இன்ஜினியர் எம். முத்தையா.

## * டாக்டர் ஜோ. பெர்னாண்டஸ் (லுனாஸ் - கெடா)



கெடா மாநில கூலிம் பண்டார்பாரு தொகுதி காங்கிரஸ் தலைவர் டாக்டர் ஜோ. பெர்னாண்டஸ் லுனாஸ் தொகுதியில் முதன்முறையாகப் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வுபெற்றுள்ளார்.

1994 டிசம்பரில் நடைபெற்ற ம.இ.கா. பொதுப்பேரவையில் மத்திய செயலவைக்குப் போட்டியிட்ட ஜோ. பெர்னாண்டஸ் நான்காவது இடத்தைப் பிடித்தார். அதற்கு முந்திய ம.இ.கா. பேரவையில் மத்திய செயலவை தேர்தலில் முதலாவது இடத்தைப் பிடித்து, பேராளர்களின் இதயங்களிலும் இடம் பிடித்தவர்.

இந்தியாவில் மணிப்பால் மருத்துவக் கல்லூரியில் படித்து எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்று இங்கு திரும்பிய பிறகு, நான்கு ஆண்டுகள் அரசாங்க மருத்துவமனையில் பணியாற்றினார். பின்னர் சொந்தமாக மருத்துவ சிகிச்சை நிலையங்களை கெடா மாநிலத்தில் நடத்தி வருவதோடு, அரசியலிலும் பொதுப்பணிகளிலும் தீவிரம் காட்டி வருகிறார் டாக்டர் ஜோ. பெர்னாண்டஸ்.

## * எஸ். கோபாலகிருஷ்ணன் (சுங்கை துவா - சிலாங்கூர்)



சிலாங்கூர் மாநில உலுலங்காட் தொகுதி காங்கிரஸ் தலைவரான எஸ். கோபாலகிருஷ்ணன் முதன்முறையாக சுங்கை துவா சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்றுள்ளார்.

1992-ல் காஜாங் ம.இ.கா. கிளையின் துணைச்செயலாளராகவும், பின்னர் 1968-ல் அக்கிளையின் செயலாளராகவும் தேர்வு பெற்றிருந்தார். 1984-ல் காஜாங் கிளையின் தலைவராக உயர்ந்தார்.

கே.பி.ஜே. கூட்டுறவுக் கழகத்தின் செயலாளராகப் பொறுப்பெற்றுள்ள எஸ். கோபாலகிருஷ்ணன் கடந்த 14 ஆண்டுகளாக மாவட்ட மன்ற உறுப்பினராகவும் சேவையாற்றி வந்துள்ளார். 56 வயதான எஸ். கோபாலகிருஷ்ணன் கடந்த 35 ஆண்டுகாலமாக ம.இ.கா.வோடும் சமூக இயக்கங்களோடும் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளார்.

## * எஸ். கிருஷ்ணசாமி (தெங்காரோ - ஜோகூர்)



ஜோகூர் மாநில லாபிஸ் தொகுதி காங்கிரஸ் தலைவரான எஸ். கிருஷ்ணசாமிக்கு முதன்முறையாக தெங்காரோ சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெல்லும் வாய்ப்பு கிடைத்திருக்கின்றது.

1994 டிசம்பரில் நடைபெற்ற ம.இ.கா. பொதுப்பேரவையில் முதல்முறையாக மத்திய செயலவைக்குப் போட்டியிட்டு வெற்றிபெறும் வாய்ப்பையும் இவர் பெற்றிருந்தார்.

சிகாமட்டில் பிறந்த எஸ். கிருஷ்ணசாமி (வயது 48) 1972-ல் சிகாமட ம.இ.கா. கிளையில் சேர்ந்தார். தொடர்ந்து அக்கிளையின் இளைஞர் பகுதி தலைவர் பொறுப்பையும் ஏற்றார். 1975-ல் சிகாமட் மாவட்ட ம.இ.கா. இளைஞர் பிரிவுக்கும் தலைவரானார். பத்தாண்டுகளுக்குப் பின்னர் மாநில இளைஞர் பகுதி துணைத்தலைவரானார். 1988-ல் ஜோகூர் மாநில ம.இ.கா. ஆட்சிக்குழுவுக்கும் தேர்வு பெற்றார்.

1993-ல் ஜோகூர் மாநில ம.இ.கா.வின் பொருளாளராகவும் நியமிக்கப்பட்டவர் எஸ். கிருஷ்ணசாமி சிகாமட் மாவட்ட மன்ற உறுப்பினராகவும் திகழ்கிறவர் இவர்.

## * செல்ல கிருஷ்ணன் (சிருசா - நெகிரி)



நெகிரி மாநில சிரம்பான் தொகுதி காங்கிரஸ் தலைவர் செல்ல கிருஷ்ணன் முதன்முறையாக சிருசா தொகுதியில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு பெற்றுள்ளார்.

போர்ட்டிக்சனில் பிறந்த செல்ல கிருஷ்ணன் (வயது 44) எம்.சி.இ. தேர்வு பெற்ற பிறகு 1973-ல் மைசூர் பல்கலைக் கழகத்தில் பி.எஸ்.சி. தேர்வு பெற்றார். இவரது அரசியல் வாழ்வு 1973-ல் தொடங்கியது. ம.இ.கா. நீலாய் கிளையில் செயற்குழு உறுப்பினராக விளங்கிய இவர், 1982-ல் அக்கிளையின் செயலாளர் பொறுப்பை ஏற்றார். 1986-ல் ம.இ.கா. சுங்கை மகாங் கிளையின் தலைவர் பொறுப்பை ஏற்றார். 1987-ல் நெகிரி மாநில துணைச்செயலாளராகவும், 1988 முதல் 1993 வரை சிரம்பான் தொகுதி காங்கிரஸ் செயலாளராகவும் நியமனம் பெற்றார்.

ம.இ.கா. டிவிஷன் முறை அறிமுகம் செய்யப்பட்ட பிறகு நடைபெற்ற முதலாவது டிவிஷன் (தொகுதி) தேர்தலில் டத்தோ முத்துபழனியப்பனைத் தோற்கடித்து, சிரம்பான் தொகுதி காங்கிரஸ் தலைவராகவும் தேர்வு பெற்று அரசியலில் பிரகாசிக்கத் தொடங்கினார்.

ஒற்றுமைத்துறை அமைச்சில் ஓர் அதிகாரியாகப் பணியாற்றிய செல்ல கிருஷ்ணன் 1988 முதல் 1993 வரையில் சிரம்பான் மாவட்ட மன்ற உறுப்பினராகவும் பொறுப்பு வகித்திருக்கிறார்.

# உயர் விருதுகள் பெற்ற மலேசிய இந்தியர்கள்

## துன் விருது

**துன் வீ. தி. சம்பந்தன்**

(1955 ஆம் ஆண்டில் ம.இ.கா. தேசியத் தலைவராகத் தேர்வு பெற்று 1973 ஆம் ஆண்டு வரையில் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவர். 1955 ஆம் ஆண்டில் துங்கு தலைமையில் அமைக்கப்பட்ட முதல் அமைச்சரவையில் இடம்பெற்றவர். கோலாலம்பூர் நகரின் முக்கிய தெருவான ஜாலான் பிரிக் பீல்ட்ஸுக்கு துன் சம்பந்தனின் பெயர் சூட்டப்பட்டுள்ளது).

## டத்தோஸ்ரீ விருது

**டத்தோஸ்ரீ ச. சாமிவேலு**

(1979 ம.இ.கா. தேசியத் தலைவர் பொறுப்பேற்றவர். 1974 இல் சுங்கை சிப்புட் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினரானவர். தொடர்ந்து ஐந்து முறை அதே தொகுதியில் போட்டியிட்டு வென்றவர். கட்சி வளர்ச்சிக்கும் சமூக நலனுக்கும் கடுமையாக உழைக்கும் அமைச்சர்).

**டத்தோஸ்ரீ டாக்டர் எம். மகாதேவன்**

(தங்கோங் ரம்புத்தான் மனநோய் மருத்துவ நிலைய முன்னாள் இயக்குநர்)

**டத்தோஸ்ரீ என்.டி. ராஜா**

பொதுநல சேவையாளர் டத்தோ என்.டி. ராஜாவுக்கு மேன்மை தங்கிய பேராக் சுல்தானின் 67-வது பிறந்த நாளில் "டத்தோஸ்ரீ" எனும் உயரிய விருது வழங்கப்பட்டுள்ளது.

## டான்ஸ்ரீ விருது

**டான்ஸ்ரீ வி. மாணிக்கவாசகம்**

(1973 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரையில் ம.இ.கா. தேசியத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். 1959 இல் கிள்ளான் தொகுதியில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராகியவுடன் துணை அமைச்சராகும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றவர். பின்னர் அமைச்சராகவும் திகழ்ந்தவர்)

**டான்ஸ்ரீ எஸ்.ஒ.கே. உபைதுல்லா**

(ம.இ.கா.வின் தொடக்ககால உறுப்பினர். செனட் சபையின் முன்னாள் துணைத் தலைவர்).

**டான்ஸ்ரீ ஆதி நாகப்பன்**

(ம.இ.கா. வின் தொடக்க கால உறுப்பினர். தேசிய துணைத் தலைவராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்தவர்).

**டான்ஸ்ரீ க.பாசமாணிக்கம்**

(மைக்கா ஹோல்டிங்ஸ் நிறுவனத் தலைவர். ம.இ.காவின் தொடக்கக்கால உறுப்பினர். ஜோகூர் மாநில ம.இ.கா. தலைவர். முன்னாள் செனட்டர். ஜோகூர் சட்டமன்றத்திலும் ஆட்சிக்குழுவிலும் இடம்பெற்றிருந்தவர்).

**டான்ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணன்**

மலேசிய இந்திய வர்த்தகர்களில் மிகப் பிரபலமாகத் திகழும் தலைநகரைச் சேர்ந்த ஆனந்த கிருஷ்ணனுக்கு "டான்ஸ்ரீ" விருது கிடைத்துள்ளது. சொந்தமாக விமானம் வைத்துள்ள டான்ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணன் பல நிறுவனங்களுக்கு உரிமையாளராகத் திகழ்கிறார்.



**டான்ஸ்ரீ தேவகி கிருஷ்ணன்**

ம.இ.கா. மகளிர் பகுதி உச்சமன்ற உறுப்பினரும் சமூக சேவையாளருமான டாக்டர் தேவகி கிருஷ்ணன் 1995 ஜூன் 3-ல் பேரரசர் பிறந்தநாள் அன்று "டான்ஸ்ரீ" விருது பெற்றுள்ளார். "டான்ஸ்ரீ" விருது பெறும் முதல் இந்தியப் பெண்மணி இவர்தான். 1952-ல் கோலாலம்பூர் நகரமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வென்ற முதல் இந்தியப் பெண்மணியும் இவர்தான்.



**டான்ஸ்ரீ என்.எஸ். மணியம்**

(1964 இல் சிலாங்கூர் மாநில சட்டமன்றத்துக்குப் போட்டியிட்டு வென்று தொடர்ந்து மூன்று தவணைகள் சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தவர். சிலாங்கூர் ம.இ.காவில் துணைத் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தவர்).



**டான்ஸ்ரீ சி. செல்வராஜா**

(மலாயன் ரயில்வே (கே.டி.எம்.) வாரிய நிர்வாகத் தலைவர். மைக்கா ஹோல்டிங்ஸ் முன்னாள் தலைவர். செனட்டராகவும் நியமனம் பெற்றிருந்தவர்).

**டான்ஸ்ரீ ஏ. தர்மலிங்கம்**

(1952 இல் கோலால்பூரில் நடந்த முதல் நகரமன்றப் பொதுத் தேர்தலில் தொழிற்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டவர். பின்னர் ம.இ.கா.வில் ஈடுபட்டு 1955 இல் சிலாங்கூர் ம.இ.கா.வின் செயலாளராகப் பொறுப்பேற்கும் வாய்ப்பு பெற்றவர். பின்னர் நகரமன்ற உறுப்பினரானவர். வர்த்தகப் பிரமுகர்).



**டான்ஸ்ரீ ரேமன் நவரத்னம்**

(போக்குவரத்து அமைச்சின் முன்னாள் தலைமைச் செயலாளர். கோலாம்பூரில் இயங்கும் பாங்க் பூரோவின் தலைமை நிர்வாகி. பொதுப் பணிகளில் அதிக நாட்டம் செலுத்துபவராகவும் திகழ்கிறார். சமூகநல கல்வி ஆராய்ச்சி நிலைய (EWRF) அறங்காவலராகவும் பொறுப்பு வகிக்கிறார் இவர்).



**டான்ஸ்ரீ எம்.எஸ். சுந்தரம்**

(வருமான வரி இலாகாவில் உயர்பதவி வகித்து ஓய்வு பெற்றவர். சமூக சமய இயக்கங்களோடு நெருக்கமான தொடர்புடையவர். மைக்கா நிறுவன இயக்குநர்).

**டான்ஸ்ரீ ஜே.ஜி. டேனியல்**

(நேகா கூட்டுறவு நிறுவனத்தின் முன்னாள் தலைவர்).

**டான்ஸ்ரீ கிஷு ஜெதானந்த்**

(வர்த்தக பிரமுகர். மைக்கா நிறுவன முன்னாள் இயக்குநர்).

**டான்ஸ்ரீ சின்னதுரை**

(முன்னாள் செனட்டர். மலேசிய இலங்கையர் சங்க முன்னாள் தலைவர்).



**டான்ஸ்ரீ ஜெயரத்னம்**

(பேரா மாநில பிரமுகர்).

**டான்ஸ்ரீ டாக்டர் டி.ஜே. தனராஜ்**

(மலாயா பல்கலைக்கழக மருத்துவப்பிரிவின் முன்னாள் தலைவர்).

**டான்ஸ்ரீ ஜி.கே. ராம அய்யர்**

(மைக்கா நிறுவன இயக்குநர். சமூக நல கல்வி ஆராய்ச்சி நிலைய (EWRF) அறங்காவலர்).



**டான்ஸ்ரீ ஜி. வடிவேலு**

(ம.இ.காவின் பொதுச் செயலாளர். மேலவைத் தலைவர் (சபாநாயகர்). முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்).

**டான்ஸ்ரீ எட்கர் ஜோசப் ஜுனியர்**

(உச்ச நீதிமன்ற நீதிபதி).

**டான்ஸ்ரீ அட்ஜய் சிங்**

(முன்னாள் உச்சநீதிமன்ற (சுப்ரீம் கோர்ட்) நீதிபதி).

**டான்ஸ்ரீ ஜோன் ஜி. சவரிமுத்து**

(கோலாலம்பூர் மறை மாவட்டத்தின் ஒய்வுபெற்ற பேராயர்).

**டான்ஸ்ரீ (டாக்டர்) பி.சி. சேகர்**

(ரப்பர் ஆய்வு நிலைய (ஆர்.ஆர்.ஐ.) முன்னாள் தலைமை இயக்குநர்.

செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்தின் இளைஞர்

பகுதியின் தொடக்க கால தலைவர்).

**டான்ஸ்ரீ டோமினிக்**

(ஓய்வுபெற்ற பேராயர் டோமினிக் வேந்தர் கோன் அடிகளாருக்கும் டான்ஸ்ரீ விருது கிடைத்துள்ளது)

## டத்தோ விருது

**டத்தோ சி. சுப்ரமணியம்**

(ம.இ.கா. தேசிய துணைத்தலைவர்)

**டத்தோ கு. பத்மநாபன்**

(ம.இ.கா. முன்னாள் உதவித் தலைவர் - முன்னாள் துணை அமைச்சர்).

**டத்தோ எம். மகாலிங்கம்**

(சிலாங்கூர் மாநில ம.இ.கா. தலைவர் - துணை அமைச்சர்).

**டத்தோ க. குமரன்**

(பேரா மாநில ம.இ.கா. தலைவர் - சுகாதார அமைச்சின் நாடாளுமன்ற செயலாளர்).



**டத்தோ முத்து பழனியப்பன்**

(நெகிரி மாநில ம.இ.கா. தலைவர் - நெகிரி சட்டமன்ற உறுப்பினர்).

**டத்தோ டி. சுப்பையா**

(பினாங்கு ம.இ.கா. முன்னாள் தலைவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்).

**டத்தோ (டாக்டர்) எஸ். சுப்ரமணியம்**

(கெடா மாநில ம.இ.கா. முன்னாள் தலைவர். சட்டமன்ற உறுப்பினர்).

**டத்தோ வி. பொன்னுசாமிப் பிள்ளை**

(பேரா ம.இ.கா. முன்னாள் தலைவர் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்)



**டத்தோ வி.எல். காந்தன்**

(ம.இ.கா. தேசிய இளைஞர் பகுதியின் முன்னாள் தலைவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். டான்ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் இளைய சகோதரர். வழக்குரைஞராகத் தொழில் புரிகிறார்).

**டத்தோ கே. ஆர். சோமசுந்தரம்**

(முன்னாள் செனட்டர். ம.இ.கா. தொடக்கக்கால உறுப்பினர். தேசிய நில நிதி கூட்டுறவு சங்க நிர்வாக இயக்குநர்).

**டத்தோ (டாக்டர்) பி.டி. அரசு**

(1964 ஆம் ஆண்டில் செந்தூல் தொகுதியில் ம.இ.கா. வேட்பாளராகப் போட்டியிட்டு சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட டாக்டர் பி.டி. அரசு 1969 இல் நடந்த பொதுத் தேர்தலில் எதிர்க்கட்சியிடம் தமது தொகுதியை இழக்க நேர்ந்தது. செந்தூல் பகுதியில் மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றை நீண்ட காலமாக நடத்தி வருகிறார் டத்தோ டாக்டர் பி.டி. அரசு).



**டத்தோ அ. பொன்னையா**

(தமிழாசிரியராக வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்ட பின்னர் அரசியலில் ஈடுபட்டு நெகிரி சட்டமன்ற உறுப்பினராகத் திகழ்ந்தவர். நெகிரி மாநில ம.இ.கா.வின் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்தவர். பல பொது அமைப்புகளில் முக்கிய பொறுப்புகள் வகிப்பவர்).

**டத்தோ டாக்டர் சண்முகலிங்கம்**

"டத்தோ" விருது பெற்றுள்ள சமூகப் பிரமுகர்.



**டத்தோ எஸ். ராஜசேகரன்**

(பேரா மாநில ம.இ.கா. துணைத்தலைவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்).

**டத்தோ எஸ். கோவிந்தராஜ்**

(ம.இ.கா.வின் தொடக்கக்கால உறுப்பினர். முன்னாள் செனட்டர்).

**டத்தோ மகிமா சிங்**

(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

**டத்தோ (டாக்டர்) கே.எஸ். நிஜார்**

(முன்னாள் செனட்டர். வர்த்தக தொழில் அமைச்சின் முன்னாள் நாடாளுமன்ற செயலாளர். ம.இ.கா. மத்திய செயலவை உறுப்பினர்).



**டத்தோ என். அருணாசலம்**

(மலாக்கா மாநில ம.இ.கா. தலைவர். சட்டமன்ற உறுப்பினர்).

**டத்தோ ஆர். சண்முகவேலு**

(பேரா ம.இ.கா. முன்னாள் தலைவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்).

**டத்தோ எஸ். லட்சுமணசாமி**

(பினாங்கு ம.இ.கா. முன்னாள் துணைத் தலைவர் இவர். வர்த்தக பிரமுகர்).



**டத்தோ (டாக்டர்) ஆறுமுகசாமி**

(மலேசிய இலங்கையர் சங்கத் தலைவரான டத்தோ டாக்டர் ஆறுமுகசாமி தலைநகரில் மருத்துவ சிகிச்சை நிலையம் வைத்திருக்கிறார்).

**டத்தோ குலராஜா**

எம். சி. ஐ. எஸ். எனும் காப்புறுதி நிறுவனத்தின் முன்னாள் தலைமை இயக்குநர் குலராஜா "டத்தோ" விருது பெற்ற பிரமுகர்.

**டத்தோ ராமையா அன்பழகன்**

மேன்மை தங்கிய திரங்கானு சுல்தானின் 65-வது பிறந்த நாளில் வழக்கறிஞர் ராமையா அன்பழகன் டத்தோ விருது பெற்றுள்ளார்.

**டத்தோ சி.சி. செல்வம்**

ஜோகூர் மாநில பிரமுகர் டத்தோ சி.சி. செல்வம் எனும் பெயரில் அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது.



**டத்தோ (டாக்டர்) சுப்ரமணியம்**

(மலேசிய மருத்துவ கழக முன்னாள் தலைவரான டாக்டர் சுப்ரமணியம் குழந்தை நல மருத்துவ நிபுணராவார்).

**டத்தோ ஜே. ஜெகதீசன்**

மலேசிய சாய்பாபா இயக்கம் உட்பட பல பொது அமைப்புக்களில் முக்கிய பொறுப்புக்கள் வகித்துவரும் "மைடா" எனும் அரசு நிறுவனத்தின் துணை இயக்குநரான ஜே. ஜெகதீசனுக்கு டத்தோ விருது வழங்கப்பட்டுள்ளது.



**டத்தோ (டாக்டர்) மோகன் சுவாமி**

1994ல் நெகிரி மாநில யாங்டி பெர்துவான் பெசார் பிறந்த நாளில் டத்தோ பட்டம் பெற்றவர். மைக்கா ஹோல்டிங்ஸ் நிறுவன இயக்குனர்களில் ஒருவர் இவர்.

**டத்தோ சிவ சுப்பிரமணியம்** குவந்தான் நகரைச் சேர்ந்த வழக்குரைஞர்

**டத்தோ (டாக்டர்) ஜி. செல்வராஜா**

(கோலாலம்பூரில் மருத்துவ சிகிச்சை நிலையம் வைத்திருக்கும் டாக்டர் செல்வராஜா ஆலயங்கள் உட்பட பல பொது அமைப்புகளில் முக்கிய பொறுப்புகள் வகிக்கிறார்).



**டத்தோ கிளவ் துரை சிங்கம்**

(மலேசிய இலங்கையர் சங்க முன்னாள் தலைவரான இவர் செனட்டரராகவும் நியமனம் பெற்றிருந்தார்).

**டத்தோ கே. தனபால சிங்கம்**

(மலேசிய கடற்படையின் முன்னாள் தளபதி).

**டத்தோ டோம்னிக் புதுச்சேரி**

(தேசிய முன்னணியில் இணைந்துள்ள கெரக்கான் கட்சியின் உதவித் தலைவர்களில் ஒருவர். நாடாளுமன்ற உறுப்பினர். வழக்குரைஞர் தொழில் மேற்கொண்டிருப்பவர்).

**டத்தோ எஸ்.பி. சீனிவாசகம்**

(ம.மு.க.வின் முன்னாள் தலைவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்).

**டத்தோ பி. அழகேந்திரா**

(சிலாங்கூர் மாநில போலீஸ் தலைவராகப் பதவி வகித்து ஓய்வு பெற்றவர். மலேசிய ஹாக்கி சம்மேளனத் துணைத்தலைவர்).



**டத்தோ ராப்சன் மிராண்டா**

(திரங்கானு மாநில ம.இ.கா. தலைவர்).

**டத்தோ பி. ராமசந்திரன்**

(கடற்படை பிராந்திய முன்னாள் தளபதி)

**டத்தோ விக்டர் ஐசெக்**

(ம.இ.கா. கோலதிரங்கானு டிவிஷன் தலைவர்).



**டத்தோ என். சதாசிவம்**

(கல்வி சமூகநல ஆராய்ச்சி நிலைய (EWRF) முன்னாள் தலைவர்).

**டத்தோ கே.கே. நாயர்**

(கெடா மாநில ம.இ.கா. முன்னாள் தலைவர்).

**டத்தோ கே. விஜயநாதன்**

(பினாங்கு ம.இ.கா. துணைத்தலைவர். வழக்குரைஞர். செனட்டர்).



**டத்தோ எம். செல்லதேவன்**

(சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினர். ம.இ.கா. தேசிய இளைஞர் பகுதி தலைவர்).

**டத்தோ கே. ஆர். சண்முகம்**

(நெகிரி மாநில ம.இ.கா. பிரமுகர்).

**டத்தோ எஸ்.எம். வெள்ளையப்பா**

(கெடா மாநில ம.இ.கா. முன்னாள் தலைவர். முன்னாள் செனட்டர்.

**டத்தோ கரு. சிதம்பரம்பிள்ளை**

(தெலுக் இந்தான் பகுதியில் சமூகப் பிரமுகராகத் திகழ்ந்தவர். பொதுப் பணிகளுக்கு நன்கொடை வழங்கியவர். இவர் பெயரில் தெலுக் இந்தானில் தமிழ்ப் பள்ளிக்கூடம் இயங்கி வருகிறது).



**டத்தோ வி.வி. அபு**

(பகாங் மாநில ம.இ.கா. தலைவர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர். முன்னாள் செனட்டர்).

**டத்தோ பால்முனி சாமிவேல்**

(மலேசிய காற்பந்தாட்ட சங்கச் செயலாளர்).

**டத்தோ பஞ்ச் குணாளன்**

(முன்னாள் பூப்பந்தாட்ட தேசிய வீரர். தற்போதைய மலேசிய பூப்பந்தாட்டக் குழுவின் நிர்வாகி).

**டத்தோ (டாக்டர்) எஸ்.கே. தர்மலிங்கம்**

(மலேசிய புற்றுநோய்க் கழகத் தலைவர்).

**டத்தோ ஏ. நாராயணன்**

(பேரா பொதுப்பணி இலாகா இயக்குநர்).

**டத்தோ (டாக்டர்) சுசிலா நாயர்**

கோலாலம்பூர் பொது மருத்துவமனையில் உள்ள மார்பு புற்றுநோய் மருத்துவ கிளினிக் தலைவர்.

**டத்தோ (டாக்டர்) ஜெகநாதன்**

(தைப்பிங் நகர் சமூகப் பிரமுகர்.

**டத்தோ (டாக்டர்) மார்டின் ஜோசப்**

(பேரா மாநில சுகாதாரத் துறை துணை இயக்குநர்).



**டத்தோ (டாக்டர்) ஜெயமோகன்**

(பேரா மாநில பிரமுகர்).

**டத்தோ ஆதம் அப்துல் ஆகூத்**

(வர்த்தகப் பிரமுகர். சிலாங்கூர் இந்திய வர்த்தக சங்கத்தின் முன்னாள தலைவர்).



**டத்தோ ஜி. விஜயநாதன்**

(மலேசியாவின் முன்னாள் கிரிக்கெட், ஹாக்கி விளையாட்டு வீரர். ஹாக்கி சம்மேளனத்தின் முன்னாள் துணை நிர்வாகி).

**டத்தோ (டாக்டர்) ஆர். ஆனந்தா**

(குவாந்தான் நகர் சமூகப் பிரமுகர். மருத்துவ டாக்டர்).

**டத்தோ கே.எஸ். நல்லா**

(ம.இ.கா. இளைஞர் பகுதியின் முன்னாள் உதவித் தலைவர். வர்த்தகப் பிரமுகர்).

**டத்தோ தர்ஷன் சிங்**

மலேசிய சீக்கிய சங்கத்தலைவர். மலேசிய சைக்கிள் ஓட்டப்பந்தய சம்மேளன முன்னாள்தலைவர். பேரா மாநில சைக்கிள் ஓட்டப்பந்தய தலைவர்.

**டத்தோ த.ம.துரை**



(தமிழாசிரியராக தமது வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டவர். அரசியலில் தீவிரம் காட்டியவர். சிலாங்கூர் மாநில சட்டமன்ற ஆட்சிக்குழு உறுப்பினராக மறைவெய்தும் வரை (1994 மார்ச்) பொறுப்பேற்றிருந்தார். சிலாங்கூர் மாநில காப்பார் டிவிஷன் தலைவராக இருந்தவர். சமூகப் பணிகளில் சலியா உழைப்பாளி. சமூக நலனில் அக்கறை காட்டிய அரும் தொண்டர்).

**டத்தோ எஸ். சரண்தாஸ்**

1991ல் சிலாங்கூர் மாநில சுல்தானின் பிறந்த நாளன்று டததோ விருது பெற்றவர்.



**டத்தோ வி.கே.கே. தியாகராஜன்**

(கூட்டரசுப் பிரதேச ம.இ.கா. தலைவர். மலேசிய இந்து இளைஞர் இயக்க முன்னாள் தேசியத் தலைவர். சிலாங்கூர் இந்திய வர்த்தக சபையின் தலைவர். வர்த்தகப் பிரமுகர்).

**டத்தோ எல். கிருஷ்ணன்**

(சமூகப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடும் டத்தோ எல். கிருஷ்ணன் மலேசிய திரைப்பட வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளவர். திரைப்பட இயக்குநராகவும் தயாரிப்பாளராகவும் திகழ்கிறார் டத்தோ எல். கிருஷ்ணன்).

**டத்தோ பரம் குமாரசாமி**

(மலேசிய வழக்கறிஞர் மன்ற முன்னாள் தலைவரான டத்தோ பரம் குமாரசாமி கோலாலம்பூரில் வழக்குரைஞராகப் பணிபுரிந்து வருகிறார். பொதுப்பணிகளில் ஈடுபாடு உடையவர்).

**டத்தோ மனோ பாஸ்கரன்**

(குவாந்தான் நகரப் பிரமுகர்).

**டத்தோ வி சு. சின்னதுரை**

(உயர்நீதி மன்ற (ஹைகோர்ட்) நீதிபதி).

**டத்தோ எஸ்.எஸ். கில்**

(உயர்நீதி மன்ற நீதிபதி)

**டத்தோ ஜி. எஸ். கில்**

முன்னாள் டென்னிஸ் விளையாட்டாளரான டத்தோ ஜி. எஸ். கில். கோலாலம்பூரில் நீண்ட காலமாக வா்த்தகா துறையில் ஈடுபட்டுவரும் பிரமுகா் இவா்.

**டத்தோ எஸ். திரவியம்**

(மலேசிய ஆட்டோ மொபைல் நிறுவன அதிகாரி).

**டத்தோ எஸ். சுப்பிரமணியம்**

(வழக்குரைஞர்).

**டத்தோ சிவபுண்ணியம்**

ம.இ.கா. மலாக்கா மாநிலத்தின் முன்னாள் தலைவர் ம.இ.கா. வேட்பாளராக மலாக்கா சட்டமன்றத்துக்குப் போட்டியிட வாய்ப்பு பெற்று வெற்றிபெறும் சந்தர்ப்பத்தை இழந்தவர். தமிழாசிரியராக வாழ்க்கைத் தொழிலை மேற்கொண்டவர்.

உ. க. நி.
எண் ---
நூலகம்

### டத்தோ (டாக்டர்) ஆர்.பி. லிங்கம் :



மலேசிய மருத்துவக் கழகத்தின் முன்னாள் தலைவரான டத்தோ (டாக்டர்) ஆர். பி. லிங்கம் மலாக்காவில் மருத்துவ சிகிச்சை நிலையம் நடத்தி வருகிறார். ஆளும் கட்சியான பாரிசான் நேஷனலின் உறுப்புக்கட்சிகளில் ஒன்றான மக்கள் முற்போக்குக் கட்சியின் தேசிய உதவித் தலைவராகவும் மலாக்கா மாநில தலைவராகவும் பொறுப் பேற்றுள்ள இவர் அனைத்துலக ரீதியிலும் தேசிய ரீதியிலும் மாநில அளவிலும் பல பொது அமைப்புக்களில் அங்கம் வகித்து வருகிறார்.

### டத்தோ (டாக்டர்) கே. நாகரத்னம்



ம.இ.கா. கோத்தா மலாக்கா டிலிஷன் தலைவராகப் பொறுப் பேற்றுள்ள டத்தோ (டாக்டர்) கே. நாகரத்னம் மலாக்காவில் மருத்துவ சிகிச்சை நிலையம் நடத்தி வருகிறார். அனைத்துலக ரீதியிலும் தேசிய அளவிலும் பல பொது அமைப்புக்களில் அங்கம் பெற்று சீரிய தொண்டு புரிந்து வருகிறார்.

இவரது துணைவி டத்தின் வசந்தா நாகரத்னம் மலாக்கா மாநில ம.இ.கா. மாதர் பகுதியின் தலைமைப் பொறுப்பை ஏற்று சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்.

### டத்தோ மக்கள்லால் சைகால்

கோலாலம்பூர் வர்த்தக பிரமுகர்.

### டத்தோ பால் முருகேசு

(பகாங் மாநில சமூகப் பிரமுகர்)

### டத்தோ சேத்

ம.இ.கா. மலாக்கா மாநிலத்தின் முன்னாள் தலைவர். வர்த்தகராகத்திகழ்ந்தவர்.

### டத்தோ (டாக்டர்) சிவானந்தன்



பொது மருத்துவ மனையில் எலும்பு மருத்துவப் பிரிவில் கடந்த 23 ஆண்டுகளுக்குமேல் தலைமைப் பொறுப்பு வகித்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ளவர் இவர்.

### டத்தோ டாக்டர் மஜும்தர்

(தஞ்சோங் ரம்புத்தான் மனநோய் மருத்துவ சிகிச்சைமைய தலைவர்)

### டத்தோ வி. இளையதம்பி

மலேசிய தெய்வீக வாழ்க்கைச் சங்க ரவூப் கிளையின் முதல் தலைவர். ஜே. பி. விருது பெற்றவர்.

### டத்தோ மகாதேவ் சங்கர்

(மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி)

### டத்தோ வி. சி. ஜோர்ஜ்

(மேல முறையீட்டு நீதிமன்ற நீதிபதி)

### டத்தோ (டாக்டர்) ஆர். மகாதேவன்

(பகாங் மாநில மருத்துவ சுகாதார இயக்குனர்)

### டத்தோ புனிதநாதன் வேலுப்பிள்ளை



(தலைநகர்)

### டத்தோ டாக்டர் மேனன்

(கோல திரங்கானு நகரைச் சேர்ந்த டாக்டர்)

### டத்தோ அல்மட் ஜொ. பாலேந்திரன்

(குவாந்தான நகரைச் சேர்ந்த வழக்குரைஞர்)

## டத்தோ என். டி. ராஜா



டத்தோ எனும் உயரிய விருது உட்பட பல சிறப்புப் பட்டங்களையும் பெற்றிருக்கும் டத்தோ என். டி. ராஜா வர்த்தகப் பிரமுகராகத் திகழ்கிறார். பகாங் இந்திய விளையாட்டு மன்றம் உட்பட பல அமைப்புக்களுக்கு ஆலோசக ராகவும் திகழ்கிறார். பொதுப் பணிகளில் ஈடுபாடு கொண்டி ருக்கும் இவர் கோயில் திருப் பணிகளுக்கும் சமூக அமைப்புக் களுக்கும் நன்கொடை வழங்கு வது உட்பட பலவகைகளில் உதவிவருகிறார்.

ரிசோர்ட்ஸ் வோர்ல்ட் சிந்திரியான் பெர்ஹாட் துணைத்தலைவ ராகவும், கெந்திங் குரூப் நிறு வனத்தின் பொது உறவுத்துறை யின் தலைவராகவும் பொறுப் பேற்றுள்ளார் இவர். இவரது முழுப்பெயர் டத்தோ என். தியாகராஜா.

தமது 21 வயதில் குவாந்தான் (பகாங்) ரோட்டரி சங்க உறுப்பினராக பொது வாழ்வில் அறிமுகமானார். ரோட்டரி அறக்கட்டளைக்கு இவர் வழங்கிய சேவைக்காக அச்சங்கத்தின் உயரிய விருதான 'பால் ஹேரிஸ் ஃபெலோவ்ஷிப்' விருது இவருக்குக் கிடைத்திருக்கிறது.

பகாங், சிலாங்கூர், பேரா ஆகிய மாநிலங்களின் மேன்மை தங்கிய சுல்தான்கள் இவருக்கு ஐந்து முறை 'டத்தோ' விருது வழங்கி கௌரவித்துள்ளனர். பகாங், சிலாங்கூர் சுல்தான்கள் இவருக்கு இருமுறை சமாதான நீதிபதி (ஜே. பி.) விருது தந்திருக்கின்றனர்.

## டத்தோ கோபால்ராமதாஸ்



மலேசிய அரசராணுவ ஆகாயப்படையின் இரண்டாவது பட்டாளப்பிரிவின் தலைவரான பிரிகேடியர் ஜெனரல் டத்தோ கோபால்ராமதாஸ் மேஜர் ஜெனரலாக 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் பதவி உயர்வு பெற்றிருக்கிறார். மலேசிய அரசராணுவ ஆகாயப்படை வரலாற்றில் இந்த உயரிய பதவியை வகிக்கும் முதலாவது மலாய்க்காரர் அல்லாதவராக இவர் திகழ்கிறார்.

## டத்தோ (டாக்டர்) எம். ஜெகதீசன்

மருத்துவ டாக்டரான எம். ஜெகதீசன் மலேசியாவில் புகழ்பெற்ற முன்னாள் ஓட்டபந்தய விளையாட்டாளர்.

## டத்தோ எம். ராமலிங்கம்

சிரம்பான் நகரைச் சேர்ந்த எம். ராமலிங்கம் 1994ம் ஆண்டில் டத்தோ விருது பெற்றுள்ளார்.



## டத்தோ ஆர். கே. நாதன்

(தலைநகரைச் சேர்ந்த வழக்குரைஞர்)

## டத்தோ ஏ. ஆர். ஏ. நாச்சியப்பன்

(கோத்தா பாரு நகர சமூகப் பிரமுகர்)

## டத்தோ பீட்டர் வேலப்பன்

(மலேசிய காற்பந்து சங்க பொதுச் செயலாளர்)

குறிப்பு: தகவல்கள் கிடைத்தவரையில் உயர் விருதுகள் பெற்ற மலேசிய இந்தியர்களின் பெயர்ப்பட்டியலில் சிறு குறிப்புடன் கூடிய விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

## டத்தோ ஐ. குருதயாள் சிங்



கோலாலம்பூர் நகர கிளையின் தலைவராகவும், சிலாங்கூர் மாநில ம.இ.கா. பொருளாளராகவும், கோலாலம்பூர் நகர மன்ற உறுப்பினராகவும், பல பொது அமைப்புக்களில் முக்கிய பொறுப்புக்கள் வகித்தவருமான டத்தோ ஐ. குருதயாள் சிங் ம.இ.கா. வின் தொடக்ககால உறுப்பினர்.

## டத்தோ வி. முத்துசாமி



முன்னாள் பிறை தொகுதி சட்டமன்ற உறுப்பினரான இவருக்கு பினாங்கு கவர்னர் பிறந்தநாளில் (1995) டத்தோ விருது வழங்கப்பட்டுள்ளது. வழக்குரைஞரான இவர் பினாங்கு மாநில ம.இ.கா. தொடர்புக்குழு தலைவராகவும் பொறுப்பேற்றுள்ளார்.

## டத்தோ (டாக்டர்) என். ராமச்சந்திரன்

போர்ட்டிக்சன் வட்டாரத்தில் மருத்துவ நிலையம் வைத்துள்ள இவர் ம.இ.கா. கிளைத் தலைவராகவும், சமூகப் பிரமுகராகவும் திகழ்கிறார். நகரமன்ற உறுப்பினராகவும் பொறுப்பேற்றிருந்தார் இவர்.

## டத்தோ காந்தி கே. சிங்கம்

குவாந்தான் நகரிலுள்ள சமூகப் பிரமுகர் பொதுப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுபவர்.

## டத்தோ ஏ.எஸ். தாவுது

சுதந்திரத்துக்குப் பின்னர் 1959ல் நடைபெற்ற நாட்டின் முதலாவது பொதுத் தேர்தலில் சிரம்பான் தொகுதியில் ம.இ.கா. வேட்பாளராக நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டவர். தேர்தலில் தோல்வியைத் தழுவினாலும் பொதுப் பணிகளில் தொடர்ந்து ஆர்வத்தோடு ஈடுபட்ட வர்த்தகப் பிரமுகர் இவர்.

## டத்தோ என்.எஸ். செல்வமணி

பேரா மாநில சமூகப் பிரமுகர் இவர்.

## டத்தோ (டாக்டர்) டி. ஏ. சின்னதுரை

சுத்தசமாஜ நிர்வாகக்குழு உட்பட சில பொது அமைப்புகளில் ஈடுபாடு காட்டிவரும் பிரமுகர் இவர்.

## டத்தோ எம்.எஸ். மணியம்



நெகிரி இந்தியர் சங்க தலைவரும் மலேசிய இந்தியர் விளையாட்டு மன்ற துணைத் தலைவரும், மலேசிய கிண்ண காற்பந்தாட்ட மாநில குழுவின் நிர்வாகியுமான எம். எஸ். மணியம் நெகிரி சமஸ்தானாதிபதியின் 73வது பிறந்த நாளில் (1995) டத்தோ விருது பெற்றுள்ளார். நெகிரி மாநிலத்திலுள்ள பல சமூக அமைப்புக்களுக்கு காப்பாளராக சேவையாற்றி வருகிறார் இவர்.

# தொடக்க கால மலாயா இந்தியர் இயக்கங்கள்

பினாங்குத் தீவை பிரிட்டிஷார் 1786ஆம் ஆண்டில் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்ட பின்னர் அந்தத் தீவை வளப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். அங்கிருந்த காப்பி, தென்னை, கரும்புத் தோட்டங்களில் பணிபுரிய இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைப் பினாங்குக்கு அழைத்து வந்தனர். (இந்தியாவும் அப்பொழுது பிரிட்டிஷ் வசமிருந்தது.)

பினாங்குத் தீவிலும் (அப்போதைய பெயர் பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் தீவு) அதை ஒட்டிய பிறையிலும் கட்டடங்கள் எழுப்பவும், காடுகளை அழிக்கவும், சாலைகள் செப்பனிடவும் இந்தியத் தொழிலாளர்கள் உறுதுணையாக இருந்து உழைத்தனர்.

கொலை, கொள்ளை, பயங்கரவாதம் போன்றவற்றில் ஈடுபட்டு காலவரையறையுடன் தண்டிக்கப்பட்ட கைதிகளும் ஆயுள் தண்டனை பெற்று நாடு கடத்தப்பட்டவர்களும் பினாங்குத் தீவுக்குக் கொண்டுவரப்பட்டனர். இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களும் இதில் இடம் பெற்றிருந்தனர்.

1790 முதல் 1860 வரையில் மலாயாவுக்கு இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட கைதிகளின் எண்ணிக்கை சுமார் 15 ஆயிரம் ஆகும். பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் ஆகிய மூன்று இடங்களில் நாடு கடத்தப்பட்ட அந்தக் கைதிகள் தங்கியிருந்தனர்.

1860இல் இந்தியாவிலிருந்து மலாயாவுக்குக் கைதிகள் கொண்டு வரப்படுவது நிறுத்தப் பட்டது.

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டிருந்த தொழிலாளர்கள் கரும்பு, மிளகு, காப்பி, தென்னை தோட்டங்களிலும் ஆங்கிலேயரின் வீடுகளில் வீட்டு வேலைகள் செய்பவர்களாகவும் பணிகளை மேற்கொண்டனர்.

காடுகளை அழிக்கவும், சாலைகள் செப்பனிடவும், ரயில் பாதைகள் கட்டடங்கள் உருவாக்கவும் பினாங்குத் தீவில் கைதிகளாக இருந்தவர்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

## பினாங்குச் சிறையில் சிவகங்கை மன்னன்

*(ராணி வேலு நாச்சியாரின் உறவினர் பெரிய உடையண ராஜா)*

தமிழகத்தில் புகழ்பெற்ற சிவகங்கைச் சீமையின் மன்னன் பெரிய உடையணத் தேவரையும், சிவகங்கைச் சீமையின் தளபதியாகவும் பின்னர் மன்னராகவும் இருந்த சின்னமருது பாண்டியனின் பதின்மூன்று வயது புதல்வன் துரை ராஜா என்பவரையும் மேலும் நாற்பது பேரையும் போரில் வென்று கைது செய்து, உள்நாடடுக் குழப்பங்களைக் காரணம் காட்டி தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து கப்பலேற்றி பினாங்குத் தீவுக்கு கர்னல் வேல்ஸ் எனும் ஆங்கிலேய படைத்தளபதியால் நாடு கடத்தப்பட்டனர். பின்னர் இவர்கள் தமிழகம் திரும்பவே இல்லை.

(மன்னர் விஜய சேதுபதியின் புதல்வர் முத்து வடுகத் தேவர் சிவகங்கைக்கு மன்னராக முடிதரித்து ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபோது ஆர்க்காட்டு நவாப்பினால் காளையார் கோயிலிலே முத்து வடுகத்தேவர் கொல்லப்பட்டார். அவரது துணைவியார் ராணிவேலு நாச்சியார் சிவகங்கைச் சீமையின் தளபதிகளான மருது பாண்டியர்களின் (பெரிய மருது - சின்னமருது) துணையோடு கும்பினி - நவாப் கூட்டுப்படையை எதிர்த்துப் போராடினார். ஆயுதக் குறைவால் அப்போரில் தோற்றாலும் எட்டு ஆண்டுகளுக்குப் பின்னர் சிவகங்கைச் சீமையைக் கைப் பற்றினார் ராணிவேலு நாச்சியார், தளபதிகளான மருது பாண்டியர் களை சிவகங்கைச் சீமைக்கு மன்னர்களாக்கி விட்டு ராணிவேலு நாச்சியார் மறைந்தார்.

1798இல் சிவகங்கை மன்னர்களான மருது சகோதரர்களை கும்பினி (பிரிட்டிஷ்) படையின் துணையோடு ராணிவேலு நாச்சியாரின் உறவினரான பெரிய உடையணத்தேவர் மருது சகோதரர்களை வீழ்த்தி உயிரைப் பறித்து சிவகங்கைச் சீமை மன்னரானார். ஆனால் குறுகிய காலத்திலேயே சிவகங்கைச்சீமையின் கடைசி மன்னரான பெரிய உடையணத் தேவரை மன்னர் பதவியிலிருந்து இறக்கி நாடு கடத்தியது கும்பினிப்படை.)

பினாங்குத் தீவுக்கு 1801இல் நாடு கடத்தப்பட்ட சின்ன மருது பாண்டியனின் புதல்வர் துரை ராஜாவுக்கு 45 ஆண்டுகளுக்குப் பின்னர் அவரின் 58ஆவது வயதில் வேல்ஸ் கொடுத்த கடிதம் ஒன்று பினாங்கு மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

1800களில் பினாங்குத் தீவுக்கு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட கைதிகளுக்குக் கடுமையான வேலைகள் தரப்பட்டிருந்தன. வியர்வைத் துளிகளையும் ரத்தத்துளிகளையும் சிந்தி கடுமையாக அந்தக் கைதிகள் உழைத்திருக்கின்றனர். பலர் உயிரையும் விட்டிருக்கின்றனர்.





• பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர் ஆகிய மூன்று இடங்களில் நாடு கடத்தப்பட்ட அந்தக் கைதிகள்.

பினாங்குத் தீவுக்கு 1801இல் கைது செய்து நாடுகடத்தப்பட்ட சிவகங்கைச் சீமையின் கடைசி மன்னன் வெங்கம் பெரிய உடையணத் தேவரும் வீரத்தளபதி சின்ன மருது பாண்டியனின் பதின்மூன்று வயது புதல்வன் துரைராஜாவும், சிவகங்கைச் சீமையின் வீரர்கள் 40 பேரும் மற்ற கைதிகளோடு சேர்ந்து அந்தக் கடுமையான வேலைகளில் ஈடுபட்டனரா?

பினாங்குத் தீவின் காடுகளை அழிக்கவும், சாலைகள் போடவும், கட்டடங்கள் எழுப்பவும் அந்த நாடு கடத்தப்பட்ட கடைசி சிவகங்கை மன்னனின் குழுவினரும் பணிக்கப்பட்டிருக்கலாம்.

1799 முதல் 1809 வரையில் அப்போதைய பிரின்ஸ் ஆஃப் வேல்ஸ் தீவின் (பினாங்குத் தீவு) கவர்னராக சர் ஜியார்ஜ் லீத் (SIR GEORGE LEITH) பொறுப்பேற்றிருந்திருக்கிறார். பினாங்கை ஆட்சி புரிந்த பிரிட்டிஷாரின் கிழக்கிந்திய கம்பெனியின் சார்பில் 1802 மே 2இல் ராணி எனும் அம்மையாருக்கு ஆயர் ஈத்தாம் பகுதியில் ஒரு துண்டு நிலத்தை வழங்கியிருப்பதாகவும் ஒரு தகவல் குறிப்பிடுகிறது. அந்த நிலத்தில் ராணி அம்மையார் ஸ்ரீராமர் கோயிலை எழுப்பியிருக்கிறார். அவரைப் பற்றிய மற்ற விபரங்கள் கிடைக்கவில்லை. மரணமடைந்த பின்னர் அந்த ஆலய வளாகத்தில் ராணி அம்மையாரின் சமாதி இடம் பெற்றிருக்கிறது.

1870ஆம் ஆண்டில் சுமார் 30 ஆயிரம் இந்தியர்கள் மலாயாவில் இருந்திருக்கின்றனர்.

மலாயாவில் ரப்பர் தொழில் வளர்ச்சி அடையத் தொடங்கியவுடன் 1890ஆம் ஆண்டு முதல் இந்தியத் தொழிலாளர்கள் அதிக அளவில் மலாயாவிற்கு வரத் தொடங்கினர்.

பினாங்கில் 1816இல் முதல் ஆங்கிலப் பள்ளியான பினாங்கு ஃபிரி ஸ்கூல் தொடங்கப்பட்டது. அப்பள்ளியில் 1821ஆம் ஆண்டில் தமிழில் ஒரு வகுப்பு நடத்தப்பட்டது. 1834இல் சிங்கப்பூர் ஃபிரி ஸ்கூலில் தமிழ் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. பினாங்கில் 1850இல் ஆங்கிலமும் தமிழும்

கற்றுத் தர ஆங்கிலோ தமிழ்ப்பள்ளி தொடங்கப்பட்டது. மலாக்காவில் 1850இல் தமிழ்ப்பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் கிறிஸ்துவ பாதிரியார் தவத்திரு ஆப்ரகாம் கோலாலம்பூரில் 1895இல் ஆங்கிலோ தமிழ்ப் பள்ளியைத் தொடங்கினார். 1897இல் மெதடிஸ்ட் ஆங்கிலப் பள்ளியாக அது மாற்றம் பெற்றது.

சிலாங்கூரின் செந்தூல் வட்டாரத்தில் 1905இல் தம்புசாமிப்பிள்ளை தமிழ்ப்பள்ளியை ராஜ சூரியா என்பவர் உருவாக்கினார். பிரிக்பீல்ட்ஸ் பகுதியில் விவேகானந்தர் தமிழ்ப்பள்ளி 1914இலும், தவத்திரு ஆத்மராம் தோற்றுவித்த அப்பர் தமிழ்ப்பள்ளி 1937இலும் தொடர்ந்து பல நகர்களிலும் தமிழ்ப்பள்ளிகள் தோற்றம் கண்டன.

1870களில் தோட்டங்களில் (காப்பி, கரும்பு பின்னர் ரப்பர் தோட்டங்களில்) சிறுசிறு தமிழ்ப்பள்ளிக்கூடங்கள் தொடங்கப்பட்டு தமிழில் பாடங்கள் நடத்தப்பட்டன. 1905இல் அரசு ஆதரவு பெற்ற 13 தமிழ்ப்பள்ளிக் கூடங்களும் 4 தனியார் தமிழ்ப்பள்ளிகளும் மலாயாவில் இயங்கின.

1901ஆம் ஆண்டில் மலாயாவில் ஒரு லட்சத்து 20 ஆயிரம் இந்தியர்கள் இருந்திருக்கின்றனர்.

தமிழ்ப்பள்ளிகளில் குழந்தைகள் தாய் மொழி கற்க வாய்ப்பு உருவாக்கப்பட்டது. தமிழ் உணர்வுமிகுந்த சிலரால் தமிழில் பத்திரிகைகளும் நடத்தப்பட்டன. அந்தப் பத்திரிகைகள் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் உணர்ச்சிக்கும் துணையாக இருந்திருக்கின்றன.

பினாங்கில் முதல் தமிழ்ப்பள்ளிக்கூடம் தோன்றியது போலவே முதல் தமிழ்ப் பத்திரிகையும் பினாங்குத் தீவிலேயே 1876இல் தோற்றம் கண்டிருக்கிறது. தங்கை நேசன் என்ற பெயரில் அந்த இதழ் வெளிவந்தது. 1877இல் பினாங்கிலிருந்து "உலக நேசன்" என்ற பெயரில் மற்றொரு பத்திரிகை வெளிவந்தது. தொடர்ந்து, சிங்கப்பூரில் சிங்கை நேசனும், 1905இல் ஈப்போவிலிருந்து வர்த்தமானன் எனும் ஏடும் 1907இல் சிங்கையிலிருந்து விஜயன் எனும் பத்திரிகையும், 1912இல் பினாங்கில் "ஞான சூரியன்" இதழும் வெளிவந்து தொடக்க காலத்தில் தமிழ்ப் பணி புரிந்தன.

## பொதுப் பணிகளில்...

வேலை நேரம் போக மற்ற நேரங்களில் பயனுள்ள பணிகளில் ஈடுபட சிலர் முன்வந்தனர். பொதுப்பணி இயக்கங்கள் அமைத்து அதில் இணைந்து சமூக நலனில் ஈடுபாடு காட்டினர். ஒன்றுகூடும் நிகழ்ச்சிகள் அமைத்து கருத்துப்பரிமாற்றம் செய்து கொண்டனர். அறிமுகமும் பரஸ்பரமும் தோன்ற அது வழிகோலியது. அந்த சங்கங்கள் மொழி வளர்ச்சிக்குத் துணை புரிந்தன.

## 1892இல் முதல் இந்தியர் சங்கம்

சுமார் 120 வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் மூத்த தலைவர்களில் ஒருவராகிய சுரேந்திரநாத் பானர்ஜி 1876இல் கல்கத்தாவில் அமைத்த இந்தியர் சங்கம் அனைவருக்கும் முன்னோடி இயக்கமாகத் திகழ்ந்தது.

கல்கத்தாவில் இயங்கிய இந்த இந்தியர் சங்கத்தை ஓர் அகில இந்திய இயக்கத்தின் நிலையம் என்று சுரேந்திரநாத் பானர்ஜி குறிப்பிட்டிருந்தார்.

இச்சங்கம் அமைக்கப்பட்டு ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் அகில இந்திய காங்கிரஸ் இயக்கம் 1885இல் தோற்றுவிக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராக சுரேந்திரநாத் பானர்ஜியே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கல்கத்தா இந்தியர் சங்கத்தைப் பற்றி தெரிந்தவர்கள் மலாயாவிலும் அப்போது இருந்தனர்.

பினாங்கில் 1892ஆம் ஆண்டில் அரசாங்கத்திலும் தனியார் நிறுவனங்களிலும் பணியாற்றி வந்த சிலர் ஒன்றுகூடி உடல் நலத்திற்கும் சமூக மேம்பாட்டிற்கும் பயன்தரக்கூடிய விபரங்கள் குறித்து கலந்தாலோசிக்கவும் பொழுது போக்கவும் 'பினாங்கு இந்தியர் சங்கம்' எனும் அமைப்பை எண் 181, ஆர்கில் ரோடு எனும் இடத்தில் அமைத்தனர். இந்த சங்கத்துக்கு டி.ஜே. துரைசாமிப்பிள்ளை தலைவராகவும் எல். பல்வேந்திரம் செயலாளராகவும், டி.ஏ. சுப்பையா நாயுடு, எஸ். ஆசிர்வாதம் பிள்ளை, டி.ஏ. சதானந்தம் பிள்ளை, ஏ. சண்முகம் பிள்ளை ஆகியோர் நிர்வாகக்குழு உறுபபினர்களாகவும் தேர்வு பெற்றிருந்தனர்.

மலாயாவில் அமைக்கப்பட்ட முதல் இந்தியர் சங்கம் இதுதான்.

இச்சங்கம் மூன்று ஆண்டுகள்தான் செயல்பட்டது.

1894 செப்டம்பரில் பினாங்கு இந்தியர் சங்கப் பிரதிநிதிகள் தைப்பிங் சென்று கிளைச் சங்கம் ஒன்றை அமைத்தனர். அதுவும் செயலிழந்துவிட்டது.

அதன்பின்னர் 1904 நவம்பர் 9இல் பினாங்கு இந்தியர் சங்கத்துக்கு உயிரூட்ட ஓர் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. பினாங்கு இந்து சங்கம் என பெயரிட்டனர். அதுவும் செயல்படவில்லை.

பின்னர் 1906 ஏப்ரல் 9இல் பினாங்கு இந்தியர் சங்கம் பினாங்கு பிரமுகர் பி.கே. நம்பியார் தலைமையில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தில் இலங்கையரும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பினாங்கு இந்தியர் சங்கம் பி.கே. நம்பியார் தலைமையில் அமைக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்ட அதே சமயத்தில் 1906 ஏப்ரல் 2இல் தைப்பிங் மெதடிஸ்ட் தேவாலய மண்ட பத்தில் ராஜு நாயுடு என்பவரின் முயற்சியில் தைப்பிங் இந்தியர் சங்க அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. பினாங்கைச் சேர்ந்த பி.கே. நம்பியார் தலைவராகவும், ராஜு நாயுடு துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தைப்பிங் இந்தியர் சங்கத்தில் 1906 ஏப்ரல் 26இல் பி.கே. நம்பியார் உரையாற்றினார். இந்தியர் சங்கங்களின் முக்கியத்துவம் குறித்துக் குறிப்பிட்டார்.

கிந்தா இந்தியர் சங்கம் 1911 ஏப்ரல் 28இல் பதிவாகி இன்றும் இச்சங்கம் இயங்கி வருகிறது.

ஈப்போ இந்தியர் சங்கம் 1904ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1909ஆம் ஆண்டில் சிலாங்கூர் இந்தியர் சங்கமும் தோன்றின. தொடர்ந்து மலாக்கா, நெகிரி செம்பிலான் ஆகிய இடங்களிலும் இந்தியர் சங்கங்கள் அமைப்பு கண்டன. 1920களில் பல முக்கிய நகர்களில் இந்தியர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1923ஆம் ஆண்டில் சிங்கப்பூர் இந்தியர் சங்கம் தோற்றம் கண்டது. சிலாங்கூர் சீக்கியர் சங்கம் எனும் அமைப்பை மலாயா சீக்கியர் 1922ஆம் ஆண்டு பிப்ரவரியில் உரு வாக்கினர்.

1939ஆம் ஆண்டிலிருந்து 1941ஆம் ஆண்டு வரையில் 21 புதிய இந்தியர் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன.

1928ஆம் ஆண்டு முதல் 1931ஆம் ஆண்டு வரையில் மூன்று இந்தியர் மாநாடுகளை அந்த இந்தியர் சங்கங்கள் நடத்தியிருக்கின்றன.

அந்த இந்தியர் சங்க மாநாடுகளில் மலாயா இந்தியர் நலன் குறித்து கருத்துரைக்கப் பட்டிக்கின்றன.

மலாயாவில் இந்திய சமூகத்தினர் அப்போது எதிர் நோக்கிய பிரச்னைகள், தொழிலாளர் நலன், நிரந்தரமாக மலாயாவில் தங்க விரும்புகிறவர்களுக்குக் குடியுரிமை, சலுகைகள் ஆகிய பிரச்னைகள் குறித்து மாநாடுகளில் கருத்துப் பரிமாற்றங்களும் விவாதங்களும் நடந்தன. மலாயாவில் இயங்கும் இந்தியர் சங்கங்களை இணைத்து "அகில மலாயா தேசிய அமைப்பு" ஒன்றை நிறுவுவது பற்றியும் மாநாடுகளில் ஆலோசிக்கப்பட்டது.

பல இந்தியர் சங்கங்கள் துடிப்புடன் அப்பொழுது இயங்கி வந்தன.

பினாங்கு, சிங்கப்பூர் இந்தியர் சங்கங்கள் தமிழ் ஆங்கிலப் பள்ளிகளை 1928ஆம் ஆண்டு முதல் தங்கள் இயக்கப் பொறுப்பில் நடத்தி வந்திருக்கின்றன. பினாங்கு இந்தியர் சங்கம் 1930ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து சில ஆண்டுகள் வரை இலவச மருத்துவ நிலையத்தை நடத்தி வந்திருக்கின்றது. பினாங்கு சங்க இல்லத்தில் இந்தியப் பத்திரிகைகளைத் தருவித்து உறுப்பினர்கள் படித்துப் பயன்பெற வாய்ப்பையும் உருவாக்கித் தந்திருக்கிறது.

## மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் (சி.ஐ.ஏ.எம்.)

1936ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மலாயா சிங்கப்பூரில் இயங்கி வந்த இந்தியர் சங்கங்கள் ஒன்றாக இணைந்து "மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம்" எனும் ஒரு தேசிய அமைப்பை உருவாக்கியிருந்தன.

அந்த மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் (CENTRAL INDIAN ASSOCIATION OF MALAYA) அமைப்பில் 12 இந்தியர் சங்கங்களும் 4 இந்தியர் வர்த்தக சங்கங்களும் (செட்டியார் வர்த்தக சங்கம் உட்பட) இணைந்திருந்தன.

மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனத்துக்கு (C.I.A.M.) முதல் தலைவராக ஃபெடரல் சட்டமன்றத்துக்கு 1928ஆம் ஆண்டில் உறுப்பினராக நியமனம் பெற்றிருந்த வழக்குரைஞர் எஸ்.என். வீராசாமி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

அந்தத் தேசிய அமைப்புக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த வழக்குரைஞர் எஸ்.என். வீராசாமி பின்னர் குறுகிய காலத்திலேயே தலைவர் பதவியைத் துறந்துவிட்டதால் டாக்டர் ஏ.எம். சூசை எனும் பிரமுகர் தலைவர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மலாயா சிங்கப்பூர் இந்தியர்கள் அந்தக் காலக்கட்டத்தில் எதிர் நோக்கிய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதிலும் இந்தியத் தொழிலாளர்களின் நலனிலும் அக்கறை காட்டியது அந்தத் தேசிய அமைப்பு. தோட்டங்களில் கள்ளுக்கடைகள் இயங்கி வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. பள்ளிக்குச் செல்லும் வயதை அடைந்த சிறுவர்களுக்குப் பள்ளிப்படிப்பு பெற தோட்டங் களிலும் மற்ற கிராமங்களிலும் வாய்ப்பை உருவாக்கித் தருவதில் முனைப்பாக இருந்தது. மலாயா இந்தியர்களின் நலனுக்காக இயங்கிய ஒரே தேசிய அமைப்பு அப்பொழுது அது ஒன்றுதான். சமூக அமைப்பான அது அரசியல் கட்சியைப் போலவும் இயங்கியது.

அரசாங்கக் கவுன்சிலிலும் (மன்றம்) போர்டுகளிலும் (வாரியம்) இந்தியர் நியமனத்திற்கு மலாயா இந்தியர்களின் பிரதிநிதியாக சி.ஐ.ஏ.எம். (மலாயா, இந்தியர் சங்கங்களின் சம்மேளனம்) ஸ்தாபனம் மட்டுமே கருதப்பட வேண்டும் என்பது அதன் எண்ணம் - நோக்கம். ஆனால் அரசு சி.ஐ.ஏ.எம். ஸ்தாபனத்தை மலாயா இந்தியர்களைப் பிரதிநிதிக்கும் இயக்கமாக அங்கீகரிக்கவில்லை.

அந்தக் காலக்கட்டத்தில் 1924ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கோலாலம்பூரில் தொடங்கப்பட்ட தமிழ் நேசன் நாளிதழ் சி.ஐ.ஏ.எம். ஸ்தாபனச் செய்திகளை வெளியிடவும் மலாயா இந்தியர்கள் எதிர்நோக்கிய பிரச்னைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துச் சொல்லவும் பெரும் துணைபுரிந்திருக்கிறது. சமுதாயத்தின் இதயக்குரலாக தமிழ்நேசன் ஒலித்திருக்கிறது.

## அகில மலாயா திராவிடர் கழகம்

கோலாலம்பூரைச் சேர்ந்த சில அன்பர்கள் ஒன்றுகூடி 1928ஆம் ஆண்டில் சிலாங்கூர் தமிழர் சீர்திருத்த சங்கம் என்ற ஓர் அமைப்பை நிறுவியிருந்தனர். அந்த இயக்கம் 1946இல் சிலாங்கூர் திராவிடர் கழகமாகப் பதிவு பெற்றது. 1947இல் அகில மலாயா திராவிடர் கழகமாக மாறியது.

கடந்த 65 ஆண்டுகளாகத் தொடர்ந்து சமூகப் பணிகள் ஆற்றிவரும் இயக்கமாக விளங்கும் இது தமிழ் மொழி - கலை இலக்கியம் - சமூக நலன் ஆகியவற்றில் அக்கறை காட்டி வரும் இயக்கமாக இயங்கி வருகிறது.

சிலாங்கூர் தமிழர் சீர்திருத்த சங்கம் கோலாலம்பூரில் உருவான காலக்கட்டத்திலேயே சிங்கப்பூரிலும் தமிழர் சீர்திருத்த சங்கம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. ஏ.சி. சுப்பையா அந்த இயக்கத்தை சிங்கையில் தொடக்கியவர்களில் முக்கியமானவராவார். சிங்கப்பூரில் வழக்குரைஞராகப் பணிபுரிந்து பின்னர் இரண்டாவது உலக யுத்தத்தின் போது தமிழகம் திரும்பிச் சென்று விட்ட எஸ்.பி. ஆதித்தன் அந்தச் சீர்திருத்த இயக்கத்தில் முக்கிய பணியாற்றியவர். தமிழகம் திரும்பிய ஆதித்தனார் அரசியல் பிரமுகராகவும் தினத்தந்தி, மாலை முரசு போன்ற பிரபல தினசரிகளின் உரிமையாளராகவும் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. 1935ஆம் ஆண்டில் சிங்கப்பூரில் தமிழ் முரசு நாளிதழைத் தொடங்கி மலாயா சிங்கப்பூர் இந்தியர்களின் சமூகத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த தமிழவேள் கோ. சாரங்கபாணி அந்தத் தொடக்க கால தமிழர் சீர்திருத்த இயக்கத்தில் தன்னை முழுமையாகப் பிணைத்துக் கொண்டவர்களில் ஒருவராவார்.



ஆதித்தனார்



• சிங்கப்பூருக்கும் மலாயாவுக்கும் வருகை புரிந்த பெரியார் ஈ. வெ. ரா. வை தமிழவேள் கோ. சாரங்கபாணி வரவேற்கும் காட்சி இது.

## சிலாங்கூர் இந்திய வர்த்தகர் சங்கம்

சிலாங்கூர் மாநிலத்தைச் சேர்ந்த இந்திய வர்த்தகர்கள் சிலாங்கூர் இந்திய வர்த்தக சங்கம் எனும் பெயரில் 1928 ஆம் ஆண்டில் ஓர் அமைப்பை உருவாக்கினர். அந்த நேரத்தில் (1928) மலாயாவுக்கு வருகை புரிந்திருந்த பெரியார் ஈ.வெ. ராமசாமி சிலாங்கூர் இந்திய வர்த்தக சங்கத்தைத் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கியிருந்ததாகவும் சங்கக் குறிப்பு தெரிவிக்கிறது.



1928இல் கோலாலம்பூரில் அமைக்கப்பட்ட சிலாங்கூர் இந்தியர் வர்த்தக சங்க உறுப்பினர்கள். மத்தியில் அமர்ந்திருப்பவர் அதன் அப்போதையத் தலைவர் ஹாஜி ஆர்.இ. முகமது காசிம்.

மலாயாவிலுள்ள முக்கிய நகர்களில் 100ஆண்டுகளுக்கு முன்னரே சொந்த கட்டடங்களைப் பெற்று பலர் தொழில் புரிந்து செல்வத்தைப் பெருக்கியிருக்கின்றனர்.

கோலாலம்பூரில் பழைய பெரிய மார்க்கெட் (சென்ட்ரல் மார்க்கெட்) அருகில் உள்ள ஒரு பழைய கட்டடத்தில் "ஸ்தாபிதம் 1886. கா.இ. கம்பனி" என தமிழில் பொறிக்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்துக்குப் பக்கத்தில் 1904ஆம் ஆண்டில் அப்போதைய வர்த்தகப் பிரமுகர் ஆர்.இ. முகமது காசிம் என்பவர் சொந்தத் தொழிலைத் தொடங்கி வெற்றிகரமாக நடத்தியிருக்கிறார்.

ஹாஜி ஆர்.இ. முகமது காசிம் தலைமையில் 1928இல் சிலாங்கூர் இந்தியர் வர்த்தகர் சங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது.

தொடர்ந்து 65 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிவரும் சிலாங்கூர் இந்தியர் வர்த்தக சங்கம் கோலாலம்பூரில் 116, ஜாலான்துவாங்கு அப்துல்ரஹ்மான் எனும் முகவரியில் சொந்த கட்டடத்தில் இயங்கி வருகிறது.




கோலாலம்பூர் சிலாங்கூர் இந்தியர் வர்த்தக சங்கத்தின் தலைவர் ராஜேஸ் சைகால் வலது புறத்தில் துணைத்தலைவர் என். கோவிந்தன், இடது புறத்தில் அடோல்ப் ஆச் மற்றும் சுரேஸ்குமா

# செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கம்

கோலாலம்பூர் பகுதியில் உள்ள செந்தூலில் 1928ஆம் ஆண்டில் டாக்டர் சூசை, பழனிவேல் பிள்ளை, பாஸ்கரன் பிள்ளை, மேனன், எம். சஞ்சீவி, சுப்பையா நாயுடு, அய்யாவு, எம்.கே. ராமச்சந்திரன், சந்திரசேகரன் ஆகியோர் ஒன்றுகூடி செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கம் எனும் பெயரில் ஓர் அமைப்பை நிறுவியதாக சங்க வரலாறு குறிப்பிடுகிறது.

செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்தின் முதல் தலைவராகப் பொறுப்பேற்ற எம்.கே. ராமச்சந்திரன் சங்கத்தை முறையாகப் பதிவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். 1930இல் சங்கம் முறையாகப் பதிவு பெற்றவுடன் அப்போதைய ஃபெடரல் சட்டமன்ற உறுப்பினரும் வழக்குரைஞரும் சமுதாயத்தலைவருமான எஸ்.என். வீராசாமி தலைமையில் அதிகாரப் பூர்வமாகத் திறப்புவிழா கண்டது.

சங்க நடவடிக்கைகளை வெளியிட 'மலாய்நாடு' எனும் பெயரில் வார இதழ் ஒன்றை சங்கத்தலைவர் எம்.கே. ராமச்சந்திரன் ஆரம்பித்திருந்தார். சந்திரசேகரன் என்பவர் அதன் ஆசிரியர் பொறுப்பை அப்பொழுது ஏற்றிருந்தார்.

தொடக்க காலத்திலேயே சொந்தக் கட்டடத்தைப் பெற்றிருந்த செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்தின் அப்போதைய நடவடிக்கைகள் பல இளைஞர்களைக் கவர்ந்திருந்தது. விளையாட்டு நிகழ்ச்சிகளையும் கலை இலக்கிய விழாக்களையும் தொடர்ந்து அச்சங்கம் அப்போது நடத்தி வந்தது. இரண்டாவது உலக மகா யுத்தத்திற்குப் பின்னர் இந்திய காங்கிரஸ் நிர்வாகம் 1946 ஏப்ரலில் மலாயாவுக்கு அனுப்பியிருந்த இந்திய மருத்துவக்குழு செந்தூல் இந்தியர் வாலிபர் சங்க கட்டடத்தில் தன் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் நேரு முதல்முறையாக மலாயாவுக்கு தம் புதல்வி இந்திராவோடு (இந்திராகாந்தி) 1937இல் வருகை புரிந்திருந்தபோது கோலாலம்பூரில் வழங்கப் பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் அப்போது அலகாபாத்தில் கட்டப்பட்டுவந்த கமலா நேரு நினைவு மருத்துவமனைக்கு செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கம் 36 ஆயிரம் ரூபாயை நன்கொடையாக வழங்கியது. சங்க சார்பில் அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகிய எம். சஞ்சீவி அத் தொகையை நேருவிடம் வழங்கினார்.

தற்போது மூன்று மாடிக் கட்டடமாக கம்பீரமாக செந்தூலில் அமைந்திருக்கும் செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கம் 1980இல் பொன்விழாவையும் 1990இல் வைர விழாவையும் கண்டிருக் கிறது.

1978இல் அப்போதைய செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்தில் தலைவராகப் பொறுப் பேற்றிருந்த ஆர். மாசிலாமணியின் தீவிர முயற்சியினால் புதிய கட்டடம் உருவாகி அதன் திறப்பு விழா துன் வீ.தி. சம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 65 ஆண்டுகளாக செந்தூலில் இயங்கி வரும் செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்திற்கு ஆர்.எஸ். மணியம் நடப்புத் தலைவராகப் பொறுப்பேற்று சங்கத்தை வழிநடத்தி வருகிறார்.



மூன்று மாடி புதிய கட்டடம் உருவாகத் துணை நின்ற ஆர். மாசிலாமணி



முதல் தலைவராகப் பொறுப்பேற்ற எம்.கே. ராமச்சந்திரன்



நடப்புத் தலைவர் ஆர்.எஸ். மணியம்

## மலாயா இந்தியர் சங்கம்

மலாயா இந்தியர் சங்கம் (MALAYAN INDIAN ASSOCIATION) எனும் பெயரில் ஓர் அமைப்பை 1935ஆம் ஆண்டில் சிரம்பானில் கூட்டுறவு அதிகாரியாகப் பணிபுரிந்த ஜி.வி. தேவர் உருவாக்கினார்.

இந்திய நாட்டு அரசியலில் ஈடுபாடு காட்டாது. மலாயா மக்களோடு இணைந்து நிலையான சமூகமாகத் தமிழர் தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும் மலாயா இந்தியர்களுக்குத் துணை நிற்கும் இயக்கமாக மலாயா இந்தியர் சங்கம் இயங்கும் என தன் கொள்கை உரையில் அது குறிப்பிட்டுக் கொண்டது. அப்போதிருந்த காலனித்துவ அரசுக்கு முழு ஆதரவு நல்குவதாகவும் பிரகடனப்படுத்தியது.

மலாயா இந்தியர் சங்கத்தை 1935இல் அமைத்த சிரம்பான் ஜி.வி. தேவர் 1939இல் நெகிரி செம்பிலான் இந்தியர் சங்கத்தின் தலைவர் பொறுப்பையும் ஏற்றிருந்தார்.

● சி.ஐ.ஏ.எம். (மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம்) ஸ்தாபனத்துக்குப் போட்டியாக அகில மலாயா தமிழர் சங்கம் எனும் தேசிய அமைப்பு 1941ஆம் ஆண்டு ஏப்ரலில் தோற்றம் கண்டது. நாட்டின் முக்கிய சில நகர்களில் தமிழர் சங்கக் கிளை நிறுவனங்கள் அமைந்தன.

● தொழில் ரீதியாக மலாயா இந்தியர்கள் தங்களுக்குள் சில அமைப்புகளையும் நிறுவிக் கொண்டனர்.

● தொடர்ந்து ஆங்காங்கே பல சமூக அமைப்புகள் தோன்றத் தொடங்கின காந்தி நினைவு மண்டபம் என்கிற பெயரில் சொந்த கட்டடங்கள் நாட்டின் பல முக்கிய நகர்களில் எழுப்பப் பட்டன.

நாட்டின் பல பகுதிகளில் உருவாக்கப்பட்ட ஆலயங்களும் ஆலயங்களை ஒட்டிய மண்டபங் களும் இந்தியர் இயக்கக் கூட்டங்கள் நடத்த துணை புரிந்திருக்கின்றன.

கோலாலம்பூரில் இயங்கி வரும் மகாமாரியம்மன் ஆலயத்திலும் செந்தூல் தண்டாயுதபாணி ஆலய வளாகத்தில் அமைந்துள்ள செட்டியார் மண்டபத்திலும் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த ஆலய மண்டபங்களில் நடைபெற்ற - நடைபெற்று வருகிற இந்தியர் அமைப்புகளின் நிகழ்ச்சிகள் ஏராளம்! ஏராளம்!

1946ஆம் ஆண்டு ஆகஸ்ட் 3,4,5ஆம் தேதிகளில் ம.இ.கா. அமைப்புக் கூட்டமும் முதல் மாநாடும் நடைபெற்ற இடமும் செந்தூல் செட்டியார் மண்டபம்தான். 1954 நவம்பர் 2இல் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க துவக்க விழா கண்ட இடமும் இதே மண்டபம்தான்!

● மலாயா சிங்கப்பூர் இந்தியர் நலனில் அதிக அக்கறை காட்டிவந்த ஸ்தாபனமான சி.ஐ.ஏ.எம். (மலாய இந்தியர் சங்கங்களின் சம்மேளனம்) சிறப்பான பணிகளைத் தேசிய ரீதியில் செயலாற்றி வந்த அந்த ஒரே இந்தியர் அமைப்பு, - ஜப்பானியரின் ஆட்சி முடிவடைந்து மீண்டும் பிரிட்டிஷ் ஆட்சி மலாயா சிங்கப்பூரில் தோன்றிய பிறகு செயலிழந்த நிலைக்கு உள்ளாகியது. அந்தத் தேசிய அமைப்பின் முக்கிய தலைவர்கள் அதிலிருந்து ஒதுங்கிவிட்டதன் காரணத்தினாலோ என்னவோ அது உறக்கம் கண்டது.

பழைய சி.ஐ.ஏ.எம். உறுப்பினர்களில் சிலர் ஒன்று கூடி ஃபெடரல் இந்தியர் சங்கம் (FEDERAL INDIAN ASSOCIATION) எனும் அமைப்பை பிரபல வழக்குரைஞர் ஆர். ரமணி தலைமையில் 1950ஆம் ஆண்டு ஜூலையில் கோலாலம்பூரில் உருவாக்கினர்.

● 1945 செப்டம்பரில் கோலாலம்பூரில் உள்ள சில அன்பர்களும் ஐ.என்.ஏ. தொண்டர்களில் சிலரும் சேர்ந்து சிலாங்கூர் இந்தியர் ஒற்றுமை சங்கம் எனும் அமைப்பை செந்தூல் வாலிபர் சங்கக் கட்டடத்தில் அமைத்திருந்தனர். அந்த இயக்கத்திற்கு ஐ.என்.ஏ. தொண்டரான எஸ். அமலு தலைவராகவும் ஐ.என்.ஏ.யில் செக்கண்ட் லெஃப்டினன்டாக பணியாற்றிய ஏ. ராமன் (அப்புராமன்) செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். தொழிற்சங்கவாதி ஆர்.எச். மோகனும் அதில் இணைந்திருந்தார்.

● சி.ஐ.ஏ.எம். தலைவராக ஏற்கனவே இருந்த பினாங்கு வழக்குரைஞர் என். ராகவன் தலைமையில் ஐக்கிய இந்தியர் சங்கம் (UNITED INDIAN ORGANISATION) எனும் அமைப்பும் அதே காலக்கட்டத்தில் உருவாகியது. பொதுத் தொழிற் சங்கங்களின் (G.L.U.) இந்தியப் பகுதித் தலைவ ரான எஸ். அப்பாதுரை என். ராகவனின் ஐக்கிய இந்தியர் சங்கத்திற்குத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

● மலாயா இந்தியர்களைப் பிரதிநிதிக்கும் இயக்கமாக மலாயா இந்தியர்களின் பிரச்னை களுக்கு தீர்வு காண - நலனுக்குப் போராட ம.இ.கா. ஸ்தாபனம் 1946 ஆகஸ்ட் 4இல் கோலா லம்பூரில் உதயமாகியது.

# சங்கீத அபிவிருத்தி சபாவும் விவேகானந்தா ஆசிரமமும்



தத்துவஞானி சுவாமி விவேகானந்தரின் போதனைகளைப் பரப்ப அவரின் பக்தர்கள் கோலாலம்பூரில் ஓர் இயக்கத்தை அமைத்து விவேகானந்தா ஆசிரம கட்டடத்தை 1904ம் ஆண்டில் கோலாலம்பூர் பிரிக்பீல்ட்ஸ் பகுதியில் கட்டி முடித்தனர்.

கலை, இசை, நடனம், நாடகம் ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்தோடு 1923ம் ஆண்டு ஜூன் 20ல் சங்கீத அபிவிருத்தி சபா அமைக்கப்பட்டது.

விவேகானந்தா ஆசிரமமும் அதை ஒட்டிய சங்கீத அபிவிருத்தி சபாவும் இரட்டை அமைப்புக்களாக இயங்கி வருகின்றன.

1914ல் விவேகானந்தா ஆசிரமத்திற்கு அருகில் விவேகானந்தா தமிழ்ப்பள்ளியையும் 1958ல் பெட்டாலிங் ஜெயாவில் விவேகானந்தா தமிழ்ப்பள்ளியையும், 1960ல் பிரிக்பீல்ட்ஸ் விவேகானந்தா இடைநிலைப் பள்ளியையும் விவேகானந்தா ஆசிரமம் நிறுவியது. 1905ல் செந்தூலில் நிறுவப்பட்ட தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப் பள்ளியின் நிர்வாகப் பொறுப்பை 1960ல் விவேகானந்தா ஆசிரமம் எடுத்துக் கொண்ட பின்னர் அப்பள்ளிக்கு புதிய கட்டடத்தை நிர்மாணித்தது. பல்கலைக்கழகங்களில் பயிலும் வெளியூர் மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை அளிக்க முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே மாணவர் விடுதியை அமைத்து உதவி வருகிறது விவேகானந்தா ஆசிரமம்.

கர்னாடக சங்கீதத்தை முறைப்படி கற்றுத்தர தொடக்க முதல் சங்கீத அபிவிருத்தி சபா செயல்பட்டிருக்கிறது. நாடகக் கலையை வளர்க்க முதல் முயற்சியாக 1927ம் ஆண்டில் 'பாதுஷா பட்டாபிஷேகம்' எனும் மேடை நாடகத்தை நடத்தியது. மலேசியாவில் ஓர் அமைப்பின் மூலமாக நடத்தப்பட்ட முதல் மேடை நாடகமும் இதுவே.

கோலாலம்பூரில் ஜாலான் துன் சம்பந்தனில் (ஜாலான் பிரிக்பீல்ட்ஸ்) உள்ள அந்த இரு தனி அமைப்புக்களான விவேகானந்தா ஆசிரமமும் சங்கீத அபிவிருத்தி சபாவும் இணைந்து 'விவேகானந்தா கலாசாரமையம்' எனும் நிலையத்தை முப்பது லட்சம் ரிங்கிட் செலவில் அமைக்கும் திட்டத்தில் ஈடுபட்டுள்ளன என சங்கீத அபிவிருத்தி சபாவின் தலைவர் டாக்டர் க. அம்பிகை பாகன் தெரிவித்திருக்கிறார்.



'மரபுரிமைக் கட்டடம்' எனும் சிறப்புப் பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ள 1904ம் ஆண்டுக் கட்டடம்.



டாக்டர் க. அம்பிகை பாகன்



கோலாலம்பூர் சங்கீத அபிவிருத்தி சபா 1927ல் படைத்த 'பாதுகாபட்டாபிஷேகம்' மேடை நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்கள். படத்தின் வலது கோடியில் நிற்பவர் சபாவின் முதல் செயலாளர் நா. ராமசாமி. வலது கோடியில் அமர்ந்திருப்பவர் நாடகத்தை எழுதிய முடிகொண்டான் சி. குமார சாமிப்பிள்ளை.

# மலேசிய இந்தியர்
# கூட்டுறவு அமைப்புக்கள்

- துன் சம்பந்தனின் பெரும் முயற்சியில் இங்கு 1960ம் ஆண்டில் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம் முன்னோடியாக விளங்குகிறது. அதனைப் பெருமைக்குரிய அளவில் கம்பீரத் தோற்றத்தோடு வளர்த்து வருபவர் டத்தோ கே. ஆர். சோமசுந்தரம்.



துன் சம்பந்தன்



டத்தோ கே. ஆர். சோமசுந்தரம்

- தொழிலாளர்கள் சொந்த வீடுகளைப் பெற்றிருக்கவேண்டும் எனும் நோக்கத்தோடு டத்தோஸ்ரீ சாமிவேலு தொழிலாளர் மேம்பாட்டு கூட்டுறவுக் கழகத்தைத் தொடக்கினார் வீடமைப்புத்திட்டமும் சுங்கை சிப்புட் போன்ற சில இடங்களில் மேற்கொள்ளப்பட்டன.



டத்தோஸ்ரீ சாமிவேலு

- பொருளாதாரத் துறையில் இந்திய சமூகம் பின் தங்கிவிடக் கூடாது எனும் வேட்கையில் தொலைநோக்கோடு "மைக்கா ஹோல்டிங்ஸ்" எனும் மூலதன முதலீட்டு நிதி நிறுவனத்தை அமைத்தார் டத்தோ ஸ்ரீ சாமிவேலு.

- நேசா கூட்டுறவு அமைப்பை டான் ஸ்ரீ மாணிக்கவாசகம் தொடங்கி வீடுகள் கட்டும் திட்டத்தையும் முதலீடு திட்டத்தையும் ஓரளவு செயல்படுத்தினார். டான் ஸ்ரீ மாணிக்கவாசகத்தின் மறைவுக்குப்பின்னர் டத்தோ சுப்ரா நேசா கூட்டுறவு அமைப்பின் தலைமைப்பொறுப்பை ஏற்றார்.



டான்ஸ்ரீ மாணிக்கவாசகம்



டத்தோ சுப்ரா

## தேசிய நில நிதி கூட்டுறவு சங்கம்



தோபுவான் உமா சம்பந்தன்

மலேசியாவில் இயங்கும் இந்தியர் கூட்டுறவு சங்கங்களில் பெரிய அமைப்பாகக் கருதப்படும் தேசிய நில நிதிக் கூட்டுறவு சங்கத்தில் சுமார் 70 ஆயிரம் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். தற்போது இச்சங்கத்திற்கு 17 தோட்டங்கள் சொந்தமாக இருக்கின்றன.

துன சமபநதன 1960-ஆம் ஆண்டு மே 14-ல் தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தை நிறுவி அதன் வாரிய தலைமைப் பொறுப்பையும் ஏற்று வெற்றிகரமாக வழி நடத்தினார். இச்சங்கத்தின் தலைமை நிர்வாகியாகவும் தற்போது இதன் நிர்வாக இயக்குநராகவும் பொறுப்பேற்றுள்ள டத்தோ கே.ஆர். சோமசுந்தரம் இதன் தற்போதைய பெரும் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் முக்கிய காரணகர்த்தாவாகத் திகழ்கிறார். தோ புவான் உமா சம்பந்தன் சங்கத்தின் அக்ராசனராகப் பொறுப்பேற்றுள்ளார்.



பி. சகாதேவன்

25 லட்சம் வெள்ளி சுழல் நிதியுடன் 1965-ல் ஆரம்பிக்கப்பட்ட தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் கல்வி கடனுதவி திட்டத்தின் கீழ் இதுவரை 42 லட்சம் வெள்ளிக்குமேல் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக இச்சங்கத்தின் தற்போதைய தலைமை நிர்வாகி பி. சகாதேவன் தெரிவிக்கிறார்.

தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் 35 ஆண்டு கால வரலாற்றில் அதன் அனைத்து கடன்களும் முழுமையாக அடைக்கப்பட்டு ஒன்றரை கோடி வெள்ளியை வைப்புத் தொகையாக வைத்துக் கொண்டு தனது ஆண்டு பேராளர் கூட்டத்தை நடத்துகிறது என்று அதன் நிர்வாக இயக்குநர் டத்தோ கே. ஆர். சோமசுந்தரம் கடந்த 25-6-1995ல் நடைபெற்ற 28-ஆவது பேராளர் மாநாட்டில் பெருமிதத்துடன் குறிப்பிட்டிருக்கிறார்.

தலைநகரின மையப்பகுதியில் கம்பீரத் தோற்றத்தோடு 28 மாடிகளைக் கொண்ட சொந்த - உயர்ந்த கட்டிடத்தில் இச்சங்கம் இயங்கி வருகிறது.

## தொழிலாளர் கூட்டுறவு நாணய சங்கம



டாக்டர் மு. லட்சுமணன்

தொழிலாளர் கூட்டுறவு நாணய சங்கத்தை 15 வருடங்களுக்கு முன்னர் தொடங்கி அதன் தேசியத் தலைவராக தொடர்ந்து பொறுப்பேற்றுவரும் டாக்டர் மு. லட்சுமணன் அதனை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

கடந்த 1980-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட இந்த கூட்டுறவு சங்கம் 25 ஆயிரம் உறுப்பினர்களைத் தற்போது பெற்றிருக்கிறது. இதன் சொத்து மதிப்பு 2 கோடி வெள்ளியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாடு முழுவதும் 340 வட்டார கிளைகளைக் கொண்டிருக்கும் இக்கூட்டுறவு சங்கம், உறுப்பினர்கள் பயன்பெற பல செயல் திட்டங்களை அமல்படுத்தி வெற்றி பெற்று வருகிறது.

கடந்த 15 ஆண்டுகளில் 4 கோடி வெள்ளி வரையிலும் சங்க உறுப்பினர்களின் பல்வேறு தேவைகளுக்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் சங்கத் தலைவர் டாக்டர் மு. லட்சுமணன் தெரிவிக்கிறார்.

## தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பலநோக்கு கூட்டுறவுக் கழகம்

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொருளாதார நிறுவனமான பல நோக்கு கூட்டுறவுக் கழகத்தின் தற்போதைய சொத்து மதிப்பு ஒரு கோடி வெள்ளிக்கு உயர்ந்துள்ளதாக சங்கத்தின் தலைமைச் செயலாளர் என். குணசேகரன் தெரிவிக்கிறார். 1968-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்த பல் நோக்கு கூட்டுறவுக் கழகத்தில் சுமார் 4000 உறுப்பினர்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தவர் கூட்டுறவு சங்கம்



க. தில்லைநாதன்

மலேசியாவில் இயங்கும் கூட்டுறவு சங்கங்களில் மிகவும் பழமையான சங்கமாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தவர் கூட்டுறவு சங்கம் அண்மையில் 64-வது ஆண்டுக் கூட்டத்தை நடத்தியிருக்கிறது.

"யாழ்ப்பாணத்தவர் சங்கம் மலேசியாவில் 71 ஆணடுகளுககு முன்னர் தோற்றம் கண்டது. யாழ்பாணத்தவர் கூட்டுறவு சங்கத்தை நிறுவி 64 ஆண்டுகள் ஆகின்றன. தற்போது இக்கூட்டுறவு சங்கத்தில் 5100 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர்" என்று யாழ்ப்பாணத்தவர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் க. தில்லைநாதன் தகவல் தெரிவிக்கிறார்.

## மாஜு ஜெயா கூட்டுறவு இயகககம்



சா. ஆ. அன்பானந்தன்

மலேசிய இந்திய இளைஞர்களின் கூட்டுறவு அமைப்பாக தமிழ் இளைஞர் மணி மன்ற பேரவையின் தொடக்க கால தலைவராகப் பொறுப்பேற்றிருந்த சமூகக் கலைமணி சா. ஆ. அன்பானந்தன் முயற்சியாலும் - மலேசிய வானொலி இந்தியப் பகுதியின் முன்னாள் தலைவரும் ஆசிய பசிபிக் ஒலிபரப்பு மேம்பாட்டுக் கழக முன்னாள் தலைமை இயக்குநருமான இரா. பாலகிருஷ்ணனின் தலைமையிலும் மாஜு ஜெயா கூட்டுறவு இயக்கம் தோற்றம் கண்டது. கோலாலம்பூரில் ஜாலான் துன் சம்பந்தனில் அமைந்திருக்கும் மாஜு ஜெயா கூட்டுறவுக் கழகத்திற்குச் சொந்தமான கட்டிடத்திற்கு "விஸ்மா அன்பானந்தன்" என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

டத்தோஸ்ரீ சாமிவேலு தலைமையில் இயங்கும் சிலாங்கூர் மக்கள் பலநோக்கு கூட்டுறவு கழகம் டத்தோ முத்து பழனியப்பன் தலைமையில் இயங்கும் நெகிரி பலநோக்கு கூட்டுறவு கழகம் உட்பட மேலும் சில இந்தியர் கூட்டுறவு இயக்கங்கள் மாநில அளவிலும் சில கூட்டுறவு இயக்கங்கள் தொழில் ரீதியிலும் சமூக ரீதியிலும் இயங்கி வருகின்றன.

# மலேசியாவில் இந்தியர்கள்

## வரலாற்றுக் குறிப்புகள்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மலேசியாவில் (மலாயாவில்) இந்தியர்கள் குடியேறி இருந்தாலும் 1820 ஆம் ஆண்டுக்குப் பின்னரே தென்னிந்தியர்களின் வருகை அதிகரிக்கத் தொடங்கியது.

உலகின் பல நாடுகளுக்கும் அந்த காலக் கட்டத்தில்தான் தமிழர்கள் குடியேறத் தொடங்கினர். தமிழர்கள் அதிகம் வாழும் நாடுகள் பின் வருபவை:

1. இலங்கை (SRI LANKA) 2. மலேசியா (MALAYSIA) 3. சிங்கப்பூர் (SINGAPORE) 4. தென்னாப்பிரிக்கா (SOUTH AFRICA) 5. பர்மா (BURMA) 6. மோரிசியஸ் (MAURITIUS) 7. கயானா (CUYANA) 8.குவாடிலோப் (GUADELOUPE) 9. கென்யா (KENYA) 10. சுரினன் (SURINAN) 11. ஜமைக்கா (JAMAICA) 12.டிரினிடாட் (TRINIDAD) 13. தான்ஸேனியா (TANZANIA) 14. நியூ காலிடோனியா (NEW CALEDONIA) 15.ஃபிரஞ்ச் கியானா (FRENCH GUINA) 16. ஃபீஜித் தீவுகள (FIJI ISLANDS) 17. மார்ட்டினிக் (MARTINIQUE) 18.யுகாண்டா (UGANDA) 19. இங்கிலாந்து (ENGLAND) 20. அமெரிக்கா (AMERICA) 21. ரஷ்யா (RUSSIA) 22.ரீயூனியன் (REUNION) 23. இந்தோனேசியா (INDONESIA).

மேலும் தாய்லாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற சில நாடுகளிலும் தமிழர்கள் மிகக் குறைந்த அளவில் வாழ்ந்து வருகின்றனர். உலகில் 150க்கு மேற்பட்ட தனி நாடுகள் இருக்கின்றன. அவற்றில் 50க்கு மேற்பட்ட நாடுகளில் தமிழர்களைக் காண முடிகிறது எனவும் ஆய்வாளரின் குறிப்பு ஒன்று தகவல் தருகிறது.

தமிழர்கள் குடியேறிய அந்த நாடுகளைத் தங்கள் தாய் நாடாகவும் பெரும்பாலானோர் ஏற்றுக் கொண்டு வாழ்ந்தும் வருகின்றனர்.

### புராதன சின்னங்கள்...

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தென் இந்தியாவிலிருந்து பலர் தென்கிழக்காசிய பகுதிகளுக்குப் பயணமாகியுள்ள விபரங்கள் வரலாற்றில் காணப்படுவது போலவே தென்னிந்தியாவில் ஆட்சி புரிந்த சில மன்னர்களும் கடல்கடந்து தங்கள் ஆட்சியை விரிவுபடுத்தியதோடு தங்கள் திறனையும் உலகுக்கு வெளிப்படுத்த முயன்றிருக்கின்ற தகவல்களும் வரலாற்று ஏடுகளில் தெரிகின்றன.

தமிழ் நாட்டில் காணப்படும் பழைமையான பிரும்மாண்டமான அந்த ஆலயங்களை உருவாக்கும் பொறுப்புகளை அந்தந்த காலக்கட்டத்தைச் சேர்ந்த மன்னர்களே செயல்படுத்தி வெற்றியும் பெற்றிருக்கின்றனர்.

இந்தோசீனாவில் அங்கோர் வாட்டில் உள்ள ஆலயம் ஒன்றில் ராமாயண காட்சிகள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. மிகப்பெரிய சிவன் கோயில் ஒன்றும் அங்கு காணப்படுகிறது. தென்னிந்தியர்களின் கம்பூஜ ராஜ்யம் இயங்கி வந்தபோதுதான் உலகப் புகழ்பெற்ற "அங்கோர் வாட்" உருவாக்கப்பட்டது. (கம்போடியா எனவும் வழங்கப்பட்ட அந்தப் பகுதி கம்பூச்சியா என்றும்அழைக்கப்படுகிறது).

இந்தோனேசியாவில் மிகப் பெரிய 'போரா புதூர்' புத்த ஆலயங்கள் ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் பழைமையானவை. கி.பி. 775 இல் விஷ்ணு மன்னன் உருவாக்கிய இந்து ஆலயங்களை ஒட்டியே இந்த புத்தர் ஆலயங்களும் எழுப்பப்பட்டிருக்கின்றன.

மிகப் பெரிய 'போரா புதூர்' புத்த ஆலயங்கள்



தாய்லாந்தில் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்டுள்ள அயோத்தியா நகரில் காணப்படும் சிற்பங்கள் இந்தியர்களால் வடிக்கப்பட்டவையே! திருமால் ஆலயங்களும் அங்கு உண்டு. தாய்லாந்து மன்னர் பங்குபெறும் நிகழ்ச்சிகளில் அரசவை அந்தணரால் திருவெம்பாவையும், திருப்பாவையும் ஓதப்படுவது நீண்ட காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் சடங்காகும்.

பதினோராம் திருமுறை பாடிய புலவர் காரைக்கால் அம்மையாருக்கு கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் கம்போடியா தாய்லாந்து போன்ற பகுதிகளில் சிலைகள் வார்க்கப் பட்டிருக்கின்றன.

சாவகம், கடாரம், கம்பூச்சியம், பாலித்தீவு, தாய்லாந்து, பர்மா, (தற்போதைய பெயர் மியாமார்) போன்ற கீழ்த்திசை நாடுகளில காணப்படும் புராதன ஆலயங்களை – சின்னங்களை உருவாக்கத் துணையாக இருந்தவர்கள் அந்தந்த காலக்கட்டத்தைச் சேர்ந்த தென்னிந்திய அரசர்கள்தாம்.

உலகப் புகழ்பெற்ற "அங்கோர் வாட்"



## கம்புஜா ராஜ்யம்

தென் கிழக்காசியாவில் தென்னிந்தியர்கள் ஸ்தாபித்த முதல் ராஜ்யம் கம்பூஜா ஆகும். இந்திய இளவரசனால் கி.பி. முதல் நூற்றாண்டில் நிறுவப்பட்டது இது. இந்த கம்பூஜியத்தின் இறுதி மன்னனாக ஜெயவர்ம பரமேஸ்வரன் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்தார்.

கி.பி. 802 இல் கம்பூஜியத்தை ஆண்ட ஜெயவர்மன் "இந்திரபுரம்" எனும் நகரை உருவாக்கி நாட்டின் தலைநகரமாகவும் ஆக்கிக் கொண்டார். "யசோதபுரம்" என்ற நகரையும் நிறுவினார்.

கி.பி. 1113 முதல் 1150 வரை கம்பூஜாவை ஆண்ட இரண்டாம் சூரியவர்மன் வரலாற்றில் இடம் பெறும் வகையில் புகழ்பெற்ற "அங்கோர் வாட்" ஆலயத்தை எழுப்பியிருக்கிறார். விஷ்ணுபக்தனான இரண்டாம் சூரியவர்மன் "அங்கோர் வாட்டில்" சிவன் திருமால் சிலைகளை உருவாக்கியிருக்கிறார்.

இந்தோசீனா (கம்போடியா) பகுதியில்தான் அந்தப் புகழ்பெற்ற கம்பூஜ ராஜ்யம் நிறுவப்பட்டிருந்தது. உலகப் புகழ்பெற்ற "அங்கோர் வாட்"டும் அதே பகுதியில்தான் இன்றும் காட்சி தந்து கொண்டிக்கிறது.

## ஸ்ரீவிஜயம்

சுமத்ராவில் ஸ்ரீவிஜயம் மிகவும் புகழ்பெற்ற தமிழர் சாம்ராஜ்யமாகத் திகழ்ந்திருக்கிறது. தமிழகத்தில் பல்லவர்கள் ஆட்சி புரிந்த காலக்கட்டத்தில் (கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரையில்) சுமத்ராவில் ஸ்ரீவிஜயம் பல்லவ மன்னர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.

ஸ்ரீவிஜயத்தில் இந்து மதமும் புத்தமதமும் இணைந்தே பரவியிருக்கிறது.

ஸ்ரீவிஜயத்தை ஆண்ட சைலேந்திர மன்னன் "பூமி சம்பர புத்திரம்" எனும் ஆலயத்தை எழுப்பியிருக்கிறார். 400 புத்த சிலைகளும் பல திருமால் சிலைகளும் அந்த ஆலயத்தில் காணப்படுகின்றன.

கி.பி. 732 இல் சஞ்சயன் எனும் ஸ்ரீவிஜய மன்னன் சிவபெருமானுக்குத் தங்கத்தாலும் விலையுயர்ந்த கற்களாலும் பொறிக்கப்பட்ட லிங்கத்தை உருவாக்கினார்.

கஜாயனா எனும் மன்னன் சுமத்ராவை ஒட்டியுள்ள கிழக்கு ஜாவாவில் அகத்திய முனிவருக்கு ஆலயம் அமைத்திருக்கிறார்.

சூள,, மணிவர்ம தேவன் ஸ்ரீவிஜயத்தை ஆண்ட கி.பி. 1005 இல் தமிழகத்தில் உள்ள நாகப்பட்டினத்தில் "சூளா மணி விகாரம்" எனும் பெயரில் ஓர் ஆலயத்தை எழுப்பி அப்போதைய சோழ மன்னரோடு உறவை வளர்த்திருக்கிறார்.

## சோழ மன்னர்கள்

சங்க காலத்திலேயே புகழ்பெற்றிருந்த கரிகால சோழன் பரம்பரை கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுவரை மங்கி விட்டிருந்தது. பல்லவர்களும் பாண்டியர்களும் அந்த இடைப்பட்ட காலத்தில் தமிழகத்தை ஆண்டனர்.

கி.பி.850 இல் விஜயாலய சோழன் தஞ்சை திருச்சி பகுதிகளை கைப்பற்றி சோழ அரச பரம்பரை மீண்டும் தலையெடுக்க வழிவகுத்தார்.

அதன் பின்னர் வந்த ஆதித்த சோழன், அவருடைய மகன் முதலாவது பராந்தகன் (கி.பி. 907 முதல் 955 வரை) பெரும் படையோடு பாண்டிய நாடுகளை வென்று சோழப் பேரரசுடன் இணைத்து தமிழகம் முழுவதும் சோழர்களின் தனி ஆட்சி செலுத்த வழி அமைத்தார்.

சோழ மன்னர்களில் சிறந்த மன்னராக வர்ணிக்கப்படும் ராஜராஜன் கி.பி. 985 இல் அரியணை ஏறினார். 29 ஆண்டுகள் நல்லாட்சி புரிந்தார். புகழ்பெற்ற தஞ்சை பெரிய கோயிலை கி.பி. 1012 இல் கட்டி முடித்தார், ராஜராஜ சோழன்.

1984 செப்டம்பர் 17 இல் ராஜராஜ சோழ மன்னனின் 1000 ஆவது முடிசூட்டு விழா தமிழகத்தின் தஞ்சாவூரில் கொண்டாடப்பட்டது. அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி விழாவைத் தொடங்கி வைத்ததோடு ராஜராஜன் நிர்மாணித்த தஞ்சை பெரிய கோயிலின் உள்வளாகத்தில் எழுப்பப்பட்டுள்ள ராஜராஜன் சிலைக்கு பொன் கிரீடத்தையும் அன்றைய தினம் அணிவித்திருக்கிறார்.

(யுனஸ்கோ எனப்படும் உலக அமைப்பு தஞ்சை பெரிய கோயிலை உலகின் மிக முக்கிய சரித்திரச் சின்னங்களில் ஒன்றாகத் தேர்ந்தெடுத்துள்ளது).

கி.பி. 1014 இல் ராஜராஜ சோழன் மரணமடைந்தவுடன் அவருடைய புதல்வன் ராஜேந்திரன் சோழன் முடி தரித்து சாதனைகள் பல புரிந்தார்.

சுமத்ராவில் இயங்கி வந்த இந்தியர் சாம்ராஜ்யமான ஸ்ரீவிஜயத்தோடு ராஜராஜ சோழனின் மைந்தன் ராஜேந்திர சோழனும் நட்பை வளர்த்து வந்தார்.

கி.பி, 1017 இல் சூளாமணி வர்மனின் மைந்தன் மாறவிஜய துங்க வர்மனின் காலக்கட்டத்தில் தான் ஸ்ரீவிஜயத்துக்கும் தமிழக சோழப் பேரரசுக்குமிடையே விரிசல் தோன்றியது.

கி.பி. 1025 இல் ராஜேந்திர சோழன் பெரும் கடற்படையுடன் ஸ்ரீவிஜயத்தைத் தாக்கினார்.

ஸ்ரீவிஜயத்தின் நகர்களும் துறைமுகங்களும் தாக்கப்பட்டன. இறுதியாக ஸ்ரீ விஜயத்தின் தலைநகரான பலம்பாங் (PALEMBANG) தாக்கப்பட்டு அதன் மன்னன் சங்கரம விஜய துங்கவர்மன் கைது செய்யப்பட்டார்.

## அமெரிக்காவின் 'பெரு' நாட்டில்...

ராஜேந்திர சோழனின் மைந்தன் வீரசோழன் (வீர ராஜேந்திர சோழன்) அரசு பொறுப்பை மேற்கொண்டவுடன் தந்தை, தாத்தா (ராஜராஜ சோழன்) புரிந்த சாதனைகளுக்கு நிகராக இவரும் செயல்பட்டார்.

வீரசோழன் காலத்தில் தஞ்சைத் தமிழர்கள் கட்டு மரங்களில் வங்கக் கடலைக் கடந்து இந்து மகா சமுத்திரம், சீனப் பெருங்கடல் வழியாகப் பல நாடுகளுக்கும் சென்றுவிட்டு கடைசியாக அமெரிக்காவுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார்கள் என்று சரித்திர ஆய்வாளர்கள் கண்டுபிடித் திருக்கிறார்கள்.

பெரு நாட்டில் காணப்படும் சூரிய சக்கரம், யானை முகம், அம்பாரி மீது அமர்ந்த மன்னன் உருவம், மகரயாழ் போன்றவை தஞ்சை தமிழர்களால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டவை என பெருநாட்டு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் உலகுக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

பெரு நாட்டின் ஆதிக்குடிவாசிகள் தற்போது பாடிவரும் பக்திப் பாடல்களில் வீரசோழனின் பெருமை கூறப்படுகிறது என்பது இந்த வரலாற்று உண்மைக்கு மேலும் வலுவூட்டுகிறது.

பெருநாட்டின் ஆதிகுடிகள் 'இன்காஸ்' என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள். 'இன்காஸ்' இனமக்கள் தங்கள் குலதெய்வத்தை வாழ்த்தி வணங்கி பாடல்கள் பாடும்போது வீரசோழனின் பாடலையும் பாடி வருகின்றனர். இதில் வீரசோழன் என்ற வார்த்தை மறுவி 'வீரசோஷா' என்று உச்சரிக்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வீரராஜேந்திர சோழனுடைய படைத் தளபதியாக இருந்து வழிநடத்திக் கொண்டு கடாரம் வரை படையெடுத்துச் சென்று வெற்றி வாகை சூடிவந்தவர் குலோத்துங்கன். குலோத்துங்கனும் மாமனைப் போலவே கப்பலில் ஏறி கடல் கடந்து சென்று வீரத்தைக் காட்டும் கலையில் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார்.

## மலாயாவில் "லங்கா சுகம்"

கெடா, பெர்லிஸ், கிளந்தான் ஆகியவை அடங்கிய பகுதியில் "லங்கா சுகம்" எனும் ஒரு ராஜ்யம் தென்னிந்தியர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மலாயாவில் ஸ்தாபிக்கப்பட்ட முதல் ராஜ்யமான "லங்கா சுகம்" கி.பி. 100 இல் நிறுவப்பட்டிருக்கிறது. அதன் முதல் மன்னன் மாரன் மஹாவங்சன்.

அந்த லங்கா சுகம் ராஜயம் சுமார் ஆறு நூற்றாண்டுகள் வரை சிறப்புடன் விளங்கி யிருக்கிறது.

(கெடாவைச் சேர்ந்த "லங்கா"வித் தீவில் குவா செரிதா என்ற இடத்தில் ஒரு பாறையில் அந்தக் காலக்கட்டத்தில் செதுக்கப்பட்டுள்ள இந்து எழுத்துகள் இன்னமும் தெரிகின்றன. காலப் போக்கில் அவை மங்கிவிட்டிருக்கின்றன என்று மலேசியாவின் முதல் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். அரசியலில் தீவிரமாக ஈடுபடுவதற்கு முன்னர் அதே லங்காவித் தீவில் மாவட்ட அதிகாரியாகவும் பணியாற்றியவர் துங்கு).

## கங்கா நகரம்

பேராவில் கங்கா நகரம் என்ற பல்லவ ராஜ்யமும் இருந்திருக்கிறது.

(தமிழகத்தில் பல்லவர்கள் கி.பி. 6 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து 9 ஆம் நூற்றாண்டு வரையில் ஆட்சி புரிந்த காலக் கட்டத்தில் சுமத்ராவில் ஸ்ரீவிஜயமும் பல்லவ மன்னர்களின் ஆதிக்கத்தில் இருந்திருக்கிறது.

ஸ்ரீவிஜய சாம்ராஜ்ய ஆட்சி கி.பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டு வரை மலாயாவிலும் தாய்லாந்தின் ஒரு பகுதியிலும் இருந்ததாகவும் ஒரு வரலாற்றுக் குறிப்பு தெரிவிக்கிறது).

## கடாரம்

கெடா பகுதியில் புகழ்பெற்ற "கடாரம்" தனிச்சிறப்புடன் திகழ்ந்திருக்கிறது. கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல புராதன இந்தியச் சின்னங்கள் கெடாவிலுள்ள "பூஜாங்" பகுதியில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

## சோழ மன்னனின் புலிக் கொடி

சுமத்ராவில் இயங்கிய ஸ்ரீவிஜயத்தை கி.பி. 1025 இல் தாக்கிக் கைப்பற்றிய ராஜேந்திர சோழனின் வலிமைமிக்க கடற்படை கடாரத்தையும் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்து புலிக்கொடியைப் பறக்க விட்டிருக்கிறது.

ராஜேந்திர சோழனின் நிகரற்று விளங்கிய கடற்படை கடல் கடந்து சென்று அந்தமான் நிக்கோபார் தீவுகளையும் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்தது.

இந்தியாவின் வட பகுதியில் உள்ள ஒரிஸா, குஜராத், பீகார், வங்காளம் உட்பட கங்கை நதி தீரப் பகுதிகளில் வெற்றிக் கொடியை நாட்டினார், ராஜேந்திர சோழன். "கங்கை கொண்ட சோழன்" என்ற சிறப்புப் பெயரால் பின்னர் ராஜேந்திர சோழன் அழைக்கப்பட்டார்.

பர்மா வரை சென்று அங்குள்ள நதியில் பட்டத்து யானையைக் குளிப்பாட்டி, யானையின் பெயரான "ஐராவதியை" அந்த நதிக்கும் சூட்டிவிட்டு அந்த நதியின் முகத்துவாரத்தில் உள்ள "பெகு" எனும் ஊரையும் கைப்பற்றி ராஜேந்திர சோழனின் படை வீரர்கள் திரும்பியிருக்கின்றனர்.

(ராஜேந்திர சோழனின் தந்தை ராஜராஜ சோழன் ஆட்சிக் காலத்தில் மைசூர், கலிங்கா, ஸ்ரீலங்கா (ஈழநாடு) ஆகியவை கைப்பற்றப்பட்டிருந்தன).

சீனாவோடு நட்புறவு பாராட்ட ராஜதந்திரி ஒருவரை சீனாவின் தலைநகருக்கு கி.பி. 1015இல் அனுப்பி வைத்திருக்கிறார் ராஜேந்திர சோழன்.

சீனாவின் சங் (SUNG) பேரரசரைச் சந்தித்து பரிசுப் பொருட்களைப் பரிமாறிக் கொண்ட அந்த ராஜதந்திரியான சோலி சமுத்ரா என்பவர் திரும்பும் வழியில் காலமாகிவிட்டார். பின்னர் கி.பி. 1033 இல் ராஜேந்திர சோழனின் ராஜதந்திரியும் வர்த்தக தூதுக் குழுவினரும் சீனாவுக்குச் சென்றிருக்கின்றனர்.

(ரோமப் பேரரசர் அகஸ்டஸின் அரசவைக்கு பாண்டிய நாட்டுத் தூதுவர் இருவர் முதலாம் நூற்றாண்டில் சென்றிருந்ததை ஸ்டிராயோ எனும் வெளிநாட்டவர் வரைந்த குறிப்பு தெரிவிக்கிறது. கிரேக்க ரோம நாணயங்கள் தமிழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு குறிப்பு தகவல் தெரிவிக்கிறது).

ராஜேந்திர சோழன் 31 ஆண்டுகள் ஆட்சி புரிந்த பின்னர் 1044 இல் மரணமடைந்தார்.

சோழ மன்னர்களின் ஆட்சி தமிழகத்திலும் தென்கிழக்காசிய பகுதிகளிலும் கி.பி 850 முதல் கி.பி. 1275 ஆண்டு வரையில் நீடித்திருந்திருக்கிறது.

## மலாக்காவில்...

கி.பி. 1402-ம் ஆண்டில் மலாக்காவை ஆண்ட பரமேஸ்வரனும் இந்து மன்னனே. அவரோடு (கி.பி. 1414) மலாயாவில் இந்து மன்னர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது



புகழ்பெற்ற தஞ்சை
பெரிய கோயிலை கி.பி. 1012 இல
கட்டி முடித்தார் ராஜராஜ சோழன்



ராஜராஜசோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில்

# சமூக அரசியல் வாழ்க்கைப் போராட்டங்கள்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே மலாயாவில் இந்தியர்கள் குடியேறி இருந்தாலும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர்தான் தொழிலாளர்களாகப் பணிபுரிய தென்னிந்தியர்கள் பலர் மலாயாவுக்கு வருகை மேற்கொண்டனர்.

இந்த இருநூறு ஆண்டுகளில் நாட்டு வளர்ச்சியில் இந்தியர்களின் உழைப்பும் பெரும் பங்கு வகிக்கிறது.

தொடக்க காலத்தில் அந்த இந்தியத் தொழிலாளர்கள் பட்ட இன்னல்கள் அதிகம். வாழ்க்கை வசதிகள் கிடைக்காத நிலையில் உழைப்பு ஒன்றையே நினைவில் நிறுத்தி கடுமையாக உழைத்த அந்த ஏழைத் தொழிலாளர்கள் தங்களுக்குள் நடத்திய போராட்டங்கள் வாழ்க்கை நூலின் சோக அத்தியாயங்களாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இந்தியர்கள் மலாயாவுக்கு வந்திருப்பதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவித்திருந்தாலும், சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் பிரிட்டிஷார் பினாங்குத் தீவை 1786 ஆம் ஆண்டில் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் எடுத்துக் கொண்ட பின்னரே இந்தியத் தொழிலாளர்கள் மலாயாவுக்கு வருகை புரியத் தொடங்கினர்.

பினாங்குத் தீவை பிரான்சிஸ் லைட் (FRANCIS LIGHT) கண்டுபிடித்து 11.8.1786 இல் பிரிட்டனின் யூனியன் ஜேக் கொடியை ஏற்றி பினாங்குத் தீவுக்கு பிரின்ஸ் ஆப் வேல்ஸ் தீவு என பெயர் சூட்டிய பின்னர் விவசாய வேலைகள் உட்பட இதர வேலைகளுக்காகவும் இந்தியாவிலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர்.

பினாங்கிலும் அதனை ஒட்டிய புரவின்ஸ் வெலஸ்லியிலும் (செபராங்பிறை) உள்ள காப்பி, தென்னை, மிளகு, கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய தென்னிந்தியாவிலிருந்து பல தொழிலாளர்களை பிரிட்டிஷார் அழைத்து வந்தனர்.

தோட்டங்களில் பணியாற்றியதோடு காடுகளை அழித்து சாலைகள் போடுவதற்கும், கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்தியத் தொழிலாளர்களைப் பயன்படுத்தினர்.

1786 ஆம் ஆண்டில் பினாங்குத் தீவை பிரிட்டிஷார் கைப்பற்றிய பின்னர் 1819 இல் சிங்கப்பூரி லும் தங்கள் பிரிட்டிஷ் கொடியைப் பறக்கவிட்டனர். தொடர்ந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மலாக்காவை டச்-ஆங்கிலோ ஒப்பந்தங்களில் டச்சுக்காரர்களிடமிருந்து 1824 இல் தங்கள் பொறுப்பில் எடுத்துக் கொண்டனர். 1826 இல் பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா ஆகிய மூன்று மாநிலங்களையும் இணைத்து ஸ்ட்ரேயிட்ஸ் செட்டல்மண்ட் (STRAITS SETTLEMENT) என்று பெயரிட்டு (தொடுவாய் மாநிலங்கள்) பினாங்கை அதன் தலைமையகமாக்கினர். பின்னர் 1831 ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரில் அதன் தலைமையகத்தை நிறுவினர். 1874 ஆம் ஆண்டில் பேரா, சிலாங்கூர், நெகிரி, பகாங் ஆகிய மலாய் மாநிலங்களை அடுத்தடுத்து பிரிட்டிஷார் தங்கள் பொறுப்புக்கு எடுத்துக் கொண்டனர்.

கேடா, பெர்லிஸ், கிளந்தான் மாநிலங்களை 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் சயாம் (தாய்லாந்து) கைப்பற்றியிருந்தது. 1909 ஆம் ஆண்டில் அந்த மாநிலங்களின் உரிமையை பிரிட்டிஷார்வசம் ஒப்படைத்தது சயாம்.

(1855 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இந்திய அரசாங்கம் ஸ்டிரேய்ட்ஸ் செட்டில் மெண்ட்ஸ் (STRAITS SETTLEMENTS) பகுதியில் (பினாங்கு, மலாக்கா, சிங்கப்பூர்) இந்திய ரூபாய் நாணயத்தைப் பயன்படுத்த திட்டமிட்டிருந்தது. இங்குள்ள வர்த்தகர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து 11.8.1855 இல் சிங்கப்பூரில் பொது எதிர்ப்புக் கூட்டம் ஒன்றையும் நடத்தியது. 1857 ஆம் ஆண்டில் வெள்ளி நாணயத்தையே தொடர்ந்து பயன்படுத்துமாறு இந்திய அரசாங்கம் (பிரிட்டிஷ்) அறிவித்தது).

நாட்டு வளர்ச்சிக்காகவும் பொருளீட்டவும் தொழிலாளர்கள் அதிக அளவில் பிரிட்டிஷாருக்குத் தேவைப்பட்டனர்.

குறைந்த சம்பளத் தொகைக்கு வேலை செய்யவும் தொல்லைகள் தராத சமூகமாகவும், பிரிட்டிஷாருக்கு இந்தியர்கள் தென்பட்டனர். அப்பொழுது இந்திய நாட்டையும் பிரிட்டிஷாரே ஆட்சி புரிந்தனர்.

மூன்று ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்களாக தென்னிந்தியர்கள் திரட்டிக் கொண்டு வரப்பட்டனர். இங்கு விரட்டி வேலை வாங்கினர்.

வாழ்க்கை வசதிகள் இல்லாத (கிடைக்காத) நிலையில் வியர்வைத் துளிகளையும் கண்ணீர்த் துளிகளையும் சிந்தி கடுமையாக உழைத்தனர்.

மலாயாவில் 1874 ஆம் ஆண்டு வரையில் தார்ரோடுகள் கிடையாது. போக்குவரத்துக்கு நதிகளையும் சிறிய காட்டுப் பாதைகளையும் பயன்படுத்தி வந்தனர்.

1874 ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் தார் ரோடுகள் (MACADAMISED ROADS) போடப்பட்டன.

1885 இல் ரயில்பாதை அறிமுகப்படுத்தப்பட்டது. தைப்பிங்கிலிருந்து போர்ட்வெல்ட் வரையில் (12 கிலோ மீட்டர் தூரம்) முதல் ரயில் இணைப்பு 1885 இல் போடப்பட்டது. 1896 இல் வட பகுதியான பிறையிலிருந்து தென்பகுதியான கிம்மாஸ் வரையிலும் 1909 இல் கிம்மாஸிலிருந்து ஜோகூர் பாரு வரையிலும் ரயில்பாதை போடப்பட்டது. 1926 இல் ஜோகூர்பாருவுக்கும் சிங்கப்பூருக்குமிடையே பாலம் போடப்பட்ட பிறகு ரயில் இணைப்பும் ஏற்பட்டது.

ரயில்பாதை வேலைகளைக் கவனிக்க தென்னிந்தியர்களும் இலங்கையர்களும் தருவிக்கப் பட்டிருந்தனர்.

எட்டு மைல் நீளத்திற்கு (12 கிலோ மீட்டர்) போட்டு முடிக்கப்பட்ட முதல் ரயில்பாதையான தைப்பிங் - போர்ட்வெல்ட் ரயில் இணைப்பை இலங்கை ரயில்வேயைச் சேர்ந்த தொழிலாளர் களே செய்து முடித்தனர்.

சாலைகள் செப்பனிடவும் ரயில்பாதைகள் போடவும் தென் இந்தியத் தொழிலாளர்களே பயன்படுத்தப்பட்டனர்.

## ரப்பரும் இந்தியரும்

1877 ஆம் ஆண்டில் 22 ரப்பர் மரக் கன்றுகள் சிங்கப்பூருக்குக் கொண்டுவரப்பட்டு அங்குள்ள பொட்டானிகல் கார்டனில் பயிரிடப்பட்டது. அப்போது பேரா மாநில ரெஸிடன்டாகப் பதவி வகித்த சர் ஹூக் லோ (SIR HUGH LOW) சிங்கையிலிருந்து ரப்பர்க் கன்றுகளை கோலகங்சாருக்குக் கொண்டு வந்து பயிரிட்டார். மலாயா மண்ணில் ரப்பர் செழிப்பாக வளர்ந்தது. 1895 ஆம் ஆண்டில் முதல் ரப்பர் தோட்டம் ஒரு சீனரால் தொடங்கப்பட்டது. 1897 ஆம் ஆண்டில் 345 ஏக்கர் பரப்பளவுக்கு ரப்பர் மரங்கள் நடப்பட்டன. 1910 இல் அது 50 ஆயிரம் ஏக்கரை எட்டியது. 1910 ஆம் ஆண்டல் 142 ரப்பர் தேட்டங்கள் மலாயாவில் இயங்கின.

காப்பி, கரும்பு, தென்னை தோட்டங்களுக்குப் பிறகு ஈயம் தோண்டி எடுக்கும் தொழிலில் கவனம் செலுத்தி வந்த பிரிட்டிஷார் ரப்பர் தொழிலில் அதிக நாட்டம் செலுத்தத் தொடங்கிவிட்டனர்.

1905 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ரப்பருக்குப் பெரும் எதிர்பார்ப்பு உலகச் சந்தையில் ஏற்பட்டவுடன் மலாயாவில் ரப்பர் உற்பத்தி குபீரென பெருகத் தொடங்கியது.

இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் மூன்று ஆண்டு ஒப்பந்த முறை யில் மலாயாவுக்குக் கொண்டு வரப்பட்டனர்.

## மலாயா சீனர்கள்

மலாயா சிங்கப்பூரில் கடின உழைப்புக்கும் ஆங்கிலேயர்களின் தொடக்க கால கரும்பு, காப்பி, தென்னை, மிளகு தோட்டங்களில் தொழிலாளர்களாக வேலை பார்க்கவும் சீனர்களையே நம்பியிருந்தனர்.

1799க்குப் பின்னர் சீனர்கள் அதிக அளவில் மலாயாவுக்கு வருகை புரியத் தொடங்கினர்.

1820களில் பேரா, சிலாங்கூர், நெகிரி மாநிலங்களில் ஈயத் தொழிலில் சீனர்களே அதிகம் ஈடுபட்டுவந்தனர்.

1898 இல் ஈயவிலை உயர்வு கண்டவுடன் அதிக அளவில் சீனர்கள் மலாயாவுக்கு வந்து குவிந்தனர். 1898 முதல் 1900 வரையில் இரண்டே ஆண்டுகளில் ஓர் லட்சம் சீனர்கள் சீனாவிலிருந்து மலாயாவுக்கு வந்து சேர்ந்ததாக ஒரு குறிப்பு தகவல் தெரிவிக்கிறது.

தொடக்கத்தில் ஆங்கிலேயரின் காப்பி, கரும்பு, தென்னை, தானிய வகைகள் கொண்ட தோட்டங்களில் வேலை பார்த்த சீனர்கள் பிறகு ஈயலம்பங்களில் பணிபுரிந்தனர். ரப்பர் தொழில் வளர்ச்சி பெற்றவுடன் அதிலும் வேலை செய்யத் தொடங்கினர். 1860 வரையில் கடின உழைப்புக்கு சீனர்களையே நம்பியிருந்தனர்.

சீனர்கள் தங்கள் ஐரோப்பிய முதலாளிகளிடம் அதிக சம்பளத்தை எதிர்பார்த்தனர். எதிர்பார்த்த சம்பளம் கிடைக்காதபோது வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்களில் சீனர்கள் ஈடுபட்டனர்.

தொடக்கத்தில் சீனாவிலிருந்து மலாயா சிங்கப்பூருக்கு சீனர்கள் வருகை தந்தபோது (1799க்குப் பின்னர்) சீனாவிலிருந்த ரகசியக் கும்பலைச் சேர்ந்தவர்களும் மலாயா சிங்கப்பூருக்கு வந்துவிட்டனர். கிஹின் (GHEE HIN) ஹய் சான் (HAISAN) எனும் இரு ரகசிய கும்பல்கள் இங்கு செயல்பட்டன. இந்த ரகசிய கும்பலைச் சேர்ந்தவர்களிடையே அடிக்கடி சண்டைகள் மூண்டன. நாட்டின் பாதுகாப்புக்கும் பெரும் மிரட்டலாக அவர்கள் அப்போது விளங்கி வந்தனர். இந்தச் சூழ்நிலையில் பிரிட்டிஷார் அமைதியான போக்கைக் கொண்ட தென்னிந்தியர்களை அதிக அளவில் மலாயாவுக்குத் தருவிப்பதில் ஆர்வம் காட்டினர்.

பிரிட்டிஷாரின் பொருளாதாரத் தேவைகளுக்காகவும் நாட்டை வளப்படுத்துவதற்காகவும் உழைக்கும் வர்க்கமான இந்தியர்கள் குறைந்த ஊதியத்திற்குக் காலனித்துவ அதிகாரிகளால் கொண்டுவரப்பட்டனர்.

உலக சந்தையில் ரப்பருக்குப் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டதால் இந்தியர்களின் வருகை அதிகரித்தது. தொழிலாளர்களோடு மற்ற துறைகளிலும் பணிபுரிய (டாக்டர்கள், ஆசிரியர்கள், சர்வேயர்கள், குமாஸ்தாக்கள், போலீஸ்காரர்கள்) இந்தியர்கள் அழைத்து வரப்பட்டனர்.

அந்தக் கால கட்டத்தில் இந்தியாவிலிருந்து 1870 ஆம் ஆண்டு முதல் ஆப்பிரிக்கா, பீஜி, பிரிட்டிஷ் கயானா, டிரினிடாட், ஜமேக்கா, மொரிசியஸ் ஆகிய நாடுகளுக்கும் ஒப்பந்த முறையில் தென்னிந்திய தொழிலாளர்கள் அனுப்பப்பட்டனர். பிரிட்டிஷ் ஆட்சியில் அப்பொழுது இந்தியாவும் இருந்தது. அந்த "அடிமை முறை" 1920 ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதியன்று அங்கு அகன்றது.

## தென்னாப்பிரிக்காவில் இந்தியர்கள்

1860 அக்டோபர் 13 இல் தமிழகத்திலிருந்து கப்பலில் ஆண்களும் பெண்களுமாக 341 தென்னிந்தியர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு முதல் பயணத்தை மேற்கொண்டு 1860 நவம்பர் 16 இல் தென்னாப்பிரிக்கா மண்ணில் காலடி வைத்ததாக ஆப்பிரிக்க நாட்டைச் சேர்ந்த டி.பி.நாயுடுவின் ஆய்வுக் கட்டுரை ஒன்று குறிப்பிடுகிறது. அவர்கள் அனைவரும் அங்குள்ள தோட்டங்களில் குடியேற்றப்பட்டு கடுமையான தொழிலாளர் சட்ட அமைப்பு முறையில் வாழ்வைத் துவக்கினர் என்றும் அந்த ஆய்வுக் கட்டுரை குறிப்பிடுகின்றது.

தென்னாப்பிரிக்காவில் சுமார் எட்டு லட்சம் இந்தியர்கள் இருக்கின்றனர். இவர்களில் சுமார் மூன்று லட்சம் பேர் தமிழர்கள்.

கரும்புத் தொழிலும் சுரங்கத் தொழிலும் ஒரு காலத்தில் முக்கிய தொழில்களாக விளங்கின.

டர்பனை தலைநகரமாகக் கொண்ட நேட்டல் பெரிய மாநிலம். இங்குதான் பெரும் பகுதி தமிழர்களும் இந்திய வர்த்தகர்களும் உள்ளனர். நேட்டல் மாநில மக்கள் தொகையில் 80 சதவீதத்தினர் இந்தியர்கள். இவர்களில் பலர் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம் மற்றும் பீகாரிலிருந்து 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டில் தென்னாப்பிரிக்காவுக்கு குடியேறினர். அவர்களின் பரம்பரை தென்னப்பிரிக்காவைத் தாயகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

சுமார் பத்து லட்சம் மக்கள் வாழும் நேட்டல் மாநிலத்தில் அதிகமான கோயில்களைக் காணலாம்.

1894 இல் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் ஒன்றுபடுவதற்காகத் தொடங்கப்பட்ட காங்கிரஸ் இயக்கத்திற்கு அப்போது தென்னாப்பிரிக்காவில் இருந்த மகாத்மா காந்தி முன்னோடியாகத் திகழ்ந்தார்.




**தென்னாப்பிரிக்காவில் காந்தி தமது அலுவலகத்திற்கு வெளியே தமது சகாக்களுடன் நிற்கிறார்.**

1912 இல் தென்னாப்பிரிக்க இந்து மகாசபை எனும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பல்வேறு இடங்களில் உருவாக்கப்பட்டன.

சரியாக 342 வருடங்களுக்குப் பின்னர் கடந்த ஏப்ரல் 26 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை பெற்ற தென்னாப்பிரிக்க கறுப்பினத்தவர்கள் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் (ஏ.என்.சி). கட்சியை ஆளும் கட்சியாகத் தேர்ந்தெடுத்து சரித்திரம் படைத்தனர். அக்கட்சியின் தலைவர் நெல்சன் மண்டேலா தென்னாப்பிரிக்காவின் புதிய அதிபராக 1994 மே 10 இல் பதவி ஏற்றார். கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடி 27 ஆண்டுகளை சிறையில் கழித்து 1990 இல் விடுவிக்கப்பட்டவர் நெல்சன் மண்டேலா. தமது அமைச்சரவையில் நான்கு தென்னாப்பிரிக்க இந்தியர்களுக்கு இடம் தந்துள்ளார் மண்டேலா.

* * *



1905ல் ஒப்பந்த முறையில் கொண்டு வரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் பினாங்கில் கப்பலிலிருந்து இறங்கும்போது பிடிக்கப்பட்ட படம் இது.



* 1910-களில் இந்தியத் தொழிலாளி ரப்பர் பால் சேகரிக்கும் காட்சி இது.

* * *

மலாயாவில் பினாங்கிலும் வட பகுதியிலும் இந்தியர்கள் குடியேறிய பின்னர் சிங்கப்பூருக்கும் 1860 ஆம் ஆண்டு முதல் குடியேறத் தொடங்கினர்.

1819 இல் சிங்கப்பூர் பிரிட்டிஷாரின் பொறுப்புக்கு வந்த பிறகு அத்தீவில் பல மாற்றங்கள் நிகழத் தொடங்கின. விசாலமான சாலைகளும் கட்டடங்களும் உருவாகத் தொடங்கின.

1860 ஆம் ஆண்டு வரை கைதிகளை குடியேற்றும் ஒரு காலனியாக இருந்த சிங்கப்பூரின் சட்டம் மாற்றி அமைக்கப்பட்ட பின்னர் (பிரிட்டிஷ்) சிங்கப்பூருக்கு இந்தியாவிலிருந்தும் மலாயாவிலிருந்தும் இந்தியர்கள் குடியேறத் தொடங்கினர்.

1881 இல் சிங்கப்பூரில் 12 ஆயிரத்து 138 இந்தியர்கள் இருந்தனர். 1957 இல் இந்தியர்களின் எண்ணிக்கை ஓர் லட்சத்து 24 ஆயிரத்து 84 ஆக உயர்ந்தது.

ஒப்பந்த முறையில் மலாயாவுக்குக் கொண்டு வரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் அடிமை போல் நடத்தப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டு பெரும் எதிர்ப்பும் கிளம்பியது. 1910 ஆம் ஆண்டில் இங்கு ஒப்பந்த முறையில் தொழிலாளர்கள் கொண்டு வரப்படும் முறை தடை செய்யப்பட்டது. அதன் பின்னர் கங்கானி முறையில் தொழிலாளர்கள் இங்கு கொண்டு வரப்பட்டனர். குறிப்பிட்ட கமிஷன் தொகையைப் பெற்றுக் கொண்டு தென் இந்திய தொழிலாளர்களை இங்கு திரட்டி வரும் முறையே அந்த கங்கானி முறை.

ஒரு தோட்டத்திற்குத் தொழிலாளர்கள் தேவைப்பட்டால் உடனே தென்னிந்திய கங்காணி பினாங்குக்குப் போய் அங்குள்ள இந்திய இமிகிரேஷன் இலாகாவில் தொழிலாளர் மனு பாரம் பெற்றுக் கொண்டு கப்பலேறி தென்னிந்தியா செல்வார். அங்கே கிராமங்களில் தொழிலாளர் களைத் திரட்டிக் கொண்டு கப்பலேறுவார். (கப்பல் பயணச் செலவுக்கு தொடக்கத்தில் தோட்ட நிர்வாகமே பணத்தைக் கொடுத்து வந்தது. 1907 முதல் இந்தியர் இமிகிரேஷன் நிதி இப்பயணத்திற்குப் பயன்பட்டது). பினாங்குக்கு கப்பலில் வந்து சேரும் தொழிலாளர்கள் அனைவரும் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்களுக்கு ஊசி போடப்பட்டு உடன் கொண்டு வந்த உடைகளுக்கு மருந்து தெளித்து குவாரண்டைன் நிலையத்தில் (QUARANTINE STATION) ஏழு நாட்கள் தங்க வைத்த பின்னரே சம்பந்தப்பட்ட தோட்டங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

ரப்பர்த் தோட்டங்களுக்கு மத்தியில் கட்டப்பட்ட வசதி குறைந்த வரிசை வீடுகளில் (லயம்) தொழிலாளர்கள் தங்கி சீனர்களை விட குறைந்த ஊதியத்திற்கு வேலைகளைச் செய்தனர்.

தோட்ட அதிகார வர்க்கங்களின் அடக்கு முறைகளில் சிக்கி சுகாதாரமும் பிற வசதிகளும் அற்ற குடிசை வீடுகளில் வசித்துக் கொண்டு ரப்பர் காடுகளில் வேலை செய்து மலேரியா கொசுக்கடிக்கு இலக்காகி உயிரிழந்த இந்தியத் தொழிலாளர்கள் பலர்.

தோட்டத் தொழிலாளர்களின் அவல நிலைக்குப் பரிகாரம் தேட நாட்டின் சில பகுதிகளில் அப்போது புதிதாகத் தொடங்கிய சில இந்திய இயக்கங்கள் ஆங்காங்கே குரல் கொடுத்தன.

1928 ஆம் ஆண்டுகளில் ரப்பர் தோட்டங்களில் வேலை செய்த இந்தியத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 காசு சம்பளம் தரப்பட்டது.

ஆனால் சீனர்களுக்கோ நாள் ஒன்று 60 காசும் சில இடங்களில் 70 காசும் தரப்பட்டிருந்தது. சீனர்கள் "கான்ட்ராக்ட்" அடிப்படையில் குழு ஒப்பந்த முறையில் ஐரோப்பிய நிறுவனங்களின் தோட்டங்களில் வேலை செய்தனர். அந்தக் குறிப்பிட்ட சீனத் தொழிலாளர்களுக்கு ஒரு குழு தலைவர் இருப்பார். அவருக்கும் தோட்ட நிர்வாகத்திற்கும் ஒப்பந்தம் இருக்கும்.

இந்தியத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வும் பிற வசதிகளும் தரப்பட வேண்டுமென மலாயா இந்தியர் சங்கத் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மலாயாவிலுள்ள இந்தியத் தொழிலாளர்களின் நிலைமைகளைக் கண்டறிய ஆங்கில அரசின் ஏற்பாட்டில் இந்தியாவிலிருந்து ஸ்ரீனிவாச சாஸ்திரி என்பவர் 1936 டிசம்பரில் வரவழைக்கப் பட்டிருந்தார். அவர் இங்கு சுற்றுப்பயணம் செய்த பிறகு, இந்தியத் தொழிலாளர்கள் இந்தியாவில் பெற்றுவரும் நன்மைகளைவிட மலாயாவில் அதிக அளவில் ஆங்கில ஆட்சியாளர் களிடமிருந்து சலுகைகள் கிடைப்பதாகவும் அதிகச் சம்பளம் பெற்று வருவதாகவும் தம் அறிக்கையில் குறிப்பிட்டுச் சென்றுவிட்டார்.

(வி.எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்திரியின் அந்த அறிக்கை "REPORT ON THE CONDITIONS OF INDIAN LABOUR IN MALAYA" எனும் பெயரில் கோலாலம்பூர் அரசாங்க அச்சகத்தின் மூலம் 1937 இல் பிரசுரிக்கப் பட்டிருக்கிறது).

அந்த அறிக்கைக்கு மலாயா இந்தியர்கள் கடும் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

1937 இல் சிலாங்கூர் இந்தியர் சங்கத் தலைவராகப் பொறுப்பு வகித்த எல்.ஆர். சந்திரனும் சங்கச் செயலாளர் செங்கப்பாவும் கடுமையான அறிக்கைகள் விடுத்தனர்.

ஸ்ரீனிவாச சாஸ்திரியின் குறும்புத்தனமான அறிக்கைக்குப் பின்னர் ஐந்து மாதங்கள் கழித்து இந்தியாவின் முக்கிய தலைவர்களில் ஒருவராக அப்பொழுது கருதப்பட்ட பண்டிட் ஜவகர்லால் நேரு 1937 மே மாத இறுதியில் சிங்கப்பூருக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தமது பத்தொன்பது வயது நிரம்பிய ஒரே புதல்வியான இந்திராவோடு (இந்திரா காந்தி) வருகை தந்திருந்தார். தம் துணைவி கமலா நேருவின் மரணத் துயரை ஓரளவு போக்கிக் கொள்ளவும் அந்தப் பயணம் அப்பொழுது நேருவுக்குப் பயன்பட்டது.

மலாயாவில் உள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமைகளைக் கேட்டறிந்தார் நேரு.

இரண்டு வாரங்கள் நாட்டின் பல பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உரை யாற்றினார். இந்தியர்கள் பல சங்கங்களை வைத்துக்கொண்டிருக்காமல் ஐக்கியத்துடன் ஒரு ஸ்தாபனத்தின் கீழ் செயல்பட வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். தொழிலாளர் நலனுக்காக தொழிற்சங்கங்களை உருவாக்கி சீனர்களுக்குக் கிடைக்கும் அதே சம்பளத்தை இந்தியத் தொழிலாளர்களுக்கும் பெற்றுத்தர ஆவன செய்யவும், கல்வி வசதிகளைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளவும் ஆலோசனைகள் வழங்கினார்.

சீனத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த சம்பளத்தைப்போல் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வு (நாள் ஒன்றுக்கு 50 காசிலிருந்து 60 காசுக்கு) கிடைக்கும் என எதிர்பார்த்த தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தோட்ட உரிமை யாளர்கள் தந்தனர்.

1928 ஆம் ஆண்டு முதல் நாள் ஒன்றுக்கு 50 காசு. சம்பளம் தந்து வந்த தோட்ட நிர்வாகம் 1937 ஆம் ஆண்டு இறுதியில் பத்து காசு குறைத்து நாள் ஒன்றுக்கு 40 காசு மட்டுமே தரப்படும் என அறிவித்து விட்டது. ஸ்ரீனிவாச சாஸ்திரியின் ஆலோசனையின் பேரில் இந்தச் சம்பளக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டதாக மலாயா தோட்ட முதலாளிகள் சங்கம் அறிவித்து விட்டது.

சி.ஐ.ஏ.எம். (C.I.A M.) ஸ்தாபன தலைவர்கள் பத்திரிகை வாயிலாகவும் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திடமும் அறிக்கைகள் கொடுத்தனர்; வேண்டுகோள் விடுத்தனர். பலன் கிடைக்க வில்லை.

அந்தக்கால கட்டத்தில் ரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்ய கங்கானி முறையில் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் தொடர்ந்து வந்துகொண்டுதான் இருந்தார்கள்.

குறைந்த ஊதியத்திற்கு வேலை பார்க்க தொழிலாளர்கள் வந்து குவிந்த போது சம்பள உயர்வு குறித்து தோட்ட உரிமையாளர்கள் அக்கறை காட்டவில்லை.

மலாயாவுக்குத் தொழிலாளர்களை அனுப்ப தடை விதிக்கக்கோரி இந்தியத் தலைநகர் டில்லிக்கு சி.ஐ.ஏ.எம். (மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம்) 1938 மார்ச் 29 ஆம் தேதியன்று தந்தி அனுப்பியது.

மலாயா தோட்ட முதலாளிகள் சங்கமான யு.பி.ஏ.எம். (UNITED PLANTING ASSOCIATION OF MALAYA) சம்பளக்குறைப்பு செய்ததாலும் தொழிலாளர்களுக்குத் தேவைப்பட்ட அடிப்படை வசதிகளை முறையாகச் செய்து தராததாலும் இந்திய அரசாங்கம் உடல் உழைப்பு தொழிலாளர்களை மலாயாவுக்கு அனுப்ப 1938 ஜூன் 15 இல் தடை விதித்தது. சொந்தமாகப் பயணச் செலவுகளை மேற்கொண்டு மலாயா செல்ல விரும்பியவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அந்தத் தடை உத்தரவினால் தொடர்ச்சியாக மலாயாவுக்கு வந்து கொண்டிருந்த இந்தியர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

1891 இல் மலாயாவில் 75 ஆயிரம் இந்தியர்கள் இருந்திருக்கிறார்கள்.

1901 இல் ஒரு லட்சத்து 20 ஆயிரமாக அந்த எண்ணிக்கை உயர்வு கண்டது.

1911 இல் 2 லட்சத்து 67 ஆயிரத்து 159 பேர் மலாயாவில் இருந்தனர்.

1921 இல் 4 லட்சத்து 70 ஆயிரத்து 536 ஆக அந்த எண்ணிக்கை உயர்ந்தது.

1932 இல் 6 லட்சத்து 21 ஆயிரத்து 774 இந்தியர்கள் இருந்தனர்.

1941 ஜூன் மாத மக்கள் தொகை கணக்கறிக்கையில் மலாயாவில் 7 லட்சத்து 44 ஆயிரத்து 276 இந்தியர்கள் (744,276) வசித்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், 1947 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கறிக்கையில் இந்தியர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 99 ஆயிரத்து 616 (599,616) என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. யுத்தம் நடைபெற்று முடிவுற்றவுடன் சுமார் 1 லட்சத்து 44 ஆயிரம் பேர் (144,000) இந்தியா திரும்பியிருக்கின்றனர்.

(1930 இல் இருந்து 1933 வரையில் இரண்டு லட்சம் இந்தியர்கள் தென்னிந்திய இமிகிரேஷன் நிதியின் உதவியோடு தமிழகத்திற்குத் திரும்பி விட்டதாகவும் தகவல் தெரிவிக்கிறது).

1938 ஜூன் 15 இல் தொழிலாளர் தடை விதிக்கப்பட்ட ஆண்டின் தொடக்கத்தில் 58,437 இந்தியர்களும் அதற்கும் முதல் ஆண்டான 1937 இல் ஒரு லட்சத்து 39 ஆயிரம் இந்தியத் தொழிலாளர்களும் மலாயாவுக்கு வந்திருந்தனர்.

"தொழிலாளர் தடை" மலாயாவில் உள்ள ரப்பர் தோட்ட உற்பத்தியாளர்களுக்குக் கவலையைத் தந்தது. மலாயா தோட்ட உரிமையாளர்களும் காலனித்துவ அரசாங்கமும் இந்தியத் தொழி லாளர்களைத் தருவிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தனர். ரப்பர் தோட்டங்கள் மட்டுமின்றி ரயில்வேயிலும், சாலைகள், கட்டடங்கள் உருவாக்கும் பொதுப்பணி இலாகாவிலும் பணியாற்ற இந்தியத் தொழிலாளர்கள் அதிக அளவில் தேவைப்பட்டனர்.

மலாய்க்காரர்கள் விவசாயத் தொழிலில் அதிக நாட்டம் கொண்டிருந்தனர். சீனர்கள் ஈய தொழிலிலும் கட்டட வேலைகளிலும் வர்த்தகத்திலும் ஈடுபாடு காட்டி வந்தனர்.

இந்திய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த மலாயா அரசாங்கம் ஒரு தூதுக்குழுவை 1939 ஜனவரியில் அனுப்பி வைத்தது.

அந்தத் தூதுக்குழுவில் பெடரல் சட்டமன்ற உறுப்பினரும் பிரபல வழக்குரைஞருமான எஸ்.என். வீராசாமியும் இடம்பெற்றிருந்தார்.

சம்பளக்குறைப்பை மீட்டுக்கொண்டு முன்பு தொழிலாளர்களுக்குக் கொடுத்த அதே சம்பளத்தைத் தருவதாகவும், தொழிலாளர் வசிப்பிடம் கல்வி ஆகிய வசதிகளை ஏற்படுத்துவ தாகவும் அரசாங்க கவுன்சில்களில் இந்தியர்களுக்குப் போதிய இடங்கள் வழங்க முன் வருவதாகவும் தூதுக்குழு இந்திய அரசாங்கத்திடம் பரிந்துரை வழங்கியது. தொழிலாளர் தடை விதிப்பை மீட்டுக் கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்தது.

தொழிலாளர்கள் அதிக அளவில் மலாயாவுக்குச் செல்வதில் பலவித கட்டுப்பாடுகளை இந்திய அரசாங்கம் விதித்திருந்ததால் 1940 - 1941 ஆம் ஆண்டுகளில் மிகக் குறைந்த

அளவிலேயே தொழிலாளர்கள் மலாயாவுக்கு வருகை மேற்கொண்டனர்.

1939 அக்டோபர் 1 முதல் மீண்டும் நாள் ஒன்றுக்கு 50 காசு சம்பளம் தரப்பட்டது.

. 1941 டிசம்பரில் மலாயா சிங்கப்பூர் பகுதிகளில் இரண்டாவது உலகப் போர் மூண்டு ஜப்பானியர் ஆட்சி ஏற்பட்டவுடன் இந்தியத் தொழிலாளர்களின் வருகை முற்றாக நின்றுவிட்டது.

(1938 ஆம் ஆண்டில் இந்தியத் தொழிலாளர் வருகைக்கு சி.ஐ.ஏ.எம். ஆலோசனையின் பேரில் தடை விதிக்கப்படாமல் இருந்திருந்தால் மேலும் நாலைந்து லட்சம் இந்தியர்கள் 1938 முதல் 1941 வரையில் மலாயாவுக்கு வந்திருக்கலாம். இப்பொழுது இருக்கும் பதினான்கு லட்சம் இந்தியர் களின் எண்ணிக்கை ஒருவேளை இருபத்தைந்து முப்பது லட்சமாகப் பெருகியிருக்கலாம்).

## ஜப்பானியர் ஆட்சியில் தோட்டத் தொழிலாளர்கள்

1941 டிசம்பரில் ஜப்பானியர் வந்தவுடன் மலாயாவில் இருந்த பல்லாயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய்விட்டது.

பலர் காடுகளை அழித்து காய்கறித் தோட்டங்கள் போட்டனர். ரப்பர் தோட்டங்களில் குமாஸ்தாக்களாகப் பணிபுரிந்த பலர் தோட்ட வேலைகளைக் கவனிக்கப் புறப்பட்டு விட்டனர்.

ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவோடு மலாயா சிங்கப்பூரில் ஐ.என்.ஏ. இயக்கம் (இந்திய தேசிய ராணுவம் இந்திய சுதந்திரக் கழகம்) தொடங்கப்பட்டபோது, மலாயாவில் உள்ள பல இந்தியர்கள் அதில் சேர்ந்தனர். அதிக அளவில் இந்தியர்கள் அந்த ஐ.என்.ஏ. இயக்கத்தில் சேர்ந்ததற்குக் காரணம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மீதிருந்த கவர்ச்சியும் வேலையில்லாத் திண்டாட்டமும்தான்! ஆங்கிலம் தெரிந்த தோட்டத்து கிராணிகளும் மற்ற நிறுவனங்களில் குமாஸ்தாக்களாகப் பணிபுரிந்தவர்களும் இந்திய தேசிய ராணுவத்திலும் இந்திய சுதந்திரக் கழகத்திலும் அதிகாரிகளாகப் பதவி வகித்தனர்.

ஜப்பானியரின் ஆட்சிக் காலத்தில் மலாயா இந்தியர்களில் பலருக்கு அரசாங்கப் பதவிகள் வழங்கப்பட்டிருந்தன.

அப்போது சிலாங்கூர் இந்தியர் சங்கத் தலைவராக இருந்த வழங்குரைஞர் கே.கே.பெஞ்சமின் (K K BENJAMIN) எனும் இந்தியர் சிலாங்கூரின் தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்றார். 1943 இல் தொடங்கப்பட்ட அரசு சார்பான மாநில ஆலோசனை மன்றங்களில் இந்தியர்கள் பலர் இடம் பெற்றிருந்தனர்.

மலாயா சிங்கப்பூர் சீனர்களிடையே ஜப்பானியர் மிகக் கடுமையாக நடந்து கொண்டனர். மலாயாவில் இயங்கி வந்த மலாயா கம்யூனிஸ்ட் கட்சியில் (சி.பி.எம்.) பெரும்பாலும் சீனர்களே உறுப்பினர்களாக இருந்தனர்.

மலாயா சிங்கப்பூரில் ஜப்பானியரிடம் தோல்வி அடைந்த பிரிட்டிஷார் மறுதாக்குதலுக்குத் தங்களைத் தயார்படுத்திக் கொண்டிருந்தனர். மலாயாவில் சி.பி.எம். (மலாயா கம்யூனிஸ்ட் கட்சி) ஆதரவை பிரிட்டிஷார் நாடினர். ஜப்பானியருக்கு எதிராகப் போராட சி.பி.எம். முன்வந்தது.

"ஜப்பானியருக்கு எதிரான மலாயா மக்களின் ராணுவம்" (MALAYAN PEOPLES ANTI JAPANESE ARMY) எனும் படைப்பிரிவை சி.பி.எம். அமைத்தது. பிரிட்டிஷார் அப்படைப் பிரிவுக்கு கொரில்லா பாணியிலான ராணுவப் பயிற்சியை அளித்தனர்.

(மலாயா கம்யூனிஸ்ட் கட்சியான சி.பி.எம். மலாயாவில் 1930 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1917ல் ரஷ்ய புரட்சிக்குப் பின்னர் ரஷ்யா கம்யூனிஸ்ட் நாடாக மாறியிருந்தது. ட்சார் (TZAR) மன்னர் பரம்பரை ரஷ்யப் புரட்சிக்குப் பின் அழிந்தது. (மன்னர் குடும்பத்தினர் அழிக்கப்பட்டனர்)

1911 ல் சீனப் புரட்சிக்குப்பின் 1912 இல் சீனக் குடியரசு உதயமாகியது. குமின்டாங் (KUOMINTANG) கட்சியைத் துவக்கியிருந்த டாக்டர் சன் யாட் சென் 1916 இல் சீனக்குடியரசின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார். 1925 இல் டாக்டர் சன் காலமானவுடன் சியாங் கய் ஷெக் (CHIANG KAI SHEK) சீனாவின் அதிபராகப் பதவி வகித்தார்.

சீனாவின் குமின்டாங் கட்சியின் கிளையை சிங்கப்பூரிலிருந்த சீனர்கள் 1912 டிசம்பர் 18 இல் துவக்கியிருந்தனர். 1913 இல் மலாயாவின் பல பகுதிகளில் குமின்டாங் கட்சியின் கிளைகளை மலாயா சீனர்கள் அமைத்திருந்தனர்.

குமின்டாங் கட்சியின் கொள்கைகளை மலாயாவில் பரப்புவதில் மலாயா சீனர்கள் மும்முரம் காட்டி வந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அக்கட்சிக்கு மலாயா சிங்கப்பூரில் 1925 ஆம் ஆண்டில் தடைவிதித்தனர்.

1921 இல் சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி துவக்கப்பட்டது.

1945 இல் ஜப்பானியர் சரணடைந்த பிறகு சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி வலுவடையத் தொடங்கியது. சீனாவில் குமின்டாங் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையே கடும் போராட்டம் நிலவிவந்தது. இறுதியில் 1949 அக்டோபரில் சீனாவில் கம்யூனிஸ்ட் அரசாங்கம் உருவாகியது).

1945 ஆகஸ்ட் 15 இல் ஜப்பானியர் சரணடைவதாக அறிவித்தவுடன் மலாயா சிங்கப்பூரில் பிரிட்டிஷார் ஆட்சி புரிய மீண்டும் வந்தனர்.

மலாயா கம்யூனிஸ்ட் கட்சி அரசாங்கத்தில் அங்கம் பெற 1945 செப்டம்பரில் கோரிக்கை விடுத்தது. மலாயாவில் இயங்கும் தேசிய ராணுவத்தில் எம்.பி.ஏ.ஜே.ஏ. (MALAYAN PEOPLES ANTI JAPANESE ARMY) உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தது.

பிரிட்டிஷ் அரசு மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை.

மலாயா கம்யூனிஸ்ட் கட்சியில் அதிக அளவில் சீனர்களும் ஒரு சில இந்தியர்களும் மலாய்க் காரர்களும் அங்கம் வகித்தனர்.

1945களில் மலாயாவில் பல தொழிற்சங்கங்கள் உருவாகின. பல இந்தியர்கள் தொழிற் சங்கங்களில் முக்கிய பதவிகள் வகித்தனர்.

## முதல் வேலை நிறுத்தப் போராட்டம்

மலாயா ரப்பர்த் தோட்டங்களில் வேலை பார்த்த தொழிலாளர்களில் 90 சதவீதத்தினர் தென்னிந்தியர்களே.

அந்த ரப்பர் தோட்ட இந்தியத் தொழிலாளர்களுக்கு 1928 முதல் 1937 வரை நாள் ஒன்றுக்கு 50 காசு சம்பளம் தரப்பட்டிருந்ததைக் குறைத்து 40 காசு வீதம் கொடுக்க முன்வந்ததால் ஏற்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு காண 1939 ஜனவரி 1 முதல் மீண்டும் பழைய 50 காசு சம்பளத்தைத் தர தோட்ட நிர்வாகம் ஒப்புக் கொண்டிருந்தது.

சீனத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 60 காசிலிருந்து 70 காசு வீதம் சம்பள உயர்வு தர 1940 ஜனவரி 1 முதல் தோட்ட நிர்வாக சங்கம் முன் வந்தது. அதே நேரத்தில் அதே அளவு வேலையைப் பார்க்கும் இந்தியத் தொழிலாளர்களுக்கு 50 காசுக்கு மேல் உயர்வுதர முன் வரவில்லை.

சிலாங்கூர் மாநிலத்தில் கிள்ளான் வட்டார இந்திய தொழிற்சங்கம் 1940 இல் உருவாகியது.

கோலாலம்பூரைச் சேர்ந்த ஆர்.எச். நாதன் அந்த முதல் இந்திய தொழிற்சங்கத்தில் முக்கிய பங்கு வகித்தார்.

(1938 ஆம் ஆண்டில் தமிழ்நேசன் நாளிதழின் ஆசிரியர் பகுதியில் பணியாற்றிய ஆர்.எச்.நாதன் (ஆர். ஹாலாசிய நாதன்) 1936களில் வெளிவந்த சமுதாய ஊழியன் வார இதழை வெளியிட்ட ஆர்.ராமநாதனின் இளைய சகோதரர் ஆவார்).

கிள்ளான் வட்டார ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் 10 காசு சம்பள உயர்வு கோரி போராடினர்.

அப்போதைய தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு எதிராகக் கடுமையான கட்டுப்பாடு களை விதித்திருந்தன.

நண்பர்கள் உறவினர்கள் நிர்வாகத்தின் அனுமதியின்றி தோட்டத்திற்கு வருகை புரியக் கூடாது. நிர்வாக அதிகாரிகளுக்கு எதிரில் சைக்கிளில் போகக்கூடாது. இப்படிப்பட்ட கட்டுப்பாடுகள்.

அந்தக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தக் கோரியும் 10 காசு அதிகரித்து நாள் ஒன்றுக்கு 60 காசு சம்பள உயர்வு கோரியும் கிள்ளான் வட்டார இந்திய தொழிற்சங்கம் போராட்டம் நடத்தியது.

அந்தப் போராட்டத்துக்கு ஆர்.எச்.நாதன் தலைமை வகித்தார.

1941 பிப்ரவரியில் கிள்ளான் வட்டார இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

கட்டுப்பாடுகளைத் தளர்த்தவும் 5 காசு சம்பள உயர்வு தரவும் தோட்ட நிர்வாகச் சங்கம் முன் வந்ததைத் தொடர்ந்து 1941 ஏப்ரல் 9 இல் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்தது.

நாடு முழுவதிலும் உள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிள்ளான் வட்டார இந்திய தொழிலாளர்களின் நடவடிக்கை புது விழிப்பை ஏற்படுத்தியது.

வேலை நிறுத்தத்துக்குக் காரணமாக இருந்த ஆர்.எச்.நாதனும் அவருக்குத் துணையாக இருந்த டி. சுப்பையா என்பவரும் 1941 மே மாதத்தில் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டனர்.

1941 டிசம்பரிலிருந்து 1945 வரையில் ஜப்பானியரின் ஆட்சி மலாயாவில் நிலவி வந்ததால் தொழிற்சங்கங்கள் துடிப்புடன் இயங்கவில்லை. 1945 முதல் மலாயாவில் பல தொழிற் சங்கங்கள் உருவாகின. பல இந்தியர்கள் தொழிற்சங்கங்களில் முக்கிய பதவிகள் வகித்தனர்.

கெடா இந்திய தொழிலாளர் சங்கத்துக்கு ஏ.எம்.சாமி தலைவராகவும், பேரா இந்தியத் தொழிலாளர் இயக்கத்துக்கு எம்.சி.பி. மேனன் தலைவராகவும், நெகிரி இந்தியத் தொழிலாளர் சங்கத்துக்கு கே.சௌத்திரியும்' பி.பி.நாராயணனும் முக்கிய தலைமைப் பொறுப்புகளையும்

வகித்தனர். சிலாங்கூர் தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்கு சி.வி.எஸ்.கே. மூர்த்தி என்பவர் தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார்.

சில தொழிற் சங்கங்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர்.

எல்லா தொழிற்சங்கங்களும் இணைந்து (சிங்கப்பூர் உட்பட) அகில மலாயா தொழிற்சங்க சம்மேளனம் (PAN MALAYAN FEDERATION OF TRADE UNION) என்ற பெயரில் ஒரு தேசிய அமைப்பையும் உருவாக்கியிருந்தன.

1947 பிப்ரவரியில் எஸ்.ஏ.கணபதி அந்த அகில மலாயா தொழிற்சங்க சம்மேளன தலைவராகப் பொறுப்பேற்றிருந்தார்.

அந்த தேசிய தொழிற்சங்க அமைப்பின் மத்திய செயற்குழுவில் 4 சீனர்களும் 4 இந்தியர்களும் 2 மலாய்க்காரர்களும் இடம்பெற்றிருந்தனர்.

சிங்கப்பூர் துறைமுக தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் பி.வீரசேனன் அந்த தேசிய தொழிற்சங்கத்தின் மத்திய செயலவை உறுப்பினர்களில் ஒருவர்.

மலாயா கம்யூனிஸ்ட் கட்சி தலை மறைவு இயக்கமாக இயங்கிக் கொண்டிருந்தது. நாட்டில் நிகழ்ந்த பல குழப்பங்களுக்கு அக்கட்சியே காரணமாக இருந்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் ஊடுருவலோடு இயங்கிய தொழிற்சங்கங்களைப் போலீஸார் கண்காணித்தனர். அத்தகைய தொழிற்சங்க அலுவலகங்களில் சோதனைகள் மேற்கொண்டனர். சிலர் போலீஸ் காவலில் தடுத்தும் வைக்கப்பட்டனர்.

மலாயா சிங்கப்பூரில் இயங்கிய தொழிற்சங்கங்கள் பதிவு பெற வேண்டுமென 1946 ஆகஸ்டில் அறிவிக்கப்பட்டது.

மலாயாவில் பல வேலை மறியல் போராட்டங்களை தொழிற்சங்க சம்மேளனம் முன்நின்று நடத்தி வந்தது.

தொழிற்சங்கப் பதிவுக்காக இரண்டு ஆண்டுகள் தொழிற்சங்க சம்மேளனம் (FEDERATION OF TRADE UNION) காத்திருந்தது. இறுதியில் 1948 ஜூன் 13 இல் மலாயாவில் தொழிற்சங்க பெடரேஷன் தடைவிதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

மலாயா தொழிற்சங்க சம்மேளனத்தில் கம்யூனிஸ்ட் ஊடுருவல் இருந்ததை அறிந்த அரசாங்கம் அதன் அலுவலகங்களைச் சோதனையிட்டது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் கைது செய்தது.

ஐந்து நாட்களுக்குப் பின்னர் 1948 ஜூன் 18 இல் நாடு முழுவதும் அவசர கால பிரகடனத்தை அமல்படுத்தியது அரசாங்கம்.

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சீனர்களும் சில இந்தியர்களும் மலாய்க்காரர்களும் காட்டிற்குள் ஓடினர்.

தொழிற்சங்க சம்மேளனத் தலைவராக இருந்த எஸ்.ஏ.கணபதியும் அதன் மத்திய செயற்குழு உறுப்பினர் பி.வீரசேனனும் 1948 ஜூனில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட காட்டிற்கு ஓடினர்.

(பின்னர் பி.வீரசேனன் காட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார். எஸ்.ஏ.கணபதி கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். கணபதியின் விடுதலைக்காகப் பலர் வேண்டுகோள் விடுத்தும் அது பலனளிக்கவில்லை).



எஸ்.ஏ.கணபதி



பி.வீரசேனன்

## பி.எம்.ஏ. காலத்தில்...

ஜப்பானியர் ஆட்சி காலத்தில் ஐ.என்.ஏ. இயக்கத்தில் (இந்திய தேசிய ராணுவம் - இந்திய சுதந்திரக் கழகம்) முக்கிய தலைவர்களாகப் பணியாற்றிய பலர் பிரிட்டிஷ் ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு பிறகு விடுவிக்கப்பட்டனர்.

1945 அக்டோபர் முதல் 1946 மார்ச் 31 வரையிலான பி.எம்.ஏ. (BRITISH MILITARY ADMINISTRATION) காலத்தில் பிரிட்டிஷ் ராணுவ நிர்வாகத்தில் ஜப்பானியரோடு இணைந்து செயல்பட்ட பல இந்தியர்கள் பழிவாங்கப்பட்டனர்.



### என். ராகவன்:

***சி.ஐ.ஏ.எம். எனும் மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனத்துக்கு வழக்குரைஞர் என். ராகவன் 1939 முதல் தலைமைப் பொறுப்பேற்றிருந்தார். இந்திய சுதந்திரக் கழக மலாயா கிளையின் தலைவராகவும் பொறுப்பேற்றிருந்த ராகவன் 1946ல் மலாயா இந்தியர் நிவாரண குழுவுக்குத் தலைவராகவும் நியமனம் பெற்றிருந்தார்.***

1947 ஆகஸ்ட் 15ல் இந்தியா சுதந்திரமடைந்தவுடன் என். ராகவன் இந்தியா திரும்பினார். பிரான்சுக்கு இந்தியத் தூதராக பின்னர் இவர் பிரதமர் நேருவால் நியமிக்கப்பட்டார். "INDIA AND MALAYA: A STUDY" (1954) எனும் ஆங்கில நூலையும் எழுதி வெளியிட்டுள்ளார் இவர்.



### எம். கே. ராமச்சந்திர நாயுடு

1940-களில் கோலாலம்பூர் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய தலைவராகப் பொறுப்பேற்றிருந்த எம்.கே. ராமச்சந்திர நாயுடு அப்போது இங்கு இயங்கிய நேதாஜி இயக்கத்திற்கு (இந்திய சுதந்திரக் கழகம் - ஐ.என்.ஏ.) ஆதரவாக இருந்ததோடு, 1946-ல் ம.இ.கா. அமைவதற்கும் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்தின் ஒரு பகுதியில் ம.இ.கா. அலுவலகம் தொடக்க காலத்தில் இயங்குவதற்கும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கியவர்.

செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்தின் முதல் தலைவராக 1928-ல் பொறுப்பேற்றிருந்த இவர் சமூக சமய பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டவர். அந்த காலகட்டத்தில் சமூகத் தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்ட சமுதாயத் தொண்டர் இவர்.

### அ. கோ. ராஜப்ப தேவர்



***1946ல் மலாயாவில் அமைக்கப்பட்ட மலாயா இந்தியர் நிவாரண குழுவின் மூவார் மாவட்ட பஞ்சூரின் தலைவராக நியமனம் பெற்றிருந்த அ.கோ. ராஜப்பதேவர் ஜோகூர் மாநிலத்திலுள்ள மூவார் மாவட்டத்தில் பொதுப் பணிகளில் ஈடுபட்டு செல்வாக்கோடு திகழ்ந்தவர். 1925ல் மூவார் முத்து மாரியம்மன் ஆலயம் இவரது பெரும் முயற்சியில் உருவாகியிருக்கிறது. 1930ல் இந்தியர் சன்மார்க்க தமிழ்ப்பள்ளியை (தற்போதைய மூவார் தமிழ்ப் பள்ளி) நிறுவியவரும் இவரே. மூவார் மாவட்ட பஞ்சூர் இந்தியர்களின் பிரதிநிதியாக முதல் ஊராட்சி மன்றத்திலும் இடம் பெற்றிருந்தவர் இவர்.***



### என்.டி.எஸ். ஆறுமுகம் பிள்ளை

வர்த்தகப் பிரமுகரும் சமூகப் பணியாளருமான அருள்மாமணி என்.டி.எஸ். ஆறுமுகம்பிள்ளை பினாங்கிலும் வட மலாயா பகுதியிலும் புகழ்பெற்று விளங்கியவர். வட மலாயாவில் புக்கிட் மெட்ராஜம் பகுதியில் மங்களேஸ்வரி அம்மன், திரௌபதை அம்மன் ஆலயங்களையும் எழுப்பி சமயப் பணியாற்றியுள்ளார். பல அறப்பணிகளுக்கு நன்கொடைகள் வழங்கி "கடார வள்ளல்" எனும் சிறப்புப் பெயரும் பெற்றிருந்தார். ஏ.எம்.என். எனும் அரசாங்க விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது. "தமிழ்மலர்" தினசரியையும், பின்னர் "தினமணி" நாளிதழையும் சொந்தமாக நடத்திய இவர், ரப்பர் தோட்டங்களையும், ஜவுளி நிலையங்களையும் நிர்வகித்தவர். என். டி. எஸ். ஆறுமுகம் பிள்ளை இயற்கை எய்தியவுடன் இவர் நடத்திய "தினமணி" நாளிதழும் நிறுத்தப்பட்டு விட்டது.

ஐ.என்.ஏயின் தளபதிகளான மேஜர் ஜெனரல் (காப்டன்) ஷா நவாஸ்கான் கர்னல் (காப்டன்) பி.கே.சாகல், மேஜர் (லெப்டினனட்) ஜி. எல். தில்லான் ஆகிய மூவர் மீதும் குற்றம் சாட்டப்பட்டு டில்லியிலுள்ள செங்கோட்டையில் விசாரணை செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

1946 மார்ச்சில் நேரு மலாயாவுக்கு வந்திருந்தார். இந்தியர்களின் நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்.

சிறையிலடைக்கப்பட்ட ஐ.என்.ஏ. தொண்டர்களுக்கு வாதாட வழக்குரைஞர்கள் ஆர்.வெங்கட்ராமன், நரிமன் உட்பட மூவர் கொண்ட வழக்கறிஞர் குழுவையும், ஜே.பட்டாச்சாரியா தலைமையில் மருத்துவக் குழு ஒன்றையும் இந்தியாவிலிருந்து மலாயாவுக்கு அனுப்பி வைக்க நேரு ஏற்பாடுகள் செய்திருந்தார்.

மலாயா இந்தியர் நிவாரணக் குழு ஒன்றை நேரு உருவாக்கினார். அக்குழுவுக்கு வழக்குரைஞர் என். ராகவனை தலைவராக்கினார்.

சி.ஐ.ஏ.எம். எனும் இந்திய சங்கங்களின் சம்மேளனத்துக்கு 1939 முதல் என். ராகவன் தலைமைப் பொறுப்பேற்றிருந்தார். இந்திய சுதந்திரக் கழக மலாயா கிளைக்குத் தலைவராகவும் பதவி வகித்திருந்தார்.

சிங்கப்பூர் சிறைச்சாலையிலிருந்து நேருவின் வேண்டுகோளுக்கிணங்க விடுவிக்கப்பட்டிருந்த ஜான் திவி அந்த மலாயா இந்தியர் நிவாரணக்குழுவுக்கு செயலாளர் பொறுப்பேற்றிருந்தார்.

இந்தியர்களுக்கு தேசிய ரீதியில் ஓர் அமைப்பை உருவாக்குமாறும் நேரு ஆலோசனை கூறியிருந்தார்.

ஜான் திவியோடு மற்ற சில ஐ.என்.ஏ. தொண்டர்களும் இணைந்து மலாயா இந்திய காங்கிரஸ் ஸ்தாபனத்தை 1946 ஆகஸ்ட் 4 இல் உருவாக்கினர்.

## உயர் பதவிகள்

ஐ.என்.ஏ. இயக்கத்தில் தீவிர பங்கேற்றிருந்த என். ராகவன், கே.பி.கே.மேனன், கே.எம். கன்னம்பிள்ளை ஆகியோர் 1947-48 ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்குச் சென்று தூதரகங்களில் உயர்பதவிகள் (தூதர்களாகவும்) வகித்தனர்.

● இந்தியாவுக்குத் திரும்பிய என். ராகவன் 1954 ஆம் ஆண்டில் INDIA AND MALAYA: A STUDY எனும் ஆங்கில நூலை எழுதி வெளியிட்டிருந்தார்.

● சீனாவுக்குப் பின்னர் மற்ற இடங்களிலும் இந்தியத் தூதராகப் பொறுப்பேற்றிருந்த கே.பி.கே. மேனன் கேரளாவில் புகழ்பெற்ற 'மாத்ரு பூமி' எனும் சஞ்சிகையை நடத்தி வந்தார்.

● ம.இ.கா. தொடங்கப்பட்ட 16 மாதங்களுக்குப் பின்னர் ஜான் திவியும் மலாயா சிங்கப்பூரின் இந்தியத் தூதராக 1947 ஜூலையில் பொறுப்பேற்றார்.

## மலாயா சட்டமன்றங்களில்...

மலாயாவில் 1909 டிசம்பர் 11 இல் பெடரல் சட்டமன்றம் துவக்கப்பட்டது.

அதில் 4 மலாய் சுல்தான்களும் 4 ரெஸிடன்டுகளும் (மாநிலத்தின் தலைமைப் பொறுப்பதிகாரி) பொதுமக்கள் சார்பில் 4 பேரும் இடம்பெற்றிருந்தனர். அந்த நான்கு பேரில் மூவர் ஐரோப்பியர். ஒருவர் சீனர். இந்த பெடரல் சட்டமன்றத்துக்குத் தலைவராக ரெஸிடன்ட் ஜெனரல் பதவி வகித்தார்.

1928 ஆம் ஆண்டில்தான் முதல் முறையாக இந்தியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. முதல் இந்திய பெடரல் சட்டமன்ற உறுப்பினராக வழக்குரைஞர் எஸ்.என். வீராசாமி நியமனம் பெற்றார்.

## பிரிட்டிஷார் ஆட்சியில் 'அமைச்சர்கள்'

1951 ஏப்ரல் 9 இல் அமைச்சர் அந்தஸ்துள்ள அங்கத்துவ முறை ஆட்சியை பிரிட்டிஷ் அரசு மலாயாவில் அறிமுகப்படுத்தியது.

அரசியல் தலைவர்களையும் சமூகத் தலைவர்களையும் கொண்ட நிர்வாக மன்றம் அமைக்கப்பட்டு அமைச்சர் அந்தஸ்துள்ள உறுப்பினர் பதவியைச் சிலருக்கு வழங்கியது. குறிப்பிட்ட அந்த சில இலாகாக்கள் அந்த அமைச்சர் அந்துள்ள அங்கத்தினர் (மெம்பர்) பொறுப்பில் இயங்கியது. 'மெம்பர்' என்று அவர்கள் அதிகார பூர்வமாக அழைக்கப்பட்டாலும் அந்தக் கால கட்டத்தில் வெளிவந்த தினசரி பத்திரிகைகள் அமைச்சர் குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்களின் பெயர்களுக்கு முன்னால் 'மந்திரி' என்ற அடைமொழியோடேயே செய்திகளை வெளியிட்டு வந்தன.

அந்த அமைச்சர் குழுவில்' தென்னிந்தியர் சார்பாக பிரதிநிதித்துவம் இல்லாததைச் சுட்டிக் காட்டி தமிழ்நேசன் குரல் எழுப்பியது. ஆங்காங்கே உள்ள இயக்கங்கள் அறிக்கைகள் விடுத்தன.

பெடரல் சட்டமன்ற உறுப்பினர்களாக அப்பொழுது பொறுப்பு வகித்திருந்த ஆர்.ரமணி, பி.பி. நாராயணன், (டான்ஸ்ரீ) உபைதுல்லா எம்.பி. ராஜகோபால், வி.எம்.என்.மேனன் ஆகிய ஐவரும் பதவிகளைத் துறந்து போராட்டம் நடத்த முன்வந்த பின்னரே 1953 ஆம் ஆண்டில் தென்னிந்தியர் பிரதிநிதியாக வி.எம்.என். மேனன் அந்த அமைச்சர் அந்தஸ்துள்ள சூழலில் இடம்பெற்றார். தபால் தந்தித்துறை இலாகா வி.எம்.என். மேனன் பொறுப்புக்கு வந்தது.

மலாயா தோட்டச் சிப்பந்திகள் சங்கச் செயலாளராக முன்பு பணியாற்றிய வி.எம்.என். மேனன் செந்தூல் இந்தியர் வாலிபர் சங்கத்திற்கு 1950 இல் தலைவராகவும் இருந்திருக்கிறார். 1966களில் கோலாலம்பூரில் சட்டர்டே போஸ்ட் (SATURDAY POST) எனும் ஆங்கில வார இதழை சில ஆண்டுகள் வரை நடத்தினார். தற்போது சென்னையில் வசித்து வருகிறார் இவர்.

## கிளவ் துரை சிங்கம்

மலாயாவில் பிரிட்டிஷ் அரசாங்கம் 1951 இல் அறிமுகப்படுத்திய அமைச்சர் ஆட்சி முறையில் கல்வி அமைச்சராகப் பொறுப்பு வகித்த (டத்தோ) சர் கிளவ் துரை சிங்கம் தைப்பிங்கில் 1898 இல் பிறந்தவர். லண்டனில் சட்டம் பயின்று வழக்குரைஞராக நீண்டகாலம் பணிபுரிந்தவர். மலாயா இலங்கையர் பெடரேஷன் இயக்கத் தலைவராக 1946 இல் தேர்வு பெற்றவர். 1948 இல் மலாயா இலங்கையர் பிரதிநிதியாக பெடரல் சட்டமன்றத்தில் இடம்பெற்றவர் இவர்.

● 1957க்குப் பின்னர்

இலங்கைத் தமிழர்களைத் தனியாகப் பிரிக்காமல் மலாயா இந்தியர் பிரிவில் கணக்குத் தணிக்கைக்காக அரசு இணைத்துக் கொண்டது.

பெடரல் மாநில சட்ட மன்றங்களிலும் பின்னர் அமைச்சரவையிலும் இந்தியர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுவது தொடர்கிறது...

நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பல மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

ரப்பர் தோட்டங்களில் வசித்து வரும் இந்தியத் தொழிலாளர்களுக்குப் பல வசதிகள் செய்து தரப்படுகின்றன.

(1954 நவம்பர் 2 இல் பி.பி.நாராயணனைப் பொதுச் செயலாளராகக் கொண்ட தேசியத் தோட்டத் தொழிற் சங்கம் தோற்றம் கண்டது. மலாயாவில் முன்பு ஆங்காங்கே இயங்கிய ஐந்து தோட்டத் தொழிற் சங்கங்கள் ஒன்றாக இணைந்து பெரிய தேசிய அமைப்பாக உருவாகி தோட்டத் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிக்கத் தொடங்கியது).






பெட்டாலிங் ஜெயாவிலுள்ள தோட்ட மாளிகை.

பி.பி. நாராயணன்

1940 இல் நாள் ஒன்றுக்கு 50 காசு சம்பளம் பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் 1954 இல் 2 வெள்ளி 40 காசு பெற்றனர். 1970 இல் நாள் ஒன்றுக்கு 3 வெள்ளி 60 காசு சம்பள உயர்வு பெற்றிருக்கின்றனர். அதன் பின்னர் நாள் ஒன்றுக்கு 7 வெள்ளி 90 காசு வீதம் பெறுகின்றனர். 10 கிலோவுக்கு மேல் கொண்டு வரப்படும் ரப்பர் பாலுக்கு அளவுக்கு ஏற்றபடி ஊக்குவிப்பு தொகையும் வழங்கப்படுகிறது. தோட்டத் தொழிலாள்ர்களுக்கு மாதச் சம்பள அடிப்படையில் வேலை தரப்பட வேண்டும் என்பது தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நீண்டகாலப் போராட்டமாகும்.



ஜி.சங்கரன்

தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தை வெற்றிகரமாக வழிநடத்திய டாக்டர் பி.பி. நாராயணன் 1993 இல் ஓய்வு பெற்ற பின்னர் அச்சங்கத்தின் பொதுச் செயலாளராக ஜி.சங்கரன் பொறுப்பேற்று தோட்டத் தொழிலாளர் சங்கத்தை சக தோழர்களோடு வழிநடத்தி வருகிறார்.

பல தோட்டத் தொழிலாளர்கள் பிரஜா உரிமை எடுப்பதில் அக்கறை காட்டாது இருந்து விட்டதால் 1969 இல் 60 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியா திரும்பிவிட்டதாக ஒரு புள்ளிவிபரக் குறிப்பு தெரிவிக்கிறது.

(1970 இல் தோட்டத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 159,795 ஆகும். 1980 இல் 152,218 ஆகக் குறைந்திருக்கிறது)

## இந்திய "இமிகிரேஷன்" நிதி

1907 இல் தொடங்கப்பட்டு இயங்கி வந்த "இந்திய இமிகிரேஷன் நிதி" பின்னர் "தென்னிந்தியர் தொழிலாளர் நிதியாக" மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியின் மூலம் பல இந்தியர்கள் இந்தியா திரும்பியுள்ளனர். இந்தியாவுக்கு நிரந்தரமாகச் செல்ல விரும்பும் இந்தியத் தொழிலாளர்களுக்கு இந்த நிதி மூலம் இலவசப் பயணச்சீட்டு வழங்கப்பட்டு வருகிறது.

## தென்னிந்திய தொழிலாளர் நிதி

இந்நாட்டிற்கு சஞ்சிக் கூலியாக வந்த தென்னிந்தியத் தொழிலாளர்களை கப்பலில் இந்தியாவிற்கு வழியனுப்பி வைக்கும் (தர்ம ஆர்டர்) நோக்கத்திற்காக இந்நிதி முதலில் தோற்றுவிக்கப்பட்டது என்றாலும் இதற்கு அப்பாற்பட்ட நிலையில் சமுதாயத்தில் தனக்கு இருக்கின்ற கடப்பாட்டை பூர்த்தி செய்வதிலும் அது தன்னை ஈடுபடுத்தி வருகிறது.

குறிப்பாக தென்னிந்திய தொழிலாளர் நிதி சட்டம் 10 ஆவது விதியின் கீழ் சமுதாய தேவைகளை அது பூர்த்தி செய்து வருகிறது என்று அதன் அண்மைய ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென்னிந்திய தொழிலாளர் நிதி 1958 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி தோற்று விக்கப்பட்டது.

1907 ஆம் அண்டு நிறுவப்பட்ட இந்திய குடிநுழைவு நிதிக்கு பதிலாக இது தோற்றுவிக்கப் பட்டது. 1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் தேதி வரை இந்திய குடிநுழைவு நிதிக்கு இருந்த பணம் உட்பட அனைத்து சொத்துகளும் புதியதாக அமைக்கப்பட்ட தென்னிந்திய தொழிலாளர் நிதிக்கு மாற்றிவிடப்பட்டன.

அந்த சொத்துகளை அடிப்படையாகக் கொண்டுதான் தென்னிந்திய தொழிலாளர் நிதி வளரத் தொடங்கியது.

தென்னிந்திய தொழிலாளர் நிதி நான்கு முக்கிய நோக்கங்களை மையமாக வைத்தே இந்திய சமுதாயத்திற்கு குறிப்பாக தென்னிந்திய தொழிலாளர்களுக்கு தனது சேவையைத் தொடரத் தொடங்கியது.

- மலேசியாவில் உள்ள தென்னிந்திய தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பராமரிப்பில் இருக்கின்றவர்கள் அல்லது ஆதரவற்ற குழந்தைகளை இந்தியாவிற்கு கப்பலில் வழியனுப்பி வைக்க தேவைப்படக்கூடிய செலவீனத்தை ஏற்பது.
- வயதான காலத்தில் ஆதரவற்ற நிலையில் இருக்கும் தென்னிந்திய தொழிலாளர்கள் மற்றும் அவர்கள் குழந்தைகளை கடைசி வரை காப்பாற்றுதல்.
- உதவி தேவைப்படக்கூடிய தென்னிந்திய தொழிலாளர்களின் நலனை பாதுகாத்தல்.
- தென்னிந்திய தொழிலாளர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய இதர தேவைகளை மனிதவள அமைச்சரின் அங்கீகாரத்துடன் பூர்த்தி செய்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த தென்னிந்திய தொழிலாளர் நிதி தோற்றுவிககப்பட்டது.

தென்னிந்திய தொழிலாளர் நிதியை தென்னிந்திய தொழிலாளர் நிதி வாரியம் என்ற ஒரு ஸ்தாபனம் நிர்வகித்து வருகிறது.

*இந்த ஸ்தாபனம் அல்லது வாரியத்தில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் அனைவரும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மனிதவள அமைச்சரால் நியமிக்கப்படுகின்றனர்.*

## இந்தியாவிற்கு திரும்பியவர்கள்

*இந்தியாவுக்கு திரும்பி அங்கேயே நிரந்தரமாக தங்க விரும்பும் தென்னிந்தியத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளைத் திருப்பி அனுப்பி வைக்கும் நடவடிக்கையை கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வாரியம் மேற்கொண்டு வந்த போதிலும், 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியாவிற்கு திரும்ப எண்ணம் கொண்ட தென்னிந்தியத் தொழிலாளர்களின் விண்ணப்பங்கள் எதனையுமே வாரியம் பெறவில்லை. எனினும் கடந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து 1991 ஆம் ஆண்டு வரை 27 ஆயிரத்து 399 தென்னிந்தியத் தொழிலாளர்களையும் அவர்களது பிள்ளைகளையும் வாரியம் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பி வைத்திருக்கிறது.*

## 2020க்குள்

*மலேசியாவிலுள்ள பதினான்கு லட்சம் இந்தியர்களில் 80 சதவீதத்தினர் தமிழர்கள்.*

*மலேசியாவில் 542 தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் பல வார மாத சஞ்சிகைகளும் நாளேடுகளும் தமிழ்மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன.*

*கடந்த இருநூறு ஆண்டுகளில் அண்மையில் கடந்து சென்ற இந்த இருபது ஆண்டுகளில்தான் இந்தியர்களில் பலர் தொழில் துறைகளில் அதிக நாட்டம் செலுத்தி வருகின்றனர்.*

*எதிர்கால இந்திய சமுதாயம் மலேசியாவில் தலைநிமிர்ந்து நிற்கும் அறிகுறி தென்படுகிறது.*

*2020க்குள் நமது லட்சியக் கனவுகள் நிறைவேறட்டும்.*

*எதிர்காலம் மேலும் ஒளிமயமானதாக மலேசிய இந்தியர்களுக்கு அமையுமா?*

✷ ✷ ✷

# மூன்றாம் பாகம்

- ஐ.என்.ஏ. தலைவர் நேதாஜி – ஜான்திவி
- அஞ்சா நெஞ்சர் நேதாஜி
- இரண்டாவது உலகப்போர்
- மலாயா சிங்கப்பூரில் ஜப்பானியரின் ஆட்சி
- இந்திய தேசிய ராணுவம் (ஐ.என்.ஏ.)
  - அ) தென்கிழக்காசியாவில் அமைந்த இந்திய சுதந்திர இயக்கம்
  - ஆ) மலாயா சிங்கப்பூர் இந்தியர்களைக் கொண்ட ராணுவப்படையும் யுத்த பிரகடனமும்
  - இ) மலாயா சிங்கப்பூர் இந்தியப் பெண்களைக் கொண்ட 'ஜான்ஸிராணி' படை
  - ஈ) 'ஜான்ஸிராணி' படையின் தளபதி டாக்டர் லட்சுமி.
  - உ) ஐ.என்.ஏ. ஆட்சி புரிந்த அந்தமான் – நிக்கோபார் தீவுகள்.
- நேதாஜியின் இறுதி நாட்கள்
- மரண ரயில்வே

ம.இ.கா. 1946 ஆம் ஆண்டின் மத்தியில் தொடங்கப்பட்டது. அதற்கான தொடக்கப்பணிகள் ஆண்டுத தொடக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இரண்டாவது உலகப் போர் முடிவடைந்து நாடு பழைய வழக்க நிலைமைக்குப் படிப்படியாகத் திரும்பிக் கொண்டிருந்த நேரம் அது.

நேதாஜியின் வருகையும் இந்திய தேசிய ராணுவ அமைப்பும் சுதந்திர வீரப் போராட்டங்களும் இங்குள்ள மலாயா இந்தியர்களுக்குப் புத்துணர்ச்சியை ஊட்டியிருந்தது.

இந்திய தேசிய ராணுவத்தில் ஈடுபட்டிருந்த பெரும்பாலான வீரர்கள் - தொண்டர்கள் ம.இ.காவை அமைத்திடும் முயற்சியில் உற்சாகத்துடன் ஈடுபட்டனர்.

வீர உணர்ச்சியை ஊட்டிய - நாட்டுப்பற்றைத் தூண்டிவிட்ட - இலட்சிய வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படுத்திய மாவீரன் நேதாஜியைப் பற்றியும் அவர் தலைமையில் இயங்கிய இந்திய தேசிய ராணுவத்தைப் பற்றியும் சிறிது விளக்கமாகத் தெரிந்து கொள்வோமா?

# சுதந்திரப் போராட்ட வீரர்
# அஞ்சா நெஞ்சர் நேதாஜி

இந்திய துணைக் கண்டத்தின் வரலாற்றில் மட்டுமின்றி மலேசிய சிங்கப்பூர் இந்தியர்களின் வரலாற்றிலும் நேதாஜிக்குச் சிறப்பான ஓர் இடம் உண்டு.





நேதாஜி

சில ஆண்டுகள் மட்டுமே இங்குள்ள இந்தியர்களோடு இணைந்திருந்தாலும் அந்தக் குறுகிய காலத்தில் நேதாஜி ஊட்டிவிட்ட சுதந்திர உணர்ச்சி... வீர உணர்ச்சி நீண்டகாலம் வரை வற்றிவிடாமல் இருந்திருக்கிறது.

மலாயா சிங்கப்பூரில் நேதாஜியின் தலைமையில் இயங்கிய இந்திய தேசிய ராணுவம் (ஐ.என்.ஏ). வரலாறு படைத்திருக்கிறது.

சுபாஷ் சந்திரபோஸை "நேதாஜி" என்றே அழைக்கவேண்டுமென மலாயா சிங்கப்பூரில் இயங்கி வந்த இந்திய சுதந்திரக் கழகம் முடிவெடுத்து அறிவித்தும் இருந்தது. கழகத்தின் தலைமைப் பொறுப்பேற்க 1943 ஆம் ஆண்டு ஜூலை 2 இல் சிங்கப்பூருக்கு வருகை புரிந்த சந்திரபோஸை "நேதாஜி" என்று அன்போடு அழைத்து வீர வரவேற்பு நல்கினர் தொண்டர்கள். அந்த நேதாஜி (தலைவர்) என்ற பெயரே பின்னர் உலகப் புகழ்பெற்றது.

சந்திரபோஸ் 1943 ஜூலை 5 ஆம் தேதி முதல், தான் அதுவரை அணிந்து வந்த வழக்கமான உடைகளை (சிவிலியன் உடைகளை) உதறிவிட்டு ராணுவ உடைகளை அணிந்து கொண்டார். மறைந்த நாளில்கூட நேதாஜி ராணுவ உடையிலேயே இருந்தார்.

## வங்கம் தந்த சிங்கம்

1897 ஆம் ஆண்டில் ஜனவரி 23 ஆம் தேதியன்று இந்தியாவின் வங்காள மாநிலத்தைச் சேர்ந்த ஒரிஸாவின் மாவட்டத் தலைநகரான கட்டாக்கில் 'நேதாஜி' சுபாஷ் சந்திரபோஸ் பிறந்தார்.

ஜானகிநாத் – பிரபாவதி தம்பதியருக்கு 9 ஆவது குழந்தையாகப் பிறந்தார். சுபாஷ் சந்திர போஸுடன் பிறந்த சகோதர சகோதரிகள் 13 பேர்.

தந்தை ஜானகிநாத் புகழ்பெற்ற வழக்குரைஞராகத் திகழ்ந்தார். தன் பிள்ளைகளின் படிப்பிலும் முன்னேற்றத்திலும் அக்கறை காட்டினார்.

இளைஞரான சுபாஷ் சந்திரபோஸ் படிப்பில் கவனம் செலுத்தியதோடு நாட்டு நடப்புகளிலும் தன் பார்வையைச் செலுத்தினார். பிரிட்டிஷாரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த தன் தாய் நாடான இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைக்காதா என ஏக்கத்தோடு எண்ணலானார். நாட்டுச் சுதந் திரத்தைப் பற்றியும் பிரிட்டிஷாரின் ஆக்ரமிப்பைப் பற்றியும் நண்பர்களிடம் உருக்கத்தோடும் உணர்ச்சியோடும் உரையாடுவார். சுதந்திர தாகம் இளம் வயதிலேயே அவருக்கு ஏற்பட் டிருந்தது.

கல்கத்தாவில் கல்லூரிப் படிப்பை முடித்து சுபாஷ் சந்திரபோஸ் மேல் படிப்புக்காக இங்கிலாந்து சென்றார்.

அங்குள்ள கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து உயர் கல்வி கற்றார்.

1920 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஐ.சி.எஸ். தேர்வில் வெற்றி பெற்றார். மாநில கலெக்டர் பதவிக்கு உரிய பட்டப்படிப்பு அது.

ஆனால் அவரோ, இந்திய விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தோடு இருந்தார்.



தென்னாப்பிரிக்காவில் சத்தியாகிரகம் நடத்த காந்தி புறப்படுகிறார்.



மகாத்மா காந்தியோடு ஜவகர்வால் நேரு

1921 ஆம் ஆண்டு ஜூலை 16 இல் லண்டனிலிருந்து திரும்பினார்.

பம்பாய் துறைமுகத்தில் வந்து இறங்கிய 24 வயது இளைஞரான சுபாஷ் சந்திரபோஸ் தன் வீட்டிற்குக்கூடச் செல்லாமல் நேராக மகாத்மா காந்தியைச் சந்திக்கச் சென்றார்.

இளைஞர் சுபாஷ் சந்திரபோஸின் மன உணர்வுகளை அறிந்து அதிகம் மகிழ்ந்தார் மகாத்மா காந்தி. அவருக்கு ஆசி கூறினார். வங்கத்தின் தனிப்பெரும் தலைவர் சி.ஆர். தாஸை சந்திக்கும் படி ஆலோசனையும் கூறினார்.

1921–22 ஆம் ஆண்டுகளில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்தவர் சி.ஆர்.தாஸ்.

இல்லம் திரும்பிய சுபாஷ் சந்திரபோஸின் நடவடிக்கைகளுக்கு குடும்பத்தினர் முழு ஆதரவு நல்கினர்.

வங்காளத்திலுள்ள சி.ஆர்.தாஸை நேரில் சந்தித்தார். மகாத்மா காந்தியின் ஆசியைப் பெற்று சந்திக்க வந்திருப்பதாகவும் தெரிவித்தார் சுபாஷ் சந்திரபோஸ்.

போராட்ட வீரர் இளம் போராட்ட வீரரை அணைத்துக் கொண்டார். ஐ.சி.எஸ். பதவியை உதறிவிட்டு நாட்டுக்குப் பணிபுரிய முன்வந்துள்ள அந்தத் தன்னலமற்ற இளம் சிங்கத்தை ஆர்வம் ததும்ப நோக்கினார்.

*1921 ஆம் ஆண்டில் கல்கத்தாவுக்கு வருகை தந்த வேல்ஸ் இளவரசர் புறக்கணிப்புப் போராட்டத்தில் சுபாஷ் சந்திரபோஸ் முன்னணி வகித்தார்.*

*பிரிட்டிஷாருக்கு எதிரான நடவடிக்கைகளில் தொடர்ந்து, சுபாஷ் சந்திர் போஸ் ஈடுபட்டு வந்தார்.*

*சி.ஆர்.தாஸும் சுபாஷ் சந்திர போஸும் கைது செயயப்பட்டனர்.*

*இருவரும் சிறைச்சாலையில் ஒன்றாக இருந்தபோது சி.ஆர்.தாஸுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்தார் சுபாஷ்.*

*அரசியல் நாட்டு நடப்பு குறித்து இருவரும் நீண்ட நேரம் விவாதிப்பர். சி.ஆர்.தாஸின் பழுத்த அரசியல் அனுபவம் சுபாஷ் சந்திர போஸுக்குப் பயன்பட்டது.*

*1924 ஆம் ஆண்டில் சி.ஆர். தாஸ் கல்கத்தா நகரசபை மேயரானார். சுபாஷ் சந்திரபோஸ் நிர்வாகச் செயலாளராக நியமிக்கப்பட்டார். சிறப்பாகப் பணிபுரிந்து தலைவரின் பாராட்டையும் பெற்றார்.*

*சி.ஆர்.தாஸினால் துவக்கப்பட்ட "டேய்லி போர்வர்ட்"* (Daily forward) *தினசரி பத்திரிகைக்கு சுபாஷ் நிர்வாகியாகப் பணியாற்றினார். அந்தத் தினசரி தேசியக் குரலாக விளங்கியது.*

*மாண்டலே ஜெயிலில் சுபாஷ் சந்திர போஸ் இருந்தபோது சி.ஆர்.தாஸ் மரணச் செய்தி கிடைத்தது. சி.ஆர்.தாஸின் மரணம் தனக்குக் கிடைத்த பலத்த அடி என்றே நேதாஜி கருதினார். அஞ்சா நெஞ்சம் படைத்த அந்த இளம் சிங்கத்தின் கண்களின் ஓரத்தில் ஈரக்கசிவு!*

*சி.ஆர்.தாஸ் தன் தலைவர் என்று நேதாஜி அடிக்கடி குறிப்பிடுவார். அப்போது தலைவர் இல்லாத நிலையை அடைந்திருந்தார் நேதாஜி.*

*நேதாஜியின் போராட்டங்கள் தொடர்ந்தன.*

*வீறுகொண்ட சிங்கமாகச் சிலிர்த்தெழுந்தார் நேதாஜி.*

*1928 ஆம் ஆண்டில் (பின்னர் இந்தியாவின் முதல் பிரதமராகத் தேர்வுபெற்று பதவி வகித்த) நேருவின் தந்தை மோதிலால் நேரு தலைமையில் கல்கத்தாவில் அகில இந்திய காங்கிரஸ் மாநாடு கூடியிருந்தது.*

*அகில இந்திய காங்கிரஸ் தலைவராக சி.ஆர்.தாஸ் 1921–22 ஆம் ஆண்டுகளில் பொறுப்பு வகித்த பின்னர் 1925 இல் சரோஜினி நாயுடுவும் 1926 இல் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரும் தொடர்ந்து 1928 இல் மோதிலால் நேருவும் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தனர்.*

*அந்த மாநாட்டில் சுபாஷ் சந்திரபோஸ் தொண்டர் படைத் தலைவராகத் தேர்வு பெற்றார்.*

*ராணுவ தளபதி போல உடை அணிந்து அந்த மாநாட்டில் காட்சி தந்தார் நேதாஜி.*

*இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ் அரசு நேதாஜியின் நடவடிக்கைகளைக் கூர்ந்து நோக்கி வந்தது.*

*அடிக்கடி நேதாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.*

*நேதாஜியின் உடல் நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது.*

*சுதந்திரப் போராட்ட வீரனுக்கு அடுத்தடுத்து பல தொல்லைகள்! மிரட்டல்கள்!*

*1933 ஆம் ஆண்டு பிப்ரவரி 23 இல் சிகிச்சைக்காக நேதாஜி சியன்னா நாட்டிற்குச் சென்றார்.*

*சிகிச்சை முடிந்து திரும்பியவுடன் பம்பாய் துறைமுகத்தில் கைது செய்யப்பட்டு 1937 ஆம் ஆண்டு மார்ச் 17 இல் விடுதலை செய்யப்பட்டார்.*

## காங்கிரஸ் தலைவர்

*குஜராத்திலுள்ள ஹரிபுரா என்ற ஊரில் 1938 ஆம் ஆண்டில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் மகாத்மா காந்தியின் முயற்சியாலும் ஆசியாலும் காங்கிரஸ் தலைவராக நேதாஜி தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது அவருக்கு 41 வயதுதான்.*



**லண்டனில் ஐ.சி.எஸ். பட்டப்படிப்பு படிக்கச்சென்றபோது**

**சுபாஷ் சந்திரபோஸ்.**

"நாம் நடத்தும் போராட்டத்திற்கு சர்வ தேச நிலைமைகள் சாதகமாக இருந்தால் அதை நாம் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொள்ள தயங்க மாட்டோம்" என்று கட்சியின் தலைவராகத் தேர்வுபெற்று உரையாற்றும்போது நேதாஜி குறிப்பிட்டிருந்தார்.

நேதாஜியின் அந்த உரை அவரின் எண்ண ஓட்டத்தைத் தெளிவாகக் காட்டியது.

பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவை மீட்க வன்முறையை நாடவும் தயங்கக்கூடாது என்கிற நேதாஜியின் கருத்துக்கு மகாத்மா காந்தி போன்றவர்கள் உடன்படவில்லை.

பிரிட்டிஷாருக்கு எதிரான போராட்ட உணர்வு மேலோங்கி இருந்த நேரம் அது.

"சுதந்திரம் எனது பிறப்புரிமை..." என முழக்கமிட்டார் திலகர்.

"வந்தே மாதரம்..." என்கிற உணர்ச்சி ஊட்டும் மந்திரச் சொல்லைப் பயன்படுத்தினார் பங்கிம் சந்திர சாட்டர்ஜி.





கோபால கிருஷ்ண கோகலே

பாலகங்காதர திலகர்

1915 இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து மகாத்மா காந்தி இந்தியாவுக்குத் திரும்பியிருந்தார்.

தேசபக்திக் கனல் கொழுந்துவிட்டெரிந்தது.

"வந்தே மாதரம்..." என்ற சொல்லுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் தடைவிதித்தது.

கோபால கிருஷ்ண கோகலே, பாலகங்காதர திலகர், அரவிந்த் கோஷ், லாலா லஜபதிராய், சுரேந்திரநாத் பானர்ஜி, மதன்மோகன் மாளவியா போன்றோர் தொடக்கத்தில் விடுதலைப் போராட்டத்தில் குதித்த தியாகிகள்.

மகாத்மா காந்தியின் இந்திய வருகைக்குப் பின்னர் (1915) மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு, சி.ஆர்.தாஸ், வல்லபாய் பட்டேல், ராஜாஜி, சீனிவாச அய்யங்கார், சுபாஷ் சந்திரபோஸ் போன்றோர் விடுதலைப் போராட்டத்தில் அதிக தீவிரம் காட்டிய இந்தியத் தலைவர்கள் ஆவர்.

அவர்களின் நடவடிக்கைகள் உலகின் மற்ற பகுதிகளில் உள்ள இந்தியர்களுக்கு உத்வேகத்தைத் தந்து கொண்டிருந்தது.

அப்படிப்பட்ட போராட்ட சூழ்நிலையில்தான் சுதந்திரப் போராட்ட வீரர் சுபாஷ் சந்திரபோஸ் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்.

இளைஞர்களின் ஆதரவு நேதாஜிக்குப் பெரும் அளவில் இருந்தது.

அகில இந்திய காங்கிரஸ் சபைக்கு நேதாஜி போன்ற அதிதீவிரவாத கொள்கைகள் கொண்ட தலைவர் இருந்தால் பிரச்னைகள் பெருகும் என மகாத்மா காந்தி கருதினார்.

மறு ஆண்டான 1939 இல் மத்திய பிரதேசத்தில் உள்ள திரிபுராவில் கூடிய இந்திய காங்கிரஸ் மாநாட்டில் மௌலானா ஆசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என மகாத்மா காந்தி விரும்பினார்.

ஹரிபுரா மாநாட்டுக்குப் பின் இளைஞர்கள் மத்தியிலும் முற்போக்குக் கொள்கைகள் கொண்டவர்கள் இடையேயும் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தார் நேதாஜி. நடப்புத் தலைவரான அவரே மீண்டும் தலைவர் பதவிக்குப் போட்டியிட வேண்டும் என அவரின் தீவிர

ஆதரவாளர்கள் விரும்பினர்.

நேதாஜியும் தலைவர் பதவிக்கு மீண்டும் போட்டியிடுவதில் உறுதியாக இருந்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மீண்டும் தலைவர் பதவிக்குப் போட்டியிடவிருக்கும் தகவல் தெரிந்தவுடன் மௌலானா ஆசாத் போட்டியிட விரும்பவில்லை.

சுபாஷ் சந்திரபோஸுக்கு எதிராக பட்டாபி சீதாராமையாவை தலைவர் பதவிக்கு காந்திஜி நிறுத்தினார்.

தலைவர் பதவிக்கு அதிக வாக்குகள் பெற்று மீண்டும் நேதாஜியே வென்றார்.

"பட்டாபி சீதாராமையாவின் தோல்வி என்னுடைய தோல்வி" என்று காந்தி அப்போது குறிப்பிட்டது பலருக்கும் அதிர்ச்சியையும் மனவேதனையையும் தந்தது.

தேசப்பிதா மகாத்மா காந்தி வெளியிட்ட அந்த அறிக்கையை நேதாஜி சற்றும் எதிர்பார்க்க வில்லை. தன்னலம் கருதாது நாட்டு விடுதலைக்காக இரவு பகலாகப் போராடி வரும் தன்னைப் பற்றி முழுமையாக அறிந்திருந்தும் தெரிந்திருந்தும் இப்படிப்பட்ட அறிவிப்பை வெளியிட்டு விட்டாரே என மனமுடைந்து போனார் நேதாஜி.

காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்து நேதாஜி விலகினார்.

அந்த 1939 ஆம் ஆண்டு...

இரண்டாவது உலகப் போர் தொடங்கிய நேரம்.

நேதாஜியின் இளரத்தம் சூடேறியது. அமைதியான வழியில் இந்தியாவுக்குச் சுதந்திரம் பெற்றுத்தர முடியாது என உணர்ந்தார்.

காங்கிரஸ் மேல்மட்டத் தொடர்புகளை அறுத்துக் கொண்டு "பார்வார்ட் பிளாக்" அணியை அமைத்தார் நேதாஜி.

போராடத் தயாராக உள்ளவர்களுக்காக அமைக்கப்பட்ட தளம் "பார்வார்ட் பிளாக்".

அவரது அணியிலேயே அவருக்கு எதிராக சிலர் செயல்பட்டதை உணர்ந்தார். அந்த எதிர்ப்புகள் அவருக்கு உரமூட்டின.

1940 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் சுபாஷ் சந்திரபோஸ் நாகபுரிக்கு வருகை மேற்கொண்டபோது அருகில் உள்ள வார்தாவுக்குச் சென்று மகாத்மா காந்தியைச் சந்தித்தார். அந்தச் சந்திப்புக்குச் சில மாதங்களுக்கு முன்னர்தான் மகாத்மா காந்திக்கும் சுபாஷ் சந்திர போஸுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. அதனாலேயே, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவியையும் துறந்திருந்தார் நேதாஜி. ஆனாலும், மகாத்மா காந்தி மீது தனிப்பட்ட மரியாதையும் அன்பும் வைத்திருந்தார் நேதாஜி.

சில மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் நேதாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டார்.

தன் திட்டங்களுக்குச் சிறைவாசம் தடையாக இருந்ததை உணர்ந்தார் நேதாஜி.

சிறையில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார் நேதாஜி. பின்னர், நேதாஜி விடுதலை செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

1942 ஆம் ஆண்டு ஜனவரியில் சுபாஷ் சந்திரபோஸ் வீட்டுக்காவலில் இருந்து தப்பிவிட்டார் என்ற செய்தி நாடு முழுவதும் பரவியது.

கல்கத்தாவில் வீட்டுக்காவலில் இருந்து தப்பிய சுபாஷ் சந்திர போஸ் மாறு வேடத்தில் கைபர் கணவாய் வழியாக ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூல் நகரை அடைந்தார். அவர் மாறுவேடமிட்டபோது "ஜியாவுதீன்" என்கிற பெயரோடு போலி பாஸ்போர்ட்டோடு தப்பிச் சென்றார். வழியில் "சிக்னார் ஆர்லாண்டோ மஸோட்டா" என்று பெயரை மாற்றிக் கொண்டார். இத்தாலிய கடப்பிதழும் (பாஸ்போர்ட்) சுபாஷ் சந்திர போஸிடம் இருந்தது.

ஆப்கானிஸ்தானிலுள்ள அப்வெஹ்ர்" ஏஜண்டான ஒரு ஜெர்மனிய இன்ஜினியரின் துணை யோடு ஆப்கன் - ரஷ்ய எல்லையைக் கடந்து மாஸ்கோ நகர் சென்றடைந்தார்.

(யுத்த காலத்தின்போது இயங்கி வந்த ஜெர்மன் ராணுவ ஒற்றர் குழுவுக்கு "அப்வெஹ்ர்" எனும் பெயர் சூட்டப்பட்டிருந்ததாக ஒரு தகவல் குறிப்பிடுகிறது. அப் வெஹ்ர்குழுவைச் சேர்ந்தவர்கள் பல நாடுகளிலும் இருந்து கொண்டு ரகசிய நடவடிக்கைகளில் அப்போது ஈடுபட்டு வந்தனராம்).

பின்னர், மாஸ்கோவிலிருந்து ஹிட்லர் அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று 1942 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஜெர்மன் தலைநகரான பெர்லின் நகருக்குச் சென்றார் நேதாஜி. ஜெர்மானியப் பிரதமர் ஹிட்லரைச் சந்தித்து ஆதரவைப் பெற்றார்.

ஜெர்மனில் நேதாஜிக்கு முழு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஜெர்மனிக்கு வந்த பின்னர், ஜெர்மனியின் நாஸி ராணுவப்படை ஏற்கனவே கைது செய்திருந்த இந்தியப் போர் வீரர்களைக் கொண்டு இந்திய ராணுவப் படை அமைக்கப்பட்டது.

யுத்த காலத்தின்போது ஜெர்மனிடம் சரணடைந்த பிரிட்டிஷ் இந்திய துருப்புகளை தனி ராணுவமாக அமைத்து அவர்களுக்கு விசேஷ ராணுவப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டது.

அந்தச் சிறப்பு இந்தியப் படைக்கு ஜெர்மன் ராணுவ உடையும், கைகளில் அணிய இந்திய காங்கிரஸின் மூவர்ண சின்னமடங்கிய பட்டயமும் வழங்கப் பெற்றிருந்தது. அப்போது அப் படையில் 3,500 வீரர்கள் இருந்தனர்.

பெருமளவில் இந்தியப் படையைத் திரட்டி இந்தியாவை நோக்கிப் படை எடுத்து பிரிட்டிஷாரிடமிருந்து பாரதத்தை மீட்க வேண்டும் என்கிற நினைவிலேயே இருந்தார் நேதாஜி.

இரண்டாவது உலகப் போர் நடந்து கொண்டிருந்த காலகட்டம் அது.

# உலகை உலுக்கிய இரண்டாவது உலகப் போர்

முதல் உலகப் போர் 1914 முதல் 1918 ஆம் ஆண்டு வரையில் ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்து உலகைக் கலக்கியது.

ஜெர்மன், ஆஸ்திரியா, துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் ஓர் அணியாகவும், இங்கிலாந்து, ரஷ்யா, இத்தாலி ஆகிய நாடுகள் மற்றொரு அணியாகவும் அந்தப் போரில் ஈடுபட்டன. ஜெர்மன், ஆஸ்திரியா, துருக்கி அணி போரில் தோல்வி அடைந்தது.

முதல் உலகப்போர் நடைபெற்று முடிந்து சரியாக இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் இரண்டாவது உலகப் போர் மிகப் பெரிய அளவில் 1939 ஆம் ஆண்டு முதல் 1945 வரையில் நிகழ்ந்து உலகை உலுக்கிவிட்டது.

1937 ஆம் ஆண்டு ஜூலையில் ஜப்பான் சீனாவைத் தாக்கியபோது ஆசியாவில் போர் மூண்டது.

1939 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஜெர்மன் போலந்து மீது படையெடுத்தபோது ஐரோப்பாவில் சண்டை மூண்டது.

பின்னர் உலகப் போராக உருவெடுத்தது.

1940-41 ஆம் ஆண்டுகளில் பிரிட்டன் தன் நிலைகளைத் தற்காத்துக் கொள்ள போரிட்டது.

1941 ஜூன் மாதத்தில் ஜெர்மனிய பிரதமர் ஹிட்லர் ரஷ்யாமீது படை எடுத்தார். ஐரோப்பாவின் பல நாடுகளைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தது ஜெர்மன்.

ஜெர்மன், ஆஸ்திரியா, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் அப்போரில் ஓர் உடன்படிக்கைக் கண்டிருந்தன.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகள் ஓர் அணியாக அப்போது திகழ்ந்தன.

ஆசியாவில் ஜப்பான் படுவேகமாகப் போரில் முன்னேறிக் கொண்டிருந்தது.

ஏற்கனவே ஜப்பான் 1931 இல் மஞ்சூரியாவை (MANCHURIA) கைப்பற்றியிருந்தது.

1937 இல் சீனாவின் பீக்கிங் (PEKING), நான்கிங் (NANKING), ஷங்காய் (SHANGHAI) ஆகிய நகர்களைப் பிடித்துக் கொண்டது ஜப்பான்.

1938 இல் சீனாவின் காண்டன் (CANTON), ஹன்காவ் (HANKOW) ஆகியவற்றை தன்வசம் எடுத்துக் கொண்டது ஜப்பான்.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் அப்போது சீனாவுக்கு ஆதரவு கொடுத்தன.

1941 மார்ச்சில் இந்தோ சீனாவைப் பிரான்சிடமிருந்து ஜப்பான் வளைத்துப் பிடித்தது.

(லாவோஸ் - கம்பூச்சியா - வியட்நாம் ஆகிய நாடுகளைக் கொண்டது இந்தோ சீனா)

பின்னர் பர்மா, ஹாங்காங், பிலிப்பைன்ஸ் ஆகியவை ஜப்பானியர் வசமாகின.

சயாமில் (தாய்லாந்து) மற்ற மேலை நாடுகளின் ஊடுருவல் இல்லாததால் அந்த நாட்டை ஜப்பான் பிடிக்கவில்லை. 1940 இல் ஜூனில் தாய்லாந்தோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது ஜப்பான்.

"ஆசிய நாடுகள் ஆசியருக்கே" என்ற கோஷத்தை அப்போது ஜப்பான் எழுப்பிக் கொண்டிருந்தது.

ஜப்பானின் ஊடுருவலைக் கண்டு அமெரிக்கா ஜப்பானை எச்சரித்தது. ஜப்பானுக்கு எண்ணெய் ஏற்றுமதி செய்வதை அமெரிக்கா நிறுத்திவிட்டது.

கோபம் கொண்ட ஜப்பான் அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய் தீவின் பெர்ல் (PEARL) துறைமுகத்தில் 1941 டிசம்பர் 7 இல் காலை 7.55க்கு குண்டு போட்டது.

அமெரிக்கக் கடற்படைத் தளத்தைக் கொண்ட பெர்ல் ஹார்பரில் ஜப்பான் நிகழ்த்திய தாக்குதலில் 2330 அமெரிக்கர் இறந்தனர். 1347 அமெரிக்கர் காயமடைந்தனர். எட்டு போர்க்கப்பல்கள் அழிந்தன. வேறு பத்து கலங்களும் மூழ்கின. அமெரிக்காவின் 188 விமானங்கள் அதில் அழிக்கப்பட்டன. அமெரிக்காவின் பசிபிக் கடற்படைக்குப் பலத்த சேதம். அமெரிக்காவை பசிபிக் வட்டாரத்தில் இரண்டாம் உலகப் போருக்கு இந்த பெர்ல் ஹார்பர் (PEARL HARBOUR) தாக்குதல் இழுத்து விட்டது.



● ஜப்பான் அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய் தீவின் பெர்ல் (PEARL) துறைமுகத்தில் 1941 டிசம்பர் 7 இல் காலை 7.55க்கு குண்டு போட்டது.

மறுநாள் 1941 டிசம்பர் 8 ஆம் தேதியன்று அதிகாலை 4 மணிக்குச் சிங்கப்பூரிலும் அதே நேரத்தில் மலாயாவின் வட பகுதியில் உள்ள கிளாந்தானிலும் குண்டுகளைப் போட்டது ஜப்பான்.

தென் தாய்லாந்தில் ஷோங்கிலா, பட்டாணி ஆகிய இடங்களிலும் வட மலாயாவின் கோத்தாபாருவிலும் 1941 டிசம்பர் 8 ஆம் தேதியன்றே ஜப்பானியப் படை தரை இறங்கியது. அன்று மாலையில் கோத்தாபாரு விமான தளம் ஜப்பானியர் வசமாகியது.

மலாயாவை நோக்கி வந்து கொண்டிருந்த பிரிட்டனின் இரு பெரிய நவீன போர்க்கப்பல்கள் குவாந்தனுக்கு அருகில் தென் சீனக் கடலில் ஜப்பானியப் போர் வீரர்களால் 1941 டிசம்பர் 10 இல் மூழ்கடிக்கப்பட்டன. பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ரிப்பள்ஸ் என்னும் அந்த இரு போர்க்கப்பல்களில் இருந்த பிரிட்டிஷ் போர் வீரர்களில் 840 பேர் அங்கேயே உயிரிழந்தனர். அந்தக் கப்பல்களின் அழிவு மலாயா சிங்கப்பூரில் போரில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் படையினருக்கு அப்போது பெரும் கலக்கத்தைத் தந்திருந்தது.

1941 டிசம்பர் 8 இல் கோத்தாபாருவில் தரையிறங்கிய ஜப்பானியரின் 18 வயது பிரிவு கலகப்படை குவாந்தானை 1941 டிசம்பர் 30 ஆம் தேதியிலும் சிகாமட்டை 1942 ஜனவரி 21 ஆம் தேதியிலும் பிடித்த பின்னர் ஜோகூர் பாருவை நோக்கி விரைந்தது.

வட மலாயாவின் அலோர் ஸ்டார் நகரில் 1941 டிசம்பர் 13 இல் தரையிறங்கிய ஜப்பானியரின் 5 ஆவது படைப் பிரிவு பினாங்கை 1941 டிசம்பர் 17 இல் தன் வசமாக்கிக் கொண்டு ஈப்போவை 1941 டிசம்பர் 27 இல் கைப்பற்றியது. பின்னர் நேராக அப்படை சிலிம் ரிவரில் பிரிட்டிஷ் படையுடன் மோதியது. பிரிட்டிஷ் படை பெரும் அளவில் பாதிப்படைந்தது. சிலிம் ரிவரைக் கடந்து 1942 ஜனவரி 11 இல் கோலாலம்பூரைக் கைப்பற்றினர் ஜப்பானியர். மத்திய ஜோகூரிலுள்ள ஆயர் ஈத்தாம் குளுவாங் ஆகிய இடங்கள் 1942 ஜனவரி 25 இல் ஜப்பானியர் வசமாகியது.

மூழ்கடிக்கப்பட்ட பிரிட்டிஷ் போர்க்கப்பல்கள்



ரிப்பள்ஸ்



போர்க்கப்பல்கள்

பிரின்ஸ் ஆப் வேல்ஸ்

1942 ஜனவரி 31 இல் ஜோகூர் பாருவை அடைந்த ஜப்பானியப் படை வீரர்கள் 1942 பிப்ரவரி 9 இல் சிங்கப்பூரை நோக்கி முன்னேறினர்.

1942 பிப்ரவரி 15 இல் சிங்கப்பூரிலும் மலாயாவிலும் சண்டை ஓய்ந்தது.

மலாயாவில் இருந்த பிரிட்டிஷ் படைத்தளபதி லெப். ஜெனரல் ஏ.இ. பெர்சிவால் ஜப்பானியரிடம் சரணடையும் ஒப்பந்தத்தில் 1942 பிப்ரவரி 15 ஆம் தேதி மாலை 6.10க்கு கையெழுத்திட்டார்.

ஜப்பானியப் படைத்தளபதி லெப்.ஜெனரல் டோமோயுகி யமாஷிடா சிங்கப்பூரில் ஜப்பானியக் கொடியை ஏற்றினார்.



சைககிளில் செல்லும் ஜப்பானியர் போர்ப்படை

மலாயா சிங்கப்பூரில் பிரிட்டிஷார் சரணடைந்தபோது 80 ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரிட்டிஷ் படை வீரர்கள் இருந்தனர். அவர்களிடம் 150 போர் விமானங்கள் மட்டுமே இருந்தன. ஆனால் அப்போது மலாயா சிங்கப்பூரில் 67 ஆயிரம் ஜப்பானியப் படை வீரர்களே அந்தப் போர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். ஜப்பானியப் படை வீரர்களுக்குத் துணையாக 560 போர் விமானங்களும் 150 டாங்கிகளும் இயங்கின.

பத்தே வாரங்களில் மலாயாவும் சிங்கப்பூரும் ஜப்பானியர் வசமாகியது.

(1942 பிப்ரவரி 15 இல் சிங்கப்பூர் ஜப்பானிடம் வீழ்ச்சி அடைந்தபோது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் 40 ஆயிரம் பிரிட்டிஷ் இந்திய போர்க் கைதிகளை கர்னல் ஃபூஜிவாராவிடம் ஒப்படைத்தனர்).

1942 பிப்ரவரி 15க்குப் பின்னர் சிங்கப்பூரும் மலாயாவும் ஜப்பானியரின் கட்டுப்பாட்டுக்கு வந்தன. சபா, சரவாக்கும் ஜப்பானியரின் வசமாகியது.

ஜப்பானியரின் ஆட்சியும் இந்தப் பிராந்தியத்தில் தொடங்கியது.

சிங்கப்பூருக்கு "ஷோனோன்" என்ற பெயரைச் சூட்டினர். "ஷோனோன்" என்றால் "தெற்கின் ஒளி" என்பது அதன் பொருளாகும்.

டோக்கியோவின் நேரத்துக்கு ஏற்ற வகையில் சிங்கப்பூர் மலாயாவின் கடிகார முட்கள் ஒன்றரை மணி நேரத்துக்கு முன்கூட்டி வைக்கப்பட்டது.


சிங்கப்பூரில் பிரிட்டிஷார் சரணடைந்தபோது

## தாய்லாந்துக்கு நான்கு மாநிலங்கள்

மலாயாவின் வட பகுதியைச் சேர்ந்த கிளந்தான், திரங்கானு, கேடா, பெர்லிஸ் ஆகிய நான்கு மாநிலங்களை ஜப்பான் 1943 இல் தாய்லாந்துக்குத் தந்துவிட்டது.

(மலாயா சிங்கப்பூரில் பாடப்பட்டு வந்த தேசிய கீதமான "காட் சேவ் தி கிங்" (GOD SAVE THE KING) அகற்றப்பட்டு ஜப்பானிய தேசிய கீதமான "கமிகாயோ..." (KAMIGAYO) புகுத்தப்பட்டது. பள்ளிக்கூடங்களில் "நிப்பன் – கோ" மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டது.

மரியாதையாகப் பெயருக்கு முன்னால் திரு (MR) என்று அழைப்பது மாறி "சான்" என்ற சொல் பெயருக்குப் பின்னால் சேர்ந்து கொண்டது. உதாரணமாக திரு. ராமன்..., மிஸ்டர் ராமன் என்று அழைப்பதற்குப் பதிலாக "ராமன் சான்" என்றே அழைக்க வேண்டிய கட்டாயமும் ஏற்பட்டது.

"ஹலோ..." என்று தொலைபேசியில் சொல்வது மறைந்து "மோஷி... மோஷி..." என்று உச்சரிப்பது வழக்கமாக்கப்பட்டது.)

சீனாவின் சில பகுதிகளை ஜப்பான் போரின்போது ஆக்ரமித்திருந்ததால் மலாயா சிங்கப்பூரில் இருந்த சீனர்கள் ஜப்பானியர் மீது வெறுப்பைக் காட்டி வந்தனர். ஜப்பானியரும் மலாயா சிங்கப்பூரில் சீனர்களிடம் கடுமையாக நடந்து கொண்டனர்.

ஜப்பானிய ராணுவ போலீஸான "கம்பாய்தாய்" (KEMPEITAI) பொது மக்களிடம் முரட்டுத் தனமாக நடந்து கொண்டது.

1930 ஆம் ஆண்டில் மலாயாவில் துவக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியில் பெரும்பாலும் சீனர்களே உறுப்பினர்களாக இருந்தனர். அந்தக் கட்சி ஜப்பானியருக்கு எதிராக ஜப்பானிய ராணுவ எதிர்ப்பு அணியை அமைத்திருந்தது. அந்த எதிர்ப்பு அணிக்குப் பிரிட்டிஷார் ஆதரவு தந்ததோடு மலாயா சிங்கப்பூரில் இருந்த ஜப்பானியரோடு எதிர்த்துப் போராட ஆயுதங்களையும் தந்து போர்ப் பயிற்சியும் கொடுத்திருந்தது.

ஜப்பானியருக்கு எதிரான கொரில்லா பாணியிலான மற்றொரு தலைமறைவுப் படையான ஃபோர்ஸ் 136 இல் ஏராளமான சீனர்களும் சில ஐரோப்பியர்களும் ஒரு சில இந்தியர்களும் மலாய்க்காரர்களும் இடம் பெற்றிருந்தனர்.

இந்தியாவிலுள்ள பூனாவில் சிங்கார் கோட்டையில் தலைமறைவுப் படையினருக்குப் போர்ப்பயிற்சி தரப்பட்டது. பயிற்சி பெற்றவர்கள் கொழும்புக்கு (ஸ்ரீலங்கா தலைநகர்) அனுப்பப்பட்டனர். அங்குதான் ஃபோர்ஸ் 136 படை அமைக்கப்பட்டது. இரண்டு பகுதிகளாக அப்படை பிரிக்கப்பட்டது. முதல் பகுதி ஜோன் டேவிஸ் எனும் ஆங்கிலேயரின் தலைமையிலும் இரண்டாவது பகுதி ரிச்சர்ட் புரும் எனும் ஆங்கிலேயரின் பொறுப்பிலும் இயங்கியது. மலாயா காடுகளில் மறைந்து கொண்டு அந்தத் தலைமறைவுப் படையினர் போராடினர்.




● சிங்கா ஆஃப் மலாயா (SINGA OF MALAYA) என்று அப்போது வர்ணிக்கப்பட்ட குர்ச்சான் சிங் (GURCHAN SINGH) தளபதி (மேஜர் ஜெனரல்) லிம் போசெங் ஆகிய இருவரும் தலைமறைவுப் படையான ஃபோர்ஸ் 136 இல் அதி தீவிரம் காட்டிய போராட்ட வீரர்களாவர்.

● பகாங் மாநிலத்தில் 244 மலாய்க்காரர்களைக் கொண்ட ஜப்பானிய எதிர்ப்பு அணி ஒன்று அப்போதைய பகாங் சுல்தான் அபு பக்கார் ஆதரவோடு 'வாதானியா' (WATANIAH) என்ற பெயரிலும் இயங்கியது.

மலாயா சிங்கப்பூரில் ஜப்பானியருக்கு எதிரான தலைமறைவுப் போராட்டம் 1942 முதல் 1945 வரையில் தொடர்ந்து நடந்து வந்தது.



அப்போதைய பகாங் சுல்தான் அபு பக்கார் ஆதரவோடு 'வாதானியா'

# தென்கிழக்காசிய
# இந்திய தேசிய ராணுவம்

இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பானில் வசித்து வந்த இந்தியப் புரட்சி வீரர் ராஷ் பிகாரி போஸ்தான் தென்கிழக்காசியாவில் ஜப்பானியரின் ஆதரவுடன் இந்திய சுதந்திர இயக்கம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்.

1941 ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதியன்று மலாயா சிங்கப்பூரில் தொடங்கிய இரண்டாவது உலக மகாயுத்தம் இரண்டே மாதங்களில் 1942 பிப்ரவரி 15 இல் முடிவுக்கு வந்தது. பிரிட்டிஷாரிடமிருந்து ஜப்பானியர் மலாயா சிங்கப்பூரைக் கைப்பற்றியிருந்த நேரம் அது.

இந்திய சுதந்திரக் கழகத்தைத் தென்கிழக்காசியாவில் அமைக்கும் திட்டத்தில் இருந்த ராஷ் பிகாரி போஸ், இதற்கென தென்கிழக்காசிய இந்தியத் தலைவர்களைக் கொண்ட ஆலோசனைக் கூட்டம் ஒன்றை டோக்கியோவில் நடத்த ஏற்பாடும் செய்திருந்தார். அந்தக் கலந்துரையாடல் மாநாட்டை 1942 மார்ச் 28,29,30 ஆம் தேதிகளில் நடத்த முடிவெடுத்து தென்கிழக்காசியாவில் இயங்கி வந்த இந்திய சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் இந்திய சமூகத் தலைவர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார் ராஷ் பிகாரி போஸ்.

டோக்கியோவில் அந்த இந்தியர் மாநாடு நடைபெற ஜப்பானிய அரசாங்கம் ஆதரவும் தந்திருந்தது.

ஜப்பானிய ராணுவ அதிகாரி மேஜர் ஃபூஜிவாரா (MAJOR FUJIWARA) இந்திய சுதந்திர இயக்கத்துக்கு ஆதரவு திரட்டினார். பாங்காக்கில் இருந்த சில சீக்கியர்களையும் மலாயா சிங்கப்பூரைச் சேர்ந்த இந்தியத் தலைவர்களையும் இந்தியர் சங்கப் பொறுப்பாளர்களையும் சந்தித்துப் பேசினார்.

மலாயா சிங்கப்பூரில் அப்போது இயங்கி வந்த 12 இந்தியர் சங்கங்களும் 4 இந்தியர் வர்த்தக சங்கங்களும் இணைந்து மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் (C.I.A.M.) எனும் தேசிய அமைப்பை 1936 ஆம் ஆண்டில் உருவாக்கியிருந்தன. அந்த அமைப்பின் முதல் தலைவராக வழக்குரைஞரும் பெடரல் சட்டமன்றத்தின் முதல் இந்திய உறுப்பினருமான எஸ்.என். வீராசாமி பொறுப்பேற்றிருந்தார்.

இந்திய சுதந்திர இயக்கத்திற்கு மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளன அமைப்பின் ஆதரவைக் கோரியிருந்தார் ராஷ் பிகாரி போஸ்.

1939 ஆம் ஆண்டு முதல் அந்தச் சம்மேளனத்துக்குப் பினாங்கைச் சேர்ந்த வழக்குரைஞர் என்.ராகவன் தலைவராகவும் கோலாலம்பூரைச் சேர்ந்த நீலகண்ட ஐயர் பொதுச் செயலாளராகவும் பொறுப்பேற்றிருந்தனர்.

டோக்கியோவில் நடைபெறவிருந்த மாநாடு குறித்து கலந்தாலோசிக்க 1942 மார் 9,10 ஆம் தேதிகளில் சிங்கப்பூரில் ஒரு சந்திப்பு - ஆலோசனை மாநாட்டை மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனம் கூட்டியிருந்தது.

மலாயா சிங்கப்பூரில் உள்ள இந்தியர் சங்கப் பிரதிநிதிகளும் சமூகத் தலைவர்களும் அந்தச் சந்திப்பு மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஜப்பானியரின் அந்தரங்க நோக்கத்தை அறிந்து கொள்ள டோக்கியோ மாநாட்டுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்புவதென அந்த மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது.

இந்திய சுதந்திர இயக்கம் குறித்த ஆலோசனை மாநாடு திட்டமிட்டபடி 1942 மார்ச் 28,29,30 ஆம் தேதிகளில் டோக்கியோவில் ராஷ் பிகாரி போஸ் தலைமையில் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் கலந்து கொள்ள பிரதிநிதிகள் சென்ற விமானங்களில் ஒன்று விபத்துக்குள்ளாகியது. அதில் பயணம் செய்த தாய்லாந்து பேராளர் சுவாமி சத்யானந்த பூரியும் மலாயா பிரதிநிதிகளான மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளன பொதுச் செயலாளர் நீலகண்ட அய்யர் பிரிதாம் சிங், கேப்டன் அக்ரம்கான் ஆகியோர் உட்பட சில ஜப்பானிய அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

● **சுவாமி சத்யானந்த பூரி :** கல்கத்தாவைச் சேர்ந்த இவர் தாய்லாந்து கலாசாரத்தையும் மொழியையும் கற்றுக்கொள்ள 1930 இல் தாய்லாந்து சென்றவர். தாய்லாந்தில் இருந்து கொண்டே இந்திய விடுதலை லீக் இயக்கத்திற்கு ஆதரவு தந்தவர்.

டோக்கியோ மாநாட்டில் தென்கிழக்காசியாவில் இந்திய சுதந்திர இய்க்கம் உருவாக்கப்படும் நோக்கம் குறித்து விளக்கப்படுத்தப்பட்டது.

கிழக்காசிய இந்தியர்களைக் கொண்டு இயங்கும் இந்த இந்திய சுதந்திர இயக்கம், கிழக்காசிய இந்தியர்களின் நலனுக்காகவும் பிரிட்டிஷாரின் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடக்கும் இந்தியாவுக்கு முழு சுதந்திரம் கிடைக்கவும் போராடும் எனவும் மாநாட்டில் கருத்து உரைக்கப்பட்டது.

இந்திய சுதந்திர இயக்கத்தின் அமைப்புக் கூட்டத்தை 1942 ஜூன் மாதத்தில் பாங்காக்கில் நடத்துவதென முடிவும் செய்யப்பட்டது.

திட்டமிட்டபடி பாங்காக்கில் தென்கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்க அமைப்புக் கூட்டமும் இந்தியர் மாநாடும் 1942 ஆம் ஆண்டு ஜூன் 15 முதல் 23 ஆம் தேதி வரையில் சிறப்பாக நடைபெற்றது.

அந்த மாநாட்டுக்கு மலாயா, சிங்கப்பூர், தாய்லாந்து, பர்மா, ஜாவா, ஹாங்காங், மஞ்சுகோ (மஞ்சூரியா), ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 120 பிரதிநிதிகள் வருகை மேற்கொண்டனர். ஜப்பானியரிடம் சரணடைந்திருந்த (பிரிட்டிஷ்) இந்திய ராணுவ பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர். ஜப்பானியப் பிரதமர் தோஜோ மாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

11 ஆவது இந்தியப் படை பிரிவைச் சேர்ந்த காப்டன் மோகன் சிங் மற்றும் காப்டன் ஷா நவாஸ்கான், காப்டன் பி.கே.சாகல் ஆகியோரும் மலாயா யுத்த முனையில் ஜப்பானியரால் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குவர். ஜப்பானிய சிறப்பு துப்பறியும் ரகசியப் பிரிவான எஃப் கிக்கான் குழுவைச் சேர்ந்த லெப். குனிசுகாவும் பின்னர் மேஜர் ஃபூஜிவாராவும் காப்டன் மோகன் சிங்கைச் சந்தித்து இந்திய சுதந்திரத்துக்காகப் பாடுபடும் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டிருந்தனர். காப்டன் மோகன் சிங்கும் இதர உயர் அதிகாரிகளும் இந்திய சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவு தர முன்வந்தனர்.

தென்கிழக்காசியாவில் இந்திய சுதந்திர இயக்கக் கிளைகளை அமைத்து செயல் திட்டங்களில் ஈடுபடுவதெனவும் இந்திய தேசிய ராணுவப்படை அமைப்பதெனவும் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது.

தேவைப்படும்போது தரை, கடல், ஆகாயப்படை உதவிகளை ஜப்பானிடமிருந்து பெற்றுக் கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.



டோக்கியோ
மாநாட்டில்
ராஷ்பிகாரிபோஸ்



எஸ்.ஏ. ஐயர்

● பாங்காக்கில் **அசோசியட்ட் பிரஸ்.** (அ.பி.) செய்தியாளராகவும் பின்னர் 'பாங்காக் டைம்ஸ்' பத்திரிகையில் ஆசிரியராகவும் பணியாற்றிய . எம். சிவராமனும் ('ROAD TO DELHI' நூலாசிரியர்) பாங்காக்கில் அப்போது இருந்த ராய்ட்டர் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.ஏ. அய்யரும் இந்திய சுதந்திர கழகத்தில் இணைந்து இயக்கத்தின் விளம்பரப் பகுதிக்குப் பொறுப் பாளர்களாக தங்கள் சேவையை வழங்கினர்.

● ஜப்பானியரிடமிருந்து எழுத்து மூலம் ஒப்பந்தம் தேவை என மலாயா பிரதிநிதிகள் பாங்காக் மாநாட்டில் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இந்த மாநாட்டில் மலாயாவிலிருந்து கலந்து கொண்டவர்களே அதிகம். 50 மலாயா பிரதிநிதிகளில் ராணுவ வீரர்களும் அடங்குவர்.

இந்திய சுதந்திரக் கழக தலைமையகத்தை நிர்வகிக்க நடவடிக்கை மன்றம் (COUNCIL OF ACTION) அமைக்கப்பட்டது. இந்திய சுதந்திர இயக்கத் தலைவராக ராஷ் பிகாரி போஸ் தேர்ந்தெடுக்கப் பட்டார். நடவடிக்கை மன்றத்துக்கு என்.ராகவன், கே.பி.கே.மேனன், ஜெனரல் (காப்டன்) மோகன் சிங், கர்னல் கியானி ஆகிய நால்வரும் நியமிக்கப்பட்டனர். இந்திய சுதந்திர இயக்கத் தலைமையகம் சிங்கப்பூரில் இயங்கியது.

1942 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலேயே மலாயா சிங்கப்பூரில் 40 இந்திய சுதந்திரக் கழக கிளைகள் அமைக்கப்பட்டன. சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரம் உறுப்பினர்கள் சேர்ந்திருப்ப தாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய தேசிய ராணுவப்படை அமைப்பது குறித்து ஜப்பானிய ராணுவ மேல்மட்டத்திடம் மேஜர் ஃபூஜிவாரா ஆதரவு கோரினார். ராணுவ மேல்மட்டத்திடம் சாதகமான பதிலும் கிடைத்தது.

ஜப்பானியரிடம் சரணடைந்திருந்த பிரிட்டிஷ் இந்திய போர்க் கைதிகளிலிருந்து 16,300 போர் வீரர்களைக் கொண்ட முதல் இந்திய தேசிய ராணுவப்படை ஜெனரல் (காப்டன்) மோகன் சிங் தலைமையில் 1942 செப்டம்பரில் அமைக்கப்பட்டது.

போர்க் கைதிகளாக மலாயாவில் இருந்த 11 ஆவது டிவிஷன் பிரிட்டிஷ் இந்தியப்படை இந்திய தேசிய ராணுவத்தில் (ஐ.என்.ஏ.) முழுமையாக இணைந்திருந்தது.

முதல் இந்திய தேசிய ராணுவப்படை அமைக்கப்பட்ட மூன்றாவது மாதத்திலேயே ஜப்பானிய அதிகாரிகளுக்கும் இந்திய சுதந்திர இயக்கத் தலைமையக நிர்வாகிகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடு தோன்றியது.

1942 ஆம் ஆண்டு டிசம்பரில் இந்திய சுதந்திர இயக்கத் தலைமையகத்திடம் கலந்தாலோசிக்காமல் ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் இந்திய தேசிய ராணுவ (ஐ.என்.ஏ.) படை வீரர்களைப் பர்மாவுக்கு அனுப்பியிருந்தனர். அதே சமயத்தில் இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த கர்னல் என்.எஸ்.கில்லை பிரிட்டிஷ் உளவாளி என சந்தேகித்து ஜப்பானியர் கைது செய்திருந்தனர். இந்தக் கைது குறித்தும் சுதந்திரக்கழக தலைமையகத் தோடு கலந்தாலோசிக்கவில்லை.

ஜப்பானியரின் அந்தத் தன் மூப்பான நடவடிக்கைகளைக் கண்டித்தும் நிபந்தனையற்ற ஆதரவை இந்தியாவுக்கு தருவோம் என ஜப்பான் வெளிப்படையாகத் தெரிவிக்காததாலும் எழுத்து மூலமாக எதையும் தராததாலும் சுதந்திரக்கழக தலைமையக நடவடிக்கை மன்றத்தைச் சேர்ந்த என்.ராகவன், கே.பி.கே.மேனன், ஜெனரல் (கேப்டன்) மோகன் சிங், கர்னல் கியானி ஆகிய நால்வரும் ராஜினாமா செய்தனர்.

முதல் இந்திய தேசிய ராணுவப்படைக்குத் தளபதியாகப் பொறுப்பேற்றிருந்த ஜெனரல் (காப்டன்) மோகன் சிங் சுதந்திரக் கழக தலைமையக நடவடிக்கை மன்றத்திலிருந்து பதவி துறப்பு செய்தவுடன் உடனடியாக ஜப்பானிய ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

உடனே இந்திய தேசிய ராணுவப்படை (இந்தியன் நேஷனல் ஆர்மி) காப்டன் மோகன் சிங் உத்தரவுக்கிணங்க கலைக்கப்பட்டது.

காப்டன் மோகன்சிங் சிங்கப்பூருக்கு அருகில் உள்ள ஒரு தீவில் கைதியாக இருந்தார்.

இந்திய சுதந்திர இயக்கத் தலைமையகத்தின் அனுமதியில்லாமல் ராஷ் பிகாரி போஸின் ஆதரவோடு ஜப்பானியர் அமைத்த இந்திய இளைஞர் இயக்கப் பிரிவுக்கு இந்திய சுதந்திரக் கழக தலைமையக நிர்வாகம் கடும் எதிர்ப்பைத் தந்தது. 1943 ஆம் ஆண்டு மார்ச்சில் தன் எதிர்ப்பைத் தெரிவிக்க அகில மலாயா இந்திய சுதந்திரக்கழகத் தலைவர் பொறுப்பிலிருந்தும் என்.ராகவன் பதவி விலகினார்.

ராஷ் பிகாரி போஸ் இந்திய சுதந்திரக் கழகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் ஜப்பானியருக்கு ஆதரவாக மட்டுமே இருப்பதாகக் கருதி பலர் அவர் மீது சந்தேகம் கொண்டனர்.

ராஷ் பிகாரி போஸ் இந்திய விடுதலையில் அதிக நாட்டம் கொண்டிருந்த போதிலும் அவர் நடை, உடை, பாவனை ஜப்பானியர் போன்ற தோற்றத்தைத் தந்தது. ஜப்பானில் அவர் நீண்ட காலமாகத் தங்கி இருந்திருக்கிறார். ஜப்பானியப் பெண்ணை மனைவியாகப் பெற்றிருந் திருக்கிறார். ராஷ் பிகாரியின் புதல்வர் மஸாஹைட் ஜப்பானிய கடற்படையில் சேர்ந்திருந்தவர்.

சுதந்திரக்கழக நிலைமை மோசமாகி வருவதை அறிந்த ராஷ் பிகாரி போஸ் அதிகம் வருந்தினார். உடல் நிலையும் பாதிப்படைந்திருந்தது. நீரிழிவு நோயும் காசநோயும் அவரை உருக்கியது. இந்திய சுதந்திர இயக்கத்தை வழிநடத்திச் செல்ல சுபாஷ் சந்திர போஸே ஏற்ற தலைவர் என்பதை உணர்ந்தார் ராஷ்.

சிங்கையிலிருந்து டோக்கியோவுக்குத் திரும்பிய ராஷ் பிகாரி போஸ், சுபாஷ் சந்திர போஸ் பற்றி ஜப்பானிய ராணுவ மேல்மட்டத்திடம் தெரிவித்தார். அப்போதைய சூழ்நிலையில் சுபாஷ் சந்திர போஸ் வந்தால்தான் இயக்கம் வலுவடையும் எனும் கருத்தையும் தெரிவித்தார்.

அப்போது இந்தியாவில் காந்தி - நேரு - சுபாஷ் சந்திர போஸ் ஆகிய மூன்று பெருந் தலைவர்களுக்கே மக்களிடம் அதிக செல்வாக்கு இருந்தது.

சுபாஷ் சந்திர போஸ் சுதந்திரக்கழகத்தின் தலைமைப் பொறுப்பேற்க ஜப்பானிய ராணுவ அரசாங்கம் ஆதரவு தந்ததோடு அவரை ஜெர்மனியிலிருந்து தென்கிழக்காசியாவுக்குக் கொண்டு வரும் முயற்சியிலும் ஈடுபட்டது.

ராஷ் பிகாரி போஸ் டோக்கியோவிலிருந்து சிங்கப்பூர் திரும்பியவுடன், தென்கிழக்காசிய இந்திய சுதந்திர இயக்கப் பிரதிநிதிகளின் மாநாட்டை 1943 ஏப்ரலில் கூட்டினார்.

இந்திய சுதந்திர இயக்கத்திற்கும் இந்திய தேசிய ராணுவத்திற்கும் தலைமைப் பொறுப்பேற்க சுபாஷ் சந்திர போஸ் வருகிறார் என்று பிரதிநிதிகள் கூட்டத்தில் ராஷ் பிகாரி போஸ் மகிழ்வுடன் தெரிவித்தார்.

கருத்து வேறுபாடு காரணமாகக் கைது செய்யப்பட்டிருந்த ஜெனரல் (காப்டன்) மோகன் சிங்கும், கர்னல் கில்லும் ஜப்பானிய ராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டனர்.

இந்திய தேசிய ராணுவப்படை 1943 ஏப்ரலில் இரண்டாவது முறையாக அமைக்கப்பட்டு படை வீரர்களும்சேர்க்கப்பட்டனர்.

சுபாஷ் சந்திர போஸின் வருகையைத் தென்கிழக்காசிய இந்தியர்கள் ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

* * *

## ராஷ் பிகாரி போஸ்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய புரட்சிக்காரர் களில் ராஷ் பிகாரி போஸும் ஒருவர்.

1912 இல் புதுடில்லியில் நடந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஆட்சியாளர்களுக்கு எதிராகக் குண்டுகள் வீசப்பட்டன. ராஷ் பிகாரி போஸ் இதில் சம்பந்தப்பட்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார். ராஷ் பிகாரி போஸுடன் இருந்த இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. ராஷ் பிகாரி போஸ் தலைமறைவானார். 1915 இல் ராஷ் பிகாரி போஸ் தலைக்கு 12 ஆயிரம் ரூபாய் தரப்படும் எனும் துண்டுப் பிரசுர அறிவிப்பு இந்தியா முழுவதும் விநியோகிக்கப்பட்டது.

பனாரஸ், லாகூர் ஆகிய இடங்களில் மறைந்து கொண்டு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டார் ராஷ்.

1915 மே 12 இல் ஜப்பானுக்குத் தப்பி ஓடினார். ஜப்பானில் பத்திரிகைகளுக்கு இந்திய நிலைமைகளைப் பற்றி கட்டுரைகள் வரைந்தார். இந்தியா பற்றி நூல்கள் வெளியிட்டார்.

1917 இல் ராஷ் பிகாரி போஸ் தோஷிகோ எனும் ஜப்பானியப் பெண்ணை மணந்தார். ராஷ் – தோஷிகோ தம்பதிக்கு ஒரு புதல்வர். ஒரு புதல்வி. மகன் மஸ்ஹைட் இரண்டாவது உலகப் போரில் ஜப்பானியக் கடற்படையில் பணியாற்றியபோது விபத்தில் இறந்தார். மகளின் பெயர் டெட்ஸுகோ. ராஷ் துணைவி தோஷிகோ இரண்டு குழந்தைகளைப் பெற்றுத் தந்துவிட்டு எட்டாவது ஆண்டில் மரணமடைந்தார்.

1923 இல் ராஷ் பிகாரி போஸ் ஜப்பான் குடியுரிமை பெற்றார்.

பின்னர் ஜப்பானில் இந்திய சுதந்திரக் கழகத்தை நிறுவி அதைத் தென்கிழக்காசியாவில் மிகப் பெரிய இயக்கமாகச் செயல்பட வழி அமைத்தார்.

இந்தியாவின் விடுதலைக்காகவும் தென்கிழக்காசிய இந்தியர்களின் நலனுக்காகவும் இந்திய சுதந்திரக் கழகமும் இந்திய சுதந்திர ராணுவமும் 1942 இல் துவக்கப்பட்டன. ஆனாலும் அதிகாரபூர்வமாக நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பேற்ற பிறகே உலகுக்கு அறிவிக்கப்பட்டது.

1945 ஜனவரி 21 இல் ராஷ் பிகாரி போஸ் காலமானார்.



ராஷ் பிகாரி போஸ்



### நீலகண்ட அய்யர்

கோலாலம்பூரைச் சேர்ந்த கே.ஏ. நீலகண்ட அய்யர் மலாயா இந்தியர் சங்கங்களின் சம்மேளனத் துக்கு (சி.ஐ.ஏ.எம்.) 1938 ஆம் ஆண்டு முதல் பொதுச் செயலாளராகப் பொறுப் பேற்றிருந்தார். 1942 மார்ச் 28,29,30 ஆம் தேதிகளில் ஜப்பானில் நடைபெற்ற இந்திய சுதந்திரக் கழக ஆலோசனை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது நிகழ்ந்த விமான விபத்தில் உயிரிழந்தார்.

கோலாலம்பூரில் இயங்கிய பம்பாய் ஆயுள் காப்புறுதி கழகத்தில் நிர்வாகச் செயலாளராகப் பணி புரிந்த நீலகண்ட அய்யர் பல கட்டுரைகள் வரைந்திருக்கிறார். துடிப்பான செயல் வீரர்.

* * *

# நேதாஜியின் வருகை

பெர்லினில் லட்சியக் கனவுகளோடு உலவிக் கொண்டிருந்த சுபாஷ் சந்திரபோஸுக்கு ஜப்பானிய அரசாங்கத்தின் அழைப்பு உத்வேகத்தைக் கொடுத்தது. பெர்லினில் இருந்த ஜப்பானிய தூதர் மூலம் முழு விபரம் அறிந்த சுபாஷ் சந்திர போஸ் உணர்ச்சி வயப்பட்டார். தென்கிழக்காசியாவில் அமைக்கப்பட்டுள்ள இந்திய தேசிய ராணுவத்தில் தலைமைப் பொறுப்பேற்கக் கிடைத்திருக்கும் வாய்ப்பை எண்ணி வியப்பும் மகிழ்வும் அடைந்தார். நீண்ட நாள் அவர் கண்டு வந்த கனவு அது. உற்சாகப் பிரவாகம் எடுத்தது நேதாஜிக்கு.

ஜெர்மானியப் பிரதமர் ஹிட்லர் நேதாஜிக்கு வாழ்த்துக்கூறி ஜப்பானுக்கு அனுப்பும் மார்க்கம் குறித்து கலந்தாலோசித்தார்.

போர்மேகம் சூழ்ந்திருந்த நேரம் அது.

இந்து மகா சமுத்திரத்தில் குறிப்பிட்ட ஓர் இடம் வரை ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலில் சுபாஷ் சந்திர போஸைக் கொண்டு செல்வது - பின்னர், அங்கிருந்து ஜப்பானின் நீர் மூழ்கிக் கப்பலில் அவரை டோக்கியோவுக்கு அழைத்துச் செல்வது எனவும் திட்டம் வகுக்கப்பட்டது.

அவ்வாறே பயணம் மேற்கொண்ட சுபாஷ் சந்திர போஸ் 1943ஆம் ஆண்டு மே முதல் நாளன்று சுமத்ராவுக்கு வந்து சேர்ந்தார். சுபாஷ் சந்திரபோஸுக்குத் துணையாக அபித்ஹாஸன், சுவாமி எனும் இரண்டு இந்தியர்களும் உடன் வந்தனர். மே மாதம் 16ஆம் தேதியன்று டோக்கியோ சென்றடைந்தார் நேதாஜி.

ஜப்பானியப் பிரதமர் தோஜோவையும் மற்ற ராணுவ உயர் அதிகாரிகளையும் நேதாஜி சந்தித்தார்.

ஜப்பானியரிடம் தோல்வி அடைந்து ஆங்கிலேயரால் விட்டுச் செல்லப்பட்ட பிரிட்டிஷ் இந்திய ராணுவ வீரர்களையும் அதிகாரிகளையும் இந்திய தேசிய ராணுவத்தில் இணைத்து, இந்தியா வின் சுதந்திரத்துக்காகப் பிரிட்டிஷாரை எதிர்த்துப் போராடவிருக்கும் தம் திட்டத்திற்கு முழு ஆதரவு தருமாறு ஜப்பானியப் பிரதமரிடம் கோரினார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

ஜப்பானிய அரசு முழு ஆதரவு நல்கியது.

1943ஆம் ஆண்டு ஜூலை 2ஆம் தேதியன்று நேதாஜி சுபாஷ் சந்திர போஸும் அப்போதைய இந்திய சுதந்திரக் கழகத் தலைவர் ராஷ் பிகாரி போஸும் ஒரே விமானத்தில் டோக்கியோவி லிருந்து சிங்கப்பூர் வந்து சேர்ந்தனர்.

பத்திரிகைகள் விரிவான செய்திகளை வெளியிட்டிருந்தன.

விமான நிலையத்தில் பிரமுகர்கள், இந்திய சுதந்திரக் கழகத் தலைவர்கள், அதிகாரிகள், மாதர்பகுதி பொறுப்பாளர்கள் ஆகியோரோடு இந்திய தேசிய ராணுவ வீரர்களும் அணிவகுத்து நின்றனர்.

நேதாஜி எதிர்பார்த்த ராணுவம் அது.

தொண்டர்கள் தலைவருக்கு ராணுவ அணிவகுப்பு மரியாதை செலுத்தினர். நேதாஜி மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டார்.

நேதாஜி சிங்கப்பூருக்கு வந்தவுடன் உடனடியாகப் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. விறுவிறு வென பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சுபாஷ் சந்திர போஸ், சிங்கப்பூருக்கு வந்த இரண்டு நாட்களுக்குப் பின்னர் (ஜூலை 4) சிங்கப் பூரில் நடந்த இந்திய சுதந்திரக் கழகக் கூட்டத்தில் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டம் சிங்கப்பூரின் பெரிய கட்டடமான கத்தே மண்டபத்தில் நடைபெற்றது.

மேடையில் மகாத்மா காந்தியின் படம் இடம் பெற்றிருந்தது. மண்டபம் கொடிகளாலும் தோர ணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஜப்பான், மஞ்சுகோ, ஹாங்காங், சயாம், பர்மா, மலாயா, சிங்கப்பூர் நாடுகளின் பிரதிநிதிகளும் இந்திய தேசிய ராணுவ அதிகாரிகளும் மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

சுதந்திரக் கழகத் தலைவர் ராஷ் பிகாரி போஸ் தமது பதவியைத் துறந்துவிட்டு, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தலைமைப் பொறுப்பேற்பார் என அறிவித்தார்.

"யுத்த நெருக்கடியில் செயலாற்ற வேண்டுமானால் முதலில் ராணுவ கட்டுப்பாடும் லட்சி யத்தில் தளராத நம்பிக்கையும்தான் தேவை. எனவே கிழக்காசிய இந்தியர் அனைவரும் ஒரே தலைவனின் கீழ் ஒரு கற்பாறை போன்று உறுதியுடன் ஒன்றுபட்டு நமக்கு முன் நிற்கும் தீவிரமான போராட்டத்துக்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்" என்று நேதாஜி உணர்ச்சி மேலிட உரையாற்றினார்.

மறுநாள் *1943* ஜூலை 5இல் சிங்கப்பூர் முனிசிபல் கட்டடத்திற்கு எதிரில் உள்ள திடலில் இந்திய தேசிய ராணுவ அணிவகுப்பு மரியாதையை நேதாஜி ஏற்றுக்கொண்டார்.

அந்த பெரிய மைதானத்தில் எங்கு பார்த்தாலும் காக்கி உடுப்பும் தொப்பியும் அணிந்து துப்பாக்கி ஏந்திய வீரர்கள் காணப்பட்டனர்.

காலை 10.30 மணிக்கு நேதாஜி வந்தார்.

"இந்தியரின் தலைமையில் ஓர் இந்தியப் படை. ஒவ்வோர் இந்தியனுக்கும் சொந்தமான, படை நிறுவப்பட்டிருக்கிறதென்பதில் எல்லா இந்தியரும் பெருமைப்பட வேண்டும். சமயம் வரும் போது இந்தப் படை இந்தியரின் தலைமையில் போருக்குச் செல்லும். நான் துன்பத்திலும் இன்பத்திலும் இருளிலும் ஒளியிலும் உங்களுடன் ஒன்றாய் நிற்பேன் என உறுதி கூறுகிறேன்" என்று நேதாஜி உரையாற்றினார்.

நேதாஜியின் உரைக்குப்பின் நடந்த அணிவகுப்பை நேதாஜி "சல்யூட்" செய்து ஏற்றார்.

(1943 ஜூலை – 5ஆம் தேதி முதல் நேதாஜி ராணுவ உடையை அணியத் தொடங்கினார்.)



இந்திய விடுதலை வீரர்களின் முன்னிலையில் தேசிய மூவர்ணக்கொடி கம்பீரமாகப் பறக்க, கவச வாகனப்படை வரிசையாகச் செல்ல, தொடர்ந்து காலாட் படையினர் கம்பீர நடை போட்டனர்.

அதே சிங்கப்பூர் நகர மன்றத் திடலில் மறுநாள் ஜூலை 6இல் இந்திய தேசிய ராணுவத்தைப் பார்வையிட ஜப்பானியப் பிரதமர் சிங்கப்பூர் வந்திருந்தார்.

நகரசபைத் திடலில் அணிவகுப்பு நடைபெற்றது.

நகரமன்ற மண்டப "பால்கனி"யில் நின்றவாறு ஜப்பானியப் பிரதமர் தோஜோ, நேதாஜி, ஜப்பானிய ராணுவ உயர் அதிகாரி கர்னல் இவாகுரா ஆகியோர் பார்வையிட்டனர்.




மண்டப "பால்கனி"யில் நின்றவாறு ஜப்பானியப் பிரதமர் தோஜோ, நேதாஜி,

பிரிட்டிஷ், ஜப்பானியரின் டாங்கிகளையும் ஆயுதங்களையும் அணிவகுப்பில் வீரர்கள் பயன் படுத்தினர்.

இந்தியர்களால் இந்தியாவின் விடுதலைக்காக இந்திய தலைவரின் கீழ் அமைக்கப்பட் டிருந்த ராணுவ அணிவகுப்பை ஜப்பானியப் பிரதமருக்குக் காட்டினார் நேதாஜி.

இந்திய தேசிய ராணுவ வீரர்களும் இந்திய சுதந்திரக் கழகத் தொண்டர்களும் உணர்ச்சி வயப்பட்டிருந்தனர்.

அனைவரின் நெஞ்சும் நிமிர்ந்திருந்தது.

"டில்லி சலோ! அஸாத் ஹிந்த்!" எனும் கோஷம்! எங்கும் இந்திய மூவர்ணக்கொடி!

நேதாஜி சிங்கப்பூர் வந்து சேர்ந்த ஒரு வாரத்திற்குள் இந்திய தேசிய ராணுவத்தைச் சீர்திருத்தி அமைத்தார்.

இந்திய தேசிய ராணுவம் (ஐ.என்.ஏ) அமைக்கப்பட்டிருப்பதை 1943 ஜூலை 7இல் நேதாஜி உலகுக்கு அறிவித்தார்.

இந்திய தேசிய ராணுவத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார் நேதாஜி.

ஏற்றத்தாழ்வின்றி சமயவேறுபாடின்றி ஒரே லட்சியத்தோடு இந்திய தேசிய ராணுவத்தில் பலரும் இணைந்தனர்.



சிங்கப்பூரில் அணிவகுத்து நிற்கும் ஐ.என்.ஏ. படையினர்.

ஜப்பானியரால் போரின்போது கைது செய்யப்பட்ட பிரிட்டிஷ் இந்திய ராணுவ வீரர்களும், அதிகாரிகளும், மலாயா சிங்கப்பூரைச் சேர்ந்த சுதந்திர வேட்கை கொண்ட இளைஞர்களும், பெண்களும் பதினைந்து வயது நிரம்பிய சிறுவர்களும் ஆர்வத்தோடு இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்தனர்.

டாக்டர் லட்சுமி தலைமையில் மாதர் படை அமைக்கப்பட்டது. அந்தப் படைப்பிரிவுக்கு "ஜான்சிராணி" என்று பெயர் சூட்டப்பட்டது.

மகாத்மா காந்தி, பண்டிட் நேரு, மௌலானா ஆசாத், சுபாஷ் சந்திர போஸ் ஆகியோர் பெயர்களில் படைப் பிரிவுகள் பிரிக்கப்பட்டிருந்தன.

தொடக்கமாக 7 ஆயிரம் பேருக்கு ராணுவப் பயிற்சி அளிக்கப்பட்டது. அதிகாரிகள் பயிற்சி நிலையமும் அதே சமயத்தில் தொடங்கப்பட்டது.

ராணுவ வீரர்கள் அனைவருக்கும் சீருடை வழங்கப்பட்டது.

இந்திய தேசிய ராணுவ எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருந்தது.

குறுகிய காலத்திலேயே 80 ஆயிரம் வீரர்கள் ஐ.என்.ஏ.யில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. அதில் பெண்களும், சிறுவர்களும் அடங்குவர்.

காப்டன் ஷா நவாஸ், காப்டன் சாகல், காப்டன் தில்லான், காப்டன் மோகன்சிங் ஆகியோர் படைத் தளபதிகளாகப் பணியாற்றினர்.

ஜப்பானியர் ஆட்சிக் காலத்தில் இங்கு வெளிவந்த பத்திரிகைகள் இந்திய தேசிய ராணுவத்திற்கு ஆதரவாக இருந்திருக்கின்றன.

"ஜப்பானிய ஆட்சி காலத்தின்போது கோலாலம்பூரிலிருந்து வெளிவந்த மலாய் மெயில் ஆங்கிலப் பத்திரிகை "மராய் மெயிரு" என்ற பெயரிலும் (ஜப்பான் மொழியில் "எல்" என்ற எழுத்து இல்லாததால்) சிங்கப்பூரில் "ஸ்ட்-ரெயிட்ஸ் டைம்ஸ்" "ஷோனான் ஷிப்பன்" என்ற பெயரிலும் வெளியிடப்பட்டன. நேதாஜி தலைமையில் இயங்கிய இந்திய சுதந்திரக் கழக ஆதரவோடு "தமிழ் நேசன்" நடந்தது. இப்படி 4 ஆண்டுக் காலம் பத்திரிகைகள் இங்கு வெளிவந்தன" என்று தமிழ் நேசன் தினசரியில் அந்தக் காலகட்டத்தில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்த பழம் பெரும் பத்திரிகையாளர் பை.கி.ஸ்ரீ. எழுதியிருந்த ஒரு கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திய சுதந்திரக் கழக நிகழ்ச்சிகளையும், ஜப்பானிய அரசின் பிரசாரச் செய்திகளையும் தாங்கி சிங்கையிலிருந்து வெளிவந்த 'சுதந்திர இந்தியா' என்ற பத்திரிகைக்கு சி.வி. குப்புசாமி ஆசிரியராக இருந்திருக்கிறார்.

சிங்கப்பூரில் இருந்து வெளிவந்த தமிழ் முரசு தினசரியின் ஆசிரியர் கோ. சாரங்கபாணி சுதந்திரக் கழக பிரசாரப் பிரிவில் பணியாற்றியவர்.



கோ. சாரங்கபாணி



சி.வி. குப்பசாமி

## உணர்ச்சி ஊட்டிய உரைகள்

*1943 ஜூலை 10இல் சிங்கப்பூர் நகரசபைத் திடலில் நடந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் நேதாஜி உரையாற்றினார்.*

*நேதாஜியை தரிசிக்க – அவர் உரையைக் கேட்க பல்லாயிரக்கணக்கானோர் அங்கு திரண்டிருந்தனர்.*

*"கிழக்காசியாவில் உள்ள 30 லட்சம் இந்தியர்களும் தங்களிடம் உள்ள எல்லா சக்திகளையும் பொருளையும் ஒன்று திரட்ட வேண்டும்" என்றார் நேதாஜி.*

*நேதாஜி சிங்கை வந்துவிட்டார் என்பதை அறிந்த கிழக்காசிய வாழ் இந்தியர்கள் பரவசம் அடைந்தனர்.*

*நேதாஜி அண்டை நாடுகளான பர்மாவுக்கும் தாய்லாந்துக்கும் பயணம் செய்தார். அவ்விரு நாடுகளின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் நாடினார். பாங்காங்கிற்கு 1943 ஜூலை 27 லும் பர்மாவின் ரங்கூன் நகருக்கு ஜூலை 30 லும் பயணம் மேற்கொண்டார்.*

*ரங்கூனில் இந்தியர் குழுமியிருந்த கூட்டத்தில் உரையாற்றினார் நேதாஜி.*

*பர்மா சுதந்திரப் பிரகடனம் விடுத்த 1943 ஆகஸ்ட் 1இல் நேதாஜி ரங்கூனில் இருந்தார். ரங்கூனில் நடைபெற்ற சுதந்திர விழாவிலும் கலந்து கொண்டார்.*

*பிரிட்டிஷாரிடமிருந்து பர்மாவைக் கைப்பற்றிய ஜப்பான் பர்மாவுக்குச் சுதந்திரம் வழங்கி சொந்த அரசாங்கத்தை அமைக்க வாய்ப்பும் தந்திருந்தது. பர்மா அரசாங்கத்துக்கு டாக்டர் பாமா தலைமைப் பொறுப்பேற்றிருந்தார்.*

*மகா கிழக்காசியாவை நிப்பன் (ஜப்பான்) தன் சொந்த லாபத்துக்காகவே நிர்மாணிக்கிறது எனும் வாதம் பர்மாவுக்குத் தரப்பட்ட இந்தச் சுதந்திர நிகழ்ச்சியினால் எடுபடாமல் போய் விட்டதாக அரசியல் பார்வையாளர்கள் அப்பொழுது கருத்து தெரிவித்தனர்.*

*பர்மா அதிபர் டாக்டர் பாமா தாய்லாந்து பிரதமர் பீல்ட் மார்ஷல் ஸோங் ராம் ஆகியோரோடு நேதாஜி கலந்து பேசி இந்திய சுதந்திர இயக்கத்திற்கு ஆதரவைப் பெற்றார்.*

*நேதாஜி பல இடங்களில் உரை நிகழ்த்தினார். ஒவ்வொரு கூட்டத்திலும் இரண்டு முதல் மூன்று மணி நேரம் வரை பேசுவார். கூட்டம் உணர்ச்சி வயப்பட்டு அப்படியே உரையைக் கேட்டுக் கொண்டிருக்கும். கூட்ட முடிவில் "ஜெய் ஹிந்த்" என முழக்கமிடுவார்.*

*சுதந்திர இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணை புரிந்த மலாயாவில் நேதாஜி விரிவாகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.*

*நேதாஜியின் வருகையைத் திருவிழா போல் கொண்டாடினர். வீடுகளிலும் வியாபார நிலையங்களிலும் மூவர்ணக் கொடிகள் பறந்தன.*

*"நேதாஜி" என்கிற பெயர் தென்கிழக்காசியாவில் பெரிதும் மதிக்கத்தக்க வணக்கத்திற்குரிய பெயராக விளங்கியது. நேதாஜியின் முக தரிசனம் கிடைக்குமா என பலரும் ஏங்கினர். அவரை நேரில் பார்ப்பது பெரும் பாக்கியம் என கருதினர்.*

*"சக்தியுள்ள மனிதர்கள் போரில் கலந்து கொள்ள வேண்டும். ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் முன்வர வேண்டும். சாதாரண சேவை செய்யலாம் என்றிருந்த காலம் கடந்து விட்டது. கொஞ்சம் உதவி அளிப்போம் என்பதற்கும் காலம் கடந்து விட்டது. விலை மதிப்பற்ற சுதந்திரத்தை அடைய நாம் நம்மிடம் உள்ள எல்லாவற்றையும் கொடுப்போம்" என்று கர்ஜித்தார் நேதாஜி.*

*நேதாஜியின் வீர உரை மக்களிடையே பெரும் புரட்சியை உண்டு பண்ணியது. இந்திய இளைஞர்கள் சுதந்திரப்படையில் சேர ஆர்வத்துடன் ஓடிவந்தனர்.*

*கோலாலம்பூர், பினாங்கு, தைப்பிங், ஈப்போ, சிரம்பான், சிங்கப்பூர் போன்ற பல இடங்களில் ராணுவப் பயிற்சி நிலையங்கள் தோன்றின.*

*கோலாலம்பூரில் 1943 ஜூலை 12இல் ராணுவப் பயிற்சி நிலையத்தை நேதாஜி ஆரம்பித்து வைத்தார்.*

*ராணுவ முறைப்படி ஆயுதங்களைக் கையாளவும், போர் முறைகள் குறித்தும் 6 மாத காலம் பயிற்சி தரப்பட்டது.*

*ராணுவப் படையில் புதிதாகச் சேர்ந்தவர்களில் 95 சதவிகிதத்தினர் தமிழர்கள்.*

## நேதாஜி நிதி

*நேதாஜி இந்திய சுதந்திர இயக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் படை திரட்டுவதிலும் ராணுவத்திற்குத் தேவைப்படும் "சப்ளை"களைச் சேகரிப்பதிலும் இயக்கத்திற்கு வேண்டிய பணம் திரட்டுவதிலும் ஈடுபட்டார்.*

*இந்திய சுதந்திரக் கழக தலைமையகம் சுறுசுறுப்புடன் பணியாற்றியது.*

நேதாஜி 1943 செப்டம்பர் 5இல் பினாங்குக்கு விஜயம் செய்தார். அங்கு நடைபெற்ற இந்திய வர்த்தகர்கள் பிரமுகர்கள் மாநாட்டில் 13 லட்சம் வெள்ளி திரட்டப்பட்டு நேதாஜியிடம் வழங்கப்பட்டது. மூன்று செட்டியார்கள் தலா ஒரு லட்சம் வெள்ளி வழங்கியிருந்தனர்.

அன்று மாலை பினாங்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நேதாஜி பேசினார் :

"இன்று காலையில் 'ஸ்வராஜ பவனில்' நடந்த கூட்டத்தில் 13 லட்சம் வெள்ளி கிடைத்தது. இது முதல் தவணை இன்னும் நீங்கள் நிதி அளிக்க வேண்டும்".

அந்தப் பொதுக்கூட்டத்தில் நன்கொடைகள் திரட்டப்பட்டன. பினாங்கில் 20 லட்சம் வெள்ளி 'நேதாஜி நிதி'க்குக் கிடைத்தது.

மறுநாள் 1943 செப்டம்பர் 6இல் ஈப்போவில் பேரா மாநில இந்தியர்கள் சார்பில் 10 லட்சம் வெள்ளிக்குக் காசோலை (செக்) தரப்பட்டது. ஈப்போ பொதுக்கூட்டத்தில் நேதாஜிக்குப் போடப் பட்ட மாலை ஏலத்தில் 28 ஆயிரம் வெள்ளிக்குச் சென்றது.

கோலாலம்பூரில் 1943 செப்டம்பர் 8ஆம் தேதியன்று நடைபெற்ற கூட்டத்தில் சிலாங்கூர் இந்தியர் சார்பாக முதல் தவணையாக 10 லட்சத்து 44 ஆயிரம் வெள்ளி வழங்கப்பட்டது.

சிங்கப்பூரிலுள்ள இந்திய சுதந்திரக் கழகத் தலைமை அலுவலகத்திற்கு நன்கொடைகளைப் பொதுமக்கள் அனுப்பிய வண்ணம் இருந்தனர்.

1943 ஜூலை 9இல் சிங்கப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நேதாஜியிடம் ஏராளமாக நன்கொடைகள் அளிக்கப்பட்டன. சிந்தி வர்த்தகர் சங்கம் ஒரு லட்சத்து ஒரு வெள்ளி வழங்கியது. மற்ற தனியார் நிறுவனங்களும் அள்ளித் தந்தன. தனி நபர்கள் வாரி வழங்கினர்.

இந்தோ சீனாவில் உள்ள இந்திய முஸ்லிம்கள் சுதந்திர இயக்க நிதிக்கு நன்கொடையாக மூன்றரை கோடி வெள்ளி தர தீர்மானித்திருப்பதாக 1943 நவம்பர் 28இல் அறிவித்திருந்தனர்.

1943 டிசம்பர் 25இல் சிங்கப்பூரில் நடைபெற்ற மலாயா பிரமுகர்கள் மாநாட்டில் நேதாஜி வேண்டுகோள் விடுத்தார் :

"மலாயா நாட்டிலுள்ள பணக்கார இந்தியர்களில் பலர் இங்கு வந்திருப்பதால் உங்களிட மிருந்து உடனடியாக நான் குறைந்தது ஒரு கோடி வெள்ளி எதிர்பார்க்கிறேன்".

கோரிக்கை விடுக்கப்பட்ட 24 மணி நேரத்தில் ஒரு கோடியே 32 லட்சம் வெள்ளி மலாயா வாழ் இந்திய வர்த்தகர்களால் வழங்கப்பட்டது.

இந்திய சுதந்திர இயக்கத்திற்கு வசூலிக்கப்பட்ட நிதி "நேதாஜி நிதி" என்றே அழைக்கப் பட்டது.

பெரும் திட்டத்திற்காக – இலட்சியத்திற்காக வர்த்தகர்களிடமிருந்தும் பணக்காரர்களிடமிருந்தும் பெரும் தொகை வசூலிக்கப்பட்டது. தொழிலாளர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலிக்கக் கூடாது என அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தென்கிழக்காசியாவில் உள்ள இந்தியர்கள் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்துக்குப் பணம் தந்தனர்.

நேதாஜியின் வசீகர சக்தி பணத்தைத் திரட்டித் தந்தது.

தனி ஒரு நபர் பெரும் தொகையைத் திரட்டிக் காட்ட முடியும் என்பதற்கு நேதாஜி ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

[ஐ.என்.ஏ. இயக்கம் நேதாஜியின் மறைவுக்குப் பின்னர் செயலிழந்த பின்னர் நேதாஜி திரட்டியிருந்த நிதியில் ஒரு பகுதி ஜப்பானிய அரசாங்கத்திடம் நீண்ட காலம் வரை இருந்தது. அண்மையில் அந்தத் தொகையை (140 கோடி ரூபாய்) இந்திய அரசுக்கு ஜப்பானிய அரசாங்கம் கொடுத்துவிட்டதாகத் தமிழக பத்திரிகை'களில் (தினமலர் 8.3.94) செய்திகள் வெளிவந்துள்ளன. அந்தத் தொகை நற்பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.]

## நேதாஜியின் பிரகடனம்

நேதாஜி 1943 அக்டோபர் 21இல் மாலை 4.15 மணிக்கு சிங்கப்பூர் கத்தே மண்டபத்தில் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் அமைந்திருப்பது பற்றி பிரகடனப்படுத்தினார்.

இந்தியாவின் காங்கிரஸ் மகா சபையின் கொடியாக உள்ள மூவர்ண 'கொடியையே இந்திய தேசிய ராணுவத்தின் கொடியாக நேதாஜி பறக்கவிட்டார்.

ஒயர்லெஸ் மூலமாக வானொலியில் பேசியபோது மகாத்மா காந்தியின் வாழ்த்தைக் கோரினார் நேதாஜி.

"மகாத்மாஜி! இங்கே நாங்கள் அமைத்திருக்கும் தற்காலிக அரசாங்கத்தைப் பற்றி நான் சிறிது சொல்ல விரும்புகிறேன்...

ஆயுதப் போராட்டத்தின் மூலமாக பிரிட்டிஷாரிடமிருந்து இந்தியாவை விடுவிப்பதே இந்தத் தற்காலிக அரசாங்கத்தின் நோக்கமாகும்.

நமது எதிரிகள் இந்தியாவிலிருந்து வெளியேற்றப்பட்டவுடன் அங்கு அமைதியும் ஒழுங்கும் ஏற்பட்டவுடன் இந்தத் தற்காலிக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் முற்றுப் பெறும்.

தேசப் பிதாவே! இந்தியாவின் விடுதலைக்காக நாங்கள் நடத்துகிற புனிதப்போருக்கு தங்கள் ஆசியையும் நல்வாழ்த்தையும் கோருகிறோம்.

இன்ப துன்பங்களிலும், வெற்றி தோல்விகளிலும் நான் உங்களுடன் இருப்பேன். இந்தியா விடுதலை அடைவதற்கு எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அளிப்போம்..."

– இந்த உரை இந்தியாவெங்கும் எதிரொலித்தது.



ஒயர்லெஸ் மூலமாக வானொலியில் பேசியபோது

சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தை உலகுக்கு அறிவித்த பின்னர் நேதாஜி பிரமாணம் எடுத்துக் கொண்ட போது மண்டபம் முழுதும் உணர்ச்சிப் பிரவாகம் கரை புரண்டு ஒடிய

தாகப் பத்திரிகைகள் அந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியினை வெளியிட்டபோது குறிப்பிட்டிருந்தன.

இயல்பான அடக்கத்துடனும் தணிந்த குரலுடனும் நேதாஜி தனது பெயரை உச்சரித்து தான் பிரதம மந்திரியாகவும், யுத்த மந்திரியாகவும், வெளி உறவு மந்திரியாகவும் நியமிக்கப் பட்டிருப்பதாகக் கூறியபோது மண்டபம் முழுவதும் அதிரும் வண்ணம் கர ஒலி ஆரவாரம் கேட்டது.

இதர மந்திரிகள், ஆலோசகர்கள் பெயரை ஒவ்வொன்றாக நேதாஜி வாசித்தார்.

மந்திரிகள், ஆலோசகர்கள் மேடை மீதேறி நேதாஜிக்குப் பின்னால் இருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

கிழக்காசியாவில் வசிக்கும் 30 லட்சம் இந்தியர்களால் தனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தைப் பிரகடனம் செய்ததாக கூட்டத்தினரிடையே உணர்ச்சி பொங்க உரையாற்றினார் நேதாஜி. சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தின் அமைச்சர்கள் ஆலோசகர்கள் வருமாறு :

சுபாஷ் சந்திர போஸ் (பிரதம மந்திரி, யுத்த மந்திரி, வெளி உறவு அமைச்சர், இந்திய தேசிய ராணுவத்தின் பிரதம தளபதி) காப்டன் லட்சுமி (மாதர் பகுதி), எஸ்.ஏ. அய்யர் (விளம்பர பிரசார அமைச்சர்) லெப்.கர்னல் ஏ.சி. சாட்டர்ஜி (நிதி)

ராணுவப் படை பிரதிநிதிகள் : லெப்.கர்னல் அஸீஸ் அகமத், லெப்.கர்னல் என்.எஸ். பகத், கர்னல் ஜே. சிங், லெப்.கர்னல் எம்.செட். கியானி, லெப்.கர்னல் ஏ.டி. லோகநாதன், லெப்.கர்னல் ஷா நவாஸ்.

அமைச்சர் அந்தஸ்து பெற்ற செயலாளர்கள் : ஏ.எம். ஷாஹே பிரதம ஆலோசகர் : ராஷ் பிகாரி போஸ். ஆலோசகர்கள் : கரீம் கனி, டெப்னாத்தாஸ், டி.எம். கான், ஏ. வெள்ளப்பா, ஜான் திவி, சர்தார் இஷா சிங். சட்ட ஆலோசகர் : ஏ.எல். சர்கெர்

(நேதாஜியின் அமைச்சரவையில் என். ராகவனும் ஜான்திவியும் பின்னர் இடம் பெற்றனர்.)



● சிங்கப்பூரில் 1943 அக்டோபர் 21இல் நேதாஜி சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தை உலகுக்கு அறிவித்து விட்டு பிரிட்டிஷாருக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்கிறார்.

இந்திய சுதந்திரத்துக்காகவும், தென்கிழக்காசியாவில் வாழும் இந்தியர்களின் சொத்துக்கும் உயிருக்கும் பாதுகாப்பு வழங்குவதற்காகவும், பிரிட்டிஷாருக்கு எதிராகப் போர் தொடுக்கப் படுவதாகவும் நேதாஜி பிரகடனப்படுத்திய இரண்டாவது நாளில் 23.10.1943இல் ஜப்பானிய அரசாங்கம் நேதாஜி உலகுக்கு அறிவித்த சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தை அங்கீக ரித்தது.

"இந்தத் தற்காலிக அரசாங்கம் தனது நோக்கம் நிறைவேற மேற்கொள்ளும் முயற்சிகளில் நிப்போன் (ஜப்பான்) அரசாங்கம் எல்லாவித ஒத்துழைப்பையும் உதவியையும் அளிக்க உறுதி கொண்டுள்ளது" என்று ஜப்பானிய அரசு அறிவித்தது.

ஜப்பானிய அரசாங்கம் அங்கீகரித்த மறுநாள் அக். 24இல் தற்காலிக அரசாங்கத்தைப் பர்மிய அரசாங்கமும் அங்கீகரித்திருப்பதாக நேதாஜிக்கு பர்மிய வெளி உறவு அமைச்சர் ஸ்ரீ தாக்கின் நூ தந்தி அனுப்பியிருந்தார்.

தொடர்ந்து பிலிப்பைன்ஸ் குடியரசுத் தலைவர் ஜோஸ். பி.லாவிடமிருந்தும், ஜெர்மனி வெளி உறவு மந்திரி ஹெர் வான் ரிப்பன் டிராப்பிடமிருந்தும் அங்கீகரித்த ஆதரவுத் தந்திகள் நேதாஜிக்குக் கிடைத்தன.

அக். 27இல் குரோஷியா அரசாங்கமும், நவ. 1இல் சீன தேசிய அரசாங்கமும், நவ 1.இல் மஞ்சூரியா அரசாங்கமும், நவ. 9இல் இத்தாலி குடியரசு அரசாங்கமும் தொடர்ந்து தாய்லாந்து அரசாங்கமும் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கத்தை அங்கீகரித்தன.

மொத்தம் 9 நாடுகள் நேதாஜி அமைத்த தற்காலிக அரசாங்கத்திற்கு ஆதரவு தந்து அங்கீகாரமும் வழங்கி இந்திய தேசிய ராணுவத்திற்குப் புத்துயிர் ஊட்டின.

இந்திய தேசிய ராணுவத்தைப் பலப்படுத்தும் முயற்சியில் நேதாஜி தீவிரமாக ஈடுபட்டார்.

மலாயாவெங்கும் சுற்றுப் பயணம் செய்து உணர்ச்சிமிக்க உரையினை நிகழ்த்தி தன் விடு தலைப் போராட்டத்திற்கு ஆதரவு திரட்டினார். இந்திய தேசிய ராணுவத்தைப் பலப்படுத்த கோரிக்கை விடுத்தார்.

## மகா கிழக்காசிய மாநாடு

1943 அக்டோபர் 31இல் நேதாஜி தம் குழுவோடு டோக்கியோ சென்றார். விமான நிலையத்தில் ஜப்பானிய வெளியுறவு அமைச்சரும் அதிகாரிகளும் வரவேற்றனர்.

ஜப்பான் அரசாங்கம் டோக்கியோவில் ஏற்பாடு செய்திருந்த மகா கிழக்காசிய நாடுகளின் மாநாட்டில் பார்வையாளராகக் கலந்துகொள்ள நேதாஜி தம் குழுவினரோடு டோக்கியோ சென் றடைந்தார்.

1943 நவம்பரில் கெய்ரோவில் அமெரிக்காவின் ரூஸ்வெல்ட், பிரிட்டனின் சர்ச்சில், ரஷ்யாவின் ஸ்டாலின், சீனாவின் சியாங் கே ஷேக் ஆகிய நான்கு தலைவர்களும் ஒன்று கூடினார்கள். ஜப்பானிய ஆக்கிரமிப்பில் உள்ள இடங்களை மீட்பது குறித்து அவர்கள் கூடிப் பேசினர்.





● 1943 நவம்பரில கெய்ரோவில் அமெரிக்காவின் ரூஸ்வெல்ட், பிரிட்டனின் சர்ச்சில், ரஷ்யாவின் ஸ்டாலின், சீனாவின் சியாங் கே ஷேக் ஆகிய நான்கு தலைவர்களும்

அந்தக் கெய்ரோ மாநாட்டிற்குப் போட்டியாக ஜப்பான் மகா கிழக்காசிய நாடுகளின் மாநாட்டை டோக்கியோவில் 1943 நவம்பர் 5இல் கூட்டியது. இந்த மாநாட்டில் ஜப்பான், சீனக் குடியரசு, மஞ்சுகோ, தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நேதாஜியின் ஆஸாத்ஹிந்த் அரசாங்கப் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டனர். நேதாஜியோடு கர்னல் பான்ஸலே உட்பட ஏழு பேர் அக்குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

அந்தக் காலகட்டத்தில் கிழக்காசியாவிலுள்ள ஏறக்குறைய எல்லா நாடுகளுமே பிரிட்டிஷ், பிரஞ்சு, டச்சு நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்தன. அந்த நாடுகளின் பலவற்றில் சுதந்திர இயக்கங்கள் தோன்றியிருந்தன. புரட்சித் தலைவர்களும் உருவாகியிருந்தார்கள்.

ஜப்பான் அப்படிப்பட்ட நாடுகளையும் தலைவர்களையும் அழைத்து மாநாட்டில் கலந்து கொள்ள வாய்ப்பு தந்தது. அந்தந்த நாடுகளின் விடுதலைக்கு உதவுவதாகவும் ஜப்பான் உறுதி கொடுத்திருந்தது.

நவம்பர் 5இல் டோக்கியோவில் நடந்த அந்த மாநாட்டில் பர்மாவிலிருந்து டாக்டர் பாமா, தாய்லாந்தின் பிடில் சவ்ராம் இந்தோனேசியாவின் சுகர்னோ, பிலிப்பைன்சின் லாரல் போன்ற புகழ்பெற்ற தலைவர்களும் கலந்து கொண்டனர்.

கிழக்காசியாவிலுள்ள எல்லா நாடுகளுக்குமிடையே நல்லுறவு, ஒத்துழைப்பு ஆகியவற்றை நிலைப்படுத்தவும், தங்கள் பொது லட்சியமான மகா கிழக்காசியா போரை வெற்றிகரமாக நிறைவேற்றி சுதந்திர ஆசிய மண்டலத்தை உருவாக்குவது குறித்து ஆராய்வதே இந்த மாநாட்டின் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டது.

மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசிய ஜப்பானியப் பிரதமர் தோஜோ "ஆசிய நாடுகள் விடுதலை பெற வேண்டும் என்பதே நிப்போனின் லட்சியம்" என்று குறிப்பிட்டார்.

பர்மா அரசாங்க அதிபர் டாக்டர் பாமா உரையாற்றுகையில் "இந்தியா விடுதலை பெறாவிட்டால் ஆசியா சுதந்திரமாக வாழ முடியாது. ஆஸாத் ஹிந்த் அரசாங்கத் தலைவரான சுபாஷ் பாபுவுக்கு நாம் நமது எல்லா உதவிகளையும் அளிப்பதாக உறுதியுடன் பிரகடனம் செய்ய வேண்டும் என்று இந்த மாநாட்டில் நான் தீர்மானம் கொண்டு வருகிறேன்" என்று குறிப்பிட்டார்.

நேதாஜி மாநாட்டில் உரையாற்றினார். தம் திட்டங்களுக்கு ஆதரவு தந்தமைக்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

போரின்போது இந்தியாவின் ஒரு பகுதியாகிய அந்தமான் தீவை 1942 மார்ச்சிலும் நிக்கோபார் தீவை ஜூலையிலும் ஜப்பானியர் பிடித்திருந்தனர். அந்தத் தீவுகளை நேதாஜியின் சுதந்திர அரசாங்கத்திடம் ஒப்படைப்பதாக ஜப்பானியப் பிரதமர் தோஜோ அந்த மாநாட்டில் அறிவித்தார்.

1943 நவம்பர் 10ஆம் தேதியன்று ஜப்பானிய சக்கரவர்த்தி ஹீரோஹித்தோ நேதாஜிக்கு தமது அரண்மனையில் பேட்டி கொடுத்தார். நேதாஜியின் முயற்சிகளைப் பாராட்டினார். சாதாரணமாக ஜப்பான் சக்கரவர்த்தி யாரையும் சந்திக்கமாட்டார். "சக்கரவர்த்தி ஒரு தெய்வப் பிறவி" என்பது ஜப்பானியரின் நம்பிக்கை.

(மலாயாவில் ஜப்பானியர் ஆட்சிக் காலத்தின்போது ஜப்பானிய சக்கரவர்த்தி ஹீரோஹித்தோ பிறந்தநாளை முன்னிட்டு மாமன்னரை வாழ்த்தி அவரது உருவப் படத்தையும் "தமிழ் நேசன்" வெளியிட்டிருந்தது. ஆனால் சக்கரவர்த்தி ஹீரோ ஹித்தோவின் உருவப் படத்தைப் பத்திரிகைகளில் வெளியிடுவதைக் குற்றமான செயலாகக் கருதிய ஜப்பானிய ராணுவ அரசு கடும் சினம் கொண்டு "தமிழ்நேசன்" அலுவலகத்திற்கு வந்து சிப்பந்திகளை வெளியேற்றி பத்திரிகை அலுவலக வாசல் கதவை மூடிவிட்டு நிர்வாகியை விசாரணைக்காக ராணுவ போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டது. இந்திய சுதந்திரக் கழக நிர்வாகிகள் தலையிட்டு விளக்கம் தந்த பிறகு எச்சரிக்கையுடன் மீண்டும் பத்திரிகையைத் தொடர்ந்து வெளியிட அனுமதி தந்திருந்தது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் நிலைமை மாறியது. தமிழ்நேசன் உட்பட பல பத்திரிகைகளில் ஜப்பானிய சக்கரவர்த்தி ஹீரோ ஹித்தோவின் உருவப்படம் வெளியிடப்பட்டது.)

ஜப்பானிலிருந்து நேதாஜி குழுவினர் 1943 நவம்பர் 17இல் மாலை 6 மணிக்கு "நான் கிங்" சென்றடைந்தனர். சீனக் குடியரசுத் தலைவர் வாங் குழுவினரை வரவேற்றார்.

சீனாவின் தலைநகரான நான் கிங்கில் நவசீனாவின் தந்தையான சான்யாட் சென்னின் கல்லறைக்குச் சென்று மரியாதை செலுத்தினார் நேதாஜி.

சீனக் குடியரசுத் தலைவர் வாங் சிங் வே நேதாஜிக்கு விருந்தளித்தார். சீன தேசிய அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகள் அதில் கலந்து கொண்டனர்.

சீனாவில் இருந்த ஜப்பான் படைத்தளபதி ஜெனரல் ஷின் ரோகு ஹித்தாவை நேதாஜி சந்தித்துப் பேசினார்.

1943 நவம்பர் 19இல் காலையில் நான்கிங்கில் உள்ள ஜெர்மன் தூதரையும் மஞ்சுகோ (மஞ்சூரியா) தூதரையும் சந்தித்தார் நேதாஜி. அன்று மாலையில் நான்கிங்கில் உள்ள "நேஷனல்

ஹாலில்" நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நேதாஜி உரையாற்றினார். சீனக் குடியரசுத் தலைவர் வாங் வரவேற்புரை நிகழ்த்தினார்.

1943 நவம்பர் 22இல் நேதாஜி குழுவினர் பிலிப்பைன்ஸ் சென்றனர். மறுநாள் நவம்பர் 23இல் பிலிப்பைன்ஸ் அரசாங்கத் தலைவர் விருந்தளித்தார்.

சிங்கை திரும்பும் வழியில் நவம்பர் 24இல் செய்கோன் சென்றார் நேதாஜி. அங்குள்ள நிப்பன் தரைப்படை – கப்பற்படை தளபதிகளைக் கண்டு பேசினார்.

1943 நவம்பர் 25இல் நேதாஜி குழுவினர் சிங்கப்பூர் திரும்பினர்.

மறுமாதம் டிசம்பர் 10இல் நேதாஜி ஜகார்த்தாவுக்கு விஜயம் மேற்கொண்டார். ஜாவாவிலுள்ள நிப்பன் படைகளின் தலைமைத் தளபதி லெப். ஜெனரல் குரோ குச்சி ஹூத்தாவைச் சந்தித்தார்.

## நேதாஜியின் கனவுகள்

சுதந்திர தற்காலிக அரசாங்கம் அமைக்கப்பட்டவுடன் பத்திரிகை நிருபர்களுக்கு நேதாஜி பேட்டியளித்தார்.

"எனது கனவுகள் மூன்று. ஒன்று, ஒரு புரட்சிகரமான தேசிய ராணுவம் ஸ்தாபிப்பது; இரண்டு தற்காலிக சுதந்திர அரசாங்கம் அமைப்பது; மூன்று, போராடி இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் பெறுவது. இவற்றின் முதலிரண்டு கனவுகளும் நனவாகிவிட்டன. மூன்றாவது கனவும் வெகுவிரைவில் நிறைவேறும் என திடமாக நான் நம்புகிறேன்" என்று நேதாஜி பத்திரிகையாளர்களிடம் குறிப்பிட்டிருந்தார்.

# ஐ.என்.ஏ. ஆட்சிபுரிந்த அந்தமான் – நிக்கோபார் தீவுகள்

டோக்கியோவில் 1943 நவம்பர் 5இல் நடைபெற்ற மகா கிழக்காசியா மாநாட்டில் ஜப்பானியர் கைப்பற்றியிருந்த இந்தியாவுக்குச் சொந்தமான அந்தமான் – நிக்கோபார் தீவுகளை நேதாஜி தலைமையில் இயங்கிய இந்திய சுதந்திர அரசாங்கத்துக்குக் கொடுப்பதாக ஜப்பானியப் பிரதமர் தோஜோ அறிவித்திருந்தார்.

இந்தியாவின் ஒரு பகுதியாக (பிரிட்டிஷ்) இந்திய அரசாங்கத்தின் நிர்வாகத்தில் அத்தீவுகள் முன்பு இருந்தன.

1942 மார்ச்சில் அந்தமானையும் ஜூலையில் நிகோபாரையும் ஜப்பானியர் பிடித்துக் கொண்டனர்.

அந்தமானுக்கும், நிக்கோபாருக்கும் இடையில் உள்ள தூரம் 96 கிலோமீட்டர் ஆகும். அந்தமான் தொகுதியில் 320 சிறு தீவுகளும் நிக்கோபார் தொகுதியில் 62 சிறு தீவுகளும் இருக்கின்றன. அந்தமான் – நிக்கோபார் தீவுகளின் மொத்தப் பரப்பளவு 3202 சதுர மைல்கள் (8293 சதுர கிலோ மீட்டர்)

இந்தத் தீவுகளின் தலைநகரம் போர்ட் பிளேயர். துறைமுகமும் விமான தளமும் இங்குதான் அமைந்துள்ளன. அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தேசிய மூவர்ணக் கொடியை எப்பொழுது வேண்டுமானாலும் ஏற்றிப் பறக்க விடலாம் என ஜப்பான் அரசு அறிவித்துவிட்டது.

1943 டிசம்பர் 29இல் அந்தமான் நிக்கோபார் தீவுகளுக்கு நேதாஜி வருகை மேற்கொண்டார்.

போர்ட் பிளேயரில் நேதாஜி இறங்கியவுடன் அதிகாரிகள் சிலரோடு ராணுவ தலைமை அலுவலகம் சென்று தீவுகளின் நிர்வாக செயல்களைக் கண்டறிந்தார்.

அந்தமான் தீவுக்கு ஷஹீத் தீவு (தியாக வீரர்கள்) எனவும், நிக்கோபார் தீவுக்கு ஸ்வராஜ் தீவு (சுயராஜ்யம்) எனவும் நேதாஜியால் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அந்தத் தீவுகளுக்கு அரசாங்கத் தலைமை கமிஷனராக கர்னல் ஏ.டி. லோகநாதன் நேதாஜியால் நியமிக்கப்பட்டார்.

அந்தத் தீவுகளின் நிர்வாகம் நேதாஜியின் தற்காலிக அரசாங்கத்திடமும் பாதுகாப்பு நிப்போன் (ஜப்பான்) கடற்படையிடமும் இருந்தது.

அந்தமானில் மூன்று நாட்கள் தங்கியிருந்த நேதாஜி தேசிய மூவர்ணக் கொடியை அங்கு ஏற்றி வணங்கினார்.

ஜப்பானியப் படையும் ஐ.என்.ஏ. படையும் பிரிட்டிஷாரிடம் சரணடையும் வரையில் ஐ.என்.ஏ.யின் தேசிய மூவர்ணக் கொடி அந்தத் தீவுகளில் பட்டொளி வீசி கம்பீரமாகப் பறந்து சரித்திரம் படைத்திருக்கிறது.

அந்தமானை இந்திய புரட்சிக்காரர்களின் சிறைச்சாலையாக முன்பு பிரிட்டிஷார் பயன் படுத்தி வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஜான்ஸிராணி படை

நேதாஜி தலைமை தாங்கிய இந்திய தேசிய ராணுவத்தில் மாதர் பிரிவும் அமைக்கப் பட்டிருந்தது. அந்த மாதர் பிரிவுக்கு "ஜான்ஸிராணி ரெஜிமெண்ட்" என்று பெயரிடப்பட்டிருந்தது.



ஜான்ஸிராணி படைப் பிரிவைப் பார்வையிடுகிறார் நேதாஜி. அருகில் காப்டன் லட்சுமி.

1857ஆம் ஆண்டில் இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற முதல் சுதந்திரப்போரில் தீரமாகப் போராடி வீர மரணமடைந்த "ஜான்ஸி" எனும் ஊரின் ராணியான ராணி லட்சுமி பாய் நினைவாக "ஜான்ஸிராணி" எனும் பெயர் அப்பிரிவுக்குச் சூட்டப்பட்டது.

இந்திய சுதந்திர சங்க மலாயா கிளையின் மாதர் பிரிவினர் 1943ஆம் ஆண்டு ஜூலை 21இல் சிங்கப்பூர் இந்தியர் சுதந்திர சங்க மண்டபத்தில் நேதாஜிக்கு வரவேற்பு அளிக்க மண்டபத்தில் திரண்டிருந்தனர்.

ஐ.என்.ஏ.யின் மகளிர் படைக்கு "ஜான்ஸிராணி ரெஜிமண்ட்" என பெயரிட வேண்டும் எனும் தமது விருப்பத்தை நேதாஜி அந்த மாதர் கூட்டத்தில் தெரிவித்தார். ஜான்ஸிராணி லட்சுமி பாய் யுத்த முனையில் புரிந்த தீரச் செயல்களை நேதாஜி விவரித்தார். ஜான்ஸிராணி போல் பல ஜான்ஸிராணிகள் தற்போது தேவைப்படுகின்றனர் எனவும் கோரிக்கை விடுத்தார் நேதாஜி.

படையில் சேர பல பெண்கள் ஆர்வத்தோடு முன் வந்தனர்.

1943 செப்டம்பர் 3இல் பினாங்கில் நடைபெற்ற மாதர் கூட்டத்தில் நேதாஜி உணர்ச்சி மேலிட உரையாற்றினார்:

*"சுதந்திர நாடுகளில் பெண்கள் ஆண்களுக்குச் சமமாக யுத்த களத்தில் நின்று திறமையைக் காட்டியதைக் கண்டிருக்கிறேன். தங்கள் நாட்டின் சுதந்திரத்துக்காக அவர்கள் மிகப் பெரிய தியாகங்களை மகிழ்வுடன் செய்கின்றனர். நீங்களும் அவர்களைப் பின்பற்றுங்கள். இந்திய தேசிய ராணுவ வீரர்கள் போர்க்களத்தில் முன்னேறிச் செல்லும்போது ஆயிரக்கணக்கான வீரர்கள் காயமடைவார்கள். அவர்களுக்கு வைத்திய உதவிகள் அதிகம் வேண்டும். உங்கள் சகோதரர்களுக்குச் சிகிச்சை செய்து ஆறுதல் கூறி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது உங்கள் முதல் கடமை..."*

நேதாஜியின் உரையைக் கேட்ட மாதர்கள் மெய்ம்மறந்தனர்.

ஜான்ஸிராணி ரெஜிமெண்டில் சேர்ந்த மாதர்களில் 100க்கு 90 பேர் இந்தியாவில் காலடி வைத்திராதவர்கள். மலாயா, சிங்கப்பூர், பர்மா, தாய்லாந்து போன்ற நாடுகளில் பிறந்து வளர்ந்த அந்த இந்திய மாதர்கள் காட்டிய தேச பக்தி கிழக்காசியாவில் உள்ள இதர சமூகத்தினரை வியக்க வைத்தது.

1943 அக்டோபர் 21இல் சிங்கப்பூரில் சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் நிறுவப்பட்ட மறுநாள் (அக்.22) ஜான்ஸிராணி பயிற்சி முகாம் சிங்கையில் திறக்கப்பட்டது.

1943 அக். 22இல் சிங்கப்பூரில் ஜான்ஸிராணி ரெஜிமெண்ட் பயிற்சி முகாமைத் திறந்து வைத்த நேதாஜி உரையாற்றும்போது இவ்வாறு குறிப்பிட்டார்:

"இன்று திறக்கப்படும் பயிற்சி முகாமில் 156 சகோதரிகள் பயிற்சியைத் தொடங்குகிறார்கள். சிங்கப்பூரில் இந்த எண்ணிக்கை ஆயிரத்தை அடைந்துவிடும் என நம்புகிறேன். நேற்று பர்மாவிலும் இத்தகைய பயிற்சி முகாம் மாதர்களுக்காகத் திறக்கப்பட்டிருக்கிறது..."

(பர்மாவின் தலைநகர் ரங்கூனில் 1943 அக்டோபர் 21இல் ஜான்ஸிராணி ரெஜிமெண்ட் பயிற்சி முகாம் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிக்காக சிங்கப்பூரிலிருந்து ஐ.என்.ஏ. கர்னல் அழகப்பன் ரங்கூன் சென்றிருந்தார்.)

மலாயா, சிங்கப்பூர், பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுமார் 1200 பெண்கள் இப்படைப் பிரிவில் இருந்தனர்.

இந்த ஜான்ஸிராணி படைக்குப் பொறுப்பாளராக - தளபதியாக மருத்துவ டாக்டர் எஸ். லட்சுமி நேதாஜியினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஐ.என்.ஏ. வீரர்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து போர்ப் பயிற்சிகளும் ஜான்ஸிராணி ரெஜிமெண்டுக்கும் அளிக்கப்பட்டன.

இளம்பெண்களும் நடுத்தர வயது மாதர்களும் ராணுவப் பயிற்சியில் உற்சாகத்தோடு ஈடுபட்டனர்.



போர்ப் பயிற்சி பெறும் மாதர் (ஜான்ஸிராணி) பிரிவினர்.

பயிற்சிக்கு இடையே ஓய்வு கொடுக்கப்படும்போது இளம் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டுவர்.

அது ஒரு கண் கொள்ளாக் காட்சிதான்!

அந்த வீரம் செறிந்த பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கும் நாட்டுப்பற்றையும் வீரத்தையும் ஊட்டி வளர்த்தனர்.

அந்த மாதர் படைக்கு டாக்டர் எஸ். லட்சுமி தலைமைதாங்கி கம்பீரமாக நடந்து செல்வார்.

## ஜான்ஸிராணி படைத் தளபதி (டாக்டர்) லட்சுமி

இந்திய தேசிய ராணுவத்தின் மாதர் பகுதியான ஜான்ஸிராணி படைக்குத் தளபதியாக டாக்டர் லட்சுமி பொறுப்பேற்றிருந்தார்.

அப்போது 32 வயது நிரம்பியிருந்த அந்த அழகிய - திறமை வாய்ந்த இளம்பெண், சென்னை நகரைச் சேர்ந்த பாரிஸ்டர் சுவாமிநாதனின் புதல்வி.

மருத்துவம் பயின்று எம்.பி.பி.எஸ். பட்டமும் பெற்றிருந்தார். டாக்டர் லட்சுமியின் தாய் திருமதி அம்மு அகில இந்திய காங்கிரஸில் அதிக ஈடுபாடு காட்டி வந்தார்.

காரை வேகமாக ஒட்டிச் செல்வது இவரது பொழுது போக்கு. நண்பர் பி.கே. நற்கண்ட ராவ் என்பவருடன் அடிக்கடி விமானத்தில் பயணம் செய்வார்.

விமானியான அவரை மணந்து கொண்டார். குறுகிய காலத்தில் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து விட்டனர்.

பின் தன்னோடு மருத்துவம் பயின்ற ஆப்ரஹாம் எனும் கிறிஸ்துவ தமிழரைத் திருமணம் செய்து கொண்டார். ஆப்ரஹாம் தொழில் ரீதியில் சிங்கப்பூரிலேயே தங்கிவிட நேர்ந்தது.

1937ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்ற எஸ். லட்சுமி 1940ஆம் ஆண்டில் சிங்கப்பூருக்குச் சென்றார். அங்கேயே தங்கிவிட்டார்.

சுதந்திரப் போராட்டத்தில் டாக்டர் லட்சுமியும் ஈடுபட்டார்.

ஜான்ஸிராணி படைக்குத் தன்னை முழுமையாகப் பிணைத்துக் கொண்டார் டாக்டர் லட்சுமி.



காப்டன் லட்சுமி



போர்ப் பயிற்சியில் ஜான்ஸிராணிகள்

இந்திய தேசிய ராணுவப் படை எடுப்பில் டாக்டர் லட்சுமி முக்கிய பங்கு வகித்தார்.

1945 ஜூலை 2இல் டாக்டர் லட்சுமி ரங்கூனில் பிரிட்டிஷ் ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார். பின்னர், விடுவிக்கப்பட்டார்.

ரங்கூன் மோகல் தெருவில் மருத்துவ நிலையத்தை டாக்டர் லட்சுமி திறந்தார்.

ஐ.என்.ஏ.வீரர்களுக்கும், ஏழை இந்திய தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் காலையிலும் மாலையிலும் சிகிச்சை அளித்து வந்தார்.

1945 அக். 2இல் மகாத்மா காந்தி பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பொதுமக்கள் முன்னர் தோன்றி மகாத்மா பற்றி உரையாற்றினார்.

மூன்று வாரங்களுக்குப் பின்னர் ஆஸாத் ஹிந்த் அரசாங்கம் (சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம்) ஸ்தாபிக்கப்பட்ட நாளான அக். 21இல் டாக்டர் லட்சுமி பொதுமக்கள் முன்னிலையில் லெப்டினனன்ட் கர்னல் சீருடையில் தோன்றி உரையாற்றினார். "ஜெய் ஹிந்த்" என முழக்கமிட்டார்.

பர்மா பிரிட்டிஷார் ஆட்சிக்கு மீண்டும் சென்றுவிட்ட நேரம் அது.

நவம்பர் 5இல் டில்லி செங்கோட்டையில் ஐ.என்.ஏ. வழக்கு தொடரப்பட்டிருந்தது.

டாக்டர் லட்சுமியினால் ரங்கூனில் அமைதியாக இருக்க முடியவில்லை.

அமைதியான எதிர்ப்புக் கூட்டம் நடத்தினார்.

நவம்பர் 7இல் ரங்கூனை விட்டு காலவா எனும் இடத்திற்குச் செல்லுமாறு டாக்டர் லட்சுமிக்கு உத்தரவு வந்தது.

நவம்பர் 17இல் மீண்டும் அதே உத்தரவு.

மறுநாள் காலையில் ஒரு ஜீப் வீட்டிற்கு வந்தது. டாக்டர் லட்சுமியை ஏற்றிக்கொண்டு அந்த ஜீப் ரங்கூனிலிருந்து 300 மைல்களுக்கப்பால் உள்ள "மிண்டனாலோன்" விமானத் தளத்திற்குச் சென்றது. அங்கிருந்து "காலவா" எனும் இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது. பத்திரிகைகளுக்கு எழுதக்கூடாது என்கிற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

டாக்டர் லட்சுமியின் போராட்டங்களுக்குப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தடை விதித்திருந்தாலும் அவரின் கொள்கைகளை மன உணர்வுகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இரண்டாவது உலகப் போர் முடிவுக்குப் பின்னர் பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

1947 ஆகஸ்ட் 15 இல் இந்தியா சுதந்திரம் பெற்றது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் முக மலர்ச்சியோடு வீரநடை போட்டனர்.

போராட்டங்களுக்குப் பின்னர் இந்தியா திரும்பியிருந்த டாக்டர் லட்சுமி, ஐ.என்.ஏ.யில் படைத் தளபதிகளில் ஒருவராக விளங்கிய வீரர் கர்னல் பி.கே. சேகலுடன் அமைதியான குடும்ப வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கினார்.

(நேதாஜியின் நெருங்கிய சகாக்களான சேகல்-லட்சுமி தம்பதியர் 45 வருடங்களுக்குப் பின்னர் 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மலேசியாவுக்கு வருகை தந்திருந்தனர்.

பின்னர் ம.இ.கா. அமைக்கப்பட்டு மாதர் பகுதி உருவாவதற்கு டாக்டர் லட்சுமி தலைமையில் இங்கு இயங்கிய ஜான்ஸிராணி படை ஒரு முன்னோடியாக விளங்கியது.



சேகல்-லட்சுமி தம்பதியர்
45 வருடங்களுக்குப் பின்னர்
1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில்
மலேசியாவுக்கு
வருகை தந்திருந்தனர்



# இந்திய தேசிய ராணுவத்தின் முதல் படையெடுப்பு



● குறுகிய காலத்திலேயே 80 ஆயிரம் வீரர்கள் ஐ.என்.ஏ.யில் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய தேசிய ராணுவ தலைமையகம் சிங்கப்பூரிலிருந்து ரங்கூனுக்கு 1944 ஆம் ஆண்டு ஜனவரி 7 இல் மாற்றப்பட்டது.

இம்பால் வழியாக இந்தியாவினுள் நுழைய திட்டம் வகுக்கப்பட்டது.

தென்கிழக்காசியாவில் அமைக்கப்பட்ட முதல் இந்திய ராணுவப் படை முதல் தாக்குதலைத் தொடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தது.

ஆம் ஆண்டு பிப்ரவரி 4 ஆம் தேதி...

தாய்லாந்தின் வழியாக "டில்லிசலோ!" கோஷத்தை முழங்கிக் கொண்டே இந்திய தேசிய ராணுவம் இந்தியாவின் வடகிழக்கு எல்லையான அரக்கான் மலைத் தொடரில் பிரிட்டிஷ் ராணுவத்தினரோடு போர் செய்தவாறு முன்னேறிக் கொண்டிருந்தது.

மார்ச் 18 ஆம் தேதி பிரிட்டிஷ் ராணுவம் பின்வாங்கியது. இந்திய தேசிய ராணுவம் முன்னேறி பர்மா எல்லையைக் கடந்து முதன் முதலாக இந்திய மண்ணில் காலடி வைத்தது.

வீரர்கள் இந்திய மண்ணில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினர். இந்திய மண்ணுக்கு முத்தம் கொடுத்தனர்.

இம்பாலை ஊடுருவிய ஐ.என்.ஏ. படைப்பிரிவின் தளபதி கர்னல் ஷா நவாஸ் இந்திய மண்ணில் தேசிய மூவர்ணக் கொடியை நாட்டினார்.

1944 மார்ச் 21 இல் இந்தியாவில் இருப்பதாக இந்திய தேசிய ராணுவம் உலகுக்கு அறிவித்தது.

ஐ.என்.ஏ. படைகளுக்கு உதவியாக நிப்போன் படையும் போரில் சேர்ந்து கொண்டது.

(ஐ.என்.ஏ. - நிப்போன் கூட்டுப்படைகள் இந்தியாவில் கைப்பற்றும் இடங்கள் அனைத்தும் ஐ.என்.ஏ.யிடமே ஒப்படைக்க வேண்டும் என ஏற்கனவே முடிவும் செய்யப்பட்டிருந்தது).

பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இந்திய பிரதேசங்களை நிர்வகிக்க ஆஸாத் ஹிந்த்தளம் (ஆஸாத் ஹிந்த் டல்) என்ற பிரிவு நேதாஜியினால் அமைக்கப்பட்டு குறிப்பிட்ட சிலருக்கு நிர்வாகப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டிருந்தன.

போரில் விடுதலை பெற்ற பகுதிகளுக்கு முதல் கவர்னராக ஐ.என்.ஏ. கர்னல் ஏ.ஸி. சட்டர்ஜியை ஆஸாத் ஹிந்த் அரசு (சுதந்திர இந்திய தற்காலிக அரசு) நியமித்தது.

ஐ.என்.ஏ. - நிப்போன் கூட்டுப்படைகள் முக்கிய நிலையங்களைக் கைப்பற்றின. 1944 ஏப்ரல் 8 இல் இம்பாலுக்கு அருகில் உள்ள கோஹிமாவைக் கைப்பற்றின.

"அஸ்ஸாம் எல்லைப் புறத்தைக் கடந்து கோஹிமாவைக் கைப்பற்றியது பெரும் வெற்றியாகும். பிரிட்டிஷாருக்குக் கொடுக்கப்பட்ட பெரிய அடியாகும்" என்று நேதாஜி தற்காலிக அரசாங்கத்தின் பிரசார மந்திரி எஸ்.ஏ. அய்யர் அப்போது பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தார்.

கோஹிமா, மோரல், மொய்ராங், பலேட்வா ஆகிய பகுதிகளில் ஐ.என்.ஏ.யின் தேசிய மூவர்ணக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

போர் முனையிலிருந்து நேதாஜி முழங்கினார்:

"இந்தியாவின் கடைசி சுதந்திர யுத்தம் தொடங்கியிருக்கிறது. ஐ.என்.ஏ. வீரர்கள் தற்போது இந்திய மண்ணில் வீரமாகப் போராடி படிப்படியாக முன்னேறி வருகின்றனர். நமது தேசிய மூவர்ணக் கொடி புதுடில்லியில் உள்ள வைஸ்ராய் மாளிகையில் கம்பீரமாகப் பறக்கும் வரை இந்த ஆயுதப் போராட்டம் நீடிக்கும்".

இம்பாலை ஐ.என்.ஏ. படை வளைத்துக் கொண்டது. இம்பால் வீழ்ச்சியுறும் என எதிர்பார்த்த நேரம் அது. ஆனால்...

திடீரென ஏற்பட்ட பெரு மழை - மோசமான பருவநிலை ஐ.என்.ஏ. வீரர்களைத் திக்கு முக்காடச் செய்துவிட்டது. போதிய அளவு விமான உதவி இன்மையும் படை வீரர்களுக்கு "சப்ளைகள்" அனுப்புவதில் ஏற்பட்ட தடையும் ஐ.என்.ஏ. படையினருக்குப் பாதகமாக அமைந்து விட்டது. பெருத்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தாலும் உணவு ஆயுத தட்டுப்பாடு ஏற்பட்டதாலும் பிரிட்டிஷ் படையின் இடைவிடாத குண்டு மழையினால் இந்திய தேசிய ராணுவம் முன்னேற இயலவில்லை.

மறுதாக்குதலுக்குத் தயாராவதற்காகச் சக்தியை வீணடிக்காமல் பின்வாங்கினர்.

மீண்டும் இம்பாலைத் தாக்க ஐ.என்.ஏ. ராணுவத்தின் 2 ஆவது பிரிவு மேஜர் ஜெனரல் ஷா நவாஸ் தலைமையில் புறப்பட்டது. மேஜர் தில்லானும் கர்னல் சாகலும் உடன் சென்றனர்.



இம்பால் போர்முனையில் ஓர் ஐ.என்.ஏ. வீரர்.

பிரிட்டிஷாரின் பீரங்கிகள், புதிய போர் முறைகள், இயந்திரத் துப்பாக்கிகள் முன்பாக விடுதலை ராணுவத்தினர் திணறினர்.

1945 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் போரின் நிலைமை மாறத் தொடங்கியது.

அப்போது ஜப்பானுக்குப் பாதகமான நிலைமை.

பசிபிக் பகுதியில் அமெரிக்கா பெரும்படை பலத்தோடு மறுதாக்குதலைத் தொடங்கி முன்னேறிக் கொண்டிருந்தது.

ஜப்பானில் 1944 ஆம் ஆண்டு இறுதியில் பிரதமர் தோஜோ மந்திரி சபை கலைக்கப்பட்டு கொய்ஸோ மந்திரிசபை அமைக்கப்பட்டிருந்தது.

போரில் தங்களைத் தற்காத்துக் கொள்வதில் கவனம் செலுத்தத் தொடங்கினர் ஜப்பானியர்.

பர்மா போர்முனையைப் பாதுகாப்பதில் ஜப்பான் தீவிரம் செலுத்தவில்லை. ஆகவே பர்மாவின் தற்காப்பில் ஐ.என்.ஏ. படை மட்டுமே ஈடுபடவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

மத்திய பர்மாவிலுள்ள மெக்டிலா என்ற பகுதியைப் பிரிட்டிஷார் கைப்பற்றி முன்னேறினர். ஐ.என்.ஏ. படை நேரிடையாகப் பிரிட்டிஷ் படையோடு தற்காப்புப் போரில் ஈடுபட்டது.

### பாலசேனா

பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களைக் கொண்டு "ஐ.என்.ஏ. பாலசேனா" என்ற ஒரு பிரிவும் இயங்கி வந்தது. அப்படையைச் சேர்ந்த இளைஞர்கள் "தற்கொலைப் படை" போல பர்மாவில் பணியாற்றினர். எதிரிகளின் டாங்கிகள் மீது குண்டுகள் வீசினர்.

பர்மாவில் பிரிட்டிஷ் படைகள் நுழைந்தன.

பர்மாவில் இருந்த நிப்போன் தலைமை ராணுவமும் பர்மா அரசும் 1945 ஏப்ரல் 23 இல் ரங்கூனை விட்டு வெளியேறின. ரங்கூனிலிருந்து சுதந்திர இந்திய தற்காலிக அரசாங்கம் தலைமையகத்தையும் மாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகியது.

1945 ஏப்ரல் 24 இல் தமது அமைச்சர்கள், தற்காலிக அரசின் தலைமையக அதிகாரிகள், சிங்கை – மலாயா – சயாம் ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த ஜான்ஸிராணிகள் ஆகியோரோடு தாள முடியாத மன வேதனையோடு நேதாஜி ரங்கூனை விட்டுப் புறப்பட்டார்.

காக்கி உடை, தொப்பி, ரப்பர் பூட்ஸ்... ஆகியவை அணிந்து ஒரே சீருடையில் ஆயுதங்களை ஏந்தியவாறு ஐ.என்.ஏ. வீரர்களோடு சேர்ந்து ஜான்ஸிராணி ரெஜிமெண்டும் போர்முனையில் தங்கள் வீரத்தை – தீரத்தைக் காட்டியிருந்தன.

பர்மாவில் மால்மின் அருகில் இந்த ஜான்ஸிராணி மாதர் படை லெப்.கர்னல் டாக்டர் லட்சுமி தலைமையில் எதிரிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. தொடர்ந்து 16 மணி நேரம் அப்பகுதியில் ரைபிளை ஏந்தி மலாயா – சிங்கப்பூர் – சயாம் ஆகிய நாடுகளிலிருந்து சென்ற இந்தியப் பெண்கள் போரிட்டனர்.

பர்மாவை விட்டுப் புறப்படுவதற்கு முன்னர் நேதாஜி பர்மாவிலுள்ள இந்தியர்களுக்குப் பாதுகாப்பாக மேஜர் ஜெனரல் ஏ.டி.லோகநாதன் தலைமையில் 6 ஆயிரம் ஐ.என்.ஏ. வீரர்களை ரங்கூனில் நிறுத்தியிருந்தார்.

(அந்தமான் – நிக்கோபார் தீவுகளின் நிர்வாகத்தை ஏற்றிருந்தவரும் மேஜர் ஜெனரல் ஏ.டி.லோகநாதன்தான்).

1945 மே 19 இல் பர்மா பிரிட்டிஷாரிடம் வீழ்ந்தது. ஆட்சி பிரிட்டிஷாரிடம் மாறும் வரை ரங்கூன் நகரின் பாதுகாப்பு ஐ.என்.ஏ.யிடம் இருந்தது. அங்கு ஒழுங்கும் அமைதியும் திகழ ஐ.என்.ஏ. பாதுகாப்பு வழங்கியது.

ரங்கூனை விட்டுப் புறப்பட்ட நேதாஜி தமது குழுவினரோடு பாங்காக்குக்கு 1945 மே 16 இல் வந்து சேர்ந்ததாக 1945 மே 25 இல் பங்காக்கிலிருந்து அறிவிக்கப்பட்டது.

1945 ஆகஸ்ட் 6 இல் ஜப்பானிலுள்ள ஹீரோஷிமாவிலும் தொடர்ந்து ஆகஸ்ட் 9 இல் நாகசாகி நகரிலும் அமெரிக்கா சக்தி வாய்ந்த அணுகுண்டுகள் போட்டு அந்நகர்களை அழித்தவுடன், ஆகஸ்ட் 15 இல் யுத்தத்தை நிறுத்தி சரணடைவதாக ஜப்பானிய சக்கரவர்த்தி வானொலியில் அறிவித்தார்.

1945 ஆகஸ்ட் 12 இல் மலாக்காவில் இருந்த நேதாஜி மறுநாள் (ஆகஸ்ட் 13) சிங்கப்பூருக்குச் சென்று தமது மந்திரிகளோடு கலந்தாலோசித்தார். ஆகஸ்ட் 15 இல் சரணடைய முன்வந்த ஜப்பானியரின் முடிவு நேதாஜிக்குக் கலக்கத்தை உண்டு பண்ணியது.

1945 ஆகஸ்ட் 16 இல் கனவுகள் கைகூடாத நிலையில் ஆழ்ந்த துயரத்தோடு நேதாஜி சிங்கப்பூரை விட்டுப் புறப்பட முடிவெடுத்தார்.

## முடிவுக்கு வந்த இரண்டாவது உலகப் போர்

உலகை உலுக்கிய இரண்டாவது உலகப்போர் ஐரோப்பாவில் 1945 மே மாதத்தில் முடிவுக்கு வந்தது.

ஜப்பானிலுள்ள ஹீரோஷிமா (HIROSIMA) நகரில் 1945 ஆகஸ்ட் 6 ஆம் தேதியிலும் நாகசாகி (NAGASAKI) நகரில் ஆகஸ்ட் 9 ஆம் தேதியிலும் அடுத்தடுத்து அமெரிக்கா சக்தி வாய்ந்த அணுகுண்டுகளைப் போட்டவுடன் ஜப்பான் நிலைகுலைந்தது.

உடனடியாக சண்டையை நிறுத்திக்கொண்டு சரணடைவதாக ஜப்பானிய சக்கரவர்த்தி ஆகஸ்ட் 15 இல் வானொலியில் அறிவித்தார்.

ஜப்பான் சரணடைந்த செய்தியை மலாயா சிங்கப்பூர் பத்திரிகைகள் ஆகஸ்ட் 21 ஆம் தேதி வரையில் வெளியிடவில்லை.

பிரிட்டனின் தென்கிழக்காசிய படைத்தளபதி லூயிஸ் மவுண்ட்பாட்டன் பிரபு முன்னிலையில் 1945 செப்டம்பர் 12 இல் சரணடையும் பத்திரத்தில் அதிகார பூர்வமாகக் கையெழுத்திடப்பட்டது.

இரண்டாவது உலகப் போருக்குக் காரணமாக இருந்த சில தலைவர்கள் போரின் இறுதியில் உயிரிழந்திருக்கின்றனர்.

யுத்தத்தின்போது ஜப்பான பிரதமராக இருந்த தோஜோ யுத்த குற்றவாளியாகக் கருதப்பட்டு 1948 இல் தூக்கிலிடப்பட்டார்.

மலாயா, சிங்கப்பூரில் ஜப்பானிய படைத்தளபதியாகப் பணியாற்றிய ஜெனரல் யாம ஷீடாவும் 1948 இல் தூக்கிலிடப்பட்டார்.

இத்தாலியப் பிரதமர் முசோலினி 1945 ஏப்ரலில் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ரஷ்யா பெர்லினைப் போரின்போது வளைத்துப் பிடித்தவுடன் ஜெர்மனிய பிரதமர் அடோல்ப் ஹிட்லர் 1945 ஏப்ரல் 30 ஆம் தேதியன்று தற்கொலை புரிந்து கொண்டார்.



ஹிட்லர்

## ஹீரோஷிமா – நாகசாகியை அழித்த அணுகுண்டு

1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6 ஆம் தேதி காலைப் பொழுது ஹீரோஷிமா நகரைச் சேர்ந்த ஜப்பானியருக்கு வேதனைக் கண்ணீர் வடிக்கும் நாளாக அமைந்துவிட்டது.

பத்து அடி நீளமும், 9,000 பவுண்ட் எடையும் கொண்ட அந்த அணுகுண்டைச் சுமந்து சென்ற அமெரிக்காவின் பி-29 ஏனோலா கேப்" எனும் விமானம் காலை 8 மணி 15 நிமிடம் 11 ஆவது வினாடியில் ஹீரோஷிமாவில் அந்த முதல் அணுகுண்டைப் போட்டது. அது 1,850 அடி உயரத்திலேயே வெடித்தது. குண்டு வெடித்தவுடன் கண்களைப் பறிக்கும் பிரகாசமான ஒளியும், அதைத் தொடர்ந்து நெருப்புக் கோளங்களும் வெளிப்பட்டன. இரண்டரை மைல் சுற்று வட்டாரத்தில் இருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை சுட்டுப் பொசுக்கியது. ஹீரோஷிமாவைச் சுற்றி மூன்று மைல்களுக்குள் இருந்த 90,000 கட்டடங்கள் அழிந்தன. 75,000 பேர் உயிரிழந்தனர். பலர் பலத்த காயம் அடைந்தனர்.

மூன்று நாட்களுக்குப் பின்னர் ஆகஸ்ட் 9 இல் மற்றொரு அணுகுண்டு நாகசாகி நகரில் வீசப்பட்டது. நாகசாகியில் 40,000 பேர் கொல்லப்பட்டனர்.

# நேதாஜியின் இறுதி நாட்கள்...

சிங்கப்பூரில் ஜப்பானியர் 1945 ஆகஸ்ட் 15 இல் சரணடைந்ததும் எந்த நிமிடமும் ஆங்கிலேயர் சிங்கப்பூரில் நுழைந்து விடும் நிலைமை இருந்தது.

சிங்கப்பூரில் தொடர்ந்து இருப்பது பாதுகாப்புக்கு உகந்ததல்ல என உணர்ந்த நேதாஜி தன் நண்பர்களுடன் விமானத்தில் சிங்கையிலிருந்து பாங்காக் பயணமானார்.

ஆகஸ்ட் 17 ஆம் தேதி காலை 8 மணிக்கு தன் சகாக்களுடன் பாங்காக்கிலிருந்து இந்தோ சீனாவின் தலைநகரான செய்கோனை நோக்கிப் புறப்பட்டார்.

செய்கோன் விமான நிலையத்திலிருந்து நேராக நண்பர் நாராயணதாஸ் இல்லம் சென்றார். அவரது சகாக்களும் உடன் சென்றிருந்தனர்.

அங்கு குளியலை முடித்துவிட்டுச் சிறிது நேரம் ஓய்வு எடுத்தனர்.

செய்கோனிலிருந்து புறப்படவிருந்த விமானத்தில் இரண்டு இருக்கைகள் மட்டுமே இருப்பதாக தொலைபேசி தகவல் கிடைத்தது.

தன்னுடன் மெய்க்காப்பாளர் கர்னல் ஹபிபுர் ரஹ்மானை மட்டும் அழைத்துக் கொண்டு தன் சகாக்களிடமும் நண்பர்களிடமும் பிரியாவிடை பெற்று மாலை 5.15 மணிக்கு விமானத்தில் புறப்பட்டார்.

இந்தோ சீனாவிலுள்ள குரையின் என்ற ஊரில் விமானம் இறங்கியது. அங்கு அன்றிரவு தங்கி மறுநாள் காலையில் (ஆகஸ்ட் 18) விமானம் டோக்கியோவை நோக்கிப் புறப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கு பார்மோஸா தீவிலுள்ள "தை ஹோகூ" என்ற ஊரில் விமானம் இறங்கியது.

சரியாக 35 நிமிடம் கழித்து மீண்டும் விமானம் பறக்கத் தொடங்கியது. 300 அடி உயரம்கூட பறந்திருக்காது. நேதாஜி பயணம் செய்த அந்த விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு விட்டது. சற்றும் எதிர்பாராத வகையில் தரையை நோக்கி இறங்கி விழுந்ததில் விமானம் தீ பிடித்துக் கொண்டது.

நேதாஜியும் மெய்க்காப்பாளர் கர்னல் ஹபிபுர் ரஹ்மானும் தீக்காயங்களோடு "தை ஹோகூ"விலுள்ள ஒரு மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

இரவு 9 மணிக்கு மருத்துவமனையிலேயே நேதாஜி உயிர் நீத்தார்.

1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 18 ஆம் நாள் இரவு 9 மணிக்கு மாவீரன் நேதாஜியின் உயிர் பிரிந்திருக்கிறது!



சைகோன் விமான நிலையத்தில் 1945 ஆகஸ்ட் 17இல் எடுக்கப்பட்ட நேதாஜியின் இறுதிப்படம் இது. மறுநாள் ஆக. 18இல் விமான விபத்தில் நேதாஜி மரணமடைந்தார் என அறிவிக்கப்பட்டது.

தென்கிழக்காசியாவில் வசித்த லட்சோப லட்சம் இந்தியர்களிடையே ஒருவித பிடிப்பை ஏற்படுத்தித் தந்த - இளைஞர்கள் மத்தியில் எதிர்கால நம்பிக்கையினை ஊட்டித் தந்த - அரசிய லிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபாடு காட்ட வழி வகுத்துத் தந்த செயல் வீரர் அயல் நாட்டில் கண் மூடிக்கிடந்தார்.

நேதாஜி மரணமடைந்த செய்தி உடனடியாக லண்டன் வானொலியில் அறிவிக்கப்பட்டது.

தைவானில் நேதாஜியின் உடலை தகனம் செய்தனர். அஸ்தியைக் கர்னல் ஹபிபுர் ரஹ்மான் டோக்கியோவுக்குக் கொண்டு சென்றார்.

நேதாஜியின் அஸ்தி இன்று வரை ஜப்பான் தலைநகரான டோக்கியோவிலுள்ள ரங்கோஜி ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில் நேதாஜி நினைவு நாள்

கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆகஸ்ட் 18 ஆம் நாளன்று நேதாஜியின் நினைவு நாளில் ஜப்பானில் நேதாஜியின் நெருங்கிய நண்பர்களும், ஆதரவாளர்களும் "அஞ்சலி" செலுத்தி வருகின்றனர்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் அஸ்தி வைக்கப்பட்டுள்ள டோக்கியோ ரங்கோஜி ஆலயத்தில் நேதாஜியின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரும் ஜப்பான் ததாஜி அகாடமியின் தலைவருமான ததாஜி கட்டகுரோ தலைமையில் இந்த நினைவு நாள் பிரார்த்தனை இடம் பெற்று வருகிறது.

1990 ஆகஸ்ட் 18 இல் டோக்கியோ ரங்கோஜி கோயிலில் நடைபெற்ற 43 ஆவது ஆண்டு நேதாஜி நினைவு நாள் பிரார்த்தனையில் இந்தியாவிலிருந்து ஐ.என்.ஏ. கர்னல் சாகலும், அவரது வாழ்க்கைத் துணைவியும், ஜான்ஸி ராணி படைப்பிரிவின் பொறுப்பாளருமான லெப்டினன்ட் கர்னல் டாக்டர் லட்சுமியும் கலந்து கொண்டனர்.

## நேதாஜி உயிருடன் இருக்கிறாரா?

நேதாஜியின் மரணச் செய்தியைப் பலரும் நம்ப மறுத்தனர். அவர் எங்கோ மறைந்திருப்ப தாகவே கருதினர்.

குறிப்பிட்ட சில இடங்களில் அவரைப் பார்த்ததாகவும் சிலர் தகவல்கள் தந்து கொண் டிருந்தனர்.

தமிழ் நேசன், ஜனநாயகம ஆகிய மலாயா தினசரி பத்திரிகைகள் நேதாஜி உயிருடன் இருக்கிறாரா என்பதைப் பற்றிய செய்திகளையே அதிகமாக அப்பொழுது வெளியிட்டு வந்தன.

நேதாஜி மரணம் பற்றி பண்டிட் நேரு ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். தமிழ் நேசன் பத்திரிகையில் 1946 ஆகஸ்ட் 2 இல் வெளியிடப்பட்ட அந்த அறிக்கை வருமாறு :

"நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் மரணமடைந்தார் என்ற செய்தியை நான் சிறிது காலம் நம்பவே இல்லை. ஆனால், இ.தே.ராணுவ உயர் அதிகாரியும் நேதாஜி போஸுடன் நெருங்கிப் பழகிய வரும் அவரது அன்புக்குப் பாத்திரமானவரும் கடைசிவரை அவர் கூடவே சென்று விமான விபத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அடுத்த படுக்கையில் படுத்து சிகிச்சை பெற்றவருமான கர்னல் ஹபிபுர் கூறிய - எழுதிய ஆதாரங்களுடன், உண்மையைக் கேட்டதன் பேரில், நான் போஸ் உயிருடன் இருக்கிறார் என்ற எனது நம்பிக்கையை, முடிவை கைவிடும்படி நேரிட்டுள்ளது.

"நேதாஜி மரணத்தின்போது பக்கத்து கட்டிலில் சிகிச்சை பெற்ற கர்னல் ஹபிபுர் ரஹ்மான் கூறுவதைவிட வேறு ஆதாரம் தேவையில்லை. மேலும் தமக்கு எதிரிலேயே தகனம் செய்யப் பட்டதாகவும், அவரது சடலத்தை வேறு எங்கும் அனுப்ப இயலாது இருந்தது பற்றியும் கர்னல் ஹபிபுர் ரஹ்மான் கூறியிருக்கிறார்.

"நேதாஜி போஸ் உயிரோடு இருக்க வேண்டுமென்பதே என்னுடைய மனப்பூர்வமான விருப்பம். என்றாலும், பொதுமக்களின் ஏமாற்றத்துக்கு வீண் நம்பிக்கைக்கு இடம் தரக்கூடிய இவ்வித பொறுப்பற்ற ஆதாரமற்ற பிரசாரத்தை ஒழிக்க வேண்டுவது அவசியம்".

நேருவின் அந்த அறிக்கையையும் பொருட்படுத்தாமல் இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்த பிறகே நேதாஜி வெளியில் தோன்றுவார் என சிலர் பேசியும் எழுதியும் வந்தனர்.

இந்தியாவுக்கு 1947 ஆகஸ்ட் 15 இல் சுதந்திரம் கிடைத்தது.

முதல பிரதமராக நேரு பொறுப்பேற்றார்.

நேரு இந்தியப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் ஐ.என்.ஏ. வீரர்களுக்கும் இந்திய சுதந்திரக் கழக தொண்டர்களுக்கும் ஓர் அங்கீகாரம் கிடைத்தது.

ஐ.என்.ஏ. தளபதிகளாகப் பொறுப்பு வகித்திருந்த கர்னல் ஷா நவாஸ்கான், கர்னல் போன்ஸ்லே ஆகியோர் நேரு அமைச்சரவையில் இடம்பெற்றனர். இந்திய சுதந்திரக் கழக மலாயா கிளையின் தலைவராக இருந்த என். ராகவன் பிரான்ஸுக்கு இந்தியத் தூதராகவும் மற்றொரு இந்திய சுதந்திரக் கழகத் தொண்டர் கே.பி.எஸ். மேனன் ரஷ்யாவுக்கான இந்தியத் தூதராகவும், ஜான் திவி மலாயா சிங்கப்பூருக்கான இந்தியத் தூதராகவும் பொறுப்பேற்க வழி அமைத்தார்.

நேதாஜியைப் பற்றிய சர்ச்சை தொடர்ந்தது.

நேதாஜியின் மூத்த சகோதரர் சரத் சந்திர போஸின் புதல்வர் டாக்டர் சிசிர் குமார் கடந்த 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மலேசியாவுக்கு வருகை தந்திருந்தபோது நேதாஜியோடு தொடர்பு கொண்டிருந்த சில நண்பர்கள் அவருக்கு கோலாலம்பூரில் ஒரு வரவேற்பு நல்கினர்.

"நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இதுவரை உயிருடன் இருக்கிறார் என்பதை நிரூபிக்க ஆதாரம் எதுவும் இல்லை. ஆகவே அவர் இறந்து விட்டார் என்பதையே நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நேதாஜி உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதை நிர்ணயிக்க இரண்டு விசாரணை கமிஷன்கள் நியமிக்கப்பட்டன. அந்தக் கமிஷன்களின் அறிக்கையை இந்திய அரசாங்கமும் ஏற்றுக்கொண்டது" என்று டாக்டர் சிசிர் குறிப்பிட்டார்.

நேதாஜி கல்கத்தாவிலிருந்து மாறு வேடத்தில் காரில் தப்பிச் சென்றபோது சுமார் 400 மைல் தூரம்வரை அந்தக் காரை ஓட்டிச் சென்றவர் இவர்தான். அப்பொழுது இவருக்கு வயது 20.

கல்கத்தாவில் இயங்கி வரும் நேதாஜி வாழ்க்கை ஆய்வு நிலையத்தின் இயக்குநராகவும் டாக்டர் சிசிர் பணி புரிந்து வருகிறார்.

## நேதாஜியின் புதல்வி

கல்கத்தாவில் வீட்டுக்காவலில் இருந்து தப்பி பெர்லின் சென்ற நேதாஜி அங்கு தங்கியிருந்த போது அவருக்குச் செயலாளராகத் துணை புரிந்த ஜெர்மனியப் பெண்ணான எமிலி ஷ்ங்க்ல் என்பவரை 1942 இல் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. கைக்குழந்தையாக இருந்தபோது நேதாஜி பிரியாவிடை பெற்று தென் கிழக்காசியாவுக்குப் பயணமாகிவிட்டார்.

அந்தப் புதல்வியின் பெயர் அனிதா போஸ்.

தற்போது அனிதா ஜெர்மனியில் உள்ள அக்ஸ்பரி பல்கலைக்கழகத்தில் அனைத்துலக சட்டத்துறை பேராசிரியராக இருக்கிறார். அவருடைய கணவர் மார்ட்டின் புவா அதே பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்துறை விரிவுரையாளராகப் பணி புரிகிறார்.

1986 ஆம் ஆண்டில் அனைத்துலக 6 ஆவது நேதாஜி கருத்தரங்கில் கலந்து கொள்ள இந்தியா வந்திருந்தார். இந்திய அதிபரின் சிறப்பு விருந்தினராகவும் சில நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

நேதாஜி பற்றிய அனைத்துலகக் கருத்தரங்கு கல்கத்தாவில் ஆண்டுதோறும் ஜனவரி 26 இல் நடந்து வருகிறது.

## தூய தொண்டர்கள்

இந்திய சுதந்திரக் கழகத்தைச் சேர்ந்த தொண்டர்களும் ஐ.என்.ஏ. (இ.தே.ரா.) வீரர்களும் தங்கள் தலைவர் நேதாஜி மீது உயிரையே வைத்திருந்தார்கள். அவரின் கீழ் பணி புரிவதை தங்கள் வாழ்நாளில் கிடைத்த பெரும் பாக்கியம் எனக் கருதினார்கள்.

நேதாஜி இங்கு நடத்திய இயக்கம் செயலிழந்த பிறகும் அந்த இயக்கத்தைப் பற்றி – அதன் நடவடிக்கைகளைப் பற்றி பத்திரிகைகளில் எழுதி வந்தார்கள்; கூட்டங்களில் பேசி வந்தார்கள். நேதாஜியின் நினைவு நாள் விழாக்களைக் கொண்டாடி வந்தார்கள். அவரின் உருவப் படங்களை மாட்டி மரியாதை செலுத்தி வந்தார்கள். அவரின் உருவப் படத்தைப் பார்க்கிற போது உத்வேகம் ஏற்படுவதாக வெளிப்படையாகவே கூறிவந்தார்கள்.

இந்திய தேசிய ராணுவத்தில் ஓர் இளம் வீரராகப் பயிற்சி பெற்று நேதாஜியின் நடவடிக்கை களில் ஈடுபட்ட ப.பவளகாந்தம் 21.10.1946 இல் வெளிவந்த "ஜனநாயகம்" தினசரியில் "எங்களின் இந்திய தேசிய ராணுவப் பயிற்சி" என்ற தலைப்பில் எழுதியிருந்த கட்டுரையில் ஒரு பகுதி இது.

"கிழக்காசியாவிலே அதுவும் இம்மலாய் நாட்டிலே நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தோன்றுவார் என யாரும் யூகிக்கவில்லை. இந்நாட்டில் பல்லாயிரக்கணக்கான மாந்தர்களின்

தேசிய ஆவலுக்குப் பாத்திரமானார். தேசிய பிம்பமே உருவாக்கப்பட்டு தங்களுக்குக் காட்சி அளிக்கிறார் என ஆர்ப்பரித்தனர். நேதாஜியின் தூய லட்சியத்திற்கு வணக்கம் செலுத்தினர். தலைவரின் கட்டளையை நிறைவேற்ற நாட்டில் பலமான ஆலோசனைகள் எழுந்தன...

"கோலாலம்பூரிலும் இதர இடங்களிலும் நேதாஜியின் சொற்பெருக்கு பரவலாயிற்று.

"இம் மலாயா தீபகற்பத்தில் உள்ள இளைஞர்கள், யுவதிகள், நடுத்தரப் பெண்கள் பல ஆயிரக் கணக்கில் தியாகசீலர்களாய் முன்னிலையில் வந்தனர். அவர்களே பர்மா போர் முனையிலும் இம்பால் வரையிலும் போர்க் கருவியுடன் யுத்தம் புரிந்த வீரத் தியாகிகளும் வீராங்கனைகளும் ஆவர்.

"அளிக்கப்பட்ட ராணுவ பயிற்சி எங்களுக்கு ஊக்கத்தையும் தைரியத்தையும் அளித்தது. நேதாஜியின் வழியைப் பின்பற்றி நாட்டிற்காகத் தியாகம் செய்ய உந்திற்று.

"இந்த நிலையில் நாங்கள் படைகளில் சேர்ந்து பல பயிற்சிகள் பெற்று இம்பால்வரை சென்று பாரத அன்னையின் விலங்குகளை தகர்த்தெறிய முற்பட்டோம். ஆனால் துரதிருஷ்டவசமாக எங்கள் போர் வெற்றி பெறவில்லை. என்றாலும் நேதாஜி எங்களுக்கு அளித்த உத்வேகம் இன்னும் எங்களது நாடி நரம்புகளில் வீர நர்த்தனம் புரிந்து கொண்டுதானிருக்கிறது...

● 1946 அக்டோபர் 21 இல் இக்கட்டுரையை நேதாஜி நினைவாக 'ஜனநாயகம்' தினசரியில் எழுதியிருந்த ப.பவளகாந்தம் 1946 இல் கோலாம்பூரில் நடந்த ம.இ.கா. அமைப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவர். 1947 ஆம் ஆண்டு முதல் 1950 ஆம் ஆண்டு வரை செந்தூல் ம.இ.கா. கிளையில் செயலாளராகப் பொறுப்பு வகித்த பின்னர் சிங்கப்பூருக்குச் சென்று அங்கேயே போலீஸ் அதிகாரியாகப் பணிபுரிந்து பின்னர் ஒய்வு பெற்று வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார்.





இங்குள்ள இந்தியர்களுக்கு "உதவி நிவாரணக் குழு" இங்கு அமைக்கப்பட்டது.

நேதாஜியைப் பற்றியும் இந்திய தேசிய ராணுவத்தைப் பற்றியும் பல கட்டுரைகள் தொடர்ந்து நம் நாட்டுப் பத்திரிகைகளில் அந்தக் கால கட்டத்தில் வெளிவந்தன.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தென்கிழக்காசியாவுக்கு வந்த முதல் வாரத்தில் அவர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்காக ஆண்டுதோறும் ஜூலை 4 முதல் 10 ஆம் தேதி வரை நேதாஜி வாரமாக அவரது தொண்டர்களால் மலாயா சிங்கப்பூரில் கொண்டாடப்பட்டு வந்தது.

ஆண்டுகள் பல கழிந்து விட்டாலும் நேதாஜியோடு பழகிய இந்திய சுதந்திரக் கழக தொண்டர்கள் - ஐ.என்.ஏ. வீரர்கள் அதே உணர்ச்சியோடு - கட்டுப்பாட்டோடு இன்னமும் இருந்து வருகிறார்கள்.

## கோலாலம்பூரில் நேதாஜி ஆய்வு நிலையம்

நேதாஜி இயக்கத்தில் முன்பு ஈடுபட்டிருந்த தொண்டர்களில் சிலர் கோலாலம்பூரில் ஒன்று கூடி நேதாஜி ஆய்வு நிலையம் எனும் ஓர் அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

கல்கத்தாவில் ஆண்டுதோறும் ஜனவரி மாதத்தில் நடைபெறும் அனைத்துலக நேதாஜி கருத்தரங்கில் கோலாலம்பூர் நேதாஜி ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

கடந்த *23.12.1989* இல் கோலாலம்பூரில் நேதாஜி ஆய்வு நிலையத்திற்கான மையம் திறப்பு விழா கண்டது.



மதுரையிலுள்ள நேதாஜி சிலையின் முன் கோலாலம்பூர் நேதாஜி ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த க. குருபாதம், சுப. நாராயணசாமி மற்றும் நண்பர்கள்.

# மறக்க முடியாத மரண ரயில்வே

இரண்டாவது உலகப்போரின் போது ஜப்பானியர்கள் மேற்கொண்ட இந்த ரயில்பாதை போடும் முயற்சி பெரும் துயரக் கதையாகவே முடிந்திருக்கிறது.

தாய்லாந்திலுள்ள காஞ்சனாபுரியிலிருந்து (KANCHANAPURI) தென் பர்மாவிலுள்ள மோல்மின் (MOULMEIN) வரையில் ரயில்பாதை போட ஜப்பானியர் முடிவெடுத்தனர்.

அப்போது பர்மாவில் இருந்த ஜப்பானியர் படையினருக்குத் தேவைப்படும் பொருட்களை அனுப்ப இந்த ரயில் பாதை பயன்படும் என கருதினர். கடல் மார்க்கமாக அனுப்ப சிரமம் ஏற்பட்டிருந்ததாலேயே இந்த நடவடிக்கையை ஜப்பானிய ராணுவ அதிகாரிகள் மேற்கொண்டனர்.

1943 ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த ரயில்பாதை போடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

428 கிலோ மீட்டர் தூரம் கொண்ட ரயில்பாதையைப் போட்டு முடிக்கும் பணியில் சுமார் 60 ஆயிரம் பேர் ஈடுபட்டனர்.

போர்க்கைதிகளையும், கட்டாயத்தின் பேரில் கொண்டு வரப்பட்ட இளைஞர்களையும் நடுத்தர வயதினரையும் இந்த வேலைக்குப் பயன்படுத்தினர்.

ரயில்பாதை அமைப்பதில் திறமை பெற்றிருந்த சிவில் இன்ஜினியர்கள், ரயில்வே இன்ஜினியர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் பலர் தருவிக்கப்பட்டிருந்தனர்.

மலாக்கா - தம்பின், கோத்தபாரு - கோலலிப்பிஸ் பகுதிகளில் போடப்பட்டிருந்த ரயில் தண்டவாளங்கள் எடுக்கப்பட்டு புதிய பர்மா ரயில் பாதைக்குப் பயன்படுத்தப்பட்டது.

மலாயா, சிங்கப்பூர், சுமத்ரா, இந்தோனேசியா, பர்மா, ஜப்பான், மன்சூரியா போன்ற இடங்களிலிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

அடர்ந்த காடுகளுக்கு இடையில் ரயில்பாதை போடப்பட்டது. காட்டை அழிக்கும் பணியில் பலர் உயிரை விட்டனர்.

ஆங்காங்கே கூடாரம் அமைத்துக் கொண்டு போதிய உணவின்றி, கொடிய மிருகங்களுக்குப் பயந்து கொண்டு, கையில் உயிரைப் பிடித்துக் கொண்டு, ஜப்பானியரின் கொடூரமான தண்டனைகளைப் பெற்றுக் கொண்டு, வழியில் பிணங்களைப் பார்த்துக் கொண்டு அந்த ரயில் பாதை வேலையில் ஈடுபட்டனர்.

("குவை" (KWAI) ஆற்றின் மீது பாலத்தை அமைத்து அதன் மீது ரயில்பாதை போடப்பட்டது. அந்த ஆற்று நீரில் மனித ரத்தமும் வியர்வையும் கலந்து ஓடின).

இந்திய தேசிய ராணுவம் இம்பாலில் போர் தொடுத்த சமயத்தில் அந்த 428 கிலோ மீட்டர் தூர ரயில் பாதை திட்டமிட்டபடி போடப்பட்டு விட்டது.

ஜப்பானியர் ரயில்பாதையைப் பயன்படுத்தினர். ரயில் வண்டிகள் ஓடின.



● 1943இல் குவை ஆற்றின் மீது பாலத்தை அமைத்து அதன் மீது (மரண) ரயில் பாதை போடப்பட்டது...

பர்மா எல்லையிலிருந்து இந்தியாவைப் பார்த்துவிட்டு சிங்கப்பூருக்குத் திரும்பியபோது நேதாஜி அந்த ரயில் பாதையைப் பயன்படுத்தினார். பிரிட்டிஷார் அந்த ரயில் இணைப்பைக் குறிவைத்தனர். குண்டுகள் வீசப்பட்டன.

சேதமுற்ற பகுதிகளை ஜப்பானியரின் கட்டளைக் கிணங்க தொழிலாளர்கள் சீர்படுத்தினர். தொடர்ந்து பிரிட்டிஷார் வீசிய குண்டுகள் அந்த குவை ஆற்றுப் பாலத்தை தகர்த்தெறிந்தன. மீண்டும் சீர்படுத்தி பயன்படுத்த முடியாத அளவுக்கு அது சேதமுற்றது.

அந்த ரயில் பாதை போடும் பணியில் ஈடுபட்டவர்களில் ஆசியத் தொழிலாளர்கள் சுமார் 10 ஆயிரம் பேர் மரணமடைந்திருக்கின்றனர். 3,600 ஆஸ்திரேலிய போர்க் கைதிகளும், 3,400 பிரிடடிஷ் போர்க்கைதிகளும் இறந்திருக்கின்றனர். 1,500 ஜப்பானிய பணியாளர்கள் வீடு களுக்குத் திரும்பவில்லை எனவும் பின்னர் அறிவிக்கப்பட்டது.

பல உயிர்களைப் பறித்த அந்த "மரண ரயில்வே" திட்டம் தேவையில்லாத ஒரு முயற்சி என்றே பலரும் பின்னர் கருத்து தெரிவித்தனர்.



அந்த சயாம் 'மரண ரயில்வே'



# இந்த நூலை உருவாக்கியபோது வரலாற்றுக் குறிப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கத் துணைபுரிந்த சில நூல்கள் – சஞ்சிகைகள்


1. THE GLORY THAT IS I.N.A. (1946)
(P.O. Roy, Cullcutta)

2. F. KIKAN (1983)
(Fujiwara Iwai Chi)

3. THE INDIAN NATIONAL ARMY
Second Front of the Indian Independence Movement (1969)
(K.K. Ghosh)

4. A HISTORY OF MALAYA (1962)
(J. Kennedy)

5. THE CHINESE IN MALAYA (1967)
(Victor Purcell)

6. INDIA AND MALAYA : A STUDY (1954)
(N. Ragahuan)

7. INDIANS IN MALAYSIA AND SINGAPORE (1970)
(S. Arasaratnam)

8. INDIANS IN MALAYA : (1969)
Immigration and Settlement (Kernail Singh Sandhu)

9. JUNGLE WAR IN MALAYA (1972)
(Harry Millor)

10. CLASS RACE & COLONIALISMIN WEST MALAYSIA (1980)
(Michael Stenson)

11. THE OVERSEAS CHINESE AND THE 1911 REVOLUTION (1976)
(Yew Chinca Hwana)

12. CONGRESS MISSION TO MALAYA (1947)
(C. Sivarama Sastri)

13. JUNGLE ALLIANCE JAPAN AND INDIAN NATIONAL ARMY (1971)
(oyce Lebra)

14. INDIANS IN MALAYA : HISTORICAL FACTS AND FIGURES (1961)
(G. Netto)

15. THE ROAD TO DELHI (1966)
(M. Sivaram)

16. THE SPRINGING TIGER (1959)
A STUDY OF REVOLUTIONARY
(H. Toye)

17. INDIAN OVERSEAS (1838-1949)
(C. Kondapi) (1951)

18. IMMIGRANT LABOUR AND THE DEVELOPMENT OF MALAYA 1786-1920
(R.N. Jackson) (1961)

19. SEJARAH MALAYSIA (1989)
(Ranjit Singh Malhi)

20. THE STORY OF MALAYSIA
(Harry Miller)

21. CRY FREEDOM
(The Illustrated Weekly of India - August 28, 1988)

22. முதல் இந்திய சுதந்திர அரசு
"சக்தி" – தமிழ்நாடு (கூட்டுறவு – நவம்பர், 1988)

23. நேதாஜியின் சாணக்கியம்
(எம்.கே. சிதம்பரம்) தமிழ்முரசு ஆண்டு மலர், 1958)

24. மலேசியக் கல்வி நிலை – விடுதலைக்குமுன்
(பி.எஸ். வெங்கடேசன், ஆறாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு மலர் 1987)

25. தமிழ்நேசன், தமிழ் முரசு, ஜனநாயகம்,
STRAITS TIMES,. THE INDIAN (K.L.)
INDIAN DAILY MAIL (SINGAPORE)
MALAYAN DAILY NEWS (K.L.)
ஆகிய ஏடுகளின் குறிப்பிட்ட சில பிரதிகள்.

26. ARKIB NEGARA MALAYSIA, KUALA LUMPUR




உ.த.நி.
எண் 99275
நூலகம்



## ப. சந்திரகாந்தம்

- மலேசியத் தலை நகர் கோலாலம்பூரில் பிறந்து வளர்ந்த இவர் தன் பதினாறாவது வயதில் நாடகங்கள், சிறுகதைகள் எழுதத் தொடங்கியவர்.
- ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் தமிழ்ப்பிரிவில் மூன்றாண்டுகள் பயின்று தேர்வுபெற்ற பின்னர் பள்ளி ஆசிரியராக வாழ்க்கைத் தொழிலை தொடக்கத்தில் மேற்கொண்டவர்.
- எழுத்துத்துறை - பத்திரிகைத்துறை மீதிருந்த நாட்டத்தில் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்துக் கொண்டே பிற்பகலில் தமிழ்நேசன் தினசரியில் ஆசிரியர் குழுவில் பணியாற்ற வாய்ப்பு பெற்றவர். தமிழ்நேசன் அப்போது வெளியிட்டு வந்த நேசன் சிறுவர் அரங்கம் இதழின் பொறுப்பை தன் இருபதாவது வயதில் ஏற்றவர் சந்திரகாந்தம் அண்ணா' எனும் பெயரில் தலையங்கமும் கேள்வி பதில் பகுதிக்குப் பதில்களும் தந்து வந்தவர். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 'தமிழ்நேசன்' ஞாயிறு பதிப்பின் பொறுப்பாசிரியராக அப்போதைய 'நேசன்' பிரதம ஆசிரியர் முருகு. சுப்பிரமணியன் அவர்களால் நியமிக்கப்பட்டவர்.
- பள்ளி ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு பத்திரிகைத் துறையில் முழுமையான ஈடுபாடு.
- 'தமிழ்நேசன்' ஞாயிறு பதிப்பில் இவர் எழுதிய முதல் நாவலான ஆயிரத்தில் ஒருத்தியைத் தொடர்ந்து ஆயிரம் வாசல் இதயம், அழதால் உன்னைப் பெறலாமே, அலைபாயும் மனம் அடங்காதோ, அழகின் ஆராதனை, அதுதானா இது, அவளும் ஒரு தேவதைதான் ஆகிய தொடர்கதைகள் இடம்பெற்றன. 'இன்னொருநிலா' தொடர்கதை வானம்பாடி வாரஇதழிலும் 'அவனின் அவள்' தொடர்கதை மயில் வார இதழிலும் பிரசுரமாகின. மலாக்கா வரலாற்றுப் பின்னணியின் எழுதிய 'ஆடும் மஞ்சள் ஊஞ்சல் எனும் நாவல் 1985ல் தனி நூலாக வெளிவந்தது. ஆயிரத்தில் ஒருத்தி எனும் இவரின் முதல் தொடர்கதை 1964 டிசம்பரில் தமிழ்நேசன் ஞாயிறுபதிப்பில் 6 மாதங்களுக்குத் தொடராக இடம்பெற்றது.
- சிங்கப்பூர் வானொலியில் இவரது தொடக்க கால நாடகங்கள் பல ஒலியேறின.

  மலேசிய வானொலியில் 1962ல் 'ஆசைக்கனவு' எனும் தொடர்நாடகம். மலேசிய வானொலியில் இவரது முதல் படைப்பே அதுதான். மலேசிய வானொலியில் அப்போதுதான் தொடர் நாடகம் அறிமுகப் படுத்தப்பட்டது.
- முதல் தொடர் நாடகம் எழுத வாய்ப்புத் தந்ததோடு பின்னர் மலேசிய வானொலியில் பணி புரியவும் வாய்ப்பை உருவாக்கித்தந்தவர் அப்போதைய மலேசிய வானொலி இந்தியப் பகுதியின் தலைவர் இரா. பாலகிருஷ்ணன் அவர்கள்.
- சந்திரகாந்தம் கைவண்ணத்தில் 30க்கு மேற்பட்ட தொடர்நாடகங்கள், 600க்கு மேற்பட்ட வானொலி நாடகங்கள், அரைமணி நேர ஒரு மணி நேர சிறப்பு நாடகங்கள், உரைத்தொடர், கட்டுரைத் தொடர் ......................
- அண்மையில் வானொலியில் ஒலியேறிய இவரது தொடர் நாடகங்கள் : 1993 செப்டம்பரில் (8 வாரங்களுக்கு) அந்திமயங்குதடி ஆசைபெருகுதடி, 1994 பிப்ரவரியில் (8 வாரங்களுக்கு) அலை பாயுதே கண்ணா... 1994 ஜுலையில் (8 வாரங்களுக்கு) அவசரயுகம்.
- மலேசிய வானொலி இந்தியப் பகுதியில் வானொலி எழுத்தாளராக, நிகழசசி தயாரிப்பாளராக, வானொலி நாடகத் தயாரிப்பாளராக சில ஆண்டுகள் முழுநேர பணி.
- ஒரே கதாபாத்திரத்தை வைத்து இது வரையில் யாருமே வானொலியில உருவாக்காத புதிய பாணியில் ''கண்ணீரும் செந்நீரும்'' எனும் ஒரு அரைமணி நேர நாடகத்தையும, இரண்டு கதாபாத்திரங்களை வைத்து முற்றிலும் புதிய பாணியில் 'தியாகம்' எனும் அரைமணி நேர நாடகம் ஒன்றையும் சில ஆண்டுகளுக்கு முன்னர் புதுமைப்படைப்புக்கள் அளிக்கும் ஆர்வத்தில் இவர், எழுதித்தயாரித்து பலரின் பாராட்டுக்களையும் பெற்றிருக்கிறார்.
- சீனக்கதையைத் தழுவி 'மரகதச்சிலை' எனும் பெயரில் இவர் எழுதிய ஒருமணிநேர சிறப்பு நாடகம் 1970ல் ஒலியேறியது தொடர்ந்து பல முறை ஒலிபரப்பப்பட்ட அந்த நாடகத்தின் ஒலி நாடா வானொலி நிலையத்தில் இன்னமும் அழிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறது.
- சொந்தப்பத்திரிகை, பதிப்பகம், தொலைக் காட்சிக்கு நாடகம் தயாரிப்பது ஆகியவற்றில் தற்போது தீவிரம்.
- தமிழ்நேசனில் துணை ஆசிரியர் பொறுப்பிலிருந்து விலகிய பின்னரும் நேசனோடு நீண்ட காலம் வரை அணுக்கமான தொடர்பு 1972ம் ஆண்டில் நேசனில் கலைத்துறை சம்பந்தப்பட்ட கேள்விபதில் பகுதி தொடங்கப்பட்டபோது தொடக்க முதல் தொடர்ந்து 12 ஆண்டுகள் வரை சந்திரகாந்தம் பதில் அளித்துவந்தார். சொந்தப் பெயரிலும் கலைத்தூதன், சந்திரா, அஸ்வினி போன்ற புனை பெயர்களிலும் பதில்கள் தந்ததோடு கட்டுரைகளும் எழுதிவந்தார்.
- எழுத்துத்துறையில் பல துறைகளையும் தொட்டு தொடர்ந்து எழுத்துக்கோலம் போட்டு வருவதில் இன்னமும் ஆர்வம் குறையாதவர். ஜரைஞ்சகமாகவும் புதிய பாணியிலும் அதே நேரத்தில் தரமாகவும் தம் படைப்புக்கள் அமைவதில் அக்கறை காட்டுபவர் இவர்.